காவிரிப் பிரச்சினை மீது

கலைஞரின்

சட்டமன்ற உரைகள்



காவிரிப் பிரச்சினை மீது

கலைஞரின்

சட்டமன்ற உரைகள்

F 2222

வெளியீடு :

தமிழ்க்கனி பதிப்பகம்

சென்னை - 600 004

விற்பனை உரிமை :

பூம்புகார் பதிப்பகம்

127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே)

சென்னை - 600 108.

முதல்பதிப்பு : மே, 2007

இரண்டாம் பதிப்பு : ஜூலை, 2008

894.8115
TAM

Cro5657

விலை ரூ. 110/-

உரிமை : ஆசிரியர்க்கே

Printed & bound by Eagle Press, Chennai - 600 013.

என்னுரை

1956ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்றது தி. மு. கழகத்தின் மாநில மாநாடு. தி. மு. கழகம் 1949ல் தொடங்கப் பட்டு ஏழாண்டுகள் ஆகியிருந்தன. அப்போதெல்லாம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தி. மு. க. குறித்துப் பேசினாலும், எழுதினாலும், பேட்டி கொடுத்தாலும் - ஓர் அறைகூவல் விடத் தவற மாட்டார். "தி. மு. க. காரர்கள் வெட்ட வெளியில் நின்று பேசுகிறார்களே; அவர்களுக்கு மக்கள் ஆதரவு இருப்பது உண்மையானால் சட்டசபைக்கு வந்து பார்க்கட்டுமே !" என்பதுதான் அந்த அறைகூவல் - அவரது அந்த அறைகூவலை அன்பான அழைப்பாகவே கருதி, அறிஞர் அண்ணா அவர்கள், "இனிமேல் வரும் தேர்தல்களில் தி. மு. க. போட்டியிடும்" என்று ஒரு தீர்மானத்தை, திருச்சி மாநில மாநாட்டில் கூடியிருந்த லட்சோபலட்சம் மக்களின் தீர்ப்பாகவே வெளியிட்டார்.

அதன் விளைவாகக் கட்சியின் முன்னணித் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடும் இடங்களை - அண்ணா அவர்களே; கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் அறிவித்தார். அப்போது நண்பர்கள் வற்புறுத்தலுக்கு இணங்க; நான் எனது பிறந்த ஊரான "திருக்குவளை" உள்ளிட்ட நாகைத் தொகுதியில் நிற்கலாமென்று முடிவு செய்துகொண்டு சென்னைக்கு வந்தேன். சென்னையில் அண்ணா அவாகள், அனறைய தலைமைக கழகமிருந்த ராயபுரம் அறிவகத்தில் இருந்தார்கள். சந்தித்தேன். அண்ணா கையாலேயே என் பெயரை "குளித்தலை தொகுதி"யில் குறிப்பிட்டு; என்னைக் கேட்காமலேயே அறிவித்துவிட்டார். மறுத்துரைக்காமல் குளித்தலையில் வேட்பாளராக நின்றேன். அந்தத் தேர்தலில் தூத்துக்குடி தொடங்கி, நாகை வரையில் இருந்த அனைத்துத் தொகுதிகளிலும் நான் ஒருவன் மட்டுமே குளித்தலையில் வென்றேன். ஆம்; சட்டப்பேரவை நுழைவுக்கான கதவு இப்படி எனக்குத் திறக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டு

நடைபெற்ற அந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணா தலைமையில், நான், பேராசிரியர் க. அன்பழகனார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திருமதி சத்தியவாணிமுத்து, ஏ. கோவிந்தசாமி, ப. உ. சண்முகம், விருதாசலம் எம். செல்வராஜ், எம். பி சுப்பிரமணியம், ம. பா. சாரதி, களம்பூர் அண்ணாமலை, ஆனந்தன், இருசப்பன், பி. எஸ். சந்தானம், சி. நடராஜன் ஆகிய நாங்கள் 15 பேர் வெற்றிபெற்று, சட்டப்பேரவையில் இடம்பெற்றோம்.

அன்று முதல் இன்று வரை அனைத்துத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் எனக்கு; ஆம் கழகத்துக்கு; நான் போட்டியிட்ட தொகுதிகளில் வெற்றியைத் தான் அளித்தார்கள்.

இந்த ஐம்பது ஆண்டுக்காலத்தில் நான் சட்டப்பேரவையில், பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆற்றிய உரைகளை அவற்றின் அகல நீளம் கணக்கிடாமல் அப்படியே அச்சியற்றித் தருகிற அரிய பணிக்குத் தன்னை ஒப்படைத்துக்கொண்ட தம்பி சண்முகநாதனை என்னால் மறக்கவே முடியாது. அவரது முயற்சிதான்

அடுக்கடுக்கான இந்தத் தொகுப்புகள் என்பேன்.

1938 முதல் 70 ஆண்டுக்கால என் பொது வாழ்க்கையில் – அரசியல் வாழ்வில் ஓர் அங்கமான சட்டப்பேரவையில் தொடர்ந்து 50 ஆண்டுக் காலம் நான் ஆற்றிய பணிகளை, அந்த அவையில் ஆற்றிய இந்த உரைகள் விளக்கிடும் என்பதில் ஐயமில்லை.

சொல்லாடலில் சூடும், சுவையும் மாறி மாறி காணலாம் – அதன் காரணமாக மனித நேயம் – நாகரிகம் – பண்பாடு இவற்றை அணுப்பொழுதும் மறந்தது மில்லை; அரசியல் பகை காரணமாக அறவே துறந்ததுமில்லை.

அவற்றில் சிலவற்றுக்குச் சான்று கூற விழைகிறேன். நான் பிறந்த ஊர் திருக்குவளையில் என் அன்னையின் பெயரால் "அஞ்சுகம் தாய் சேய் நல விடுதி"யை முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம்தான் திறந்துவைத்தார். என் அன்னை அஞ்சுகம் அம்மையார் மறைந்தபோது எனக்கு முன்பு சென்று என்

இல்லத்தில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தியவர் அன்றைய முதல்வர் திரு. காமராஜர் !

காமராஜருக்கும் எனக்குமிடையே எவ்வளவோ கடுமையான அரசியல் போராட்டம் - ஆனால் அவர் மறைந்த பிறகு சென்னையில் காமராஜர் சாலை - சென்னையிலும், விருதுநகரிலும் காமராஜர் நினைவகம் - கன்னியாகுமரியில் வரலாற்றுச் சின்னமாக காமராஜர் மணி மண்டபம் - சென்னை விமான நிலைய உள்நாட்டு முனையத்திற்கு காமராஜர் பெயர் - அவர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட சட்டம் - இத்தனையும் அரசியல் பண்பாட்டின் அடையாளமாக நான் உருவாக்கியது - அதுபோல அவர் நினைவு போற்ற எத்தனையோ ஏற்பாடுகள்.

மனித நேயத்துடன் அரசியல் நடத்தப்பட்டது - அராஜகங்களுக் கிடையிலேயும் அன்பு மலர் பூத்தது.


இப்படி பல வடிவெடுத்த சூழ்நிலைகள் - சமுதாய மாற்றங்கள் - இவைகள் கடந்த ஐம்பதாண்டுகளில்

எப்படியெல்லாம் வானத்தில் அலையும் மேகங்களைப் போல மாறி மாறிக் காட்சியான போதிலும் - மனிதனுக்குரிய மாண்பினை மாற்றிக்கொள்ளாமல்தான் என் அரசியல் பாதை அமைந்தது என்பதை நினைவூட்டி;

அரசியல் மாற்றங்களுக்கேற்ப இந்தத் தொகுப்பு உரைகளில் தலைகாட்டும் கருத்துக்கள், வார்த்தைகள், வாசகங்கள் அனைத்துக்கும் ஒரு பொதுமன்னிப்பை அளித்து;

என் நெஞ்சில் எழுந்த எண்ணங் களுக்கு - வாழ்த்து வழங்கி வலிமை சேர்த்திட வேண்டுகிறேன்.

அன்புள்ள,



பதிப்புரை

காலத்தை வென்று, ஞாலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய வலிவும், பொலிவும் பெற்றவை கலைஞர் அவர்களின் நூல்கள். அவரது நூல்கள் பலவற்றைப் பதிப்பிக்கும் பொறுப்பும் சிறப்பும் தமிழ்க்கனி பதிப்பகத்திற்கு ஏற்கனவே வழங்கப் பட்டிருக்கிறது. கலைஞர் அவர்களுக்கு முழுமையாக நிறைவு தரும் வண்ணம் பதிப்பித்துத் தருவதென்பது மிகவும் கடினமான காரியம். எனினும், ஒவ்வொரு முறையும் திறன் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி, உழைத்து உருவாக்கிப்

பதிப்பித்ததால்தான் மீண்டும் மீண்டும் அந்தப் பெருமை தமிழ்க்கனிப் பதிப்பகத் தார்க்கு கிடைத்து வருகிறது.

கலைஞர் அவர்களின் :

பொன்னர் சங்கர்

தொல்காப்பியப் பூங்கா

தாய் காவியம்

முத்துக்குளியல்

சிந்தனையும் செயலும்

காலப்பேழையும் கவிதைச் சாவியும்

போன்ற கற்கண்டுச் சொல்லோவி யங்களைப் பதிப்பித்திடும் நல்ல வாய்ப்புக்களைப் பெற்று நாமணக்க நன்றி செலுத்தி நாளெல்லாம் மகிழ்ந்திருக்கிறோம்.

அந்த வரிசையில் மற்றுமொரு வாய்ப்பு தற்போது கிட்டியிருக்கிறது.

''சட்டப்பேரவையில் கலைஞர்''

பொன்விழா கொண்டாடப்படும் இந்தக்

குதூகலமான வேளையில், கடந்த ஐம்பதாண்டுகளில், தமிழ்நாடு சட்டப் பேரவையில் கலைஞர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறுபட்ட பொருள் களில் ஆற்றிய உரைகளையெல்லாம் தொகுத்துப் பதிப்பிக்கும் பேறு தமிழ்க்கனி பதிப்பகத்தாருக்கு வாய்த்திருக்கிறது.

ஆளுநர் உரைமீது உரைகள்

தொழில்துறை பற்றி உரைகள்

காவல்துறை பற்றி உரைகள்

நிதிநிலை அறிக்கையின் மீது உரைகள்

காவிரிப் பிரச்சினை மீது உரைகள்

என சட்டப்பேரவையில் அவர் ஆற்றிய உரைகள் பகுக்கப்பட்டு பதிக்கப்பட்டு வெளிவருகின்றன.

"கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்பமொழியும்" சொல்லேருழவர் கலைஞர். திறனறிந்து சொல்லைச் சொல்லுவதும், பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து சொல்லுவதும் கலைஞர் அவர்களுக்கு இயல்பாக வரப்பெற்ற கலையாகும். செறிந்த சிந்தனை, தேர்ந்த சொற்கள் - இவையிரண்டும் கலைஞரது சொற்பொழிவுகளின் அடிநாதங்களாகும். சட்டப்பேரவையில் கலைஞர் ஆற்றிய உரைகளைப் படிக்கும்போது இந்த உண்மைகளை யாரும் எளிதில் உணர முடியும். பரபரப்பும் விறுவிறுப்பும், ஆழமும் அழகும் மிகுந்திருக்கும் அவரது உரைகள் காலத்தின் கண்ணாடிகளாகும். அவரது உரைகளில் காணப்படும் நுட்பமான புள்ளிவிவரங்களும், வாதத்திறமையும், நகைச்சுவையும் படிப்பவர்களின் கருத்தை நிச்சயம் கவர்ந்திழுக்கக்கூடியவை.


அரசியலிலும், அரசுத்துறைகளின் செயல்பாடுகளிலும் ஆர்வமுள்ளோர் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய இந்த நூல்களுக்கு தமிழ்கூறும் நல்லுலகில் மிகுந்த வரவேற்பு கிடைத்திடும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எங்களுக்கு நிரம்ப உண்டு.

- தமிழ்க்கனி பதிப்பகத்தார்

காவிரிப் பிரச்சினை மீது

கலைஞரின்

சட்டமன்ற உரைகள்



காவிரிப் பிரச்சினை மீது

கலைஞரின்

சட்டமன்ற உரைகள்

உரை : 1 **நாள் : 24.08.1968**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 82-வது விதியின் கீழ் பேரவையின் கவனத்தை ஈர்த்து ஒரு முக்கிய பொருள் பற்றி இந்த அறிக்கையை அவை முன்பு வைக்க விழைகிறேன்.

தமிழகத்தின் தலையாய பாசன ஆதாரம் காவிரி, 1924-ம் ஆண்டு மைசூருக்கும் தமிழ்நாட்டிற்கும் காவிரிப் பாசனம் சம்பந்தமான ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அது சம்பந்தப்பட்ட சில முக்கிய கூறுகள் - மேட்டூர் நீர் தேக்கத் திட்டத்தை நிறைவேற்ற தமிழகத்திற்கு நிலையாக உரித்தான நீர்ப்போக்கின் அளவு (limit flows) கணக்கிடப்படும். அவ்வாறு கணக்கிடப்பட்ட அளவு நீரை காவிரி ஆற்றின் வழி விடுவித்த பின்னரே மைசூர் அரசு கிருஷ்ணராஜசாகரில் நீரைத் தேக்கலாம் எனவும், மைசூர் மாநிலத்திற்கு சில பாசன வாய்ப்புகளும் ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளன. ஆனால் தமிழக பாசனத்திற்கு நிலையாக உரித்தான நீர்ப் போக்கின் அளவு சிறிதேனும் குன்றாதவாறு, மைசூர் பாசன வாய்ப்புக்களை நிறைவேற்ற வேண்டும் எனவும் முடிவு செய்யப் பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் 1974-வது ஆண்டு வரை செயல்திறன் உடையதாக இருக்கும்.

கிருஷ்ணராஜசாகர் பாசனத்திற்காக 1 லட்சத்து 25 ஆயிரம் ஏக்கர்களும் அப்போது மைசூரில் நிலவி வந்த ஒவ்வொரு பழைய பாசனக் காலின் கீழும் 1910-ம் ஆண்டு பாசனம் பெற்ற நிலப்பரப்பு

அளவில் மூன்றில் ஒரு பங்கு கூடுதலாகவும், பாசனம் பெற ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இவற்றிற்கும் கூடுதலாக, 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தில் உள்ள ஷரத்து 10 (iv)-ன்-படி காவிரி, அதன் உப நதிகள் இவற்றின் கீழ் புதிதாக பாசன வசதியை பெருக்கிக் கொள்ள மைசூருக்கு வழங்கப்பட்ட உரிமைக்கு 1,10,000 ஏக்கர்கள் அப்பொழுதைய உச்சவரம்பு என விதிக்கப்பட்டுள்ளது.

அந்த ஒப்பந்தத்தின் ஷரத்து 10 (vii) பிரிவின்படி மேலே குறிப்பிட்ட பாசனப் பெருக்கத்தை 1892-வது ஆண்டு ஒப்பந்தத்தின் "எ" ஷெடியூலில் குறிக்கப்பட்ட காவிரி அதன் உப நதிகள் இவற்றின் மேல் மாத்திரமே அணைகள் கட்டி, நீரைத்தேக்கி, பாசனத்தைப் பெருக்க மைசூர் அரசு ஒப்புக் கொண்டுள்ளது. அவ்வாறு கட்டப்படும் நீர் தேக்கங்களின் மொத்த நிகர கொள்ளளவு (effective capacity) 45 ஆயிரம் மில்லியன் கன அடி எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒப்பந்தத்தின் அனுபந்தம் 1-ல் கண்டுள்ள கிருஷ்ணராஜசாகர் தேக்க செயல்முறை விதிகளின்படி (Rules of Regulation) தமிழகத்திற்கு உரித்தான நீர்ப் போக்கு அளவு குறைவின்றி பாதிக்கப்படாதவாறே, மைசூர் கட்டும் நீர்த் தேக்கங்களில் நீரைத் தேக்கிச் செயல்பட வேண்டும் எனவும் விதிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மைசூர் மாநிலம் கிருஷ்ணராஜசாகர் நீர்த்தேக்கத்தின் உள்வாய்ப் பகுதியில் காவிரி ஆற்றின் ஒரு உபநதியான ஹேமாவதியில் ஓர் அணை கட்டி நீரைத் தேக்கத் திட்டம் வகுத்துள்ளது. மைசூர் அரசு ஒப்பந்த ஷரத்துக்களின் 10(iv),(vi) கீழ் ஏற்படத்தக்க, நீர்த் தேக்கங்களில் ஒன்றாக ஹேமாவதி திட்டத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் இந்நீர்த்தேக்கம் கட்டுவதால் ஒப்பந்தம் குந்தகப்படக்கூடிய சூழ் நிலைகள் உருவாகும் எனவும், குறிப்பாக, தமிழகத்திற்கு உரிய நீர்ப்போக்கின் அளவு தொடர்ந்து அனுப்பப்பெற இயலுமா எனவும் மத்திய அரசுக்குத் தமிழக அரசின் சார்பில் அச்சம் தெரிவிக்கப்பட்டது. இந்த அச்சம் தீர்ந்து தொடர்ந்து 1924-ம் ஆண்டு ஒப்பந்த விதிமுறைகள் முற்றிலும் தொடர்ந்து பின்பற்றப்படுவதாகும். அதற்கேற்ற உறுதி மொழிகள், விதி முறைகள், நடைமுறை ஏற்பாடுகள், தேக்கும் செயல்முறைகள்

இவைகள் அனைத்தும் ஹேமாவதித் திட்டம் ஏற்கப்படுமுன்னர் தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும் மத்திய அரசை கோரியது.

இந்த அடிப்படையில்தான் இரு நாட்கள் (19,20-8-1968) டெல்லியில் மத்திய நீர்-மின்சாரக் குழுத்தலைவர் அவர்களுடன் இரு மாநில செயலாளர்கள், பொறியியல் வல்லுநர்கள், ஆகியோர் கலந்து அதிகாரிகள் நிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இந்தப் பேச்சு வார்த்தைகளின் போக்கினை நான் தொடர்ந்து அப்போதைக்கப்போதே அறிந்து கூர்ந்து கவனித்து வந்தேன். அதனைத் தொடர்ந்து மத்திய பாசன மின்சார அமைச்சர் திரு.கே.எல்.ராவ் அவர்களும், மைசூர் மாநில முதலமைச்சர் திரு. வீரேந்திர பட்டீல் அவர்களும், நானும் இது குறித்து, சந்தித்துப் பேசினோம். இவற்றின் பயனாக 1924-ம் ஆண்டு ஒப்பந்தப்படி தமிழகத்திற்கு உரித்தான நீர்ப்போக்கு அளவு சிறிதேனும் குறைவின்றித் தொடர்ந்து அனுப்புவதற்கு மைசூர் உறுதி அளித்துள்ளது. அந்த உறுதி நிறைவேற்றப்படும் வகையில், விதிமுறைகள் செயல்முறை, நிர்வாக நடைமுறை ஏற்பாடுகள் ஆகியவை பற்றி விரிவான விவாதம் நடத்தப்பட்டிருக்கிறது.

1924-வது ஆண்டு ஒப்பந்தத்திற்கு ஏற்பவும், உட்பட்டும், நீர் அளவைகள் ஏற்படுத்துதல், அவற்றினை ஆய்ந்து கணக்கிடுதல், புதுத் தேக்கத்தில் எப்பொழுது, எவ்வாறு, இந்த உறுதி நிறைவேறும் வகையில், நீரைத் தேக்குவது என்பதற்கான விதிமுறைகள், அவ்விதிகள் செயல்முறையில் நிறைவேற்றப்படவும், நிறைவேற்றப்படுகின்றனவா எனக் கண்காணிப்பதற்கும் தேவையான ஏற்பாடுகள், பதிவு முறைகள், இவை குறித்து வரைவுகள் தயாரிக்கப்பட்டு, தொடர்ந்து இரு அரசுகளும் பரிசீலித்து முடிவு மேற்கொள்ளப்பெறும். டெல்லியில் நடந்துள்ள பேச்சு வார்த்தைகள் குறித்து தமிழக முதலமைச்சர் அவர்களுடன் கலந்து அரசின் சார்பில் மேற்கொண்டு (மத்திய அரசுக்கு) கருத்து அறிவிக்கப்படும் என்று டெல்லி பேச்சுவார்த்தையின் இறுதியில் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறேன்.

உரை : 2 நாள் : 13.09.1969

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 1974-ம் ஆண்டோடு நாம் செய்து கொண்டிருக்கிற 1924-ம் ஆண்டைய உடன்பாடு முடிவடைகிறது என்ற தவறான கருத்தை அடிப்படையாக வைத்து மாண்புமிகு உறுப்பினர்கள் பேசத் தேவையில்லை. ஏனென்றால் 1974-ம் ஆண்டோடு இந்த ஒப்பந்தம் முடிவு அடையப் போவதில்லை. 1974-ம் ஆண்டில் ஒரு மறுபரிசீலனைதான். அந்த மறுபரிசீலனையில் 'லிமிட் ப்ளோஸ்' பாதிக்கப்படாத அளவில் மறுபரிசீலனை செய்து 'சர்ப்ளஸ் வாட்டர்', அதிகப்படியாக வருகிற தண்ணீரை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பதுதான் 1974-ல் வருகிற ஒப்பந்தம். ஆகவே இது சம்பந்தமாக குழப்பமான கருத்துக்களை வெளியிட வேண்டாம். 1974 ஆண்டோடு ஒப்பந்தம் தீர்ந்து விடப்போவதில்லை. அது என்றைக்கும் நிரந்தரமான ஒப்பந்தம். அதை மைசூர் அரசு தவறாகப் புரிந்து கொண்டிருப்பார்களானால் அவர்களுக்கும் உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களுக்கும் இதைப் பதிலாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று தமிழக அரசுக்கும், மைசூர் அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள சிக்கலைக் குறித்து அனைத்துக் கட்சியின் தலைவர்களும் இந்த மன்றத்தில் விவாதிக்கவேண்டும் என்று கூறியதற்கிணங்க இந்த விவாதம் மிகச் செம்மையாக நடைபெற்றிருக்கிறது. அனைவரும் மிகுந்த எச்சரிக்கையோடு விவாதங்களை நடத்தியிருக்கிறார்கள். உணர்ச்சிக்கு முதல் இடம் தராமல், உண்மைக்கு முதல் இடம் தந்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உள்பட, இந்த விவாதத்தில் பங்கு கொண்டிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

இதிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொஞ்சம் காவிரியிலிருந்து பவானிக்குப் போனார்கள். எப்பொழுதுமே

அவர் ரொம்பவும் பவானி பக்தர். அந்த பூஜை செய்யாவிட்டால், அவர்களுக்கு மன நிறைவு ஏற்படாது. எங்கே மைசூர் அரசே நம்மோடு வாதம் செய்ய அவர்களுக்கு புள்ளிவிவரம் கிடைக்காதோ என்பதற்காக, என்ன இருந்தாலும் கொஞ்சம் கன்னடப் பற்று அவர்களுக்கு, பவானி பற்றிய ஒரு குறிப்பை தந்திருக்கிறார்கள். இந்த பவானி பற்றிய குறிப்பு பத்திரிகைகளிலே வெளிவருமானால். மைசூர் அரசினர் 'ஒரு நல்ல வாய்ப்பினை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நமக்குத் தந்தார்' என்று, அதைப் பயன்படுத்திக் கொள்ள தவற மாட்டார்கள் என்று கருதுகிறேன். எப்படியோ பிறந்த இடத்திற்கு கொஞ்சம் நல்லது செய்வது என்ற இந்த அற்புத காரியத்தை அவர்கள் செய்ததற்காக நான் அவர்களுடைய சாதுரியத்தை பாரட்டுகிறேன். ஆனால் இந்த விஷயம் விவாதிக்கப்படுகிற இந்த நேரத்தில் அது முற்றிலும் அவசியம் இல்லாத ஒன்றாகும். பரம்பிக்குளத்தைப் பற்றி அவர் குறிப்பிட்ட காரணத்தினால் பவானித் தண்ணீரை நாம் கொடுத்துவிட்டோம் என்கிற பழிச் சொல்லிலிருந்து விடுபட நான் பதில் அளிக்க வேண்டியிருக்கிறது.

பவானியிலிருந்து எடுக்கப்படுகிற தண்ணீரை விட அதிகமாக நாம் ஆனைமலை ஆற்றிலிருந்து தண்ணீரைப் பெறுகிறோம். ஏதோ கேரள அரசை நம் அரசு ஏமாற்றி விட்டது என்றோ, அல்லது கேரள அரசு நம் அரசை ஏமாற்றிவிட்டது என்றோ இல்லாமல், மனிதாபிமானத்தோடு பிரச்சினைகளை ஆராய்ந்து, இரண்டு மாநில அரசுகளும், இந்தப் பிரச்சினையை அணுகி பரம்பிக்குளம்-ஆளியாறு நீர்ப் பங்கீடு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டிருக்கிறோம். திரு.கே.எல்.ராவ் அவர்கள் - கட்சி நோக்கோடு எதையும் அணுகுபவர் அல்ல. இந்த ஒப்பந்தத்தைப்பற்றி இது ஒரு அருமையான ஒப்பந்தம் என்றும், மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இது இருக்கவேண்டும் என்கிற அளவிலும் பொருமையோடு பாராட்டியிருக்கிறார்கள். ஆகவே, அந்த அளவில் பரம்பிக்குளம் ஆளியாறு ஒப்பந்தம் பற்றி விளக்கத்தை முடிக்க விரும்புகிறேன்.

இங்கே பேசப்பட்ட ஒருங்கிணைந்த கருத்துக்களை, இன்னின்ன கருத்துக்கள்தான் பேசுவார்கள் என்று நான் எதிர்பார்த்து, ஒட்டு மொத்தமாக இப்பொழுது சட்ட மன்றத்தினுடைய வேண்டுகோளாக மத்திய சர்க்காருக்கும்,

மைசூர் மாநில சர்க்காருக்கும் அளிக்கும் வகையில் சில விவரங்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் காவிரிப்பாசனம் தொன்று தொட்டு இருந்து வருகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கரிகாலன் கல்லணை கட்டியதும், காவிரியின் கரையைப் பலப்படுத்தியதும், வரலாற்றுச் சான்றுகளும் தமிழ் நாட்டுக்குக் காவிரியின் மேல் இருந்த உரிமைக்கு சான்றுகளாகும் (Prescription right) 19-ஆம் நூற்றாண்டின் கடைசியில் மைசூர், பல நீர்ப்பாசனத் திட்டங்களைத் தொடங்கிய பொழுது சென்னை மாநில அரசு தனது மறுப்பினை தெரிவித்தது. அந்த மறுப்பின் காரணமாக 1892-ஆம் ஆண்டு ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அந்த உடன்பாட்டின் அனுபந்தத்தில் கண்டுள்ள காவிரியும் அதன் உபநதிகளும், பெண்ணை, பாலாறு, துங்கபத்திரா போன்ற 15 நதிகளில் மைசூர் அரசாங்கம் நீர்த்தேக்கங்கள் கட்டுவதினால் அந்த நீர்த்தேக்கங்களைப் பற்றி முழுமையான புள்ளி விவரங்களையும் சென்னை அரசுக்குக் கொடுத்து அதன் முழு சம்மதத்தையும் பெற்ற பிறகே கட்டலாம் என்று 1892-ம் ஆண்டு ஒப்பந்தத்தில் 2-வது, 3வது பிரிவுகளில் கூறப்பட்டுள்ளது.

மைசூர் அரசு தமிழகத்தில் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் காவிரிப்பாசனத்தைப் பாதிக்கின்ற வகையில் மேலும் சில நீர்த்தேக்கங்களைக் கட்ட முற்பட்டபோது அன்றிருந்த சென்னை அரசும் மைசூர் அரசும் 1924-ம் ஆண்டு ஒரு உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

அது, குறிப்பாக மைசூர் அரசு கிருஷ்ணராஜசாகர் அணைத்திட்டம் கட்டுவதற்கு அனுமதி வழங்குவதற்கு ஏற்படுத்திய ஓர் உடன்பாடாகும்.

அந்த உடன்பாட்டின்படி 45 ஆயிரம் மிலியன் கன அடி (45 TMC) கொள் அளவுள்ள கிருஷ்ணராஜசாகர் அணை கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் அதே சமயத்தில் தமிழகத்தில் தொன்று தொட்டு இருந்து வந்த பாசனத்தோடு மேற்கொண்டு "காவிரி மேட்டூர் பிராஜக்ட் (CPM) திட்டத்தின் கீழ் 3,01 லட்சம் ஏக்கர் புதியதாகப் பாசனம் ஏற்படுத்தவும் மேட்டூர் நீர்த்தேக்கம் கட்டவும் வழிவகை செய்யப்பட்டது.

இதை அன்னியில் மேற்கொண்டு மைசூர் அரசாங்கம் காவிரியிலும் அதன் உபநதிகளாகிய ஹேமாவதி, லட்சுமணதீர்த்தா, கபினி, சுவர்ணவதி, யாகச்சி போன்ற நதிகளில் நீர்த்தேக்கங்களைக் கட்ட வேண்டும் என்றால், தமிழக அரசுக்கு அந்த நீர்த் தேக்கங்களைப் பற்றிய முழு புள்ளி விபரங்களையும் தரவேண்டும், அம்மாதிரி நீர்த்தேக்கங்களை கட்டும்போது தமிழகத்திற்குச் சேரவேண்டிய தண்ணீரின் அளவு குறையக்கூடாது. அந்தத் தண்ணீரின் அளவு ஜூன் மாதத்தில் இருந்து ஜனவரி மாதம் முடிய வருடத்தில் 8 மாதங்களுக்கு ஒவ்வொரு மாதத்திலும் எந்த அளவு தண்ணீர் வந்து சேரவேண்டும் என்று தெளிவாக உடன்பாட்டில் குறிப்பிட்டுள்ளது. மீதியுள்ள 4 மாதங்களிலும் கோடைக்காலப் பயிருக்காக எவ்வளவு தண்ணீர் விட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

தண்ணீரின் அளவைத் திருச்சி மாவட்டத்தில் உள்ள மேல் அணைக்கட்டில் அளந்து பார்த்து நமக்குக் கிடைக்க வேண்டிய அளவு, தண்ணீர் வந்து சேருகிறதா என்று பார்த்துக் கொள்ளவும் வழி வகுக்கப்பட்டு இருக்கிறது.

இந்த உடன்பாடு, மைசூர் அரசு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேற்படாமல் புதிய நீர்த் தேக்கங்களைக் கட்டிக்கொள்ள வழிவகை செய்கிறது என்பது உண்மை. ஆனால், அவர்கள் தமிழக அரசுக்கு முழு விபரங்களையும் தராமல் தமிழகத்தின் நீர்ப்பாசனத்திற்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள நீரின் அளவுக்குக் குந்தகம் ஏற்படாமல் இருக்கிறதா என்று பார்க்காமல் எந்தத் திட்டங்களையும் மேற்கொள்ளக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வளவு இருந்தும் மைசூர் அரசு ஹேமாவதி, கபினி, ஹாரங்கி, சுவர்ணவதி போன்ற நதிகளில் நீர்த்தேக்கங்களைக் கட்டத் தொடங்கியிருக்கிறது. இது, தமிழ் நாட்டின் நீர்ப் பாசனத்தைப் பாதிக்கும் என்பதற்கு ஐயமே இல்லை,

ஆகவேதான் 1968-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் அன்று பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த நானும் மைசூர் மாநில முதல்வர் திரு. வீரேந்திர பட்டீல் அவர்களும், மத்திய அமைச்சர் திரு.கே.எல்.ராவ் அவர்களும், டெல்லியில் விவாதம்

நடத்தினோம். அந்த விவாதத்தின்போது, திரு. வீரேந்திர பட்டீல் அவர்களும், திரு.கே.எல்.ராவ் அவர்களும், டெல்லியில் விவாதம் நடத்தினோம். அந்த விவாதத்தின்போது, திரு. வீரேந்திர பட்டீல் அவர்களும், திரு. கே. எல். ராவ் அவர்களும், தமிழ் நாட்டுக்கு 1924-ஆம் ஆண்டு உடன்பாட்டின்படி உத்திரவாதம் அளிக்கப்பட்ட தண்ணீரின் அளவு கொடுக்கப்பட வேண்டும் என்று ஒப்புக் கொண்டார்கள். அதாவது தமிழகத்திற்கு உத்திரவாதமளிக்கப்பட்ட தண்ணீரின் அளவைத் தராமல் அவர்கள் தங்களின் புதிய நீர்த்தேக்கங்களில் தண்ணீரைத் தேக்கக்கூடாது என்று வலியுறுத்தி கூறினேன். அதற்கு ஒரு தண்ணீர் தேக்க முறை (Impounding formula) நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று சொன்னேன். அதனையும் திரு. வீரேந்திர பட்டீல் ஒப்புக் கொண்டார்கள்.

டெல்லி விவாதம் முடிந்த பிறகு மத்திய அரசும், நமது மாநில அரசும், பல தடவை எழுதிக் கேட்டும் மைசூர் அரசு நமக்கு முழுத் தகவல்களையும் தராதது மட்டுமின்றி, சரியாகப் பதில் கூட அனுப்பவில்லை.

திட்டக் குழுவும், மத்திய நீர்ப்பாசன மின்விசை வல்லுநர் குழுவும், ஹேமாவதி போன்ற எந்தத் திட்டத்திற்கும் அனுமதி அளிக்கவில்லை,

இந்தச் சூழ்நிலையில் இந்தப் பேரவையின் உறுப்பினர்கள், மைசூர் அரசு கட்ட இருக்கும் ஹேமாவதி போன்ற திட்டங்கள், தமிழகத்தின் பாசனத்தைப் பாதிக்கும் என்று ஐயப்படுவது முறையேயாகும், ஆனால் இந்தப் பிரச்சினையை எப்படி சுமூகமான முறையில் தீர்க்க முடியும் என்பதுதான் இன்று நம் முன் உள்ள கேள்வி. இது ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினை. ஆகையினால், மத்திய அரசுதான் இதில் தலையிட்டு தீர்த்து வைக்க வேண்டும் என்பதும் முறையாகும். எனவே அவர்கள் தலையிட்டுத் தீர்த்து வைப்பார்கள் என்று நம்புகிறேன். ஏற்படுத்தப்படுகிற எந்த உடன்பாடுகளையும் மதிக்க வேண்டும் என்பது சாதாரண ஒரு நியதியாகும். அது இல்லையென்றால்; சமூகம் ஏது? அரசு ஏது? மைசூர் மாநில மக்களிடம், தமிழக மக்களுக்கோ, தமிழக அரசுக்கோ என்றுமுள்ள நட்புறவு இதனால் பாதிக்கப்பட மாட்டாது என்றும், பாதிக்கக்கூடாது

என்றும் நாம் அனைவரும் கருதுகிறோம். ஆனால், மைசூருக்கும் தமிழக அரசுக்கும் இடையில் 1892, 1924-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை மீறி, மைசூர் அரசு புதிய நீர்த் தேக்கங்களை கட்ட முற்பட்டுள்ளது. இது சரியும் அல்ல, முறையும் அல்ல. அவர்கள் மறுபரிசீலனை செய்து உடன்பாட்டில் கண்டுள்ள ஷரத்துக்களின்படி புதிய நீர்த்தேக்கங்களைக் காட்டலாம். அதில் நமக்கு ஆட்சேபணை இல்லை. உடன்பாட்டிற்குப் புறம்பாகச் செல்லவேண்டாம் என்கிறோம், மைசூர் அரசு உடன்பாட்டை மதித்து நடக்குமானால் இரு அரசுகளுக்குமிடையில் இன்று நிலவும் நல்லுறவு மேலும் வலுப்படும். அண்மையில் நமது பொதுப்பணி அமைச்சர் அவர்கள், டெல்லியில் திரு. கே.எல்.ராவ் அவர்களையும் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களையும் சந்தித்து நமது அரசின் சார்பில் உள்ள நியாய வாதங்களை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். அவர்களும் உடனடியாக கவனம் செலுத்துவதாக உறுதி கூறியிருக்கின்றனர். இதுவரையில் கடைப்பிடிக்கப்பட்ட 'காலத்தாழ்வை' மேலும் தொடர்ந்து கடைப்பிடிக்காமல் மத்திய அரசு உடனடியாக இதில் தலையிட்டு, மைசூர் அரசு, தொடர்ந்து கட்டிக்கொண்டுவரும் 'ஹேமாவதி' போன்ற நீர்த் தேக்கங்களை தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்த மன்றத்தின் சார்பாக வேண்டுகோள் விடுக்கிறேன். மன்றத்தில் உள்ள எல்லாக் கட்சிகளின் சார்பிலும் எடுத்துரைக்கப் பட்ட கருத்துக்களின் அடிப்படையை உணர்ந்து, மைசூர் மாநில அரசு தமிழகத்தின் நியாயமான உரிமைக் குரலுக்கு மதிப்பளிக்க முன்வர வேண்டுமென்று மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கைகொண்டு செயலாற்றப்படும் நேரத்தில் – அந்தக் கொள்கைக்கு வலுவளிக்கும் வகையில் இந்திய அரசு, உடனடியாகச் செயல்பட்டு, இந்த இரு மாநிலங்களுக்கிடையில் எழுந்துள்ள சிக்கலைத் தீர்த்திட முன்வர வேண்டுமென்று வலியுறுத்திக் கூறிக்கொண்டு, இந்த அளவோடு விடை பெறுகிறேன்,



உரை : 3 நாள் : 03.03.1970

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் இன்று பத்திரிகையில் வந்துள்ள செய்தியினைக் குறித்து விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தினை அளித்து அதுபற்றிய கருத்துரைகளை தொகுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

பத்திரிகையில் வந்த செய்தியினுடைய அடிப்படையிலே நாம் இந்தப் பிரச்சினையை ஆராயாமல் காலகட்டத்தில் 1968 ஆம் ஆண்டு முதல் மைசூர் மாநில அதிகாரிகளிடம், மைசூர் மாநில இன்றைய முதல்வர் அவர்களிடம் இந்த அரசின் சார்பில் நானும், ஏனைய அமைச்சர்களும் பல நேரங்களில் கலந்து உரையாடி வந்திருக்கிறோம். அண்மையில் டெல்லியில் பிப்ரவரித் திங்கள் 8-ஆம் நாள் அன்று மைசூர் மாநில முதல் அமைச்சர், தமிழக முதல் அமைச்சர், கேரள முதல் அமைச்சர் அடங்கிய கூட்டத்தினை மத்திய அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் முன்னிலையில் நடத்துவது என்று தீர்மானித்து நான் டெல்லிக்குப் புறப்பட்டுக் கிளம்பிய நேரத்தில் உடல் நலம் இல்லாத காரணத்தினால் அந்தக் கூட்டத்தில் மைசூர் மாநில முதல் அமைச்சர் கலந்துகொள்ளப் போவதில்லை, டெல்லியிலேயே இருந்த மைசூர் மாநில சட்ட அமைச்சர்தான் கலந்துகொள்கிறார் என்று அறிவிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு அங்கே பேசிய நேரத்தில் 1924ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மைசூர் மாநிலம் அடிப்படையிலேயே மதிக்கவில்லை. அதை மதித்து நடக்கத் தயாராய் இல்லை என்கிற கருத்தினை நிதி அமைச்சர் அவர்களும், பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும் நம்மிடத்தில் எடுத்துக் கூறினார்கள். அதற்குப் பிறகுதான்

அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டம் ஒன்றினை நான் கூட்டி அனைத்துக் கட்சித் தலைவர்களின் கருத்தையும் நான் கேட்டு அறிந்தேன். அவர்கள் ஹேமாவதி அணையைக் கட்டுவதினால் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற அபாயங்களையும் அதைத் தவிர்ப்பதற்கு இந்த அரசு எடுக்கின்ற முயற்சிகளுக்கு எல்லாக் கட்சிகளின் சார்பிலும் நிரந்தரமான நிறைவான ஆதரவு உண்டு என்பதனையும் எடுத்துக் கூறினார்கள். அவர்களுடைய அரிய யோசனைகளைப் பெற்று அன்றைய தினமே நானும் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களும் டெல்லிக்குச் சென்று இந்தியப் பிரதமர் அவர்களைச் சந்தித்து இந்தப் பிரச்சினையிலே உடனடியாக மத்திய அரசு தலையிட வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டோம். விரைவிலே நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் கூறியிருக்கிறார்கள். அவர்கள் விரைவிலே நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள் என்றாலும் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்காதது வருந்துதற்குரிய ஒன்றாகும். ஏனென்றால் மைசூர் மாநிலத்தினுடைய முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும் விடுகின்ற அறிக்கைகள், பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகள், இவற்றைப் பார்க்கிறபொழுது அவர்கள் மேலிடத்திலிருந்து எந்தவிதமான அனுமதியையும் பெறாமல் சென்ட்ரல் வாட்டர் பவர் கமிஷனிடமிருந்து எத்தகைய ஒப்புதலையும் பெறாமல், திட்டக் குழுவின் ஒப்புதலைப் பெறாமல் ஹேமாவதி அணையைக் கட்டுவது என்று தீர்மானித்து அந்த வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் தமிழகத்திற்கு வருகின்ற பேரபாயத்தினை உடனடியாகத் தடுக்க வேண்டுமென்ற பொறுப்பும் அக்கறையும் மத்திய அரசுக்கு இருக்கிறது. இதிலே மத்திய அரசு இன்னும் காலதாமதம் செய்வது உள்ளபடியே நாம் எல்லாம் வருந்துவதற்குரிய ஒன்றாகும். விரைவில் மத்திய அரசின் நடவடிக்கையை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். யாருடைய அனுமதியும் பெறாமல், திட்டக் குழுவின் அனுமதியும் பெறாமல் ஒரு மாநிலத்திலே இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்யலாம் என்ற முறையிலே மைசூர் மாநிலம் வழி வகுக்குமானால் மற்ற மாநிலங்களும் அதைப் பின்பற்றுமானால் மத்திய அரசு என்ற ஒன்றே தேவையில்லாமல் போய்விடக்கூடிய சூழ்நிலையெல்லாம் ஏற்பட்டுவிடும். இந்தப் பேரபாயத்தை உணர்ந்து மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை

எடுக்க வேண்டும். தமிழகத்திற்கு வர இருக்கின்ற இப் பெரிய ஆபத்தை ஏற்படுத்த ஹேமாவதி அணைக்கட்டு கட்டக் கூடாது என்ற உறுதிமொழியும் காக்கப்படாத அளவிலே, நாம் உயிராக மதிக்கின்ற 1924ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மதிக்க மாட்டோம் என்று வெளிப்படையாகச் சொல்வது மிகக் கவலையோடு அணுகிப் பார்க்க வேண்டிய ஒன்றாகும். இந்தக் கவலை தரக்கூடிய பிரச்சினையில் மத்திய அரசு விரைவில் தலையிட வேண்டும். மத்திய அரசின் பதிலுக்கு சில நாட்கள் காத்திருப்போம். பதில் எதிர்பார்க்கிற நேரத்திற்குள் வராவிட்டால் மீண்டும் எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி அவர்களுடைய கருத்துக்களை அறிவதாக இருக்கிறேன். அப்படி அறிகிற நேரத்திலே நாம் மனம்விட்டுப் பல விஷயங்களைப் பேசி, இருக்கிற நிலைமைகளை ஆராயவும், சிறிய அளவிலே கூட்டப்படுகிற எல்லாக் கட்சித் தலைவர்களின் அக் கூட்டம் பயனுள்ளதாக இருக்கும். எனவே இந்தச் சபையிலே அதை விவாதிக்கத் தேவையில்லை, மத்திய அரசின் உடனடியான பதிலை இந்த அரசு விரைவில் எதிர்பார்க்கிறது. மத்திய அரசு அக்கறை காட்டும் என்று எதிர்பார்க்கிறோம். காட்டும் என்றால் அந்தப் பதிலை, காட்டவில்லை என்றால் அதனால் ஏற்படுகிற நிலைமைகளை ஆராய விரைவிலே அனைத்துக் கட்சித் தலைவர்கள் அடங்கிய கூட்டம் கூட்டப்படும். டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் நாம் எல்லோரும் இந்த விஷயத்திலே எவ்வளவு கவலையோடு இருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கக்கூடிய தீர்மானமாகப் பயன்படுகிறது என்ற அளவிலே இதற்காக இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்கத் தேவையில்லை என்ற அளவிலே என்னுடைய கருத்துக்களைக் கூறி அமைகிறேன்.

உரை : 4 **நாள் : 08.07.1971**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் இந்த மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டு மென்கிற ஒரு வரலாற்றுப் புகழ் பெற்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து அனைத்துக் கட்சியினுடைய அமோகமான ஆதரவோடு அந்தத் தீர்மானம் இங்கே நிறைவேற்றப்பட்டது. நாட்டுக்குப் பெயர் தேவை என்று தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. இன்று அந்த நாட்டினுடைய எதிர்கால வாழ்வு பாதிக்கப்படாமல் இருப்பதற்காகத் தமிழ்நாட்டு மக்கள் எதிர் காலத்திலே வளம் இழந்து, வாழ்விழந்து நிற்கக்கூடிய பயங்கரமான சூழ்நிலையில் இருந்து அவர்களை விடுவிப்ப தற்காக இந்த தீர்மானத்திற்கு அனைத்துக் கட்சித் தலைவர் களுடைய கூட்டத்தில் வடிவம் அமைக்கப்பட்டு இந்த மாமன்றத்தில் உங்கள் அனுமதியோடு நான் அதை வைத்திட முன் நிற்கிறேன்.

"தமிழ்நாடு, மைசூர் அரசுகளுக்கிடையே 1892, 1924-ஆம் ஆண்டுகளில் கையெழுத்தான ஒப்பந்தங்களின் விதிகள் அனைத்தையும் மீறி மைசூரில் ஹேமாவதி, கபினி, ஹரங்கி, சொர்ணவதி அணைத்திட்டங்களையும் வேறு சில முக்கிய அணைத் திட்டங்களையும் அவைகளுக்கான திட்ட விவரங்களைப் பற்றித் தமிழ்நாடு அரசுக்கு மைசூர் அரசு முறைப்படி முன்னதாக அறிவித்து, தமிழ்நாடு அரசின் முன் ஒப்புதல் பெறாமலும், இந்திய அரசின் அனுமதியை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளாமலும், இதனால் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேரிடுவதைப்பற்றிப் பொருட்படுத்தாமலும் தன்போக்கில்

நிறைவேற்றி வருவது குறித்து இப்பேரவைத் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறது.

காவிரி ஆற்றின் கீழ்ப் பகுதிகளில் உள்ள உழவர் பெருமக்களின் பாசன உரிமைகளுக்கு ஏற்பட்டுள்ள பேராபத்தைக் கருதி, 1956-ம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான நீர்த் தகராறுகள் சட்டத்தின் கீழ் முறையாக அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் ஒன்றிற்குக் காவிரி நீர்த் தகராறைத் தீர்ப்புக்கு விடுமாறு தமிழ்நாடு அரசு 1970 பிப்ரவரித் திங்களிலேயே இந்திய அரசைக் கேட்டுக் கொண்டிருந்தும்கூட, தமிழ்நாட்டிற்குத் தொன்றுதொட்டு ஏற்பட்டு வந்துள்ள பரம்பரைப் பாசன உரிமைகள் பாதிக்கப்படும் வகையில் இந்திய அரசு தமிழ் நாட்டின் வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாத இப்பிரச்சினை குறித்து உறுதியான நடவடிக்கை எடுக்காமல் அளவு கடந்து கால தாமதம் செய்து வருவதை கண்டு இம்மன்றம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

இதில் இந்திய அரசு மேலும் காலந் தாழ்த்தினால், மைசூர் அரசு தனது திட்டங்களை விரைவுபடுத்தி அவற்றைக் கட்டி முடிக்கும் விரும்பத் தகாத விபரீத நிலை உருவாவதற்கே அது வழி கோலுமென்றும், அதனால் பன்னெடுங் காலமாகத் தமிழ்நாடு அனுபவித்து வந்த பாசன உரிமைகள் பறி போய்விடும் என்றும் இப்பேரவை பெரிதும் அஞ்சுகிறது.

வேதனைமிக்க இத்தகைய சூழ்நிலையில், இந்திய அரசு 1956-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நீர்த் தகராறுகள் சட்டத்தின் கீழ் நடுவர் மன்றம் ஒன்றை அமைத்து : "இத் தகராறுகளுக்குத் தொடர்புள்ள தரப்பினர் அனைவருடைய நலன்களையும் கருதித் தமிழக அரசு ஏற்கனவே கேட்டுக் கொண்டுள்ளபடி காவிரி நீர்த் தகராறை அம் மன்றத்தின் தீர்ப்பிற்கு விட்டு நியாயம் வழங்குமாறும் நடுவர் மன்றம் இத் தகராறு குறித்து ஆய்ந்து முடிவு செய்து தனது தீர்ப்பை அளிக்கும் வரையில் மைசூர் அரசு தன் போக்கில் மேற் கொண்டுள்ள இத் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றக் கூடாதென அதற்குக் கட்டளையிடுமாறும், இந்திய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது".

தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் நம்முடைய தமிழ் நாட்டுக்கே உரிய பண்போடும், தமிழ்நாட்டு மக்கள் இந்திய ஒருமைப்பாட்டில் கொண்டிருக்கிற சிறப்பான நம்பிக்கையின்

அடிப்படையிலும் எள்ளளவும் பிற மாநில மக்களுக்கும் நமக்கு மிடையே பகை உணர்வுகள் தோன்றக்கூடாது என்ற உணர்ச்சியோடும் தயாரிக்கப்பட்டுள்ளதாகும்.

காவிரி நதியில் தமிழ்நாட்டுக்குப் பரம்பரை பரம்பரையாக இருந்து வருகிற பாத்ய உரிமைகள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதுதான் இந்தத் தீர்மானத்தினுடைய இன்றி யமையாத நோக்கமாகும்.

காவிரி நதி இந்தியாவிலே இருக்கிற மிகப் பெரிய நதிகளில் நான்காவது நதியாகும். கிட்டத்தட்ட 804 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த ஆறு தமிழ்நாட்டில் மாத்திரம் 321 கிலோ மீட்டர் அளவுக்கு ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த ஆற்றில் மைசூர் மாநிலத்தின் வடக்குப் பகுதியில் இதனுடைய துணை நதிகளாகிய ஹேமாவதி, லோகபவானி, ஹரங்கி, சிம்ஸா, அர்க்காவதி, லட்சுமண தீர்த்தம், கபினி, சுவர்ணவதி ஆகிய துணை ஆறுகளும் கலந்து, இவைகள் எல்லாம் காவிரியோடு கலக்கும்வரை தனித்தனிப் பெயர் கொண்டிருந்தாலும் காவிரியோடு கலந்தவுடன் காவிரி என்கிற ஒரே பெயரோடு விளங்கிக் கொண்டிருப்பதை வரலாறு கூறுகின்றது. அந்த நதியில் தமிழகத்திற்குரிய பங்கு, தமிழர்களுடைய உரிமைகள் பாதிக்கப் படாமல் இருக்கவேண்டுமென்பதற்காக தமிழகம் உரிமைக் குரல் கொடுத்த நேரத்தில் எல்லாம் அன்றைய தினம் ஆட்சியில் இருந்தவர்கள் தலையிட்டு 1892-ஆம் ஆண்டு ஒரு முறையும், 1924-ஆம் ஆண்டில் ஒருமுறையும இரண்டு ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டன.

இந்த இரண்டு ஒப்பந்தங்களிலும் குறிப்பாகக் கவனிக்கப் படவேண்டிய பிரச்சினைகள் கிருஷ்ணராஜசாகர் அணை இயங்குவது காவிரி டெல்டா பாசனத்திற்கு எந்தவிதத்திலும் குந்தகம் விளைவிக்குமாறு குறுக்கிட்டுவிடக் கூடாது என்பதாகும். இரண்டாவது தமிழக மேட்டூர் அணை 3 லட்சத்து 60 ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதிக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் மைசூர் அரசு அணைகள் கட்ட விரும்பினால் தமிழக அரசின் முன் சம்மதம் பெற்றே கட்டவேண்டும். தமிழக அரசின் முன் சம்மதம் இல்லாமல் மைசூர் அரசு எந்தவித அணைகளையும் கட்டிவிடக்கூடாது. உத்தேசித்திருக்கிற திட்ட விவரங்கள்

முழுமையையும் தமிழக அரசுக்கு அளிக்க வேண்டும். அணை கட்டுவதில் வேலை தொடங்குவதற்கு முன்பு தமிழக அரசின் ஒப்புதல் பெற்றாக வேண்டும் என்பதாகத் தமிழகத்தின் பாசனத்திற்குத் தண்ணீர் வருகிற அளவு பாதிக்கப்படக்கூடாது என்கிற நோக்கத்தில் அமைந்துள்ள ஷரத்துக்கள் அடங்கிய அந்த ஒப்பந்தங்கள் மீறப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிற தென்பது தமிழகத்திற்கு அதிர்ச்சி தருகின்றது.

இதில் ஹேமாவதி அணை கட்ட வேண்டுமென்று 1964-ம் ஆண்டு மைசூர் அரசால் தயாரிக்கப்பட்டு அது வெளியிடப்பட்டது. அந்தத் திட்ட அறிக்கையை மைசூர் அரசு பெற்றுக்கொண்ட பிறகு 1968-ல் ஹேமாவதி அணைக்கான அடிக்கல் நாட்டு விழாவினை மைசூர் மாநில முதல்வர் அவர்கள் நடத்தி வைத்தார்கள். அந்தச் செய்தி தமிழக அரசுக்குக் கிட்டியதும் உடனேயே தன் மறுப்பை வெளியிட்டதோடு மாத்திரம் அல்லாமல் மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு நல்ல தீர்வினைக் காணவேண்டுமென்று 1968-ஆம் ஆண்டில் மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்திக் கேட்டுக் கொண்டது.

அப்படிக் கேட்டுக் கொண்டதற்கேற்ப, மத்திய அரசு 1968-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் தமிழ்நாட்டு அரசுக்கு எழுதிய கடிதத்தில் தமிழகத்தோடு இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காணுகிற வரையில் திட்டத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று மைசூருக்கு மத்திய அரசு தெரிவித்திருக்கிறது என அந்தக் கடிதத்திலே மத்திய அரசு நமக்குக் குறிப்பிட் டிருந்தார்கள். இதற்கிடையிலே கபினி நதியில் 1959-ஆம் ஆண்டு 2½ கோடி ரூபாய் செலவில் ஒரு சிறிய அணை கட்டுவதற்கான ஒப்புதலைப் பெற்று, அப்படி 2½ கோடி ரூபாய் செலவில் கட்டுவதாக இருந்த அணையை இப்போது 25 கோடி ரூபாய் அணைத் திட்டமாக மாற்றி அந்த வேலையையும் அவர்கள் தொடங்கி இருக்கிறார்கள். கபினி மாத்திரமல்லாமல், சொர்ணவதியில் ஒரு அணைக்கட்டுத் திட்டத்தை அவர்கள் தொடங்கி இருக்கிறார்கள். குடகு பகுதியில் லட்சுமணதீர்த்தம் நதியிலும் ஒரு அணைக்கட்டுத் திட்டத்தை தொடங்கி இருக்கிறார்கள். ஆக, கபினி, ஹாரங்கி, சொர்ணவதி, இன்றும் வேறுபல உபநதிகள் காவிரியோடு கலக்கிற உப நதிகளிலேயெல்லாம் பாசனத்

திட்டங்களுக்காக அணைக்கட்டுத் திட்டங்களை அவர்கள் இன்றைக்குத் தொடங்கி அந்த வேலைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதிலே இந்த லட்சுமணதீர்த்தம் என்ற நதி குடகு தனி மாநிலமாக இருந்தபோது அந்தத் தனி மாநிலமான குடகிலே இந்த லட்சுமண தீர்த்தம் நதியில் ஒரு அணை கட்டுவதாக 1943-ம் ஆண்டு முயற்சி எடுத்துக் கொண்டது. அப்படி குடகு மாநிலத்தில் லட்சுமண தீர்த்தம் அணை கட்டப்படுமானால் மைசூர் மாநிலம் பாதிக்கப்படும் என்று மைசூர் அரசு ஆட்சேபம் தெரிவித்தது. அந்த ஆட்சேபத்தை முன்னிட்டு அப்போதிருந்த பிரிட்டிஷ் அரசாங்கம் உடனடியாக இந்தப் பிரச்சினையில் தலையிட்டு குடகு மாநிலத்தில் மைசூருக்கு விரோதமாக மைசூரினுடைய பாசனத்தை பாதிக்கக்கூடிய அளவிலே லட்சுமண தீர்த்தத்தில் கட்டுவதாக இருந்த அணையைக் கட்டுவது கூடாது என்று அதைத் தடுத்து விட்டார்கள். அப்படிப்பட்ட குடகு மாநிலம் இன்றைக்கு மைசூர் மாநிலத்தோடு இணைக்கப்பட்டு விட்டது. அவர்கள் ஹரங்கி அணைக்கட்டு திட்டத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, அவர்களுடைய மாநிலம் பாதிக்கப்படும் என்பதற்காக அவர்களுக்கு மேலே உள்ள குடகு தனி மாநிலமாக இருந்த நேரத்தில் அங்கே கட்டப்பட இருந்த லட்சுமண தீர்த்தம் அணைக்கட்டைத் தடுப்பதற்கு மைசூர் அரசுக்கு உரிமை இருந்தது. அதே அடிப்படையில்தான் இன்றைக்கு நம்முடைய மாநிலம் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக நம்முடைய பரம்பரை பாத்தியதைகள், நம்முடைய உரிமைகள், நம்முடைய பாசன வசதிகள் இவைகளுக்காக 1892-ம் ஆண்டு 1924-ம் ஆண்டு ஒப்பந்தங்களின்படி நமக்குத் தரவேண்டிய லிமிட் ஃப்ளோ குறையக் கூடாது என்பதற்காகத் தான் இன்றைக்கு மைசூர் அரசு கட்டுகிற ஹேமாவதி, கபினி, ஹரங்கி, சொர்ணவதி போன்ற அணைக்கட்டுத் திட்டங்களை இன்றைக்கு ஆட்சேபிக்கிறோம்.

இதையே பலமுறை சட்டப் பேரவையில் எடுத்துக் காட்டியிருக்கிறேன். இந்த அணை கட்டுவதையே நாம் மறுக்கிறோம் என்பதல்ல பொருள். இந்த அணைகளை அவர்கள் கட்டுவதானால் அதற்கான விவரங்கள் நமக்குத் தரப்பட்டாக

வேண்டும். இந்த அணைகளை எழுப்புவதன் மூலமாக நமக்கு - தமிழ் நாட்டிற்கு - தரப்படவேண்டிய தண்ணீர் அளவு பாதிக்கப் படக்கூடாது; அதற்கான உத்திரவாதம் அளிக்கப்பட்டு உள்ளது. ஆனால் நிலைமை என்ன? ஒப்பந்தத்தில் இருப்பது போல நமக்கு விவரங்கள் அளிக்கப்படவில்லை. நமக்கு விவரங்கள் அளிக்கப்படாதது மாத்திரமல்ல, மத்திய அரசினுடைய முன் அனுமதியும் பெறப்படவில்லை. இந்த இரண்டுமில்லாமல் இன்றைக்கு மைசூர் அரசு, தீர்மானத்திலே நாம் குறிப்பிட்டிருப் பதைப்போல, தன் போக்கில் இந்த அணைகளைக் கட்டிக் கொண்டு வருகின்றனர்.

இந்த ஹரங்கியைப் பற்றி மாத்திரம் சொல்கிற நேரத்தில் இது பட்டியலில் சேர்க்கப்படாத ஆறு, ஒப்பந்தத்தில் வராத ஆறு என்று சொல்கிறார்கள். இங்கேதான் நம்முடைய வாதம் வலுவடைகிறது. ஒப்பந்தத்தில் வராத ஆறு, ஆகவே நாங்கள் விவரங்களைக் கொடுக்க முடியாது என்று கூறுகிறார்களே, ஒப்பந்தத்தில் வராத ஆறுக்கு விவரங்கள் இல்லையென்றால் ஒப்பந்தத்தில் இருக்கிற ஆறுகளுக்கு விவரங்களை அறிவித்தாக வேண்டும் என்பதை அவர்களை அறியாமலே ஒப்புக் கொள்கிறார்கள். அவர்கள் இந்த ஆறுகளில் கட்டப்படுகிற அணைகளுக்கான விவரங்களை அறிவித்தார்களா என்றால் இல்லை. விவரங்களை அறிவிக்காமல், பேச்சுவார்த்தைகள் எதிலுமே சந்தித்து விவாதிக்காமல், மத்திய அரசினுடைய முன் அனுமதி பெறாமல் நடைபெறுகிற இந்தக் காரியத்தை, 1968-ம் ஆண்டு மைசூரினுடைய முதலமைச்சர் திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் அடிக்கல் நாட்டு விழா என்றைக்கு நாட்டினாரோ, அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டு அரசாங்கம் அதை ஆட்சேபித்து வந்திருக்கிறது. அப்படி ஆட்சேபித்து வந்த நேரத்திலேயெல்லாம் தமிழ்நாட்டு அரசாங்கம் இதிலே கட்சி சார்பற்ற முறையில் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூட்டிவைத்து நிலைமைகளை விளக்கி அவர்களுடைய அரியகருத்துக்களை யெல்லாம் பெற்று ஒவ்வொரு முறையும் மைசூர் முதல்வரோடோ, கேரள முதல்வரோடோ அல்லது திரு. கே. எல். ராவோடு பேசுகிற நேரத்திலோ அப்போதெல்லாம் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூட்டி முடிவுகள் எடுக்கப்பட்ட அடிப்படையில்

பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. அந்த வகையில் இந்த அரசுக்கு அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்கள் அனைவரும் தங்கள் அன்பான ஒத்துழைப்பு தமிழ்நாட்டு மக்களின் நலனை உத்தேசித்துத் தந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் இதய பூர்வமான பாராட்டுதலை இந்த அரசின் சார்பாகத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிலைமையில் நாம் கடைசியாக அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களுடைய கூட்டத்தை கோட்டையில் கூட்டினோம். இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள், நாம் மத்திய அரசு இதிலே காட்டுகிற நிதானப் போக்கை, ஏறத்தாழ 18 மாத காலமாகக் காட்டுகிற நிதானப் போக்கை, கண்டிக்கிற வகையிலே தமிழ்நாடு முழுவதும் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தை நடத்துவது என்பது ஒரு தீர்மானம். தமிழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினார்கள் டில்லிப் பட்டணத்தில் இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களைச் சந்தித்து நம்முடைய தமிழ்நாட்டின் எதிர்காலத்தினுடைய நிலைகளையெல்லாம் விவரமாக விளக்கியும், மைசூர் மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெறாமல் தமிழ் நாட்டிற்கு விரோதமாக அணைகளைக் கட்டுவதை உடனடியாக நிறுத்தி வைக்குமாறு முறையீடு ஒன்றைத் தரவேண்டுமென்பது இரண்டாவது தீர்மானம். மூன்றாவது, இன்றைக்கு மாநில சட்டப் பேரவையிலும், மேலவையிலும் இந்த அணைகள் கட்டுகிற விஷயத்திற்காகத் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டுமென்பதாகும். இதிலே இரண்டினை நாம் செய்து முடித்திருக்கிறோம். தமிழ்நாடு முழுவதும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்ட கண்டனக் கூட்டங்கள் மிக எழுச்சி நிறைந்ததாக, உணர்ச்சி மிக்கதாக, உருக்கம் கலந்ததாக நடைபெற்று முடிந்து இருக்கின்றன. அதனைத் தொடர்ந்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திய தலைமை அமைச்சரை டில்லியில் அவருடைய இல்லத்தில் கண்டு நம்முடைய நியாயமான உரிமைகளை வற்புறுத்தியிருக்கிறார்கள். இப்போது மூன்றாவது கட்டமாகத்தான் இந்தத் தீர்மானத்தை நாம் ஏற்கெனவே முடிவு செய்தவாறு இந்த மாமன்றத்திலே நிறைவேற்றுவதற்கு இங்கே நாம் கூடியிருக்கிறோம். ஆகவே, இதிலே எந்தவிதமான கட்சி மாச்சரியங்களுக்கும் நிச்சயமாக இடம் கிடையாது. எந்தக்

கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் தமிழர் களாகக்கூட அல்ல, தமிழ் நாட்டுக்காரர்கள் என்ற நிலைமையில், தமிழ் நாட்டின் வருங்காலம் பாதிக்கப்படக்கூடாது என்ற அளவில் அனைவரும் பங்கு பெற்றிருப்பதை உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் பங்கு பெற்று ஒத்துழைத்து வருகிற அனைத்துக் கட்சித் தலைவர்கள் மேலும் இந்த அரசுக்கு ஒத்துழைப்புத் தருவார்கள் என்கின்ற நிறைந்த நம்பிக்கையோடு இந்தத் தீர்மானத்தை இந்தப் பேரவையின் முன் நான் முன்மொழிந்து இந்த அளவிலே அமைகிறேன்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : காவிரித் தண்ணீர் முழுவதையும் நாம்தான் பயன்படுத்துகிறோம். இவ்வளவு நல்ல முறையில் பயன்படுத்தி வந்த காவிரித் தண்ணீரை அக்கறைக் குறைவினாலோ, திறமையாகச் சமாளிக்கத் தெரியாத காரணத் தாலோ விட்டுக் கொடுத்தோம், ஏமாந்தோம் என்று பேசுவதற்கு தமிழகம் ஆளாகக்கூடாது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ஏதோ நாங்கள் அவசரப்பட்டு தீவிரமாக எதையும் செய்யவில்லை என்று அம்மையார் அவர்கள் குற்றம் சாட்டினார்கள். இதைப்பற்றி ஒரு விவாதம் 1969 செப்டம்பர் 13-ம் தேதி இந்த மாமன்றத்தில் நடைபெற்றபோது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள் –

". . . . . உணர்ச்சி வசப்பட்டுப் பேசாமல், உணர்ச்சியைக் காட்டிக் குழப்பாமல், சில பேர்கள் சில வேளைகளில் பேசுவது போல் 'அதெல்லாம் தவறு என்று நினைக்கிறேன், இதைச் செய்தால் நாங்கள் அதைச் செய்வோம்' என்றெல்லாம் பேசாமல் உட்காந்து சுமுகமாகப் பேசி முடிக்கவேண்டும். இது விஷயத்தில் முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தமிழகத்திலுள்ள எல்லா மக்களும், எந்த விதமான அபிப்பிராய பேதமும் இல்லாமல், நாங்கள் கேட்டுக் கொள்கிறோம் என்ற நிலையிலேயே கேட்டுக்கொள்வோம்" என்று திரு. கருத்திருமன் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ரொம்ப நிதானமாகப் போக வேண்டும்; உணர்ச்சி வசப்படக்கூடாது, அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்றெல்லாம் பேசக்கூடாது என்று அப்போதே திரு. கருத்திருமன் பேசியிருக்கிறார். நாங்கள் எல்லா அரசியல் கட்சிகளின் முடிவை அறிந்துதான் செயலாற்றி

வருகிறோம். இந்த அரசு செயலாற்றி வருகிறது. எதிர்க் கட்சியில் இருந்து அதன் தலைவர் கருத்திருமன் பேச்சுக்கு மரியாதை கொடுக்கும் வகையில் எல்லாத் தலைவர்களும் சொன்ன அபிப்பிராயத்திற்கு மரியாதை கொடுக்கும் வகையில் எல்லோரும் சேர்ந்து எந்த முடிவை எடுத்தோமோ அந்த முடிவின்படிதான் செயல்பட்டு வருகிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : திரு. கருத்திருமன் அவர்கள் இந்தியாவின் ஒற்றுமைக்குக் குந்தகம் விளையக் கூடாது என்று எந்த அளவுக்கு அக்கறை கொண்டிருந்தார்களோ அதை நானும் கொண்டிருக்கிறேன். நான் சொல்லுவது என்னவென்றால் பேச்சுவார்த்தை நடத்துவது என்றால் எத்தனை ஆண்டுகளுக்குப் பேச்சுவார்த்தை நடத்துவது என்பதுதான். பேச்சுவார்த்தை சரியான முறையில் செல்லவில்லை என்றால் அதைவிட்டுத் திரும்பி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா? மைசூர் முதலமைச்சர் அணையைக் கட்ட ஆரம்பித்துவிட்ட பிறகும் நாம் பேச்சு வார்த்தையிலேயே காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தால் எப்படி?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : உறுப்பினர் அவர்கள் என்ன செய்திருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். தேர்தலுக்கு முன்னாலேயே டிரிப்யூனலுக்கு விடுவதற்கு இந்திய அரசாங்கத்திடமிருந்து உத்தரவு வாங்கி இருக்க வேண்டுமென்ற சொல்லுகிறார்கள். அன்றைக்கு நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு அவர்களுக்குத் தேவை என்ற நிலையில் வற்புறுத்தியிருந்தால் தற்போது நடந்த பொதுத் தேர்தலை ஆறு மாதத்திற்கு முன்னால் ராஜினாமாச் செய்துவிட்டு நடத்தி இருக்க முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இனிமேலும் இந்தப் பிரச்சினையிலே ராஜினாமாச் செய்துவிட்டுப் பொதுத் தேர்தலை நடத்தத் தயாராக இருக்கிறோம், தமிழகம் வாழ, தமிழ் நாட்டு மக்கள் வாழ ராஜினாமா செய்துவிட்டுத் தேர்தலுக்கு நிற்கத் தயாராக இருக்கிறோம் என்ற அந்த நிலையை. . . . . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் சொல்லுவதைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள். தமிழ் நாட்டில் ராஜினாமாச் செய்வோம் என்று சொல்லுகிறார்கள். ராஜினாமாச் செய்துவிட்டு மறுபடியும் வந்தால் ஒரு கட்சியின்

எண்ணிக்கையில் வித்தியாசம் ஏற்படலாம் என்ற கருத்தில் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன்.

அரசியல் பற்றிக் குழப்பாமல் பேச வேண்டிய பிரச்சினை இது. அன்றைய தினம் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே தலைவர்கள் மட்டிலும் பேசினால் போதும் என்று முடிவு செய்யப்பட்டது. இன்றைய தினம் இதை முழுக்க முழுக்க அரசியலுக்குக் கொண்டு போவதாக இருந்தால் அதற்கும் நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநில அரசு தாமதமாகச் செயல்படுகிறது, தீவிரமாகச் செயல்பட வேண்டுமென்று கூறினாலும் ஏற்றுக்கொள்கிறேன். அப்படிக் கூறுவதை வாய்ப்பாக எடுத்துக்கொண்டு மேலும் மத்திய அரசோடு போராடப் பயன்படும் என்று எடுத்துக் கொள்கிறேன். ஆனால் உண்மையில் அப்படி நம்பிக்கொண்டு பேசாதீர்கள்.

இந்த அரசு 1968-ம் ஆண்டிலிருந்து இதுவரை செய்திருக்கிற முயற்சிகளையெல்லாம் இந்த மாமன்றத்தில் அப்போதிருந்த எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் பாராட்டியிருக்கிறார்கள். அப்போது எதிர்க்கட்சித் தலைவர்களெல்லாம் பாராட்டப்பட்டு, மேலவை எதிர்க்கட்சித் தலைவர் ராஜாராம் அவர்களும், பேரவை காங்கிரஸ் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களும் அண்மையில் நடைபெற்ற கண்டன கூட்டங்களில் கூட முதலமைச்சர் அவர்களை நம்பி பொறுப்பை ஒப்படைக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளையெல்லாம் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களேயல்லாமல் யாரும் இது தவறான முயற்சிகள், அரசு தீவிரமாக நடைபெறவில்லை, முயற்சி எடுக்கவில்லை என்று சொல்லவேயில்லை. தமிழ்நாடு அரசாங்கம் ராஜினாமா செய்துவிடுவது என்பது பெரிய காரியமல்ல. மறு தேர்தலை சந்திக்க முடியுமா என்ற பயத்தையும் அச்சத்தையும் ஆட்படுத்திக் கொண்டு அல்ல இந்தப் பிரச்சினையைப்பற்றிப் பேசுவது. ராஜினாமா யார் யார் செய்வது எப்படிச் செய்வது என்பதையெல்லாம் கடைசி கட்டத்தில் யோசிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள். பதவியை விட்டு விலகுவது என்பதற்காக நிச்சயமாக மனதார கண்ணீர் விடமாட்டோம் என்பதை அம்மையார் உணர வேண்டும். நான் சொல்ல வந்தது, அப்போதிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தர முடியாது என்று கூறிவிட்டிருப்பார்களானால் இப்போது நடந்த

தேர்தலை 6 மாதங்களுக்கு முன் கூட்டி செய்திருக்க வேண்டுமென்று சொன்னேனேயல்லாமல் வேறு அல்ல.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் இந்த மாமன்றத்தின் முன்னால் நான் முன் மொழிந்த தீர்மானத்தை வழி மொழிந்து அனைத்து கட்சிகளுடைய தலைவர்களும் தங்களுடைய மனப்பூர்வமான ஆதரவை தமிழ் நாட்டு மக்களின் சார்பாகத் தந்தமைக்கு அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் மிகுந்த பணிவன்போடு மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு ஆளும் கட்சித் தரப்பிலும் மற்றக் கட்சிகள் தரப்பிலும் பேசிய உறுப்பினர்கள், இந்தப் பிரச்சினையில் நாம் இன்னும் வேகம் காட்டவேண்டு மென்று கூறியிருந்தாலும், வேகம் காட்டவில்லையென்று கூறியிருந்தாலும் இரண்டையும் நான் மத்திய அரசை வலியுறுத்துவதற்கேற்ற நல்ல படைக்கலன்களாக எடுத்துக் கொண்டு, அவர்கள் பேசிய அந்த வார்த்தைகளை மத்திய அரசோடு இந்த அரசு வாதிடுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமைத்துக்கொண்டு நிச்சயமாக அரசு வாதிடும் என்ற உறுதியை மீண்டும் ஒரு முறை இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் குறிப்பிட்டதைப் போல இந்தப் பிரச்சினை மைசூர் மாநில மக்களுக்கும் தமிழ் நாட்டு மக்களுக்கும் இடையிலே ஒரு மனக்கசப்பை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதில் 1968-ம் ஆண்டு முதல் இது வரையிலே இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்களும், தலைவர்களும் மிகுந்த அக்கறைகாட்டி வந்திருக்கிறார்கள் என்பதை நாடு நன்றாக அறியும். ஆனால் நாம் காட்டி வருகிற இந்த அக்கறையும், போற்றி வளர்த்து வருகிற இந்தப் பண்பாடும், நாம் உருவாக்கியிருக்கிற இந்த நல்லெண்ண முயற்சிகளும் மைசூர் மாநில அரசின் சார்பிலே காட்டப்படவில்லையென்பதை மாண்புமிகு சுதந்திராக் கட்சியினுடைய தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கே சில பல ஆதாரங்களின் மூலமாக எடுத்துக்காட்டினார்கள்.

தமிழக முதலமைச்சருடைய கொடும்பாவி மைசூர் மாநிலத்திலே கொளுத்தப்பட்டதையும் அவர்களும் சுட்டிக் காட்டினார்கள். மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் இங்கே சுட்டிக் காட்டினார்கள். முதலமைச்சருடைய கொடும்பாவி மைசூர் மாநிலத்திலே கொளுத்தப்படுவதைப் பற்றிக்கூட நான் வருத்தப் படவில்லை. நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் அந்தச் செய்திகளுக்கு முக்கியத்துவம் அளித்து அதைச் சில பேர் நம்முடைய தமிழ்நாட்டிலே விளம்பரப்படுத்துகிறார்களே என்பதை எண்ணித்தான் நான் வருத்தப்படுகின்றேன். தமிழ் நாட்டில் "காவிரி நீர்ப் பிரச்சினையை நீ சீக்கிரம் தீர்க்கவில்லை, இன்னும் தீவிரமாகச் செயல்பட வேண்டும்" என்று சுட்டிக்காட்ட அதற்கு அடையாளமாக என்னுடைய கொடும்பாவியைத் தமிழக மண்ணிலே தமிழக மக்கள் கொளுத்தினால்கூட நான் வருத்தப்பட மாட்டேன். நாம் வேகமாகச் செயல்படவில்லை இன்னும் வேகமாகச் செயல்பட வேண்டுமென்று இப்படிச் செய்கிறார்கள் என்று எண்ணி மகிழ்ச்சியடைவேன். ஆனால் இம்மாதிரி செய்திகளைப் போடுகின்ற நேரத்திலே மகிழ்ச்சியுடன் போடுவது மாதிரி போடுகிறார்களே என்றுதான் வேதனைப் படுகிறேன். நான் ஒருமுறை சொன்னேன், நமக்குள்ளே ஆயிரம் தகராறுகள் இருந்தாலும் வெளிமாநிலங்களுக்கு நம்முடைய மாநில உரிமைகளை விட்டுக்கொடுப்பதிலும் நம்முடைய மாநிலத்தின் மான உணர்ச்சியை விட்டுக் கொடுப்பதிலும் நாம் கிஞ்சிற்றும் கட்சி மாச்சர்யங்களுக்கு ஆட்பட்டுவிடக் கூடாது என்பதை நான் எடுத்துக்காட்டியிருக்கிறேன். அதை இங்குள்ள உறுப்பினர்கள் எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் ஒரு பத்திரிகையில் - பத்திரிகையின் பெயரை வெளியிட விரும்பவில்லை - அந்தச் செய்தி எப்படி வெளியிடப்பட்டிருந்தது என்பதைப் படித்துக்காட்ட விரும்புகிறேன்.

"பெங்களூர் : 500 கன்னடத்தவர் ஒருவருடைய தலைமையில் - அவருடைய பெயரை படிக்க விரும்பவில்லை - முதல் மந்திரி கருணாநிதியின் மைசூர் எதிர்ப்பு கொள்கையை எதிர்த்து அவருடைய கொடும்பாவியை ஊர்வலமாக எடுத்துச்சென்று எரித்தார்கள்."

நான் மைசூர் எதிர்ப்புக் கொள்கையை உடையவனாக அவர்கள் கற்பனை செய்துகொண்டு செய்தியை வெளியிட் டிருந்தாலும் நான் அதைப்பற்றிக் கவலைப்பட்டிருக்கமாட்டேன். நான் மைசூர் எதிர்ப்புக் கொள்கையை உடையவனாக இருக்கிறேன் என்று அவர்கள் சுட்டிக்காட்டிய குற்றச்சாட்டை இங்குள்ள பத்திரிகைக்காரர்கள் ஏற்றுக்கொண்டு அந்தக் கருத்தினை ஏற்றுக்கொண்டு கருணாநிதியின் மைசூர் எதிர்ப்புக் கொள்கையை எதிர்த்து அவனுடைய கொடும்பாவி அங்கே கொளுத்தப்பட்டது என்று போடும்போது நான் வருத்தப் படுகிறேன்.

கட்சி மாச்சர்யங்களை மறந்துவிட்டு எல்லாக் கட்சிகளும் இதிலே ஒருமித்த கோரிக்கையினை எழுப்பவேண்டுமென்று 1968-லே இருந்து பேசப்பட்டு வருகின்றது. அதன்படி எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசுவதும், பிறகு பேச்சு வார்த்தைகள் நடத்துவதும், நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து 18 மாதங்கள் கழிவதும், பிறகு மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூட்டுவதும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊர்வலமாகப் போவதும், சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டுவிட்டு அதை மத்திய அரசுக்கு அனுப்பிவிட்டு அதன் பிறகும் எந்தவித முயற்சியும் எடுக்காமலிருந்தால் என்ன செய்வது? அதற்கு ஒரு கால கட்டம் வேண்டாமா? என்றெல்லாம் இங்கு பேசிய எதிர்க் கட்சித் தலைவர்களும் மற்ற உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

இன்றைய தினம் இங்கே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கின்றது. மேலவையிலும் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட இருக்கின்றது. இந்தத் தீர்மானத்தின்மீது மேலவையிலும் பேரவையிலும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும், அனைத்துக்கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் பேசிய பேச்சுக்களின் சுருக்கங்களையும், நான் ஆற்றிய உரையின் சுருக்கங்களையும், அனைத்தையும் இந்தத் தீர்மானத்தையும் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து அவர்கள் இந்த மாதம் 15 நாட்களுக்குள்ளாகப் பதில் அனுப்பாவிட்டால் அதற்குப் பிறகு

மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி நான் எந்தவித கிளர்ச்சியை நடத்துவதாக இருந்தாலும் அதற்கு ஒரு கூட்டணியை மத்திய அரசுக்கு அறிவித்துவிட்டு நடத்துவதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்பதை இந்த மன்றத்திலே உங்கள் முன்னால் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மைசூர் மாநில மக்களுக்கு எதிரியாக நம்மை அவர்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது என்கிற வேண்டுகோளை என்னுடைய சார்பாக மாத்திரமல்ல, இந்த மன்றத்திலே இருக்கின்ற எல்லாக் கட்சிகளின் சார்பாக மைசூர் மாநிலத்திலேயிருக்கின்ற பெருங்குடி மக்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள், மகஜன் கமிட்டி அறிக்கையைப் பரிசீலித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லும் மைசூர் அரசு இதை ஏன் ஏற்றுக்கொள்ள வில்லை என்று கேட்டார்கள். நான் டெல்லிக்கு 1¼ ஆண்டு களுக்கு முன்பு சென்றிருந்தபோது மைசூர் மாநில நாடாளுகின்ற உறுப்பினர்கள் எல்லாம் என்னைச் சந்தித்தார்கள். அந்தச் சந்திப்பின் நோக்கம் மைசூர் அரசினுடைய நியாயமான வாதங்களுக்குப் பின்னால் நானும் நிற்கவேண்டும் என்பதாகும். அவர்கள் அப்போது பேசும்போது மகஜன் கமிட்டி நிறுவப்பட்டு அந்தக் கமிட்டி தீர்ப்பளித்த பிறகு அதற்குப் புறம்பாக நடத்தலாமா என்று கேட்டார்கள். நான் சொன்னேன், இந்தத் தீர்ப்புக்குப் புறம்பாகவோ ஒப்பந்தத்துக்குப் புறம்பாகவோ யாரும் நடக்கக் கூடாதென்பது நியாயம்தான் என்று சொன்னேன். நான் மைசூர் ஒப்பந்தத்தை மீறுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்பதைப் புரிந்து கொண்டு சிரித்தார்கள். அதற்குப் பிறகு திரு. ஹண்டே அவர்கள் குறிப்பிட்டதைப் போல இன்னும் அவர்கள் மகஜன் கமிட்டியின் ரிப்போர்ட்டை அங்கீகரிக்க வேண்டுமென்று எப்படி மத்திய அரசை நிர்ப்பந்திக்க மைசூர் அரசுக்கு உரிமை இருக்கிறதோ அதைப்போல நம்முடைய மாநில அரசுக்கு, தமிழக அரசுக்கு ஒரு நியாயமான கோரிக்கையில் இந்தப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்பதிலே ஏராளமாக உரிமைகள் இருக்கின்றன.

1943-லிருந்து இதுவரையிலும் மைசூரின் பல அறிக்கைகளில் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அப்போது குடகு மாநிலத்திலே லட்சுமண தீர்த்தா அணை கட்டப்படும்போது அப்போது மைசூர் மாநிலத்தில் அந்த அணைக்கு எதிராகக் குரல் எழுப்பப்பட்டது, நீங்களும் சேர்ந்து குடகிலே அமைக்கப் போகிற லட்சுமண தீர்த்தா அணைக்கட்டுக்கு எதிராகக் குரல் எழுப்புங்கள் என்று மைசூர் அரசாங்கம் கேட்டது. இப்போது மைசூரும் குடகும் ஒன்றாகப் போனதும் தமிழ்நாட்டுக்குப் பாதகமாக ஹாரங்கி அணைக்கட்டை கட்டிக் கொண்டிருக் கிறார்கள். ஹேமாவதி திட்டத்திற்கு 1924-ல் ஒரு அறிக்கைத் தயாரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டதென்று சொன்னார்கள். 1924-ல் மைசூர் அன்று தயாரித்த ஹேமாவதி பற்றிய அறிக்கையில் நமக்குச் சாதகமான பல விஷயங்கள் இருக்கின்றன. நடுவர் தீர்ப்பு என்றால் ஏன் பயப்படுகிறார்கள் என்று திரு. ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். இதுதான் காரணம். அதிலே என்ன இருக்கிறது என்றால், அவர்கள் ஹேமாவதி அணையைக் கட்டினால்,

'It is not possible to utilise the entire as the Hemavathi river is a scheduled river governed by the Cauvery Agreement of 1924 between Mysore and Madras, என்று அந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல; இன்னும் ஒரு முக்கியமான விஷயம்

'The project does not affect utilisation or inter-State interests. The Project is designed keeping in view 1924 agreement of Madras and Mysore Governments. The Project comes under the purview of 1924 agreement' என்று இருக்கிறது. ஹேமாவதி அணையைப்பற்றி 1924-ம் ஆண்டு தயாரித்து ஹேமாவதி ரிசர்வாயர் பிராஜக்ட் என்ற இந்தப் புத்தகம் மைசூர் அரசால் அச்சடிக்கப்பட்ட புத்தகம். இதிலே 1924-ம் ஆண்டு ஒப்பந்தப்படிதான் ஹேமாவதி அணை கட்டப்படும், கட்டப்பட வேண்டும், தமிழ்நாட்டுக்குத் தரப்பட வேண்டிய லிமிடேஷன் ப்ளோ ரூல்ஸ் அண்டு ரெகுலேஷன்ஸ் இவ்வளவுக்கு பாதிக்காமல் அணை கட்டப்பட வேண்டும் என்கிற உறுதி அளிக்கப் பட்டிருக்கிற புத்தகம் ஆகும். இது மைசூர் அரசினிடமிருந்து மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகும்.

அடுத்து 1967-ம் ஆண்டு இன்னொரு சம்பவம் நடைபெற்றது. நம்முடைய தமிழ்நாட்டுடைய நீர்ப்பாசனத்துறை பொறியாளரும், மைசூர் நீர்ப்பாசன பொறியாளரும் மத்திய அரசின் நீர்ப்பாசன பொறியாளர் தலைமையில் கூடி ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அந்த ஒப்பந்தத்தில் மத்திய அரசு சி.டபிள்யூ.பி.சி நீர்ப்பாசனத் துறை பொறியாளர் டி.பி.ஆனந்த் கையெழுத்திட்டிருக்கிறார். மைசூர் அரசின் சார்பாக மேக்டோம் கையெழுத்திட்டிருக்கிறார். தமிழகத்தின் சார்பாக ஜே.ஈ.வாஸ் கையெழுத்திட்டிருக்கிறார். அதிலே சொல்லி இருப்பது,

"The Chief Engineer, Mysore, explained that the Mysore Government was fully prepared to honour the 1924 agreement and that the limit flow that is guaranteed therein would not be affected in any way the Hemavathi Project".

என்று சொல்லி கையெழுத்து போட்டிருக்கிறார். அடுத்தபடி அரசின் பொறியாளர் சொல்லுகிறார் : -

'The Chairman stated that this examination would be done by the C.W.amd P.C. and that the contribution of Hemavathi river in the impoundable quantity will be determined from the available inflow data from 1940-41 onwards consistent with the conditions of the 1924 agreement. Suitable proportion factors will have to be fixed by joint gaugings between Mysore and Madras. Rules of regulation should also be framed by the two Governments in due course".

இந்த அளவுக்கு நல்ல ஆதாரங்கள் நம்மிடத்தில் இருக்கின்றன. அந்தக் காரணங்களாலேதான் நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் மைசூர் அரசு தன்னிடத்தில் நியாயங்கள் இல்லாத காரணத்தாலே 1967-ம் ஆண்டு வரையில் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை நாங்கள் மதிக்கிறோம், அதற்குப் பாதகம் இல்லாமல்தான் இந்த அணைகள் கட்டப்படும் என்று கூறியவர்கள், 1968-ல் ஹேமாவதி அடிக்கல் நாட்டு விழாவைத் தமிழக அரசின் இசைவையும் முன் ஒப்புதலையும் பெறாமல், மத்திய அரசின் முன் அனுமதியையும் பெறாமலும் நடத்தினார்கள். அந்தச் சமயத்தில் கட்சிக் கண்ணோட்டத்தில் தமிழக அரசு இதைக் காணவில்லை.

மதிப்பிற்குரிய ஹாண்டே அவர்கள் கூறியபடி அன்றைக்கு மைசூரில் முதலமைச்சராக இருந்தவர் வீரேந்திரபட்டீல். அவர்கள் காங்கிரசு கட்சியைச் சேர்ந்தவர்கள். கழக அரசு அப்போதும் அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டாம் என்ற அளவில்தான் தமிழக அரசு அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்டி மிகுந்த நிதானத்தோடும், இரண்டு மாநிலங்களுக்கும் உள்ள உறவுகளுக்கு எந்தவிதமான ஊனமும் ஏற்படக்கூடாது என்ற முயற்சியோடும் பல்வேறு காரியங்களில் ஈடுபட்டது, பேச்சு வார்த்தை நடத்தியது. அதை இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்களும் பொதுமக்களும் மிக நன்றாக அறிவார்கள். இதற்கு பிறகு 1968-ல் அணைக்கட்டுக்கு அடிக்கல் நாட்டு விழா நடத்தியதற்குப் பிறகு மைசூர் சட்ட மன்றத்தில் பேசிய முதலமைச்சர் வீரேந்திர பட்டீல் அவர்கள் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை மைசூர் அரசு மதிக்காது என்று சொன்னார்கள். இந்த அணைக்கட்டு அடிக்கல் நாட்டு விழா வரை மதிக்கப்பட்டு வந்த 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை, 1962-ல் மத்திய அரசின் பொறியாளர் முன்னிலையில் தமிழக மைசூர் மாநிலங்களின் பொறியாளர்கள் கையெழுத்திடுகின்ற நேரத்தில் மதிக்கப்பட்ட 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை மைசூர் சட்டசபையில் முதலமைச்சர் இனி அது மதிக்கப்படமாட்டாது என்று தட்டிக்கழிக்கிறார். இதைக்கேட்டு திடுக்கிட்ட அதிர்ச்சிக் குள்ளான தமிழக அரசு உடனடியாக மத்திய அரசிற்கு எழுதி அதன் உதவியை நாடியது. நம் முறையீடுகள் மத்திய அரசிற்கு சென்றன. அதற்குப் பிறகு மத்திய அரசு உடனே தலையிட்டு மைசூர் அரசு இந்த அணைகளைக் கட்டக்கூடாது, நிறுத்தி வையுங்கள், பேச்சுவார்த்தையில் முடிவு காணுகிற வரையில் நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்று எழுதியிருப்பதாகத் தகவல் தந்தார்கள்.

அப்போதுகூட சென்னையில் உள்ள பத்திரிகைகள் மத்திய அரசு மைசூர் அரசிற்கு உத்தரவு போடுவதை எதிர்க்கிறோம் என்ற அளவில் எழுதியதை மறந்துவிடவில்லை. பெங்களூரில் அந்தப் பத்திரிகை விற்பனையாக வேண்டும் என்ற விற்பனை நோக்கத்தோடு எழுதியது. அதைப்பற்றி எல்லாம் அதிகமாகப் பேச விரும்பவில்லை.

அப்போது மைசூர் அரசிற்கு மத்திய அரசு இட்ட ஆணை தொடர்ந்து மீறப்பட்டு வந்தது. ஒவ்வொரு முறையும்

நானும், நம் அமைச்சர் பெருமக்களும், கேரளத்து முதல்வரும், மைசூர் முதல்வரும் மத்திய அமைச்சர் திரு.கே.எல்.ராவ் அவர்களோடு பேசுகிற நேரத்தில் எல்லாம் எல்லாவற்றையும் பேசி விட்டு கடைசியாக வீரேந்திர பட்டீல் அவர்கள் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்றுதான் கூறுவார். நான் சொன்னது இப்போது இருக்கிற ஒப்பந்தத்தின்படி இன்றுள்ள சூழ்நிலைப்படி எங்களுக்கு வரையறுக்கப்பட்ட லிமிட் ஃப்ளோஸ் தந்தாக வேண்டும், அந்த லிமிட் ஃப்ளோஸுக்கு ஆபத்து இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதை நான் வலியுறுத்தி இருக்கிறேன். இந்த மாமன்றத்திலும் சரி, அனைத்துக் கட்சித் தலைவர்கள் இதுபற்றி பேசக் கூடி இருந்த நேரங்களிலும் சரி.

லிமிட் ஃப்ளோஸ் ஏதோ கோட்டை விட்டுவிட்டு வந்தது போல தெரிகிறது என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். லிமிட் ப்ளோஸில் தவறு ஏற்பட முடியாது. மைசூர் ஒன்றும் ஆப்பிரிக்கா கண்டத்தில் இல்லை. நாமும் வெகுதூரத்தில் இல்லை. இன்றைக்கு கிருஷ்ணராஜசாகரில் உள்ளது போல் நம் பொறியாளரும் இருப்பார். அவர்கள் மாநிலத்தைச் சேர்ந்த பொறியாளரும் இருந்துகொண்டிருப்பார். ஆகவே யாரும் அதிலே பொய் கூறி தப்பித்துக்கொள்ள முடியாது. தவறு செய்து விட முடியாது. அந்தக் காரணத்தாலே நமது லிமிட் ப்ளோஸ் அங்கீகரிக்கப்பட்டு அதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்று எடுத்துச் சொல்லப்பட்டது. இந்த லிமிட் ப்ளோஸுக்கு எந்த ஊனம் வந்தாலும் இந்த அணைக்கட்டு திட்டங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்று திட்டவட்டமாக கூறி இருக்கிறோம்.

இங்கே ஆளும் கட்சித் தரப்பிலும் எதிர்க் கட்சித் தரப்பிலும் பேசியவர்கள் தேர்தலுக்காக மைசூர் பிரச்சினையில் மத்திய அரசு காலம் கடத்துகிறது என்று சொன்னார்கள். அது உண்மையாகவும் இருக்கலாம். உண்மை அல்லாமலும் இருக்கலாம். ஆனால் இதிலே நான் கருதுவது எல்லாம் தேர்தல் நடந்த நேரத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு.கே.டி.கே.தங்கமணி கூறியது போல, மைசூர் மாநிலத்தில் பெங்களூருக்கு வந்து பேசிய இந்திராகாந்தி அவர்கள் மைசூர் தமிழ்நாடு காவிரி நீர் பங்கீட்டு பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடுவதாக இருக்கிறேன் என்று சொன்ன பிறகுதான் மைசூர்

நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காந்தி காங்கிரஸ் பெரும் வெற்றி பெற்றது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. தேர்தல் சமயத்தில் ட்ரிப்யூனலுக்கு விடப் போகிறேன் என்று சொன்ன பிறகும் அவர்கள் இவ்வளவு பெரிய வெற்றி பெற்ற பிறகும் ஏன் பயப்படுகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை; அவர்கள் பெற்ற வெற்றியில் அவர்களுக்கே நம்பிக்கை இல்லையா என்று நாம் சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது. ட்ரிப்யூனலுக்கு விடப்போகிறேன் பெங்களூரில் எடுத்துச் சொன்ன பிறகும் அங்கே மறுபடி தேர்தலுக்குப் பயப்படுகிறார்கள் என்ற வாதத்தில் பொருள் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதைப் பற்றி சொல்லுகிறார்கள். நான் சி. எஸ்.க்காக வக்காலத்து வாங்கவில்லை. அவரே வக்கீல். சி. எஸ். என்ன சொல்லி இருக்கிறார் என்றால் தேர்தல் முடிந்த பிறகுதான் கவனிக்கப்படும் என்றார். ஏதோ இது மத்திய அரசிலிருந்து இந்திரா காந்தி பேசியது போல நான் கருதவில்லை. அவர் சொல்லி இருப்பது தேர்தல் முடிந்த பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்த பிறகு அவர்களோடு பேச முடிவு காணலாம் என்ற கருத்தில்தான் சொல்லி இருக்கிறார்கள். அந்தக்கருத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அனைத்துக்கட்சி தலைவர்களும் இதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. நாங்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தக் கருத்தை அவர்கள் தன்னுடைய கட்சிக்காக பேசிய கருத்தாகத்தான் எடுத்துக்கொள்கிறேன்.

கட்சி சார்பற்ற முறையில் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் என்று டாக்டர் ஹாண்டே குறிப்பிட்டதை அடுத்து சொன்ன கருத்து இன்றைக்கு புதிய காங்கிரசு கட்சியினுடைய அரசு ஏற்பட்ட பிறகு மைசூர் மாநிலத்தில் ஒரு தர்மசங்கடமான நிலை ஏற்படலாம். மத்தியில் புது காங்கிரசுடைய ஆட்சி. மைசூரில் பழைய காங்கிரசுடைய ஆட்சி. இந்திரா காந்தி அரசு தி.மு.க. ஆதரவுடன் இயங்கி வருகிறது. ஆகவே இந்திரா காங்கிரசுக்கு எதிராக பழிச்சொல் வருமே என்று தேர்தலுக்காக காத்திருந்தால் அதை நாம் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இன்றைய தினம் நம்முடைய நிலைமை என்ன? மத்திய அரசின் உத்திரவை மத்திய அரசே மீறுகிற துர்ப்பாக்கியமான நிலைமை.

டில்லியில் தான் போட்ட உத்தரவை மைசூரில் அவமதித்துக் கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம்.

இப்போதுதான் நாம் இந்தியாவின் ஒருமைப்பாட்டில் இவர்களுக்கு எல்லாம் உண்மையில் நம்பிக்கையிருக்கிறதா என்ற சந்தேகத்திற்கு ஆளாக வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு.பொன்னப்ப நாடார் அவர்களும் மற்றவர்களும் சொன்னார்கள். இந்தியாவின் ஒற்றுமைக்குப் பாதகம் இல்லாத வகையில் நீங்கள் பெரிய போராட்டம் நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். போராட்டம் என்பதாக திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கினால் எங்கே அது ஒரு பெரிய போராட்டமாக எழுச்சி பெற்று பிரிவினையில் போய் அமைந்து விடுமோ என்ற எண்ணத்தில் சொன்னார்கள்.

பிரிவினை பேசிய நாம் இன்றைக்கு மத்திய சர்க்காரின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடக்கிறோம். மத்திய அரசின் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தி வருகிற நேரத்தில், மத்திய அரசின் அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்ற முழக்கம் எழுப்புகிற நேரத்தில் முறைப்படி எந்த எந்த வகையில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்பதை ஆராய ராஜமன்னார் குழுவை அமைத்தோம். அவர்கள் சில சிபார்சுகளைச் செய்திருக்கிறார்கள். அதை நாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

ஆனாலும் அதே நேரத்தில் இன்று இருக்கின்ற சட்டத்திட்டங்களின்படி மத்திய அரசின் அதிகாரங்களுக்கு கட்டுப்பட்டே நடக்க வேண்டுமென்ற பண்பை நாம் பெற்றிருக்கிறோம். இந்த அரசு பெற்றிருக்கிறது. அதற்கு அடையாளம்தான் மேலவையில் கூட எடுத்துச் சொன்னேன். வீராணம் திட்டத்திற்கு 1½ ஆண்டு காலம் மத்திய அரசின் அனுமதி கிடைக்கிற வரையில் காத்துக் கொண்டிருந்தோம். இது எந்த மாநிலத்தையும் பாதிக்கவில்லை, நம்முடைய மாநிலத்தை பொறுத்தது, நாங்களே ஏற்படுத்திக் கொள்கிறோம் என்பதாக அவசரப்பட்டு அந்தக் காரியத்தில் ஈடுபடவில்லை.

அதேபோல மேலவையில் சொன்னேன்–அந்தக் கோட்டையைச்சுற்றி புல் பூண்டுகள் செதுக்கப்பட வேண்டும் என்று சொன்னதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெற்றே செய்ய வெண்டும் என்று அதிகாரி சொன்னார். ஆகவே மத்திய அரசின் உதவி அமைச்சர் இங்கே வந்திருந்தபோது அவரை

அழைத்துப்போய் அந்தப் புல் பூண்டுகளைக் காட்டி, அதைச் செதுக்க அனுமதி தரவேண்டும் என்று கேட்டு, நான்கைந்து கடிதம் எழுதி, ஞாபகப்படுத்தி, "புல்பூண்டுகளைச் செதுக்க அனுமதி கொடுத்தோம் போ" என்று அவர்கள் அனுமதி அளித்த பிறகுதான் புல்பூண்டுகள் இப்போது செதுக்கப்பட்டு, கண்ணைக் கவரும் வண்ண மலர்கள் கொண்ட பூங்கா தோன்றிக் கொண்டிருக்கின்றது என்கிற நிகழ்ச்சியை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அந்த அளவுக்கு மத்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு பணிந்து நடக்கிறோம். அடங்கி நடக்கிறோம். அடக்க உணர்ச்சியைக் காட்டிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் 25 கோடி, 30 கோடி என்பதாக - ஹேமாவதி, கபினி, ஹாரங்கி, சொர்ணவதி ஆகிய பல்வேறு அணைக்கட்டுத் திட்டங்களை, தமிழ் நாட்டைப் பாலைவனம் ஆக்கக்கூடிய பயங்கரமான திட்டங்களை மைசூர் அரசு மத்திய அரசின் ஒப்புதலைப் பெறாமலே, மத்திய அரசின் சிபார்சின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கவர்னர் ஆட்சி நடந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில் செய்கிறார்கள் என்றால் நாட்டு நிலைமை என்ன?

பாலாறு மைசூர் அணைக்கட்டால் பாழாய்ப் போய்விட்டதை மறந்துவிடக்கூடாது. ராணிப்பேட்டில் பாலாறு படுகை ஓரத்தில் 9 லட்சம் மரங்கள் இருந்தன என்று கணக்கிட்டு, நடந்த மகாயுத்தத்தின்போது 3 லட்சம் மரங்கள் வெட்டப்பட்டு விறகாகக் கொடுக்கப்பட்டன என்றெல்லாம் சரித்திரம் படித்தவர்கள் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பாலாறு இன்றையதினம் பாழாறாக மாறியிருக்கிறது.

காவிரியில் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறபோது பலபேருக்கு இது எவ்வளவு பயங்கரமான பிரச்சினை என்று புரியாமல் இருக்கலாம். அதன் உண்மைத் தத்துவம் தெரியாமல் இருக்கலாம். பாலாறை எண்ணிப் பாருங்கள். அதில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிய காலம் ஒன்றுண்டு. இன்றைக்கு வெறும் மணல் வெளியாகக் கிடப்பதைப் பார்க்கிறோம். அதைப்போல இன்றைக்கு மைசூர் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறபடி அணைக் கட்டுகளை எல்லாம் கட்டிவிட்டால் சகாரா பாலைவனத்தைப் போல காவிரி நதியும் மணல் ஆறாகப் போய்விடும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இலக்கியங்களில் எல்லாம் காவிரியைப் பற்றி வருணித்திருக்கிறார்கள். அது சம்பந்தப்பட்ட வரலாறுகளை எல்லாம் உறுப்பினர்கள் சொன்னார்கள். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்.

"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கருங் கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி"

என்று அழகுறப் பாடிக் காட்டினார்கள். மைசூர் அரசு இந்த அணைகளைக் கட்டிவிட்டால் அங்கே மருங்கு வண்டு சிறந்தார்ப்பதைப் பார்க்க முடியாது. மணிப்பூ வாடையை நுகர முடியாது.

கிழக்கு பாகிஸ்தான் அகதிகளைக் காப்பாற்ற வேண்டு மென்று திருமதி. இந்திரா காந்தி அம்மையார் உலக நாடுகளை எல்லாம் உதவி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாமோ நாளைக்கு அகதிகளாக மாறிவிடக்கூடிய தமிழ்நாட்டு மக்களை ஆபத்தில் இருந்து காக்க உங்கள் உதவியைத் தாருங்கள் என்று அந்த அம்மையாரைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இது உணர்ச்சியை அம்மையார் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளும் கட்சியின் சார்பில் பேசிய திரு. கோவை செழியன், திரு. கணபதி அவர்கள் சொன்னார்கள். "நாம் தற்கொலைப் படையாக இருப்பதற்கும் தயாராய் இருக்கிறோம். எந்த யுத்தத்திற்கும் தயாராய் இருக்கிறோம்" என்றார்கள். அப்படி ஒரு முடிவுக்கு வந்து விட்டால் இதுபோல சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் போடவேண்டிய அவசியம் இல்லை. அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டிப் பேச வேண்டியதில்லை. அவை அவர்களுடைய உள் உணர்ச்சிக்கு அடையாளமான வார்த்தைகளே தவிர வேறு ஒன்றும் இல்லை என்று நினைக்கிறேன். எதிர்கால தமிழகத்தை எண்ணிப்பார்த்து, கவலையால் குமைந்த உள்ளத்தில் பிறந்த நல்முத்துக்கள் என்ற அளவில் அவைகளை நான் எண்ணுகின்றேனே அல்லாமல் இந்த உணர்ச்சிகள் மத்திய அரசின் மீது பகைமையோ, அண்டை மாநில அரசின் மீது பகைமையோ ஆகத் திருப்பப்படும் என்று பொருள் இல்லை. பேசிய உறுப்பினர்களே அப்படி நினைத்துப் பேசியிருக்கமாட்டார்கள்.

ஆனாலும் இது சாதாரணப் பிரச்சினை அல்ல என்று திரு. இராம அரங்கண்ணல் குறிப்பிட்டதுபோல, நமது திரு. பெருமாள் அவர்கள் குறிப்பிட்டதுபோல இயற்கையிலே இது பயங்கரமான உருவம் எடுத்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. மறைக்க முடியாது. நமது அம்மையார் அவர்கள் எடுத்துக்காட்டியதுபோல இன்றைக்கு மத்திய அரசு மாநில அரசின் சில கொள்கைகளை கொஞ்சம் கசப்போடுதான் அணுகுகிறார்கள் என்பதை நான் மறைக்க விரும்பவில்லை. அப்படிச் சில நடைமுறைகள் இன்றைக்கு இருந்துகொண்டிருக் கின்றன. ஆனால் அத்தனை பிரச்சினைகளையும் தேர்தல், தேர்தல் கால ஒப்பந்தங்கள் ஆகியவற்றோடு - ஒன்றோடொன்று இணைத்துப் பார்ப்பது சரியான வாதமாகாது.

இவை எல்லாம் ஒரு அரசுக்கும் இன்னொரு அரசுக்கும் இருக்கக்கூடிய கருத்து வேறுபாடு என்று பார்க்கவேண்டுமே தவிர ஒரு கட்சிக்கும், இன்னொரு கட்சிக்கும் இருக்கிற வேறு பாடாகப் பார்க்கக்கூடாது.

ஹேமாவதி திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியவர் திரு. வீரேந்திர பட்டீல் - அவர் பழைய காங்கிரஸைச் சேர்ந்தவர் - ஆகவே அதற்காக இங்கே உள்ள பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களைக் குறை சொல்ல வேண்டுமென்று குறை சொன்னதில்லை. அது தமிழக அரசுக்கும், மைசூர் அரசுக்கும் இடையே ஏற்பட்டிருக்கிற தகராறு என்று அளவில்தான் பார்த்தோம். உண்மையில் இது மைசூர் அரசுக்கும், தமிழக அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள தகராறே தவிர மைசூர் மாநில மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் ஏற்பட்டுள்ள தகராறு அல்ல. இந்த இரு அரசுகளுக்கும் இடையே எழுந்துள்ள தகராறில் மத்திய அரசு தலையிட்டு உடனடியாக நியாயம் வழங்க வேண்டுமென்று நாம் கோருகிறோம். இந்தத் தகராறில் தலையிட மத்திய அரசு மறுக்கிறது. மாநில அரசின் கருத்துக்களை அலட்சியப்படுத்துகின்றது. பிறகு பார்க்கலாம் பிறகு பார்க்கலாம் என்பதாக பிரச்சினைகளை ஒத்திவைக்கின்றது. நமது உணர்ச்சிகளைச் சரியான முறையில் புரிந்துகொள்ள முடியாத நிலைமை அங்கே இருக்கிறது.

அமைச்சர் மாதவன் அவர்களும், சாதிக் பாட்சா அவர்களும் டெல்லிக்குச் சென்று திரு. கே. எல். ராவ் அவர்களைச்

சந்தித்துப் பேசினார்களே, அங்கே என்ன பேசப்பட்டது, அதை முதல் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கோருகிறேன் என்பதாக ஓர் உறுப்பினர் சொன்னார். அதை நான் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விளக்கி இருக்கிறேன். அதைப்பற்றி வேறு விவரங்களை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை.

திரு. கே. எல். ஆர். அவர்கள் அப்போது சொன்ன கருத்துக்களையாவது மறுபடியும் இதுவரை எழுத்து மூலம் ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறார்களா என்றால் இல்லை. அப்படி எதுவும் செய்யாது காலம் தாழ்த்தி வருகிறார்கள். அதற்குக் காரணம் நமக்குப் புரியவில்லை.

ஆனால் இன்றையதினம் வேறு ஒரு செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. மாநில அரசு தவறு செய்தது, முதல் அமைச்சர் தவறு செய்துவிட்டார். இந்திரா காந்தி அம்மையார் முதல் அமைச்சர்களை எல்லாம் கூட்டி மாநில சுயாட்சி பற்றி விவாதிப்பதாகச் சொல்லவில்லை - அவர்கள் கடிதம் எழுதியது ஏ. ஆர். ஸி. கமிஷனைப் பற்றித்தான் என்பதாக ஒரு அதிகாரி சொல்லியிருக்கிறார். நண்பர் ஹாண்டே அவர்கள்கூடச் சொன்னார்கள். உண்மையைச் சொல்லிவிட்டு இன்றைக்கு அரசியல்வாதிகள் அதில் இருந்து தங்களை விடுவித்துக்கொள்ள அதிகாரிகளைவிட்டு மறுப்பு விடச் சொல்கிறார்களோ என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

திருமதி. இந்திரா காந்தி அம்மையார் எழுதிய கடிதத்தை வைத்துப் பேசுகின்றேன். அந்தக் கடிதத்தில் என்ன இருக்கிறது? சந்தேகம் இருந்தால் யார் வேண்டுமானாலும் இந்தக் கடிதத்தை வாங்கிப் பார்க்கலாம். These are important issues and we intend to consult all Chief Ministers என்று சொல்லும்போது எவை எல்லாம் முக்கியமான பிரச்சினைகள்? அவர்கள் கடிதம் எதற்காக எழுதினார்கள்? I have received your letter of 15th June with which you have sent me a copy of the report of Centre-State Relations, Enquiry Committee என்பதாக அவர்களே நாம் அனுப்பி வைத்த ராஜமன்னார் குழு அறிக்கைக்குப் பதில் எழுதினார்கள். அதில், Your Government will probably examine the recommendations of this Report என்று குறிப்பிட்டுவிட்டு, As you know the Administrative Reforms Commission also went into this question என்று சொல்லிவிட்டு It has already

submitted a report and it is under consideration. If the views of your Government are made available to us, they will also be taken into account என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களே, These are important issues என்று குறிப்பிட்டிருப்பது, ராஜமன்னார் கமிட்டி அறிக்கையைப் பற்றியா, அட்மினி ஸ்ட்ரேட்டீவ் ரிபார்ம்ஸ் கமிட்டி அறிக்கை என்று பத்திரிகையில் வந்திருக்கிறதே. அதைப்பற்றியா? ஒரு வேளை நான் குறைந்த ஆங்கில அறிவு பெற்றவன் என்ற காரணத்தால் அந்த வகையில் கூறுகிறார்களோ, என்னவோ? கடிதத்தை எழுதிவிட்டு, டெல்லி வட்டாரத்து அதிகாரிகள் இப்படிச் சொல்கிறார்கள் என்றால், நம்முடைய பத்திரிகைகளுக்கெல்லாம் ஒரே குஷி. இந்திரா காந்தி அவர்களின் கடிதத்தைக்கூட அவர்கள் போடுவதில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் தர்மவீராவைப்பற்றிச் சொன்னார்களே, அது போல இந்திரா காந்தி அம்மையார் "முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டுகிறோம்" என்று சொல்லிவிட்டு, பின்னர் அதிகாரிகள், அப்படியெல்லாம் இந்திரா காந்தியம்மையார் முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டப்போவதில்லையாம் என்று சொல்வது நம்முடைய பத்திரிகைகளுக்கெல்லாம் ஒரே குஷி. "முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டப்போவ தில்லையாம், கருணாநிதிக்கு ஆப்பு" என்றெல்லாம் பத்திரிகைகள் போடக்கூடும். ஒரு பத்திரிகையை மட்டும் சொல்லவில்லை, பல பத்திரிகைகள் இதை ஒரு பெரிய விழாவாகவே கொண்டாடி யிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : The Prime Minister might have said that she wanted to consult the Chief Ministers. But that does not mean that she wants to have a Chief Ministers' conference. Probably that is the misunderstanding.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முதலமைச்சர்களைக் கலந்து பேசுவதென்றால், தனித்தனியாகப் பேசுவது என்று அர்த்தம் அல்ல. அவர்களே மறுத்தால்கூட நான் கவலைப்படப் போவதில்லை. இந்திரா காந்தியம்மையாரே மறுத்திருந்தாலும் என்னுடைய வாதம் இன்னும் வலுப்பெறுமே அல்லாமல், குறைவுபடாது. மாநிலங்களுக்குக் கடிதம் எழுதுகின்ற உரிமைகூட கொடுக்கவில்லை என்று அதைப் பயன்படுத்திக்கொள்வேனே தவிர, வருத்தப்படப் போவதில்லை. நேற்று முன்னாள் பாராளுமன்றத்தில் பெட்ரோலிய

அமைச்சராக இருந்தவர் திரு. சேத்தி, மத்திய அரசு மாநில அரசுகளை எவ்வளவு தூரம் மதிக்கிறது என்பதைக் கூறுகிறார். அதாவது, Refuting the charge that the State Chief Minister was not shown due respect during inauguration of the Madras Refinery என்று திரு. சேத்தி, பெட்ரோலிய அமைச்சர் கூறியிருக்கிறார்.

அப்போது அமைச்சராக இருந்தவர் திரு. திரிகுணசென் என்பவர். அக்டோபர் இரண்டாம் தேதியன்று, அதாவது மகாத்மா காந்தி பிறந்த நாளன்று 1969-ம் ஆண்டு அவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதாவது,

October 2, 1969.

While I am looking into how misunderstanding arose which had given you reason to believe that those who organised the function had failed to inform you and other Ministers of your State, I am writing once again to convey my most sincere apologies for your having had occasion to feel that you were not invited; whatever may be the reasons for this, I now try to assure you and your Government of my highest consideration at all time.

With regards.

Yours sincerely,
(Signed) Triguna Sen.

என்று கடிதம் எழுதியிருக்கிறார். இவைகளையெல்லாம் நான் கூறுவதற்குக் காரணம், மாநில அரசின் உணர்வுகளை, மத்திய அரசில் இருப்பவர்கள், தாங்கள் மத்திய அரசில் இருப்பதால் அவற்றையெல்லாம் மறுத்துவிடுவது, மட்டப்படுத்திவிடுவது என்பதெல்லாம் சரியான போக்கு அல்ல என்பதைக் கூறிக்கொள்கிறேன். அவர்களைப்போல நாம் நினைத்தாலும் செய்யலாம். இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேருமே என்பதைப் பொருட்படுத்தாமல், மைசூரைப்போல் 25 கோடி ரூபாய் செலவிடாவிட்டாலும், சின்னஞ்சிறு விஷயங்களை மத்திய அரசைக் கேட்காமலேயே நாம் நினைத்தால் செய்துவிட

முடியும், அப்படிச் செய்ய முடியும். நாம் ஏன் பொறுமையைக் காட்டுகிறோம்? இந்தியா ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளைவிக்கக் கூடாதே, ஒருமைப்பாடு கெட்டுவிடக்கூடாதே, மைசூர் மாநிலத்திற்கும் தமிழகத்திற்கும் வன்மையான போர் ஏற்பட்டு விடக்கூடாதே என்பதால்தான் நாம் இவ்வளவு பொறுமை காட்டுகிறோம்.

மைசூர் மாநிலத்தில் மக்கள் ஏற்றுக்கொள்கிற வகையில் விஷயங்கள் விளக்கிச் சொல்லப்படாத காரணத்தால்தான் சில உணர்வுகள் மைசூர் மாநில மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். மைசூரில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு அரசு இன்றைக்கு இல்லாவிட்டாலும் இந்திரா காங்கிரஸைச் சேர்ந்தவர்கள், மற்ற கட்சிகள் எல்லாம் ஒருங்குகூடி 1924-ம் ஆண்டு ஒப்பந்தம், 1892-ம் ஆண்டு ஒப்பந்தம் இருக்கிறது. எந்தெந்த அளவுக்கு நாம் கட்டுப்பட்டிருக்கிறோம்? 1964-ல் ஹேமாவதி அணைக் கட்டுவதற்கான உடனடியாக தயாரித்த அறிக்கை என்ன என்பவற்றையெல்லாம் மைசூர் மக்களிடத்தில் சொன்னால் அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்களா? மைசூர் மாநிலத்தில் உள்ளவர்களை அரசியல் வியாதிகளுக்குப் பயன்படுத்துகிற காரணத்தால் அம்மக்களுக்கு தமிழகத்தைப் பற்றியும், தமிழ்நாட்டு கட்சிகளைப் பற்றியும், தமிழக மக்களைப் பற்றியும் கசப்பான எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. தயவுசெய்து கர்நாடக மக்கள் - மைசூர் மாநில மக்கள் - தங்களுடைய எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று அனைவரையும் மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்,

நம் முன்னால் வைத்திருக்கின்ற தீர்மானத்தை நாளை மறுநாள் டெல்லிக்கு அனுப்ப இருக்கிறோம். இதுவரையில் நம் எண்ணங்களை நம்முடைய வேண்டுகோளை அலட்சியப் படுத்தியதுபோல் அல்லாமல், காலங்கடத்தியதுபோல் அல்லாமல் மிகுந்த பரிவோடும், பெருமிதத்தோடும் உணர்ந்து இந்திய சர்க்கார் நீர்ப்பாசன அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்களும், மத்திய அமைச்சர்களும் இன்னும் மைசூரிலிருந்து வந்து மத்திய அமைச்சர்களாக இருக்கிறவர்களும் நன்கு ஆராய்ந்தறிந்து, தமிழகத்திற்குப் பாதகம் ஏற்படாத அளவில் முடிவை எடுத்து அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன். இன்னும் அவர்களிடமிருந்து

நமக்குச் சாதகமான பதிலை, "நடுவர் தீர்ப்புக்கு விடப்படும்" என்ற பதிலை எதிர்பார்க்கிறேன்.

அந்தக் காரணத்தினால்தான் நண்பர்கள் எல்லாம் பேசிய கோபத்தை, ஆத்திரத்தை, வெடிகுண்டு வைத்து தகர்த்தெறிவோம் என்பவைகளையெல்லாம் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அந்த முறைக்கு நாம் ஏற்றவர்கள் அல்ல. தமிழ்நாட்டு மக்கள் காட்டுமிராண்டிகளாக ஆகிவிடக்கூடிய அளவுக்கு அவை போய்விடக்கூடாது. தமிழ்நாட்டு மக்கள் வேதனைப் புழுதியில் எறியப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக இந்த முயற்சிகளை எடுத்துக் கொள்கிறேன். எங்கள் பொறுமையைச் சோதிக்காதீர்கள். எங்கள் அடக்கத்தை அலட்சியப்படுத்தாதீர்கள். எங்களுடைய பண்பை பரிகாசத்திற்கு உட்படுத்தாதீர்கள். மத்திய அரசிடமிருந்து நல்ல முடிவினை, நல்லவிதமான தீர்ப்பினை, தமிழ்நாடு எதிர்பார்க்கிறது என்று கூறி, வழிமொழிந்து பேசிய அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மன்றத்தின் சார்பில் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.



உரை : 5 **நாள் : 09.07.1971**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக இந்த மேலவை இன்றைய தினம் கூட்டப்பட்டிருக்கிறது. காவிரி ஆற்றில் தமிழ் நாட்டிற்குக் கிடைக்கவேண்டிய உரிமை பறிபோகாமல் தடுக்கப்பட வேண்டுமென்பதற்காகத் தமிழக அரசு அனைத்துக் கட்சிகளின் நல்லெண்ணத்தின் அடிப்படையில் பல்வேறு தடவைகளில் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து ஆலோசித்து, மைசூர் அரசோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி, அந்தப் பேச்சுவார்த்தைகள் உரிய பயன் அளிக்காத காரணத்தால், இங்கே இறுதியாகக் கூடிய அனைத்துக் கட்சி தலைவர் மாநாட்டில் மூன்று முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. அதிலே முதலாவது தமிழ்நாடெங்கும் மத்திய அரசு இந்தக் காவிரி நதி நீர் பங்கீட்டுப் பிரச்சினையை உடனடியாக நடுவர் தீர்ப்புக்கு விடாமல் காலம் தாழ்த்துவதைக் குறித்து தமிழ்நாட்டினுடைய கண்டனத்தைத் தெரிவிப்பதற்காகக் கண்டனக் கூட்டங்கள் நடத்துவதென்பதாகும். அதற்கேற்ப நாடெங்கும் எழுச்சி மிக்கதும், உணர்ச்சி மிக்கதுமான கண்டனக் கூட்டங்கள் நடைபெற்று முடிவுற்றன. அடுத்து, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, தமிழ்நாட்டிலிருந்து நாடாளுமன்றத்திற்குச் சென்றிருக்கிற எல்லாக் கட்சிகளையும் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தியினுடைய இல்லத்திற்கு ஊர்வலமாகச் சென்று தமிழ்நாட்டினுடைய குரலை அங்கே எதிரொலிக்க வேண்டும். இந்தப் பிரச்சினையில் உடனடியாக ஒரு தீர்ப்பு கொடுக்க வேண்டுமென்று தலைமை அமைச்சரைக் கேட்டுக் கொள்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட அந்த முடிவின்படி அவர்கள் அந்த ஊர்வலத்தை நடத்தி மகஜர் ஒன்றையும் இந்திய முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்கள். மூன்றாவதாகச் செய்த

முடிவு அதைப்பற்றிச் சட்டமன்றப் பேரவையிலும் இந்த மேலவையிலும் தீர்மானங்கள் நிறைவேற்று வதென்பதாகும். அந்த முடிவின்படி நேற்று சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, இப்பொழுது மேலவையில் அந்தத் தீர்மானத்தை தலைவர் அவர்களுடைய அனுமதியோடு முன்மொழிகிறேன்.

'தமிழ்நாடு - மைசூர் அரசுகளுக்கிடையே 1892, 1924-ஆம் ஆண்டுகளில் கையெழுத்தான ஒப்பந்தங்களின் விதிகள் அனைத்தையும் மீறி மைசூரில் ஹேமாவதி, கபினி, ஹாரங்கி, சொர்ணவதி அணைத்திட்டங்களையும் வேறு சில முக்கிய அணைத்திட்டங்களையும் அவைகளுக்கான திட்ட விவரங்களைப் பற்றித் தமிழ்நாடு அரசுக்கு மைசூர் அரசு முறைப்படி முன்னதாக அறிவித்து, தமிழ்நாடு அரசின் முன் ஒப்புதல் பெறாமலும், இந்திய அரசின் அனுமதியை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளாமலும், இதனால் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேரிடுவது பற்றிப் பொருட்படுத்தாமலும் தன் போக்கில் நிறைவேற்றிவருவது குறித்து இம்மேலவை தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறது.

காவிரி ஆற்றின் கீழ் பகுதிகளில் உள்ள உழவர் பெருமக்களின் பாசன உரிமைகளுக்கு ஏற்பட்டுள்ள பேராபத்தைக் கருதி 1956-ஆம் ஆண்டு மாநிலங்களுக் கிடையிலான நீர்த்தகராறுகள் சட்டத்தின் கீழ் முறையாக அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் ஒன்றிற்குக் காவிரி நீர்த் தகராறு தீர்ப்புக்கு விடுமாறு தமிழ்நாடு அரசு 1970 பிப்ரவரி திங்களிலேயே இந்திய அரசைக் கேட்டுக் கொண்டிருந்துங்கூட, தமிழ்நாட்டிற்குத் தொன்றுதொட்டு ஏற்பட்டு வந்துள்ள பரம்பரைப் பாசன உரிமைகள் பாதிக்கப்படும் வகையில் இந்திய அரசு தமிழ் நாட்டின் வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாத இப்பிரச்சினை குறித்து உறுதியான நடவடிக்கை எடுக்காமல் அளவு கடந்து கால தாமதம் செய்துவருவதைக் கண்டு இம்மன்றம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

இதில் இந்திய அரசு மேலும் காலந்தாழ்த்தினால் மைசூர் அரசு தனது திட்டங்களை விரைவுபடுத்தி அவற்றைக் கட்டி முடிக்கும் விரும்பத்தகாத விபரீத நிலை உருவாவதற்கே அது

வழிகோலுமென்றும் அதனால் பன்னெடுங்காலமாகத் தமிழ்நாடு அனுபவித்து வந்த பாசன உரிமைகள் பறிபோய் விடும் என்றும் இம்மேலவை பெரிதும் அஞ்சுகிறது.

வேதனைமிக்க இத்தகைய சூழ்நிலையில் இந்திய அரசு 1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நீர்த் தகராறுகள் சட்டத்தின் கீழ் நடுவர் மன்றம் ஒன்றை அமைத்து, இத் தகராறுகளுக்குத் தொடர்புள்ள தரப்பினர் அனைவருடைய நலன்களையும் கருதி தமிழக அரசு ஏற்கனவே கேட்டுக் கொண்டுள்ளபடி காவிரி நீர்த் தகராறை அம்மன்றத்தின் தீர்ப்பிற்கு விட்டு நியாயம் வழங்குமாறும், நடுவர் மன்றம் இத்தகராறு குறித்து ஆய்ந்து முடிவு செய்து தனது தீர்ப்பை அளிக்கும் வரையில் மைசூர் அரசு தன் போக்கில் மேற்கொண்டுள்ள இத்திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றக் கூடாதென அதற்கான கட்டளையிடுமாறும் இந்திய அரசை இம்மேலவை வலியுறுத்துகிறது'.

தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து நாம் பல்வேறு நேரங்களிலே விவாதித்திருக்கிறோம் என்றாலும், நம்முடைய உணர்வுகளை மைசூர் அரசுக்கும், மத்திய அரசுக்கும் புலப்படுத்தியிருந்தும், இதற்கென்று சட்டமன்றப் பேரவையிலும் மேலவையிலும் தீர்மானங்கள் போடுகின்ற அளவுக்கு நிலைமை உருவாகிவிட்டதற்காக உள்ளபடியே நாம் வருந்தாமல் இருக்க முடியாது. இந்தப் பிரச்சினை 1968-ஆம் ஆண்டிலிருந்து விரிவடைந்திருக்கின்றது. மைசூரில் ஹேமாவதி அணையைக் கட்டுவதற்கான திட்டங்களை, அறிக்கைகளை மைசூர் அரசு 1964ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே தயாரிக்கத் தொடங்கி, 1964-ஆம் ஆண்டு அந்தத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. 1968-ல் மைசூர் முதலமைச்சர் மாண்புமிகு திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் ஹேமாவதி திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவினை மைசூரிலே நடத்தினார். அதற்குப் பிறகு தமிழகம் தன்னுடைய மறுப்பைத் தெரிவிக்க வேண்டிய கட்டத்திலும், மத்திய அரசினுடைய உடனடி உதவியை நாட வேண்டிய கட்டத்திலும் வந்தது என்பதிலே யாருக்கும் எந்தவித ஐயமும் இருக்காது என்றே நான் நம்புகிறேன். காவிரி நதியைப் பொறுத்த வரையில், அது மைசூரில் குடகுப் பகுதியிலே உற்பத்தியாகி காவிரிப்பூம்பட்டணத்திலே வந்து சேருகின்ற வரையில் கிட்டத்தட்ட 800 கிலோமீட்டர் நீளமுடைய ஒரு நதியாக

இருந்தாலும், அதிலே ஏறத்தாழ 300-க்கு மேற்பட்ட கிலோமீட்டர் நம்முடைய தமிழ் நாட்டிலே ஓடிக்கொண்டிருக்கிறது என்பதையும் யாவரும் அறிவார்கள். உலகத்திலே உள்ள பல நதிகளில் காவிரியினுடைய மொத்தத் தண்ணீரையும் பாசன வசதிக்குப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். 95 சதவிகிதம் பாசன வசதிக்குப் பயன்படுகின்ற ஒரு ஆறு காவிரி ஆறு என்று 1963-ஆம் ஆண்டு ஒரு கணக்குக் காட்டி அது உலக ஆறுகளோடு தொடர்புபடுத்தி வெளியிடப்பட்ட அறிக்கையிலேயும் காணக்கிடக்கின்றது. அதிகப் பாசன வசதிக்கு அது பயன்படுகின்றது என்றால், தமிழ் நாட்டுக்கு மாத்திரம் அது பயன்படவில்லை மைசூர் மாநிலத்திற்கும் அது பயன்படுத்தப்படுகின்றது. அதற்காக கிருஷ்ணராஜ சாகர் அமைக்கப்பட்டது. நம்முடைய தமிழ் நாட்டு உரிமைகள், நமது பாரம்பரிய பாத்யதைகள் குன்றிவிடாமல் இருக்க வேண்டும் என்பதற்காக மேட்டூரிலே அணைகட்டி, மேட்டூர் நீர்த்தேக்கத்தின் மூலமாக நமது பாத்யதை உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற முயற்சி எடுக்கப்பட்டது. இருமுறை இந்த ஆறு குறித்து மைசூர் மாநிலத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. அந்தக் காலகட்டம், 1892-ஆம் ஆண்டிலும், 1924-ஆம் ஆண்டிலுமாகும். இந்த இரண்டு ஒப்பந்தங்களின் முக்கிய ஷரத்துக்கள் என்னவென்றால்,

கிருஷ்ணராஜ சாகர் அணை இயங்குவது தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதிப் பாசனத்திற்குத் தேவையான தண்ணீரை (லிமிட் ஃப்ளோ) எந்த விதத்திலும் குறைத்துவிடக்கூடாது என்பதாகும்.

இரண்டாவது தமிழக அரசு மேட்டூர் அணைப் பாசனத்தை மூன்று லட்சத்து ஓராயிரம் ஏக்கருக்கு அதிகமாக்காது என்பதாகும்.

மூன்றாவது காவிரியிலோ, அதில் வந்து விழுகின்ற ஒப்பந்தத்தில் இங்கு குறிப்பிட்டிருக்கின்ற துணை நதிகளிலோ தமிழக அரசின் முன் சம்மதம் இல்லாமல் மைசூர் அரசு எந்த வித அணைகளையும் கட்டக்கூடாது என்பதாகும்.

நான்காவது அணை கட்டுகிற முழு விவரங்களையும் மைசூர் அரசு தமிழக அரசுக்கு அறிவித்தாக வேண்டும்.

894.8115
TAM

C005687

ஐந்தாவது அணைக்கட்டுகளில் வேலை தொடங்குவதற்கு முன்பு தமிழக அரசின் ஒப்புதலைப் பெற்றாக வேண்டும்.

ஆறாவதாக புது அணைக்கட்டுகள் காரணமாக தமிழக அரசு தனது பாசனத்திற்கென்று பெற்றுவருகின்ற தண்ணீரின் அளவு (லிமிட் ஃப்ளோ) எந்தவகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்பதாகும்.

இந்த ஷரத்துக்களின்படி இன்றைக்கு அங்கே அணைகள் கட்டப்படுகின்றனவா என்பதுதான் நம் முன்னால் இருக்கின்ற மிகப் பெரிய பிரச்சினையாகும். இந்த ஷரத்துக்கள் அனைத்தும் மீறப்படுகின்ற நிலையிலேதான் இன்றைக்கு இந்த அணைகள் கட்டப்படுகின்றன. 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படியும் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படியும் தமிழ் நாட்டின் உரிமைகள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். மைசூர் அணை கட்டுவதை நாம் தடுக்கவில்லை. கட்டப்படுகின்ற அணை எதுவாக இருந்தாலும், அந்த அணையின் காரணமாக தமிழ் நாட்டுக்குத் தரப்படவேண்டிய தண்ணீரினுடைய வரையறை அளவு பாதிக்கப்படக்கூடாது என்பதிலேதான் நாம் கவனம் செலுத்துகின்றோம். சிலபேர் இதிலே தவறான கருத்துக்கொண்டு, மைசூரிலே அணையே கட்டக்கூடாது என்று தமிழ் நாடு சொல்கிறதே இது நியாயமா என்று இன்றைக்குக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். வேறு மாநிலத்திலே உள்ள சில விளக்கம் தெரியாத பத்திரிகையாளர்கள்கூட மைசூரிலே காவிரி உற்பத்தியாகிறது, அங்கே அணை கட்டாமல் இருப்பார்களா என்றெல்லாம்கூட தலையங்கம் எழுதியதை நான் பார்த்து உள்ளபடியே வியப்படைகின்றேன். இரண்டாயிரம் ஆண்டு காலத்திற்கு முன்பே தண்ணீரை எப்படிப் பயன்படுத்திக்கொள்வது என்பதனைக் கற்றிருந்த தமிழ்மகன் கரிகால் பெருவளத்தான் இங்கே கல்லணையைக் கட்டி காவிரி டெல்டா பாசனத்திற்கு எப்படி எப்படியெல்லாம் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று வாய்க்கால்களையெல்லாம் உருவாக்கி வைத்த அந்தக் காலத்தில் மைசூரில் அணைகளைக் கட்டுவதைப்பற்றி எண்ணிடவேகூட தயாராக இல்லை. அந்த ஆரம்ப காலம்கூட இல்லாமல் இருந்ததை நாம் மறந்துவிடக்கூடாது. அதற்காக அவர்கள் அணைகளையே கட்டத் தேவையில்லை, கூடாது என்று மறுக்கவில்லை. இருக்கின்ற

பிரச்சினை எல்லாம், திருப்பித்திருப்பி எத்தனை முறை சொன்னாலும், 1968-ஆம் ஆண்டிலேயிருந்து வலியுறுத்தி வருகின்ற பிரச்சினை எல்லாம், நாம் மறந்துவிடாமல் எடுத்துக் கூறுகின்ற பிரச்சினை எல்லாம், அணைகள் கட்டுவதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் அதற்கான விதிமுறைகள் மீறப்படாமல், ஒப்பந்தம் மீறப்படாமல், தமிழக அரசினுடைய முன் ஒப்புதலைப் பெற்று, மத்திய அரசினுடைய முன் அனுமதியைப் பெற்று இந்தக் காரியம் நடைபெற வேண்டும் என்பதுதான்.

அவர்கள் இந்த 1892, 1924-ம் ஆண்டு ஒப்பந்தங்களை ஒழுங்காகவே கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள். எதுவரையில் என்றால், 1967-ம் ஆண்டு வரையில், முதலிலே ஹேமாவதி அணைக்கட்டு கட்டுவதற்காக அவர்கள் ஒரு திட்டம் தயாரித்து ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்கள். அந்த அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பினார்கள். "ஹேமாவதி ரிசர்வாயர் பிராஜக்ட்" என்கிற இந்த அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட அறிக்கையாகும். அந்த அறிக்கையிலே அவர்கள் நம்முடைய 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை மறந்துவிடாமல் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே கூறுகிறார்கள் :

"Even though such an amount of water is available, it is not possible to utilise the entire quantity as Hemavathi River is a scheduled river, governed by the River Agreement of 1924 between Mysore and Madras."

இப்படி அப்பொழுதும் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அது மாத்திரமில்லை இன்னும் தெளிவாக ஒரு இடத்திலே குறிப்பிடுகிறார்கள்.

"The project does not affect the utilisation of inter-State interests. The project is designed keeping in view the 1924 Agreement of Mysore and Madras States. The project comes under the purview of the 1924 Agreement."

என்று அவர்கள் ஹேமாவதி ரிசர்வாயர் புராஜக்ட் என்கின்ற இந்தத் திட்டத்தைத் தயாரித்து, அந்த அறிக்கையை மத்திய சர்க்காருக்கு 1964-ஆம் ஆண்டு அனுப்பிய காலத்தில், அதிலே 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை வெகு தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு 1967-ஆம் ஆண்டில் நம்முடைய தமிழகத்தி னுடைய பொறியாளரும், மைசூர் மாநிலத்தினுடைய பொறியாளரும், மத்திய அரசினுடைய நீர்ப்பாசனத் தலைமைப் பொறியாளரும் ஒருங்கு கூடி இந்த அணைகள் கட்டும் சம்பந்தமாக ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தார்கள். மைசூர் மாநிலத்தின் நீர்ப்பாசனத்துறையின் பொறியாளரும், தமிழ் நாட்டுப் பொறியாளரும் உறுப்பினராகவும், மத்திய அரசினுடைய நீர்ப்பாசனத் தலைமைப் பொறியாளரைத் தலைவராகவும் கொண்டு அந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருக்கிறது. அதிலே விவரமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"The Chief Engineer, Mysore, explained that the Mysore Government was fully prepared to honour the 1924 agreement and that the limit flows guaranteed therein would not, in any way, be affected by the Hemavathi Project."

இதிலே அந்த மூன்று பொறியாளரும் கையெழுத்திட்டிருக் கிறார்கள். 1964-லே அந்தத் திட்ட அறிக்கை தயாரித்து, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட நேரத்தில், 1924-ம் ஆண்டு ஒப்பந்தம் எங்கள் கவனத்தில் இருக்கும். அதன்படி இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்ற அடிப்படையிலேதான் அறிக்கையைத் தயாரித்தார்கள். அதற்குப் பிறகு 1967-ம் ஆண்டு பொறியாளர்கள் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேதான் 1924-ம் ஆண்டு ஒப்பந்தம் நிறைவேற்றப்படும், அதற்கு மாறாக இந்தத் திட்டம் அமையாது என்று ஒப்புக்கொண்டார்கள். பிறகு திடீரென்று மைசூர் சட்டமன்றம் கூடிய நேரத்திலே மைசூரின் முதலமைச்சர் திரு. வீரேந்திர பட்டீல் பேசும்பொழுது, நான் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை என்று அறிவித்தார்கள். அதற்குப் பிறகு மத்திய அரசின் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் மாண்புமிக்க கே. எல். ராவ் அவர்கள் 1968-லே டெல்லியிலே ஒரு மாநாட்டைக் கூட்ட, அப்பொழுது முதலமைச்சர் பதவியை ஏற்றிருந்தாலும், பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் அந்த மாநாட்டுக்கு வந்து, இருவரும் நீண்டநேரம் விவாதித்த பிறகு, அவர்கள் எங்களிடத்திலே 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்கிறேன் என்று வாயளவிலே கூறிவிட்டுச்

சென்றார்கள். அப்படிச் சென்ற பிறகு, மறுபடியும் மைசூர் சட்டமன்றத்திலே, "நீங்கள் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்கிறேன் என்று வாயளவிலே கூறியிருக்கிறீர்களே என்று கேட்டதும், திரு. வீரேந்திர பட்டீல் "யார் சொன்னது, நான் ஒப்புக்கொள்ளவில்லை" என்று மைசூர் சட்டமன்றத்திலே மீண்டும் ஒருமுறை அறிவித்தார். இவைகளை எல்லாம் தொடர்ந்து நாள் ஏடுகளைப் பார்ப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அவர்களே 1924-ம் ஆண்டு ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று, நியாயம் வழங்கக்கூடிய ஒன்று என்று புரிந்து, தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனாலும், என்ன அரசியல் காழ்ப்புகள் காரணமோ, வேறுபாடுகள் காரணமோ, அல்லது அங்கு அவர்களுக்கு ஏற்பட்ட பெரிய தொல்லைகள் காரணமோ, அது நமக்குத் தெரியாது, அது தமிழ் நாட்டினுடைய எதிர்காலத்தின் வாழ்விலே கை வைக்கும் அளவிலே நிலைமை முற்றிப்போயிருக்கிறது. இப்படி முற்றிவிட்ட நிலைமையிலேதான் நாம் மத்திய அரசினிடம் கேட்டுக்கொண்டோம், நீங்கள் உடனடியாகத் தலையிட வேண்டுமென்று. மத்திய அரசு பேச்சுவார்த்தை மூலமாக இதைத் தீர்த்துவிடலாம் என்று நம்மிடம் வலியுறுத்தினார்கள். நாம் அதிலே அவர்கள் யோசனையை மறுக்க விரும்பவில்லை. சுமுகமாகப் பேச்சுவார்த்தை நடைபெற, நாம் விரும்புகின்ற மைசூர் மாநில மக்கள் தமிழ்நாட்டு பெருங்குடி மக்கள் இருவருடைய நல்லுணர்வுகள் பாதிக்கப் படாமலிருப்பதற்கு இந்தப் பேச்சுவார்த்தை பயனுள்ளதாக இருக்குமானால் அதிலே இணக்கம் தெரிவித்து, நாம் பல கட்டங்களிலே பேச்சுவார்த்தை நடத்தினோம். இறுதியாகப் பேச்சுவார்த்தை முறிந்துபோய்விட்டது என்று மத்திய அமைச்சர் கே. எல். ராவ் அவர்கள் பத்திரிகையாளர்களிடத்திலே விரிவாகப் பிரகடனப்படுத்தியபோது, தமிழ் நாடு அரசின் சார்பிலே இந்தப் பிரச்சினையை "நடுவர் தீர்ப்பிற்கு" விடுவதைத் தவிர, வேறு வழியில்லை என்று நாம் எடுத்துச்சொன்னோம். ஹேமாவதியை விட, கபினியை உள்ளடக்கிய பிரச்சினை - கபினி ஆற்றிலே கட்டப்படும் அணைக்கட்டுப் பிரச்சினை, மிகப் பெரிய பிரச்சினை. 1959-ம் ஆண்டு கபினியிலே ஒரு சிறு அணையைக் கட்ட 2½ கோடி ரூபாய்த் திட்டத்திற்கு அவர்கள் அனுமதியைப்

பெற்றிருந்தார்கள். இன்றைக்கு 2½ கோடிக்கு பதிலாக 25 கோடி ரூபாயைச் செலவழித்து பெரிய அணையாகக் கட்டவிருக் கிறார்கள். இதற்குக் கேரள அரசும் தன்னுடைய மறுப்பைத் தெரிவித்திருக்கிறது. எனவே, தொடர்புடைய அரசினுடைய மன நிறைவு ஏற்படத்தக்க வகையிலே இதை "நடுவர் தீர்ப்பிற்கு" விடுவதைத் தவிர, வேறு வழியில்லை என்று நாம் மத்திய சர்க்காருக்கு எடுத்துச்சொல்லி மாதங்கள் 18 உருண்டோடி விட்டன. ஆனால், மத்திய அரசு இதுவரையில் தக்க கவனம் இதிலே செலுத்திவிடக் காணோம். ஆகவேதான் மத்திய அரசு கடைப்பிடித்து வருகின்ற மந்தப் போக்கிலேயிருந்து விடுபட வேண்டும் என்றும், அவர்கள் உடனடியாக இதிலே சிரத்தை எடுத்துக்கொண்டு செயல்பட வேண்டும் என்றும் நாம் இந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம். அதிலே நேற்றைய தினம் முதல் கட்டமாகச் சட்டப் பேரவையிலே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்பொழுது மேலவையிலே இந்தத் தீர்மானம் உங்கள் முன்னிலையிலே வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே கட்சி மாச்சரியங்களுக்கு இடமில்லை. கட்சி வேறுபாடுகளுக்கு இடமில்லை. எல்லாக் கட்சிக்காரர்களும் செந்தமிழ் நாட்டுப் பெருங்குடி மக்கள் என்கின்ற அடிப்படையிலே தமிழ்நாட்டிற்கு வரவிருக்கின்ற இந்தப் புதிய, பயங்கரமான ஆபத்தைத் தடுத்து நிறுத்துகின்ற அளவிலே ஒன்றுகூடி யிருக்கிறோம் என்று உணர வேண்டும். எனவே, இதிலே இந்த அரசு எடுக்கும் முயற்சிகளிலே ஒத்துழைக்கின்ற அனைத்துக் கட்சிக்காரர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன். இறுதியாக ஏதாவது சொல்ல வேண்டுமானால், சொல்லுகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தைக் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாற்றும் கட்சித் தலைவர்களும், மாண்புமிகு மேலவை உறுப்பினர்களும் தங்களுடைய ஆதரவான கருத்துக்களைத் தெரிவித்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் எந்தெந்த வகையிலே அமைய வேண்டுமென்பதனையும், அடுத்தபடி மத்திய அரசு உடனடியாக இந்தக் காரியத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதை மேலும் ஒருமுறை வலியுறுத்தித் தீர்மானத்தை வழிமொழிந்ததற்காக நான் அவர்களுக்கெல்லாம் என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே நான் மிகப் பொறுமையாகவிருந்தேன் என்பதைப் பாராட்டியும் இனிமேலும் அந்தப் பொறுமை தேவையில்லை என்கிற அளவுக்கு எனக்கு அறிவுரை கூறியும் எதிர்க்கட்சித் தலைவரவர்களும் மற்ற உறுப்பினர்களும் இங்கே பேசியிருக்கிறார்கள். இதிலே நான் பொறுமை காட்டுவதற்கு மிக இன்றியமையாத காரணம் இதுதான். இந்தப் பிரச்சினை மைசூர் மாநிலத்திலிருக்கின்ற மக்களுக்கும் தமிழ் நாட்டிலிருக்கின்ற மக்களுக்கும் ஒரு பகை உணர்ச்சியை உருவாக்கி விடக்கூடாதென்பதாலும், இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை வைத்திருக்கின்ற காரணத்தாலும் அதற்கு ஊனம் ஏற்பட்டு விடக்கூடாதென்பதாலும்தான் நாம் இதிலே மிகுந்த அக்கறையோடு, நிதானத்தோடு, பொறுமையோடு பல மாத காலமாக வலியுறுத்தி வருகிறோம். பதினெட்டு மாதகாலமாக நடுவர் தீர்ப்புக்கு இன்னும் ஒரு வாரத்தில் அறிவிப்பு வரும், ஒரு வாரத்தில் அறிவிப்பு வரும் என்று காத்துக் கிடந்து, காத்துக் கிடந்து மாதங்கள் உருண்டோடின என்பதைத் தவிர உற்ற பயன் நமக்குக் கிடைக்கவில்லை, அந்த வேதனையான நிலைமையோடுதான் நாம் இந்தப் பிரச்சினையை இன்றைய தினம் அணுகுகிறோம். வேதனை எற்படுகிற நேரத்தில் உணர்ச்சிகள் பொங்குவதும், அந்த உணர்ச்சிக் கொந்தளிப்புகளை அடக்கமுடியாமல் வார்த்தைகள் வெளிப்படுவதும் சகஜம். அப்படி வெளிப்படும் வார்த்தைகள் மறுபடியும் எடுத்து உட்கொள்ளக் கூடியவைகளல்ல என்ற காரணத்தால் அந்த வார்த்தைகளிலே நாம் காட்ட வேண்டிய நிதானம், பொறுப்பிலிருக்கிறவர்களுக்கு மிக முக்கியமானது. அந்த எண்ணத்தால்தான் குறிப்பாக மைசூர் அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் அல்லது தமிழ்நாட்டு மக்களுக்கும் இடையே ஏற்பட்டிருக்கின்ற இந்தப் பிரச்சினையில் மைசூர் மாநிலத்தினுடைய மக்கள் மனம் புண்பட்டுவிடக்கூடா தென்பதற்காகத்தான் நாம் இதிலே அளவு கடந்த பொறுமையைக் காட்டி வருகிறோம், மிகப் பொறுப்புணர்ச்சியோடு நாம் பிரச்சினையை அணுகுகிறோம் என்பதை, மாண்புமிகு உறுப்பினர்களும் மைசூர் மாநில மக்களும் புரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கர்நாடக மக்களுக்கும், தமிழ் நாட்டு மக்களுக்கும் நீண்ட காலமாக உறவு உண்டு, அந்த

உறவினை வலுப்படுத்துகின்ற வகையில் காவிரி ஆறு இரண்டு உறவை இணைக்கின்ற ஒரு நல்ல சங்கிலியாகவும் இருந்திருக்கின்றது. அந்த உறவை இன்று துண்டித்து விடுகின்ற நிலைமையிலே காவிரிப் பிரச்சினை ஆகிவிடக் கூடாது என்பதில் தமிழக அரசு கண்ணுங்கருத்துமாக இருக்கின்றது. இந்த அவையிலே இருக்கின்ற பலருக்கு, தமிழ் நாட்டு மக்கள் பலருக்கு இன்று மைசூர் மாநிலத்திலே இருக்கின்ற மக்களோடு நல்ல தொடர்பு உண்டு. மைசூர் மாநில மக்கள் பலர் தமிழ் நாட்டிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டு மக்கள் பலர் மைசூர் மாநிலத்திலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையிலேதான், சிறு கசப்புகள் இருவரிடையே வளர்ந்தாலும், அதனால் ஏற்படுகின்ற விபரீத விளைவு இந்திய ஒருமைப்பாட்டுக்கு உலைவைப்பதாகவும், இரண்டு மாநிலங்களுக்கிடையேயும் பெருத்த விரோத உணர்வை ஏற்படுத்திவிடக்கூடியதாகவும் அமைந்து விடுமே என்கிற பயத்தின் அடிப்படையிலேதான் நாம் மிகுந்த பொறுமையை இதிலே கடைப்பிடித்து வருகின்றோம். 1968-ஆம் ஆண்டிலே ஹேமாவதி திட்டத்திற்காக அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றதைத் தொடர்ந்து நமது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல், ஒரு அணைக்கட்டு அல்ல, ஹேமாவதியைவிட மிகுந்த ஆபத்தை தமிழகத்திற்கு விளைவிக்கக் கூடிய கபினி அணைக்கட்டுத் திட்டம், ஹாரங்கி அணைக்கட்டுத் திட்டம், சொர்ணவதி அணைக்கட்டுத் திட்டம் என்று இப்படிப்பட்ட திட்டங்கள் நம்முடைய இசைவைப் பெறாமல் முடிக்கப்படுமேயானால், பெரும் பாதகத்தை விளைவிக்கும் என்பதை இந்த அரசு உணர்ந்து, மத்திய அரசுக்கு அவ்வப்பொழுது எடுத்துச் சொல்லி வந்திருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே மிகுந்த பெருமையோடு எடுத்துக்காட்டியதைப்போல், ஒவ்வொரு கட்டத்திலேயும் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கலந்து ஆலோசித்து அவர்கள் எவ்வழி செல்ல வேண்டும் இந்தப் பிரச்சினையிலே என்று சுட்டிக்காட்டிய நிலைமையில், தமிழக அரசு செயல்பட்டிருக்கின்றது. அப்படிச் செயல்பட்ட நேரத்திலேதான் 1968-ஆம் ஆண்டு மத்திய அரசு தமிழக அரசுக்கு எழுதிய

கடிதத்திலே ஒரு குறிப்பைச் சொன்னது. தமிழ்நாட்டோடு இந்தப் பிரச்சினைக்கு கலந்துபேசி ஒரு முடிவு ஏற்படுகிற வரையில் மைசூரிலே கட்டப்படுகின்ற அணைகளை நிறுத்தி வைக்குமாறு மத்திய அரசு மைசூருக்குத் தெரிவித்திருக்கிறது என்று தமிழக அரசுக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டது. ஆனால் அதை மைசூர் அரசு நிறைவேற்றியதா, இல்லை, அதைப் பொருட்படுத்தியதா? இல்லை அதற்குத் தரவேண்டிய மதிப்பைத் தந்ததா? கிடையாது. அப்பொழுது மைசூரிலிருந்த அரசு காங்கிரஸ் அரசு, நான் காங்கிரஸ் அரசு என்று கூறுவதற்குக் காரணம் இந்தப் பிரச்சினையிலே அரசியலைக் கலக்கவேண்டும் என்பதற்காக அல்ல, டெல்லியிலேயிருந்த காங்கிரசும் மைசூரில் இருந்த காங்கிரசும் ஒரே காங்கிரசாக இருந்த நேரத்திலேதான் இந்தப் பிரச்சினை உருவாயிற்று. ஆனால் அந்த நேரத்திலேயே அப்பொழுது கட்சி என்பதை மறந்துவிட்டு, தங்களுடைய மாநில உணர்வு என்கின்ற அந்த அடிப்படையில் மைசூருடைய முதலமைச்சர் வீரேந்திரபட்டீல், மத்திய அரசினுடைய தாக்கீதைப் பொருட்படுத்தாமல், தன்னிச்சையாக, "அவர்கள் அனுமதித்தாலும் அனுமதிக்காவிட்டாலும் அணைகளை நான் கட்டியே தீருவேன், அதற்குப் பணம் தந்தாலும் தராவிட்டாலும், இங்கே மாநிலத்திற்காகச் செலவழிக்க இருக்கின்ற பணங்களையெல்லாம், அந்த செல்வத்தையெல்லாம் அந்த அணைகளைக் கட்டுவதற்காக நான் திருப்பி விடுவேன்" என்கின்ற அளவிற்கு வீராவேசமாகப் பேசினார்கள். மைசூர் அப்படி நடந்துகொள்வது தவறான காரியம், என்று மத்திய அரசு அப்பொழுது சுட்டிக்காட்டியது. மத்திய அரசு அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் அதை உணர்ந்தார். உணர்ந்ததை எடுத்துரைத்தார், மத்திய அரசிலே வீற்றிருக்கிற தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் அதை உணர்ந்தார்கள். மைசூரின் போக்கு சரியானதல்ல என்றெல்லாம் குறை கூறினார்கள். இன்றைக்கு மைசூரில் ஒரு கட்சியின் ஆட்சி இல்லை. இன்னும் சொல்லப்போனால், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் இன்று ஆட்சிப் பொறுப்பிலே இல்லை. இன்று மைசூரை ஆண்டுகொண்டிருப்பது மத்திய அரசு. கவர்னர் வாயிலாக மத்திய அரசினுடைய ஆட்சி, குடியரசுத் தலைவருடைய

ஆட்சி அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இப்பொழுது மத்திய அரசினுடைய உத்தரவை யார் மீறுகிறார்கள்? இதுதான் வேடிக்கை. முதலிலே மத்திய அரசு உத்தரவிட மைசூர் அரசு மீறியது. இப்போழுது மத்திய அரசினுடைய உத்தரவை மத்திய அரசே மீறிக்கொண்டிருக்கிறது. "நீ என்ன மீறுவது, நானே என்னுடைய உத்தரவை மீறிக்கொள்கிறேன் போ" என்று சொல்லிக்கொள்வதுபோல் இன்றைக்கு மத்திய அரசு நடந்து கொண்டிருக்கிறது. கதை ஒன்று சொல்வார்கள். ஆற்றிலே குளித்துவிட்டு வீட்டுக்கு வருகிற மாமியார் தன்னுடைய வீட்டிலேயிருந்து வெறுங்கையோடு திரும்பிக்கொண்டிருக்கிற பிச்சைக்காரனைப் பார்த்து, என்ன அப்பா ஏன் வெறுங்கையோடு வருகிறாய் என்று கேட்க, உன் மருமகள் பிச்சையில்லை என்று சொல்லிவிட்டார் என்று சொல்ல, அப்படியா சொன்னாள், அவளுக்கு அவ்வளவு கொழுப்பா, வா வா என்று மறுபடியும் அழைத்துக்கொண்டு வந்து, உள்ளே போய் குடத்தை இறக்கிவைத்துவிட்டு வெளியே வந்து, பிச்சைக்காரனைப் பார்த்து, பிச்சை இல்லை என்று சொல்ல மருமகளுக்கு என்ன உரிமை. நான் சொல்கிறேன் நீ போ என்று பிச்சைக்காரனுக்கு ஆணையிட்டாளாம். அந்த மாமியாரைப்போல் இன்றைக்கு மத்திய அரசு நாங்கள் போடுகின்ற உத்தரவை மீறுவதற்கு மைசூர் அரசுக்கு என்ன அதிகாரம், நாங்களேதான் வந்து மீறுவோம் என்கின்ற அளவுக்கு இன்றைக்கு அவர்கள் போட்ட உத்தரவை அவர்கேளே மீறிக்கொண்டிருக்கிற ஒரு பரிதாபகரமான காட்சியை இந்தியத் துணைக்கண்டத்திலே நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்திய ஒருமைப்பாட்டிற்காகத்தான் நாம் இந்த வேதனைகளைத் தாங்கிக்கொண்டிருக்கிறோம் என்று நான் தொடக்கத்திலே சொன்னேன். இங்கே பேசிய நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் பேசுகிற நேரத்திலேகூட சொன்னார்கள், மற்ற அவையிலே பேசிய உறுப்பினர்களும் தலைவர்களும் பேசுகிறபோதும் குறிப்பிட்டார்கள், நானும்கூட குறிப்பிட்டேன், "நாம் நடத்துகின்ற எந்தக் கிளர்ச்சியாக இருந்தாலும், நாம் மேற்கொள்கின்ற எந்த நடவடிக்கையாக இருந்தாலும், அந்த நடவடிக்கைகள் அனைத்தும்

இந்தியாவினுடைய ஒற்றுமைக்கு ஊறு இழைப்பதாக அமைந்து விடக்கூடாது'' என்று ஆனால் அதே நேரத்திலே நமது உள்ளத்திலே கேள்வி எழாமல் இல்லை, பாரதியார் பாட்டு நம்முடைய நினைவிற்கு வராமல் இல்லை 'கண்களை விற்று சித்திரம் வாங்குவதோ' என்று பாரதியார் கேட்டார். தமிழகத்தை அழித்துவிட்டு இந்திய ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுவதா என்று கேள்வியைத்தான் நான் கேட்க வேண்டியவனாக இருக்கின்றேன். இப்படிக் கேட்பதால் இந்திய ஒருமைப்பாடு ஒழிக்கப்படும் என்ற எண்ணத்திலே நான் சொல்லவில்லை. மத்திய அரசிலே இருக்கிறவர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தமிழகம் ஒழிந்து அதன் வாயிலாக இந்திய ஒருமைப்பாடு கட்டிக்காக்கப் படவேண்டும் என்றால், அதற்குப் பெயர் ஒருமைப்பாடா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன். தேர்தல் காரணத்தால் இன்றைக்கு இந்தப் பிரச்சினை ஒத்திவைக்கப்படுகிறது, நடுவர் தீர்ப்புக்கு விடுவதற்கு அஞ்சுகிறார்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே கூட இதுபற்றிச் சொன்னார்கள். நேற்று பேரவையிலே பேசுகிறபோதும் குறிப்பிட்டேன். மிகப் பயங்கரமான முடிவுகள் எதிர்பார்க்கப்பட்ட நேரம். பொதுத் தேர்தல் நாடாளுமன்றத்திற்கு இந்தியாவிலே எல்லா மாநிலங்களிலும் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை, அந்த நேரத்திலே பெங்களூரிலே பேசிய இந்தியாவின் தலைமை அமைச்சர் திருமதி. இந்திரா காந்தி அவர்கள் காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை நடுவர் தீர்ப்புக்கு விடப்படும் என்று பட்டவர்த்தனமாகச் சொன்னார்கள். அப்படிச் சொன்ன பிறகும் மைசூரிலே நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலிலே எல்லா இடங்களையும் அவருடைய கட்சிதான் பெற்றிருக்கிறது. ஆக இதிலிருந்து நியாயத்தைப் பேசினால், மைசூர் மக்கள் ஒழுங்காக வாக்களிப்பார்கள் என்று தெரிகிறது. ஆகவே நியாயமாக இந்தப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட்டால் மறுபடியும் அவர்களுடைய கட்சிக்கு மைசூர் மாநிலத்தில் நல்ல வெற்றி கிடைக்கும் என்று நான் அவர்களுக்கு இந்த நேரத்திலே சிபாரிசு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். மைசூர் மக்களிடத்திலே யாரும்

நியாயத்தை இன்னும் அதிகமாக எடுத்துச் சொல்லவில்லை என்று தான் நான் கருதுகிறேன். அந்தக் காரணத்தாலேதான் மைசூர் மக்களுக்கு இந்த விஷயம் இன்றைக்குச் சரியாகப் புரியவைக்கப் படாமல் இருந்துகொண்டிருக்கின்றது. 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தம் என்ன, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் என்ன, 1964-ஆம் ஆண்டிலே ஹேமாவதிக்காக நாம் தீட்டிய அறிக்கையில் நாம் ஒப்புக்கொண்டிருக்கின்ற ஒப்பந்த ஷரத்துக்கள் என்ன, 1967-ஆம் ஆண்டு இரண்டு மாநிலங்களின் பொறியாளர்களும், மத்திய அரசின் பொறியாளர் தலைமையிலே கையெழுத்துப்போட்டார்கள், இவைகளையெல்லாம் மைசூர் மக்களுக்கு அங்கே இருக்கின்ற எல்லா கட்சிகளும் எடுத்துரைக்க வேண்டும். எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தையும் சேர்த்துச் சொல்கிறேன், இந்த விஷயத்தில் மைசூர் மாநிலத்திற்கு எதிராகத் தமிழ்நாடு செயல்படுகிறது. ஆகவே நமது மாநிலத்து உரிமைகளைக் காப்பாற்ற வேண்டும் என்று மைசூரில் இருக்கிற பழைய காங்கிரஸ் கட்சியானாலும், புதுக் காங்கிரஸ் கட்சியானாலும், சுதந்திர கட்சியானாலும், கம்யூனிஸ்ட் கட்சியானாலும், கழகமானாலும், அத்தனை பேரும் மைசூர் பக்கந்தான் இருப்போம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் அங்கேயும் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் நான் கூறுவதற்கு மன்னிக்க வேண்டும், "தாங்கள் அதைப் படிக்கவில்லையா, நீதான் எங்களுக்குச் சொல்ல வேண்டுமா?" என்று என்னைக் கேட்கச்சொல்ல வேண்டாம் என்று எண்ணியிருக்கக் கூடும். இந்த ஒப்பந்தங்களையெல்லாம் மீண்டும் எடுத்துப் படித்துப் பார்க்கட்டும் மைசூரிலே இருக்கிற அனைத்துக் கட்சித் தலைவர்கள். நாங்கள் ஒரு இம்மியளவாவது ஒரு எள் முனை அளவாவது அந்த ஒப்பந்தத்திற்கு மாறாக எங்களுடைய கோரிக்கைகளை முன் வைக்கிறோமா என்பதை அந்தத் தலைவர்கள் எடுத்துச் சொல்லட்டும். எதில் நாங்கள் முரண்படுகிறோம்? ஹேமாவதி கபினி, ஹாரங்கி, ஸ்வர்ணவதி ஆகிய இந்த நீர்ப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றக்கூடாது என்றா சொல்கிறோம், பாசனத் திட்டங்களை நிறைவேற்றுங்கள்' அப்படி நிறைவேற்றுகிற நேரத்தில் எங்கள் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். எங்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடாது.

தஞ்சை மாவட்டம் காவிரி டெல்டாப் பிரதேசம் அந்த அணைக்கட்டுகளின் மூலமாக பாதிக்கப்படாமல் இருப்பதற்கான விதிமுறைகளைப் பின்பற்றுங்கள் என்றுதான் கேட்கிறோம். அதற்காகத்தான் நடுவர் தீர்ப்பு தேவை என்கிறோம். நடுவர் தீர்ப்புக்கு விட்டால், நமக்கு எந்தவிதமான தடையும் கிடையாது. இங்கே பேசிய திரு. ராமசாமி படையாச்சி அவர்கள் ஒன்று சொன்னார்கள். நடுவர் தீர்ப்புக்கு நாம் விடச்சொன்னதற்குக் காரணம் அவர்கள் மறுக்கிறார்கள் என்றால், அவர்கள் பக்கத்தில் நியாயம் இல்லை என்பது புலனாகிறது. மைசூர் மக்கள் இதில் எடுத்துச் சொல்லட்டும், ஏற்கனவே செய்துள்ள ஒப்பந்தத்தை எப்படி மீறலாம் என்று மைசூர் மக்களைக் கேட்டால், அங்குள்ள அத்தனைபேரும் கல்மனம் படைத்தவர்களா; தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் வேதனைபட வேண்டும்; வயல்கள் எல்லாம் காய்ந்துபோக வேண்டும்; அவர்கள் வயிறு வாட வேண்டும்; அவர்களுடைய கண்ணீர்க் குளங்களைக் காண வேண்டுமென்று எண்ணுகிறார்களா மைசூர் மாநிலத்திலுள்ள கர்நாடக மக்கள்? இல்லை இல்லை, மைசூரில் உள்ள அரசியல் தலைவர்கள் நிச்சயமாக தங்கள் ஒத்துழைப்பைத் தந்தாக வேண்டும். அங்குள்ள கட்சிக்காரர்கள் மக்களிடம் உண்மை நிலையை எடுத்துச்சொல்ல வேண்டும். அங்குள்ள நிலைமை என்னவென்றால், ஒவ்வொரு அரசியல் கட்சியும் இதில் போட்டிபோட்டுக் கொண்டிருக்கிறார்கள். யார் நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டாமென்று சொல்வதில் முந்திக் கொள்வது என்பதில் போட்டிபோட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் போட்டியை மைசூர் மாநிலத்திலுள்ள எல்லாக் கட்சிக் காரர்களும் தவிர்த்துக்கொண்டு ஒப்பந்தந்திலுள்ள உண்மையான ஷரத்துக்களைப்பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்வார்களானால், முக்கியமாக ஆளும் கட்சியாக உள்ள இந்திரா காங்கிரஸ் கட்சிக் காரர்கள் அந்தக் காரியத்தை முன்னின்று நடத்துவார்களானால், மற்ற கட்சிக்காரர்கள் அவர்கள் பின்னால் வந்து மைசூர் மாநிலத்தில் ஒரு அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்த முடியும் என்று கருதுகிறேன். திட்ட அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் இங்கே பேசுகிற நேரத்தில் குறிப்பிட்டதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் எடுத்துக் சொன்னார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரநிதிகள் வந்தானதும் மறுபடியும் இது

பற்றிப் பேச முடியும் என்று அவர் கூறியிருக்கிறார். அது சரியான வாதம் அல்ல என்று நேற்றைக்கும் எடுத்துச் சொன்னேன். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்த காலத்தில்தான் இங்கேயும் அங்கேயும் நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்ற நம்முடைய கோரிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. அதில் கூட பெரும்பான்மை பார்க்கவேண்டுமென்றால், தமிழக அரசும் கேரள அரசும் இரண்டுமே நடுவர் தீர்ப்பு கேட்கின்றன. வேண்டாமென்று சொல்வது ஒரு மாநிலம்தான். வேண்டுமென்று சொல்வது இரண்டு மாநிலங்கள், ஜனநாயகப் பண்போடு பெரும்பான்மையை எண்ணிப் பார்க்காமல் பதினெட்டு மாத காலமாகக் கடத்தி வந்திருக்கிறார்கள். பொதுமக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்த பிறகுதான், இதுபற்றிப்பேச வேண்டுமென்று தர்ம நியாயம் பேசப்படுமானால், அதை வாதத்திற்காக ஒத்துக் கொள்வோம். அந்த நேரத்தில்தான் எதிர்க் கட்சித் தலைவர் சொல்லியதைப்போல, அது வரையிலாவது இந்த அணைக்கட்டு வேலைகள் எல்லாம் நடைபெறாது என்ற உத்தரவாதத்தை தமிழ் நாட்டிற்கு அளித்தீர்களா? வேலை நடைபெறக்கூடாது என்று மைசூர் அரசிற்கு உத்தரவு போட்டீர்களா? நீங்கள் உத்தரவு போட்டால், அதை ஏற்று நடத்தக்கூடியவர்கள் இன்றைக்கு மைசூரில் இருக்கிறார். உங்களால் அனுப்பப்பட்ட கவர்னர் மைசூரில் இருக்கிறார். அந்த கவர்னரை எதிர்த்து அந்த உத்தரவை மதிக்கமாட்டோம் என்று கூறுவதற்கான அமைச்சரவை அங்கே இப்போது கிடையாது. நீங்கள் இந்த உத்தரவை தாராளமாகப் போடலாம். மக்கள் பிரதிநிதிகள் முடிவு எடுக்கிற வரையில் இந்தப் பிரச்சினையை ஒத்திவைத்து அணைக்கட்டு வேலைகள் ஒத்திவைக்கப்படுவதுதானே நியாயம்? இந்த நியாயம் மத்திய அரசிற்குத் தெரிந்தும் வேண்டுமென்றே தட்டிக் கழிக்கிறார்கள் என்றால், தமிழர்கள் ஏமாளிகள் என்று கருதுகிறார்களா? எனக்கு அதுவும் புரியவில்லை, ஆகவே இவைகளுக்கு விடை காணத்தான் இந்த இரண்டு மன்றங்களிலும் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த இந்தத் தீர்மானத்தை உருவாக்கியிருக் கிறோம். இடையில் இந்தத் தீர்மானம் மாறாத அளவுக்கு நல்ல நிலைமை உருவாகும். நாம் இங்கே வலியுறுத்துகிற தீர்மானத்தைப் போடுவதைவிட மத்திய அரசைப் பாராட்டுகிற தீர்மானமாகப் போடுகிற அளவுக்கு நிலைமை ஏற்படும் என்று தான்

எண்ணியதாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. மாதவனும், திரு. சாதிக் பாஷாவும் டெல்லிக்குச் சொன்றார்கள். திரு. கே. எல். ராவின் அழைப்பின்படி. திரு. கே. எல். ராவ் அவர்கள் சில யோசனைகளைச் சொன்னார்கள். அந்த யோசனைகள் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்துச் சொல்லப்பட்டன. அனைத்துக் கட்சித் தலைவர்கள்கூட அந்த யோசனைகளை ஏற்றுக்கொண்டு, ஏற்றுக்கொண்டு என்றால் நாங்கள் சொன்னவற்றை ஏற்றுக்கொண்டு அவைகளுக்கான உறுதியைக் கொடுக்கிறீர்களா என்று கேட்டார்கள். பலமுறை தொலைபேசி மூலமாக திரு. மாதவன் அவர்களோடும் திரு. சாதிக் பாஷாவோடும் பேசுகிற நேரத்தில் கேட்டேன். ஆனால் இது வரையில் அந்த யோசனை உறுதிப்படுத்தப்படவில்லை. அந்த யோசனை உறுதிப்படுத்தப்படாததால், நாம் இரண்டு மன்றங் களையும் கூட்டிப் பேசிவிட்டு, மேலும் காலதாமதம் செய்து தேர்தல் வரையில் காலம் கடத்தலாம் என்று அவர்கள் கருதினால், அதைவிட தமிழகத்திற்குச் செய்யக் கூடிய தீமை இருக்க முடியாது என்ற முடிவுக்கு நாம் வந்தாக வேண்டிய கட்டத்திற்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு அமைச்சர்கள் இரண்டு பேரும் சென்றிருந்ததாகக் கூறினார்கள். அவர்கள் பிரதமர் இந்திரா காந்தி அவர்களைச் சந்தித்துப் பேச முயற்சித்தார்களா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மத்திய நீர்ப் பாசனத்துறை அமைச்சரைச் சந்தித்துப் பேசினார்கள். அந்த அம்மையாரைச் சந்தித்துப் பேசவில்லை. மத்திய நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் விடுத்துள்ள யோசனையை மறுபடியும் மைசூரில் உள்ளவர்களோடு கலந்து பேசி உறுதிப்படுத்த வேண்டுமென்று இருந்ததால், இடையில் இந்திரா அம்மையாரைச் சந்திக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படவில்லை. இந்த நிலைமையில் மைசூர் அரசோடு தமிழ்நாட்டு அரசுக்கு ஏற்பட்டுவிட்ட பெரும் பிரச்சினையில் மத்திய அரசு மேலும் மேலும் காலம் தாழ்த்திக்கொண்டு போவதில் நமக்கு ஏற்படக்கூடிய தீமைகள் என்னென்ன என்று விளக்கமாகவும் மிகுந்த

உருக்கத்தோடும் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. காவிரி பாலாறு போல ஆகிவிடும் என்று வேடிக்கையாகச் சொல்லவில்லை. ஒரு காலத்தில் பாலாறு எவ்வளவு வெள்ளப் பெருக்கோடு ஓடியது என்பதும் இடையில் ஏற்பட்ட விளைவின் காரணமாக அது பாழாறாக ஆகிவிட்டதும் தெரியும். இன்றைக்கு இந்தத் தவறுக்கு நாம் இடம் கொடுத்தோமானால், எதிர்காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தின் சாபத்திற்கு நாம் ஆளாகவேண்டியவர்களாக இருப்போம். அதற்காகத்தான் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து இந்தக் கிளர்ச்சியில் அணி வகுத்து நின்று கொண்டிருக்கிறோம். கிளர்ச்சி முனை எப்படியெல்லாம் இருக்கவேண்டுமென்று பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் டெல்லிக்கே சென்று அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒரு நாள் உண்ணாவிரதம் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதில் என்ன பஞ்சம்? ஒரு நாள் அல்ல. காலம் சொல்லாமல் கூட உண்ணாவிரதம் இருக்கலாம். கடை அடைப்பு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். தமிழ்நாட்டு மக்கள் அதற்குத் தயாராக இருக்கிறார்கள். யாரும் அதில் சந்தேகப்படவேண்டிய அவசியமில்லை. இவை அனைத்தையும் நானே இந்த அவையில் அறிவித்து விடுவது நல்லதல்ல. எப்படியெப்படி நம்முடைய கிளர்ச்சி முறைகள் வகுக்கப்படலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லியதைப் போல, உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, வழக்கு மன்றத்திற்குச் சென்று நடுவர் தீர்ப்புக்கு விடாமல் காலம் தாழ்த்துகிற மத்திய அரசு நடுவர் தீர்ப்புக்கு விடுகிற முறையில் தலைமை நீதி மன்றத்திற்குப் போகவேண்டும். அதற்கு வழக்கு மன்றம் சென்றாக வேண்டுமா என்பதைக் கலந்தாலோசித்து முடிவு செய்யவேண்டும். நாம் இங்கே நிறைவேற்றிய தீர்மானம். பேசப்பட்ட உரைகளின் சுருக்கம் ஆகியவற்றை டெல்லிக்கு அனுப்பி பதினைந்து நாட்கள் காத்திருந்து சாதகமான பதில் வராவிட்டால் மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைபற்றி யோசிக்க இருக்கிறோம் என்பதை மாத்திரம் கூறி, இந்தத் தீர்மானத்தை இங்கே வழி மொழிந்து பேசிய அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், இரண்டாண்டு காலத்திற்கும் மேலாக அரசோடு ஒத்துழைத்து அரசு எடுக்கிற காரியங்களுக்கு நல்லாதரவைத் தந்து யோசனை கூறிய

இங்கேயுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள், வெளியே உள்ள தலைவர்களுக்கும், வெளியிலிருந்துகொண்டு நமக்கு ஊக்கமளித்து வருகிற அந்தந்தக் கட்சிப் பெரும் தலைவர்கள் அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்து இந்தத் தீர்மானத்தை இந்த அவை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கூறி அமர்கிறேன். (அவையில் ஒப்புதல் கையொலி எழுந்தது).



உரை : 6 **நாள் : 14.07.1971**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், சுதந்திராக் கட்சியின் சார்பிலும், முஸ்லீம்லீக் கட்சியின் சார்பிலும் தரப்பட்டுள்ள ஒத்தி வைப்புத் தீர்மானங்களையொட்டி சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

அண்மையில் இந்த மாமன்றத்திலும், மேலவையிலும் தமிழ்நாட்டு மக்களுடைய குரலை எதிரொலிக்கின்ற வகையிலும் தமிழ்நாட்டுக்கு வர இருக்கின்ற ஆபத்தை உணர்த்துகின்ற வகையிலும் மைசூரின் தன்னிச்சையான போக்கினால் இந்தியாவில் ஒருமைப்பாட்டுக்கே உலை நேரிடக்கூடும் என்ற அச்சத்தைத் தெரிவித்தும், தீர்மானம் ஒன்றினை நம்முடைய பண்பாடும், நாம் கட்டிக் காத்து வருகின்ற நல்ல மரபும் எள்ளளவும் கெடாத அளவுக்கு நிறைவேற்றி அதனை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து, மத்திய அரசினுடைய பதில் 15 நாட்களுக்குள்ளாக எதிர்பார்க்கப்படுகிறது என்று எதிர்பார்த்து அந்தப் பதிலுக்குப் பிறகு மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, மேலே என்ன நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்பது குறித்து ஆராயலாம் என்று அறிவித்தும் காவிரி நீர்த் தகராறில் நம்முடைய உணர்வுகளை எடுத்துக்காட்டி இருக்கிறோம்.

ஆனால் அதற்கிடையில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது பதிலுரை பகர்ந்த மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. கே.எல். ராவ் அவர்கள் அளித்திருக்கிற பதில் நமக்கு அதிர்ச்சி தரக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது, அவர்கள் நடுவர் தீர்ப்புக்கு விடுகிற இந்தப் பிரச்சினையில் காலதாமதம் செய்வது மாத்திரமல்லாமல்,

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதுபோல், நடுவர் தீர்ப்புக்கே இவர்கள் விடாத ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள் என்பது போன்று பொருள் ஒலிக்கிற வகையில்தான் திரு. கே.எல். ராவ் அவர்கள் பதில் அமைந்திருக்கிறது.

அவர்களுடைய பதிலில் இந்த பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ள ஆறுகளில் கட்டப்படுகிற அணைகளில் மத்திய அரசின் ஒப்புதலைப் பெறாமலும் ஒப்பந்தங்களில் குறிப்பிட் டுள்ளதைப் போன்று மாநில அரசுகளின் முன் இசைவைப் பெறாமலும் அந்த அணைகள் கட்டப்படுகிறதே என்பதைப் பற்றி எந்தப் பதிலும் அவர்களது உரையில் இருப்பதாகத் தெரியவில்லை. அது தெரியாதது மட்டுமல்ல. அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிற ஆறுகளில் கட்டப்படுகிற அணைகளுக்கு நாம் அனுமதி வழங்குவது என்பது சிரமமானது என்று கூறிவிட்டு ஆனால் அதே நேரத்தில் பட்டியலில் சேர்க்கப்படாத ஆறுகளில் சேர்க்கப்படுகிற அணைத் திட்டங்களுக்கு மத்திய அரசு கன்கரன்ஸ் ஒப்புதல் வழங்கும் என்று கூறியிருப்பது குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியும் பறித்த கதையாகத்தான் இருக்கிறது. வெந்த புண்ணில் வேலைச் சொருகுவதுபோல் திரு. கே.எல். ராவ் அவர்களின் பேச்சு அமைத்திருக்கிறது என்பதை நான் தமிழக மக்களின் சார்பாக மிகுந்த வருத்தத்தோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் பேச்சுக் குறிப்பில் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் :

'So far as the clearance of projects in the non-scheduled rivers in the Cauvery basin is concerned, that will be done and there is no difficulty about it.'

என்று குறிப்பிட்டு விட்டார்கள். பிறகு,

'As regards the Clearance of projects in the scheduled rivers this is matter on which the Government of India has got to be very careful. They have got to satisfy all the requirements of every-body. Unless there is general agreement between the three parties, it will not be possible to clear the projects on the Scheduled rivers'. என்று ஷெடியூல்ட் ஆறுகளில் அந்த

அணைகளைக் கட்டுவதற்கு மூன்று மாநில அரசுகளுடைய, இந்த மூன்று தொடர்புடைய கட்சிக்காரர்களுடைய அபிப்பிராயங் களைத் தெரிந்தாக வேண்டும், அதில்லாமல் ஒப்புதல் அளிப்பதற்கு இயலாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் இங்கு எழுப்புகிற கேள்வி எல்லாம் மூன்று பேர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ளாமல் ஒப்புதல் அளிக்க முடியாது என்று கூறுகிறார்கள்; ஒப்புதல் பெறாமல் கட்டிக் கொண்டு போகிறார்கள் அவர்கள், அதற்கு இவர்கள் இதுவரையில் என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்பதுதான் நம் கேள்வி. தூங்குகிறவன் தொடையில் கயிறு திரிப்பது என்று சொல்வார்கள். இப்போது மத்திய அரசாங்கம் விழித்துக் கொண்டிருப்பதுபோல் காட்டிக்கொள்கிறது. ஆனால் அவர்கள் தொடையில் கயிறு திரிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. இந்த நிலையில் தமிழக அரசின் சார்பில் நாம் நிறைவேற்றியிருக்கிற தீர்மானம் நாடாளுமன்றத்தில் எள்ளி நகையாடப்பட்டிருக்கிறது என்பதை இம்மாமன்றத்தின் மூலம் தலைவர் அவர்களே, உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வந்து அது இந்தப் பேரவையையே அவமானப்படுத்தியதாகக் கருதுகிறேன், அதற்கு தங்கள் கருத்தினையும், இந்தப் பேரவையின் உணர்ச்சிகளையும், பெருமைகளையும் காப்பாற்றுகிற அளவிற்கு தாங்கள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். அங்கு மைசூர் மாநில நாடாளுமன்ற உறுப்பினர் பேசும்போது 'Why should the Tamil Nadu Government come forward and create hulla gulla, I do not understand. The Agreement is subsisting till 1974. So, why should they make this gullatta and hulla gulla.' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் 'ஹல்லா ஹுல்லா' என்பது என்னவென்று தெரியவில்லை. கலாட்டா என்பது புரிகிறது. இரண்டு வார்த்தைகளுமே ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்தான், தமிழக அரசு இங்கே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுகிறது என்றால் அதை ஹல்லா ஹுல்லா, கலாட்டா என்று இரண்டு வார்த்தைகளைப் பயன்படுத்தி இந்த அரசின் சார்பில் இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை கலாட்டா தீர்மானம் என்பது போலவும் ஹல்லா ஹுல்லா என்றும் உபயோகிக்கத் தகாத வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்தி இங்கு ஒரு குழப்பமான

வெறும் வரட்டுக் கூச்சல் எழுப்புகிற கலாட்டாத்தனமான ஒரு நிலைமையில் தமிழக அரசு தீர்மானம் செய்திருக்கிறது என்ற அளவில் நாடாளுமன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது, அது இந்த பேரவையில் தீர்மானத்தை நிறைவேற்றிய அத்தனை உறுப்பினர் களுடைய உரிமைகளையும் பாதிப்பதைப் போல்தான் எனக்குத் தோன்றுகிறது. ஆகவே, இந்தப் பேரவையின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய இந்த மன்றத்தின் தலைவராக உள்ள தாங்கள் அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள் என நான் கருதுகிறேன்.

திரு. கே.எல். ராவ் அவர்கள் பேசும்போது இன்னொன் றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதல் அமைச்சர்கள் மாநாட்டை பலமுறை கூட்டி இப்போது புதிதாக மூன்று மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நான் அழைத்துப் பேசப்போகிறேன் என்று கூறியிருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களை நான் குறைந்து மதிப்பிடவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களோடு பேசுவதையும் நான் குறைவானது என்று கூறிடவிரும்பவில்லை. முதல் அமைச்சர்கள் மட்டத்தில் பேசப்படுகிறபோது கிடைக்கும் புள்ளிவிவரங்களை விட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்தில் பேசப்படுகிற நேரத்தில் என்ன அதிகமான புள்ளி விவரங்கள் கிடைத்துவிடும் என்று எனக்குத் தெரியவில்லை. முதல் அமைச்சர்கள் கூடுகிற நேரத்தில் அந்தந்த அரசிற்குரிய பொறியாளர்கள் அந்தந்த அரசுக்குரிய அதிகாரிகள் அனைவரும் தங்கள் கருத்துக்களைப் பறிமாறிக் கொள்ளக்கூடிய நல்ல சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்றன. அந்த நேரங்களை எல்லாம் தவற விட்டுவிட்டு திரு. ராவ் அவர்கள் அவர்களே வெளிப்படையாக எனது முயற்சி தோற்றுவிட்டது. பேச்சுவார்த்தை முறிந்து விட்டது என்று அறிந்த பிறகு மறுபடியும் நாடாளுமன்ற உறுப்பினர்களை நான் அழைத்துப் பேசப்போகிறேன் என்பது காலதாமதம் செய்வதற்காக ஒரு சமாளிப்பான வார்த்தையாகத்தான் எனக்குத் தோன்றுகிறதே தவிர வேறு அல்ல.

ஆகவே, நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துப் பேசப்போகிறேன் என்று குறிப்பிடுவது தஞ்சை, திருச்சியில் இருக்கிற, தமிழ்நாட்டில் இருக்கிற விவசாயிகளுடைய

பிரச்சினையை அவர்கள் மறந்துவிட்டு இதை ஒரு அரசியல் ரீதியில்தான் கவனிக்கிறார்கள் என்பதை எண்ண எண்ண வருந்தாமல் இருக்கமுடியாது.

அங்கு நமது நாடாளுமன்ற உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் குறுக்கிட்டு ஒன்றை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அந்த நியாயமான வாதத்திற்கு நாடாளுமன்றத்தில் திரு. ராவ் அவர்கள் எந்த பதிலும் சொல்லவில்லை. 1956-ம் ஆண்டு இன்டர் ஸ்டேட் வாட்டர் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டி 1956-ம் ஆண்டு இன்டர் ஸ்டேட் வாட்டர் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் செக்ஷன் 4-ல் 'When any request is received from any State Government in support of any water dispute and the Central Government is of opinion that the water dispute cannot be settled by negotiation, the Central Government shall by notification in this official Gazette constitute a Water Dispute Tribunal for the adjudication of the water dispute'. என்றிருக்கிறது என்பதைக் சுட்டிக்காட்டி அவர்கள் பேசிய நேரத்தில் அதற்கும் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் எந்த விடையும் பகர்ந்தாரில்லை.

திரு. கே.எல். ராவ் அவர்கள் பேச்சுவார்த்தை முறித்துவிட்டது என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வேளை தனக்கு மேல்மட்டத்தில் உள்ளவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை, ஆகவே இன்னும் பேச்சுவார்த்தைகளுக்கு இடம் இருக்கிறது என்று கருதுவார்களேயானால் இந்திய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மைசூரில் நடைபெற்ற தேர்தலின்போது வெளிப் படையாகவே ஒரு கூட்டத்தில் பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். நடுவர் தீர்ப்பைத் தவிர இந்தக் காவிரிப் பிரச்சினைக்கு வேறு வழியில்லை என்று இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இவ்வளவிற்கும் பிறகு நாம் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை மதிக்க வேண்டுமென்று கேட்பது நியாயத்திற்கு புறம்பானதா? நீங்கள் அணைகளைக் கட்டிக்கொள்ளுங்கள், எங்களுக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால் எங்களுக்குக் கிடைக்கவேண்டிய உரிமைகள் பாதிக்கப்படாமல் அதற்கு

உத்தரவாதம் கொடுங்கள் என்று கேட்பது நியாயத்திற்குப் புறம்பானதா என்பது தெரியவில்லை, ஆகவே நியாயத்தைச் சந்திக்க மத்திய அரசு இன்று தவறியிருக்கிறது என்பதை நானும் எடுத்துக்காட்ட அந்த அளவிற்கு இங்கு தரப்பட்டிருக்கிற ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் இந்த விளக்கங்களைத் தர வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்பதால் ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு மேலும் இதுபற்றிய விவாதத்தை விரைவில் நடத்துவதற்கு அனைத்துக் கட்சிகள் கூட்டத்தைக் கூட்ட இருப்பதால் இந்தத் தீர்மானத்தை இதற்கு மேல் விவாதிப்பதற்குத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன் என தலைவர் அவர்களே, தங்களிடம் எடுத்துச் சொல்லி அமர்கிறேன். வணக்கம்.



உரை : 7 **நாள் : 21.07.1971**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் காவிரி நீர் பங்கீடு பற்றி ஒருமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அந்தத் தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதையொட்டி இந்தியத் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் எனக்கு எழுதியுள்ள கடிதத்தை இந்த அவையில் வைப்பது பொருத்தம் என்று கருதி, தங்கள் அனுமதியோடு இந்த அவையில் இதனைப் படிக்கிறேன்.

New Delhi,

July 19th

Dear Thiru Karunanidhi,

I have seen the Resolution of the Legislative Assembly and the Legislative Council of Tamil Nadu. I do appreciate the deep feelings of the people of Tamil Nadu which have been voiced by you and the Legislature. I am conscious of the need to ensure that the Legitimate rights of the farmers of Tamil Nadu are fully protected. This matter has been dragging on for quite some time. You will appreciate that in the present circumstances when there is no popular Government in Mysore, it would not be proper to take any steps committing the Mysore Government. I hope you will therefore accept my sincere assurance of sympathetic understanding and intention to take steps to find a solution to this issue.

I am anxious to have this matter amicably settled without creating further bitterness. If you consider it desirable, we can meet and discuss this matter further.

Yours sincerely,
INDIRA GANDHI.

இந்தக் கடிதத்தை அவைமுன் வைக்கிறேன்.



உரை : 8 நாள் : 30.03.1973

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இறுதியாக, காவிரிப்பிரச்சினை குறித்து எதிர்க் கட்சித் தலைவரவர்களும், நண்பர் திரு.சுவாமிநாதன் அவர்கள் இடையிடையே குறுக்கிட்டும், தமிழ் நாட்டு மக்கள் எந்த அளவுக்கு இன்றைக்கு மைசூர் மாநிலத்துடைய அறிக்கைகளால் புண்படுத்தப்பட்டிருக்கிறார்கள். மக்களின் உள்ள உணர்வுகளைப் புண்படுத்தியிருக்கிறார்கள் என்பதைக் கூறினார்கள். பொருத்தமான உதாரணத்தையும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அந்தக் காலத்திலே உருவாக்கப்பட்ட "முல்கி" சட்டத்திற்கு இன்றைக்கு உச்சநீதி மன்றம், அது தொடர்ந்து இருக்கலாம் என்கின்ற தீர்ப்பைக் கொடுத்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் இன்றைக்கும் நிலைநிறுத்தப்பட முடியாத ஒன்றா என்ற கேள்வி எழுப்பினார். 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் எந்த வகையிலும் மீறப்படக் கூடாது என்பதில் நம்முடைய அரசு மிகுந்த பிடிவாதமாக இருக்கிறது - உறுதியாக இருக்கிறது என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பிரச்சினை குறித்து சட்டப் பேரவையிலேயும் மாண்புமிகு உறுப்பினர் பலர் வினாக்களை எழுப்பினர். இங்கேயும் அதுபற்றிய பேசப்பட்டிருக்கிறது. அவர்களெல்லாம் எடுத்துக்காட்டியது போல, நம்முடைய தமிழ் நாட்டுக்குள்ள அடக்க உணர்வோடு, மெத்த பண்பாட்டோடு நாம் இந்தப் பிரச்சினையை அணுகி வருகின்றோம். இந்த நேரத்திலே நாம் உணர்வுக்கு இடம் தராமல் - உணர்ச்சி பொங்கி எழுந்துவிடுமேயானால், அதன் காரணமாக ஏற்படுகின்ற ஊறுகளை அதனுடைய பின்விளைவுகளை எண்ணிப்பார்த்து - மைசூர் மாநில மக்களுக்கும், அல்லது கேரள மாநில மக்களுக்கும், அல்லது தமிழ் நாட்டிலே இருக்கின்ற மக்களுக்குமிடையே ஏற்படுகின்ற மனக்கசப்பை முற்ற

விடக்கூடாது என்பதில் நாம் மிகுந்த எச்சரிக்கையாக இருந்து வருகின்றோம். ஏனென்றால், மைசூர் மக்களுக்கு விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். மைசூர் மக்கள் நம்முடைய சகோதரர்கள். அதைப் போலவே தமிழ் நாட்டிலுள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களும் அவர்களுக்கு சகோதரர்கள். இந்தியாவின் ஒருமைப்பாட்டினைப்பற்றிப் பேசுகின்ற நேரத்தில் மைசூர் மாநில மக்களுக்கு காவிரியினால் கிடைக்கின்ற பயன்களை நாம் அழித்துவிட வேண்டும், தடுத்துவிட வேண்டுமென்று எண்ணுகின்ற குறுகிய நோக்கத்தோடு இந்தப் பிரச்சினையை அணுகவில்லை. ஆனால் ஏற்கெனவே நம்முடைய வயல்கள் வளப்படுத்தப்பட்டு அதன் காரணமாக தஞ்சை மாவட்டமும் தொடர்புடைய பகுதிகளும் செழிப்புற்று தமிழ்நாடே தஞ்சை மாவட்டத்தை நம்பியிருக்கின்ற சூழ்நிலையில் இன்றைக்கு திடீரென்று நாம் ஏற்கெனவே உள்ள ஒப்பந்தத்திற்கு விரோதமாக நடப்போம் என்று சூளுரைத்து, மைசூர் அரசு போர் தொடுக்குமேயானால், தமிழகமே இருண்ட நிலமாக ஆகிவிடுமென்பதை பல முறை மத்திய அரசுக்கு எடுத்துக் கூறியிருக்கின்றோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த அந்த நேரத்திலே பொதுப்பணித் துறை அமைச்சர் என்ற முறையிலே நான் பல முறை அந்நாள் மைசூர் முதலமைச்சர் வீரேந்திர படீல் அவர்களோடும் மத்திய அமைச்சர்களோடும் டெல்லிப் பட்டணத்தில் சந்தித்து இதுபற்றி விவரங்களை எடுத்துரைத்திருக்கின்றேன். இப்படி பல முறை எடுத்துச் சொல்லியும் கூட, மாநாடுகளை நடத்தியும்கூட, முதலமைச்சர்களின் மாநாட்டை நடத்தியும் கூட இறுதி முடிவினை மத்திய அரசு எடுக்கவேயில்லை. நான் இதிலே மைசூர் அரசைக் குறை கூறுவதைவிட, குறை கூற வேண்டியது மத்திய அரசைத்தான் என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்துச்சொல்வது மிகப்பொருத்தம் என்று நான் கருதுகின்றேன். அவர்கள் அனுமதித்திருந்தால், இதை சுமுகமாக.....

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, கேஸ் போட்டிருந்தோம். அந்த கேஸை வாபஸ் வாங்கிக் கொண்டோம். வாபஸ் வாங்கிக்கொள்ளும்போது, மைசூர் அரசு ஏதாவது வாக்குறுதி கொடுத்திருந்ததா? அதைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : சொல்கிறேன், மத்திய அரசு முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால், அவர்கள் ஹேமாவதி போன்ற திட்டங் களுக்கு நேரடியாக அனுமதியைத் தரவிட்டாலும், மைசூரிலே முதலமைச்சர் வீரேந்திர பட்டீல் ராஜினாமா செய்தபிறகு, அவர் களுடைய நிதிநிலை அறிக்கை பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்ட நேரத்தில், ஹேமாவதி திட்டங்களுக்கான பண ஒதுக்கீட்டை பாராளுமன்றத்தில் செய்தார்கள். அது மறைமுகமாக தமிழக அரசுக்கு விரோதமாக - நான்கு கோடி மக்களுடைய எண்ணங்களுக்கு விரோதமாக - செய்யப்பட்ட காரியம் என்பதை அன்றைக்கே நாம் அழுத்தந்திருத்தமாக எடுத்துரைத்திருக்கிறோம். ஆனாலும் மாநிலத் தகராறுகளை முற்றவிடக் கூடாது என்பதிலே நாம் காட்டிய பொறுமையின் காரணமாக, மத்திய அரசு சமரச உடன்பாடுகளுக்கு வந்த நேரத்திலேயெல்லாம், நாம் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு நடந்திருக்கிறோம். அவர்கள் நாம் எப்படிப்பட்ட உடன்பாட்டிற்கு வந்தோமென்று கேட்டார்கள். நாம் இந்த வழக்கை வாபஸ் வாங்கினோமென்றால் ஒரு "கண்டிஷன்"-னோடுதான் வாபஸ் வாங்கியிருக்கிறோம். "with liberty to file" என்கின்ற நிபந்தனையோடுதான் நாம் வாபஸ் வாங்கியிருக்கிறோம். மறுபடியும் அந்த வழக்கை நாம் எப்போதும் வேண்டுமானாலும் போடலாம், அதற்கு இடம் வைத்துத்தான் நாம் வாபஸ் வாங்கி யிருக்கிறோம். ஆனால் திரு. தேவராஜ் அர்ஸ் அவர்களும், திரு. அச்சுத மேனனும், நானும், திரு. கே. எல். ராவும், நம்முடைய தமிழகத்து அமைச்சர் பெருமக்களும் கலந்துகொண்டு பேசிய அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவில்,

"Union Government will assist in arriving at such a settlement in six months and in the meanwhile no State will take any steps to make the solution of the problem difficult either by impounding or by utilising water of Cauvery beyond what it is at present என்று வெகு தெளிவாக அன்றைக்கு எழுதி அனைவரும் கையெழுத்துப் போட்டிருக்கிறோம். அதை நான் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்திலே படித்துக் காட்டினேன். அதற்குப் பிறகுதான் வழக்கைத் திரும்பப்

பெறலாம் என்ற முடிவினை அன்றைக்கு நாம் எடுத்தோம். அனைத்துக் கட்சித் தலைவர்களும் இதை நன்றாக அறிவார்கள். அப்பொழுதே, முதலமைச்சர்கள் பேசும்பொழுதே, கே. எல். ராவ் அவர்களுடைய முன்னிலையில் ஒன்றை உறுதி எடுத்துக் கொண்டோம். இந்தச் சிக்கலான பிரச்சினையில் முதலமைச்சர்கள் தொடர்ந்து எந்தவிதமான அறிவிப்புகளும், அறிக்கைகளும் வெளியிடுதல் கூடாது. இது முடிவு அடைகிற வரையிலே யாரும் அறிக்கைகள் விடத் தேவையில்லை என்கின்ற ஒரு உறுதிமொழியினை எடுத்துக்கொண்டோம். அதை ஒப்பந்தமாக எழுதவில்லையென்றாலும், அந்த உறுதியை எடுத்துக் கொண்டோம் என்பதற்கு அடையாளமாக இதுவரை எந்த அமைச்சரும் இதைப்பற்றிப் பேசாமல் இருந்தோம். அதுவே அப்படி ஒரு உறுதிமொழியை எடுத்துக்கொண்டோம் என்பதற்கு ஆதரமாகும். ஆனால் திடீரென்று 2, 3 நாட்களுக்கு முன்பு மைசூர் மாநிலத்தினுடைய முதலமைச்சர் ஒரு அறிக்கையை விட, நம்முடைய நிருபர்களெல்லாம் என்னைச் சந்தித்துக் கேட்ட நேரத்திலும், ஜாக்கிரதையாகச் சொன்னேன். மத்திய அமைச்சருடைய முன்னிலையில் இப்படி ஒரு உறுதிமொழி எடுத்துக்கொண்டிருக்கிறோம், அதற்கு மாறாக எந்த அமைச்சரேனும் அறிக்கைவிட்டால், அதைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசிற்கு இருக்கிறது என்று நான் சொன்னேன். அப்படிச் சொன்ன பிறகாவது மத்திய அரசு கொஞ்சம் கண் திறந்து, செவி திறந்து இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதற்காக, முதலமைச்சர்கள் இதில் ஒரு தீர்க்கமான முடிவு எடுப்பதற்கு முன்பு அவர்கள் இப்படி யெல்லாம் அறிக்கைவிடுவது முறையல்ல என்று கூறியிருப்பார் களானால், நான் மகிழ்ச்சியடைந்திருக்க முடியும். மத்திய அரசு அதிலே வாளாவிருந்துவிட்டது. அதைப்பற்றி எந்தவிதமான கவலையும் செலுத்தியதாக நமக்குத் தெரியவில்லை. அவர்களுக்கிருக்கிற பல்வேறு பிரச்சினைகளிலே காவேரிப் பிரச்சினை ஒரு பிரச்சினையாகவே தெரியவில்லை; ஆனால் இது தமிழர்களுக்கு வாழ்வுப் பிரச்சினை, எதிர்காலப் பிரச்சினை. இந்த நிலம் எதிர் காலத்தில் இருண்டு பாழடைந்துவிடக்கூடிய பிரச்சினை. நான்கு கோடி மக்களில் பெரும் பகுதி மக்கள் சாகவேண்டிய பெரும் பிரச்சினை என்பதை மத்திய அரசு உணர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மிகக் கண்டிப்பாக

நான்கு கோடி தமிழ் மக்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

நாம் அடக்கத்தோடு சொல்வதை, பொறுமையோடு சொல்வதை கோழைத்தனம் என்று கருதுவார்களானால், அது நல்லதல்ல. அது எதிர்காலத்திலே நாம் கொள்ள வேண்டிய நட்புக்கு, உறவிற்கு, பொறுப்புணர்ச்சிகளுக்கு உகந்ததல்ல என்பதை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. நான் இன்னொன்றையும் சொல்கிறேன். அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டவேண்டுமென்று யோசித்து, காலையிலே பேரவையிலே இருந்த தலைவரிடத்திலே கலந்து பேசியிருக்கிறேன். இங்கே அறிவித்தால், பேரவையிலேயுள்ள சில பேருக்குக் கோபம் வந்துவிடுகிறது. காலையிலே கூட அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. என்றாலும்கூட அங்கே நான் விளக்கத்தைச் சொன்னேன். கடிதம் வந்து விட்டது என்று நினைக்கிறேன். வந்துவிட்ட காரணத்தினால் சொல்கிறேன். 4-ஆம் தேதியன்று நான்கு மணிக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டம் நம்முடைய தலைமைச் செயலகத்தில் நடைபெற இருக்கிறது. அன்றைக்கு இதைப்பற்றியெல்லாம் நாம் விவரமாகப் பேசி ஏற்றதொரு முடிவை நிச்சயமாக எடுக்க முடியும். ஆனால், எந்த முடிவானாலும் நம்முடைய தமிழகத்திற்கு, தமிழ் நாட்டு மக்களுக்கு 1924ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு மாறான முடிவாக இல்லாமல் பார்த்துக் கொள்வதிலும், அது மாத்திரமல்லாமல் நமக்கு மைசூர் அரசாலும், அல்லது மத்திய அரசின் அமைச்சராலும் எந்தக் கேடும் விளையாது பார்த்துக்கொள்வதிலும் இந்த அரசு தன்னுடைய பதவியைக்கூடப் பணயம் வைத்துப் போராடத் தயாராக இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, எதிர்க் கட்சித் தலைவரும், மற்றவர்களும் கட்சி சார்பற்ற முறையிலே இதிலே நாங்களும் போர்க் குரல் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதை எடுத்துச்சொன்னதை நான் மனமார, நெஞ்சார, இதயமார வரவேற்று, இந்த உணர்ச்சியொன்றே நம்முடைய தமிழ்நாட்டு மக்களுடைய எதிர்காலம் செழிப்படைவதற்குப் போதும் என்று எடுத்துக்கூறி, இந்த நிதி நிலை ஒதுக்கீட்டிலே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் சொன்ன நல்ல பல கருத்துக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக்

காவிரிப் பிரச்சினையில் நம்முடைய தமிழகத்தில் இருக்கிற அரசியல் கட்சிக்காரர்கள் ஒத்துழைத்தால் மட்டும் போதாது, பத்திரிகைக்காரர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன். ஏனென்றால், மைசூர்காரர்கள் நம்மைப் பார்த்துச் சீறி எழுந்தால், விளக்கங்கள் தந்தால், அதைப் பெரிய அளவில் வெளியிடுவதற்கு இங்கேயுள்ள பத்திரிகைக்காரர்கள் தயாராக இருக்கிறார்கள். ஏதோ இங்கிருக்கிற அமைச்சர் களையோ, திராவிட முன்னேற்றக் கழகத்தையோ, மற்ற மாநிலங்களில் இருக்கிற அமைச்சர்கள் எள்ளி நகையாடுகிறார்கள் அல்லது குறை கூறுகிறார்கள் என்று இந்த விஷயத்தை பத்திரிகைக்காரர்கள் பயன்படுத்திக்கொள்ளக்கூடாது என்று நான் மிகுந்த தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். இது முன்னேற்றக் கழகத்தினுடைய பிரச்சினையல்ல. தமிழகத்தில் இருக்கிற மக்களுடைய பிரச்சினை. இன்றுகூடக் காலையிலே பார்த்தால் பத்திரிகையிலே "காவிரிப் பிரச்சினை, மைசூர் நிலை விளக்கம்" என்று தினமணிப் பத்திரிகையில் பெரிய அளவில் வருகிறது. நான் அதற்காக வருத்தப்படவில்லை.

திரு. கே. ராஜாராம் : ஒருக்கால் நமக்கு ரோஷம் ஊட்ட வேண்டுமென்றிருக்கலாம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இதுமாதிரி செய்திகளைப் பார்க்கும்போது, ரோஷம் வருகிறது. ஆனால், வெளியிலே சொல்ல முடியாத சங்கடம் இருக்கிறது. ஆனால் "இதேபோல நான் விளக்கம் தருவது, "காவேரி நீர் - மைசூர் முதலமைச்சருக்கு கருணாநிதியின் ஆட்சேபம்" என்ற அளவிற்கு வருகிறது. எதிரிகள் ரோஷம் ஊட்டினால்தான் ரோஷம் வரவேண்டும். இங்கே இருக்கிற தலைவர்கள் ரோஷம் ஊட்டினால் ரோஷம் வரக்கூடாது என்றால், அந்த ரோஷம் ரொம்ப நாளைக்கு நிற்காது. எதிரி ஊட்டுகிற ரோஷம்தான் நிற்கும். நாம் ஊட்டுகிறது ரோஷம் நிற்காதென்றால் அந்த ரோஷம் உண்மையான ரோஷமாக இருக்காது. இதைச் சொல்வதற்குக் காரணம் ஒரு பத்திரிகையைக் குறை கூறுவதற்காக அல்ல. எல்லாப் பத்திரிகைகளுக்கும் சொல்கிறேன். நான் இந்தப் பத்திரிகையை எடுத்துச்சொல்வதற்குக் காரணம் தரமான பத்திரிகை என்ற வரிசையில் இருக்கிற

காரணத்தால், சொன்னால் புரிந்துகொள்வார்கள். வேறு சில பத்திரிகைகள் எதற்காகவோ இருக்கின்றன. நாட்டைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறார்கள். இதிலே பரிபூர்ணமாக ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதி ஒதுக்கீடு மானியத்தின்மீது பல்வேறு கருத்துக்களைச் சொன்ன அனைவருக்கும் நன்றி தெரிவித்து இந்த அளவில் அமைகிறேன்.

உரை : 9 நாள் : 24.02.1975

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர வர்களே, மிக முக்கியமான காவேரிப் பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சி தலைவர்களுடைய கூட்டங்கள் அடிக்கடி கூட்டப்பெற்று. அவர்கள் வழங்கிய அரிய ஆலோசனைகள் அடிப்படையில் தமிழக அரசு கர்நாடக முதல்வருடனும் கேரள முதல்வருடனும் மத்திய அமைச்சருடைய முன்னிலையில் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கிறது என்பதை இந்த அவையும் நாடும் நன்கு அறியும்.

காவிரிப் பிரச்சினை நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை இங்கு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசிய எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் சுட்டிக் காட்டியதைப்போல ஒரு உயிர்ப்பிரச்சினையாகும்.

காவிரி நதி தமிழகத்தில் இல்லாவிட்டால் எந்த அளவுக்கு நம்முடைய மாநிலம் வறண்டு போய்விடும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. பல ஆண்டு காலமாக நாம் காவிரியினுடைய பயனை அனுபவித்து வருகிறோம். 1924-ம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தம் 1974-ம் ஆண்டுடன் முடிவுறுகிறது. அதற்குப் பிறகு காவிரியில் நமக்கு எந்தவிதமான பாத்தியதையும் கிடையாது என்ற தவறான பிரச்சாரம் நாட்டில் நடைபெறுகிறது. அந்த அடிப்படை மிகத் தவறானது என்பதைப் பல நேரங்களில் இந்த அவையிலேகூட நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப்போல 1924-ம் ஆண்டு ஒப்பந்தம் 1974-ம் ஆண்டில் உபரித் தண்ணீரைப் பொறுத்து புதுப்பிக்கப்பட்ட வேண்டிய ஒன்றே அல்லாமல் 1924-ம் ஆண்டு ஒப்பந்தம் 1974-ல் கிழித்தெறியப்பட்டு, வேறொரு புதிய ஒப்பந்தம் செய்து கொள்வது என்பது பொருளல்ல. 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படை யிலேதான் நாம் இந்தப் பிரச்சினையை அணுகி வருகிறோம்.

தேசிய அளவில் பல பிரச்சினைகளை அணுக வேண்டுமென்ற அறிவுரை மிகப் பெரியவர்களால் நாட்டுக்கு வழங்கப்படுகிறது. நம்முடைய நண்பர் திரு. ஹாண்டே அவர்கள் கூட பேசுகிறபோது இந்திய ஒருமைப்பாடு பற்றி பேசிவிட்டு, ஒரு மாநிலத்தை இந்த அளவுக்கு வறண்டு போகவிடலாமா, அதற்கு மத்திய அரசு துணைபோகலாமா என்ற கருத்துப்பட ஒரு கேள்வியை எழுப்பினார்கள்.

கர்நாடக மாநிலம் காவிரியினுடைய பயனைப் பெறவே கூடாது என்பது நம்முடைய வாதம் அல்ல. காவிரி கர்நாடகத்திலே தோன்றி தமிழகத்திலே நீண்ட நெடுநாட்களாகப் பயனை வழங்கிக்கொண்டிருக்கிற ஒரு பெரும் நதியாகும். இந்தியாவிலே இருக்கிற 4, 5 பெரிய நதிகளில் காவிரி நதியும் ஒன்று.

அந்தக் காவிரி நதி, கர்நாடகத்தைப் பொறுத்தவரை தமிழகத்துடன் ஒப்பிடுகிற நேரத்தில் மிகக் குறைவான ஆயக்கட்டுகளுக்குத்தான் பாசன வசதி தந்துகொண்டிருக்கிறது. அதில் இருந்து ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கர்நாடக அரசு கருதுவதும், கர்நாடக மக்கள் விரும்புவதும் இயற்கை. அதை நாம் மறுப்பதற்கில்லை.

அதே நேரத்தில் தமிழ்நாடு ஏற்கெனவே அனுபவித்து வந்த பாத்தியதையை, பயனை இழந்துவிட்டு, ஏற்கெனவே இருக்கிற ஆயக்கட்டுகளை எல்லாம் காய வைத்துவிட்டு, இனிமேல் புதிதாகத் தோன்றப்போகிற கர்நாடக ஆயக்கட்டு களுக்கு காவிரித் தண்ணீரை வழங்குவதில் தேசிய அளவில் என்ன லாபம் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

திரு. பொன்னப்ப நாடார் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். கிருஷ்ணா அவார்டு என்பதன் வாயிலாக கர்நாடக மாநிலத்திற்கு 500 டி.எம்.சி. தண்ணீர் கொடுப்பதற்கு வழிவகை காணப்பட் டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு அவார்டு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த 500 டி.எம்.சி. தண்ணீரே தங்களுக்குப் போதாது என்று கர்நாடகம் வாதிடுவதாகச் செய்திகள் வருகின்றன. அந்த 500 டி.எம்.சி. தண்ணீரை அவர்கள் பயன்படுத்திக்கொள்வார்களானால் காவிரி தண்ணீரை அவர்கள் பயன்படுத்த வேண்டுமென்கின்ற நிலையே எழாது என்பதுதான் நம்முடைய எண்ணம். அதற்காக அவர்கள் காவிரித் தண்ணீரைப் பயன்படுத்தக்கூடாது என்று நாம் வாதமிடவில்லை.

நம்முடைய அடிப்படை கருத்தெல்லாம் ஏற்கெனவே பயன்பட்டு வருகிற நம்முடைய தமிழகத்து ஆயக்கட்டுகள் பாழாகிவிடக்கூடாது என்பதுதான். நாம் நூறு டி.எம்.சி. தண்ணீரைக் குறைத்துக்கொள்கிறோம் என்று கூறியதன் பொருள் அதற்கான ஆயக்கட்டுப் பரப்பளவைக் குறைத்துக்கொள்கிறோம் என்பது அல்ல. இதை நாம் மிகத் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும். சிலபேர் ஆயக்கட்டுகளைக் குறைத்துக்கொள்ளப் போகிறோமோ என்று தவறாகக் கருதுகிறார்கள் என்று நான் உணர்கிறேன். அது அல்ல உண்மை. இருக்கிற ஆயக்கட்டுகள் அப்படியே இருக்கும். இந்த 100 டி.எம்.சி.யைக் குறைத்துக் கொள்கிறோம் என்பது - நம்முடைய பாசனக் கால்களை நவீனப்படுத்துவதன் மூலம் - மாடர்னைசேஷன் ஸ்கீம் மூலம் - வாய்க்கால்களை நவீனப்படுத்தி, அதன்மூலம் தண்ணீரைச் சிக்கனப்படுத்தி இருக்கிற ஆயக்கட்டுகள் எல்லாவற்றுக்கும் தண்ணீர் அளிக்கலாம் என்கிற அடிப்படையில்தான் இந்த 100 டி.எம்.சி.யைக் குறைத்துக்கொள்ள ஒத்துக்கொள்கிறோம். அதுவும் உடனடியாக அல்ல. இன்றைக்கு ஒப்பந்தம் கையெழுத்தானால் நாளையதினமே 100 டி. எம். சி.யைக் குறைத்துக்கொள்கிறோம் என்று சொல்லவில்லை. இந்த 100 டி.எம்.சி. தண்ணீரையும் முற்றும் குறைத்துக் கொள்வதற்கு 15 ஆண்டுக்காலம் ஆகும். அந்த 15 ஆண்டுக் காலத்திற்குள் இந்த 100 டி.எம்.சி.யைக் குறைத்துக் கொள்வதனால் நம்முடைய இருக்கிற ஆயக்கட்டுகள் பாதிக்கப்படாதிருக்கக் கால்வாய்களை மாடர்னைசேஷன் ஸ்கீம் மூலம் நவீனப்படுத்தி தண்ணீரைச் சிக்கனப்படுத்திக் கொள்ளலாம் என்று கருதியே ஒத்துக் கொண்டோம்.

இருக்கிற ஒப்பந்தம் நிறைவேறவில்லை. நீங்கள் கொஞ்சம் பேரம் பேசியிருக்கவேண்டும். பிகு காட்டியிருக்க வேண்டும் என்பதாக பேரம் பேசுகின்ற முறைகளை டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். நான் வேடிக்கைக்குச் சொல்லவில்லை. தயவு செய்து தவறாக எடுத்துக் கொள்ளவேண்டாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பேரம் பேசுகின்ற முறை என்றல்ல. நம்மைப்பொறுத்தவரையில் நமது ஆயக்கட்டுகள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகச் சொன்னேன். நமது தேவைகளைத் தட்டிக் கேட்க வேண்டியது நமது கடமை என்பதை மறந்துவிடக்கூடாது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : திரு. ஹாண்டே முழுக்க முழுக்க நமக்கு ஆதரவாகத்தான் சொல்கிறார்கள். "நீங்கள் ஏன் 50 டி.எம்.சி.தான் குறைத்துக்கொள்ள முடியும் என்று சொல்லியிருக்கக் கூடாது" என்று கேட்டார்கள்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் குறிப்பிட்டதைப் போல 50 டி.எம்.சி. தான் குறைத்துக்கொள்ள முடியும் என்று பேச்சைத் தொடங்கி பிறகு 60 டி. எம். சி. குறைத்துக்கொள்வது என்று பேச்சைத் தொடங்கி பிறகு 80 டி.எம்.சி. என்கின்ற அளவில் ஒப்புக்கொண்டு இரவு பத்து அல்லது பதினோரு மணிக்கு ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு இந்த 20 டி.எம்.சி. தான் தடையாக இருக்கிறது என்று மத்திய அமைச்சர் மாண்புமிகு ஜகஜீவன்ராம் அவர்களும் திரு. பந்த் அவர்களும் குறிப்பிட்ட காரணத்தினால் ஒப்பந்தம் கையெழுத்தானால் போதும் என்கிற அளவில் நூறு டி.எம்.சி.யை 15 ஆண்டுகளில் குறைத்துக்கொள்ள தயாராய் இருக்கிறோம் என்று தெரிவித்தோம். இதையும்கூட தமிழக அரசின் சார்பில் நான் முதலமைச்சர் என்ற முறையிலோ - தமிழக மந்திரிகள் என்கிற முறையில் நாங்களாகவோ இந்த முடிவை அறிவித்துவிடவில்லை என்பதை அனைத்துக் கட்சித் தலைவர்களும் அறிவார்கள். இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்பு கூட அனைத்துக் கட்சித் தலைவர்களது கூட்டத்தை நமது தமிழக தலைமைச் செயலகத்தில் கூட்டி - நீங்கள் தண்ணீரைக் கொஞ்சம் மிச்சப்படுத்திக் கொள்ள முன்வந்தாக வேண்டும் என்று கேட்டால் அதற்கு இணக்கம் தெரிவிக்கலாமா என்று கேட்டு - அனைத்துக் கட்சித் தலைவர்களது சம்மதத்தைப் பெற்று - அதன் பிறகுதான் தண்ணீரைக் குறைத்துக் கொள்ள 100 டி.எம்.சி. அளவுக்கு ஒப்புதலை வழங்கினோம்.

பொதுப்பணித்துறை அமைச்சர் குறிப்பிட்டதைப்போல இரவு ஒரு மணி ஒண்ணரை மணிக்கு ஒப்பந்தத்திற்கான வரைவுத் தாள்களைக் கொண்டுவந்தபோது "நாங்கள் பேசியதற்கும் அந்த வரைவுத் தாள்களுக்கும் நிரம்ப வேறுபாடுகள் இருந்தன. ஆகவே, கொள்கை அளவில் ஒப்பந்தத்தாள் இருக்கிறது. ஆனால் சில நுணுக்கங்கள் ஆபத்தை விளைவிக்கின்ற அளவில் அமைந்திருக்கின்றன. ஆகவே அதை ஒத்துக்கொள்வதற்கில்லை" என்று குறிப்பிட்டோம். அந்த வரைவுத் தாள்களைத் தமிழக அரசும் சரி, கேரள அரசும் சரி கர்நாடக அரசும் சரி ஒத்துக்

கொண்டார்களா என்றால் இல்லை. அவரவர்களுக்கு அதில் அபிப்பிராய பேதம் இருந்தது. ஆகவே ஒத்துக்கொண்டு, பிறகு நாம்தான் பின்வாங்கி ஒத்துக்கொள்ளவில்லை என்ற வாதம் உண்மையானது அல்ல என்பதற்காக அதைக் குறிப்பிட்டேன். மூன்று மாநில அரசுகளுக்குமே அந்த ஒப்பந்த வரைவுத்தாளைப் பொறுத்தவரையில் அபிப்பிராய பேதம் இருந்தன. ஆகவே அதனை ஒத்துக்கொள்ளவில்லை.

இந்தக் கூட்டத்தில் 100 டி.எம்.சி. தண்ணீரை எப்படிக் குறைத்துக் கொள்வது - என்கிறபோது பதினைந்து ஆண்டுகளில் படிப்படியாகக் குறைத்துக்கொள்ள வேண்டும். ஐந்து ஆண்டுகள் - பத்து ஆண்டுகள் - பதினைந்து ஆண்டுகள் என்கிற அடிப்படையில் முதல் ஐந்தாண்டின் முடிவில் 20 டி.எம்.சி. பத்தாண்டின் முடிவில் 60 டி.எம்.சி., 15-வது ஆண்டின் முடிவில் 100 டி.எம்.சி. என்ற அளவில் நீங்களே எங்களுக்கு விடுகிற தண்ணீரைக் குறைத்துக்கொள்ளுங்கள். அந்தக் காலத்திற்குள் நாங்கள் எங்களது கால்வாய்களை - மாடர்னைசேஷன் ஸ்கீம் படி நவீனப்படுத்திக்கொண்டு விடுகிறோம் என்பதாகத் தமிழக அரசின் சார்பில் கர்நாடக அரசினிடத்தில் தெரிவித்துக் கொண்டோம். திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்ட தைப்போல மத்திய சர்க்காரும் அந்த மாடர்னைசேஷன் ஸ்கீமுக்கு பண உதவி செய்து தருவதாக ஒத்துக்கொண்டிருக்கிறது. அந்தப் பண உதவியைப் பெற்று மூன்று கட்டத்தில் முதலில் 20 டி.எம்.சி., பிறகு 60 டி.எம்.சி., இறுதியாக 100 டி.எம்.சி. குறைத்துக்கொள்வது என்ற கருத்தைத் தெரிவித்தோம்.

வந்த வழக்கெல்லாம் பொதுப்பணித்துறை அமைச்சர் குறிப்பிட்டதைப்போல அவர்கள் கொடுக்கிற தண்ணீரில் குறைப்பு செய்து கொள்வதா, நாம் பயன்படுத்துகிற தண்ணீரிலா என்பதாகும். பயன்படுத்திக்கொள்கிற தண்ணீரைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்பது பேசுவதற்கு எளிமையாக இருக்கலாம். கேட்பதற்குக்கூட ஆமாம் என்று சொல்லத் தோன்றலாம். ஆனால் இங்கே பயன்படுத்துகிற தண்ணீரைக் குறைத்துக்கொள்வது என்பது நம் மாநிலத்தில் பெய்கிற மழை - அதையும் சேர்த்துச் சராசரிக் கணக்கில்போட்டு குறைத்துக் கொள்கிற நிலைமைக்குப்போகும். ஆகவே 100 டி.எம்.சி. என்கிற போது ஒவ்வொரு ஆண்டும் விடப்பட்ட தண்ணீரின் அளவை

வரிசையாக எடுத்து ஒட்டுமொத்தமாக சராசரி கணக்குப்போட்டு அதில் 100 டி.எம்.சி. தண்ணீரை அவர்கள் தமிழகத்திற்கு விடும்போதே குறைத்துக்கொள்ளலாம் என்பது நாம் தெரிவித்த கருத்தாகும். அதற்கு அவர்கள் இணங்கி வரவில்லை. முதலில் ஒப்புக்கொண்ட நிலையில் இருந்து நாம் பின்வாங்கவில்லை. முதலில் ஒத்துக்கொண்டது ஒன்று, இப்போது பேசுவது ஒன்று என்று தமிழக அரசைப் பொறுத்தவரையில் இல்லை.

அந்தப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு கர்நாடக மாநிலத்தில் எவ்வித கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. பத்திரிகையில் வந்த செய்திகள் எத்தகையன என்பதும் ஒப்பந்தம் முடிவுறாமல் போனதற்கு யார் காரணமாக இருக்கக்கூடும் என்பதும் இந்த அவையும், நாடும் நான்கு அறிந்த விஷயம் என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மாரிமுத்து அவர்கள் "இன்னும் பேசி முடிவு காண்பதற்கு இடமில்லாமல் போகவில்லை. ஆனாலும் நடுவர் தீர்ப்புத் தேவை என்று குறிப்பிட்டார்கள். நடுவர் தீர்ப்புத் தேவை என்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஒருமனதாகத் தீர்மானம் போட்டிருக்கிறோம். அதுமாத்திரம் அல்ல. 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு மாறாக கபினி அணையில் தண்ணீரைக் தேக்கி வைத்திருக்கிறார்கள். தமிழகத்திற்கு இதுவரை அங்கே இருந்து வந்துகொண்டிருந்த தண்ணீர் - ரூல்ஸ் அண்டு ரெகுலேஷன் போட்டதற்குப் பின்னால் எவ்வளவு தண்ணீரைவிடுவது அங்கே எவ்வளவு தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்வது என்று தீர்மானிக்கலாம். கபினி தண்ணீர் தமிழகத்திற்கு வரவேண்டிய தண்ணீர் - 1924ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு மாறாக அந்தத் தண்ணீரை அங்கே தேக்கி வைக்காது - அந்தத் தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென்று உரிமையின் அடிப்படையில் மத்திய சர்க்கார் இதில் தலையிட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இனி பேச்சுவார்த்தை என்பது - நான் மிக்க பணிவுடன் தெரிவித்துக் கொள்வேன். மத்திய அரசு பாரபட்சமாக நடந்து கொள்கிறதோ என்று ஐயம் ஏற்படுகிற அளவு நிலைமை வளர்ந்திருக்கிறது. ஏனென்றால் அந்தத் திட்டங்களுக்கு அந்த அணைகளுக்கு மத்திய அரசு இன்னும் கன்கரன்ஸ் என்கின்ற சம்பிரதாய பூர்வமான சம்மதம் அளிக்கவில்லை என்கிற நிலையில் தவறாகவோ, சரியாகவோ, மறைமுகமாகவோ அந்த

அணைகளைக் கட்டுவதற்கான உதவிகள் மத்திய அரசின் சார்பில் செய்யப்பட்டிருக்கின்றன. திரு. வீரேந்திரபட்டீல் ராஜீனாமாச் செய்து அந்த மாநிலத்தில் கவர்னர் ஆட்சி நடைபெற்ற காலத்தில் கர்நாடக பட்ஜெட்டில் இந்த அணைக்கட்டுத் திட்டங்களுக்குப் பணம் ஒதுக்கப்பட்டு - பாராளுமன்றத்தில் இதற்கு மறைமுகமாக மத்திய அரசின் ஆதரவு இருந்திருக்கின்றது என்பது கண்கூடான விஷயம். இதை மத்திய சர்க்காரைக் குறைகூற வேண்டுமென்று சொல்லவில்லை.

மத்திய அரசு இதில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசு கடுமையான நடவடிக்கை எடுத்தால் தான் கபினி தண்ணீர் நமக்குக் கிடைக்கும். இன்றைக்குத் தமிழ் நாட்டில் இருக்கிற நிலங்களை வற்றவிட்டு, பாழாக்கிவிட்டு மற்றொரு மாநிலம் வாழவேண்டுமென்ற அளவுக்கு குறுகிய எண்ணம் படைத்ததாக மத்திய அரசு இருக்குமென்று நான் கருதவில்லை. அல்லது பேச்சுவார்த்தைக்கு நிபந்தனையாகவும் போடவில்லை. பேச்சுவார்த்தைக்கு மனம் பக்குவமடைய வேண்டும். பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்கிற நம்பிக்கை ஏற்படவேண்டுமானால் குறைந்தபட்சம் கபினி அணையில் தேக்கிவைத்திருக்கிற தண்ணீரை - இப்போது காய்ந்து கொண்டிருக்கிற தஞ்சை மாவட்டத்திற்கு முதல் கட்டமாக விடுவிக்கின்ற முயற்சியை மேற்கொண்டால்தான் பேச்சு வார்த்தையில் ஏதாவது பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையைப் பெற இயலும். அந்த வகையிலே இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களின் மூலமாக இந்தக் கருத்துக்களைச் சொல்வதற்காக வாய்ப்பு கொடுத்தமைக்கு நான் ஒத்திவைப்பு தீர்மானங்களைக் கொடுத்தவர்களுக்கெல்லாம் நன்றியைத் தெரிவித்து இந்தப் பிரச்சினையில் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒரே அணியில் இருக்கிறார்கள் என்கின்ற அந்தப் பெருமைமிக்கச் செய்தியினைத் தெரிவித்து. இதற்கு மேல் இப்பிரச்சினையை அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்பதைத் தலைவரவர்களே தங்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : சபாநாயகர் அவர்களே, 1924-ம் ஆண்டு அக்ரிமெண்ட்படியே, மைசூர் ஏதாவது புது அணைக்கட்டுகளைக் கட்ட வேண்டுமென்றால் நம்முடைய

கன்கரன்ஸை, நம்முடைய இணக்கத்தைக் கேட்டிருக்கவேண்டும். தும்பைவிட்டு வாலைப் பிடிப்பதுபோல், அன்றைக்கே இணக்கம் கொடுக்காமல் இருந்திருந்தால் கபினி எழும்பியிருக்காது. ஹேரங்கி, ஹேமாவதி அணைகளை அவர்கள் கட்டியிருக்க முடியாது. மத்திய அரசாங்கம் அவர்கள் திட்டத்திற்கு மறைமுகமாக உதவி செய்கிறதோ என்று பேசவேண்டிய அவசியமும் இருக்காது. அன்றைக்குத் தமிழ்நாடு அரசாங்கம் அவற்றிக்கு ஒத்துக்கொண்டிருக்காவிட்டால், இன்றைக்குத் தீங்கு செய்யப்படுவதற்கு மத்திய அரசாங்கம் வசதி செய்த கொடுக்கிறதோ என்று பேச வேண்டிய அவசியமில்லையே! இப்பொழுது போராட வேண்டியதில்லையே!

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் மறந்து போய் தன் கட்சியைக் குற்றம் சாட்டிக்கொண்டார்கள். இவைகளை 1957-லே ஆரம்பித்தார்கள், 1967-ல் அல்ல. நாம், 1967-ல் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறோம். 1967-லேயே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். போராட்டம் என்றால் அங்கே போய் குண்டு போட்டுவிடுவதா? அப்படி கிடையாது. பட்டுக்கோட்டை சீனிவாச ஐயர் அவர்கள் இந்த அவையிலேயிருந்தபொழுது (குறுக்கீடு) வெளியிலே பேசினார்கள் - படை எடுக்கலாம் என்றுகூடப் பேசினார்கள். ஆனால் நடக்கவில்லை. 1957-லே ஆரம்பிக்கப்பட்ட ஒன்று இது. நான் அதைக் குற்றமாகச் சொல்லவில்லை. நாம் எந்தக் கட்டத்திலும், எந்த இடத்திலும் தெரிவிக்க வேண்டிய ஆட்சேபணையை தெரிவிக்காமலில்லை.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் நாம் அங்கீகாரம் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். அப்படி ஏதாவது கன்சென்ட கொடுத்திருக்கிறோமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பலமுறையும் இந்த அவையிலே சொல்லியிருக்கிறோம். நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் கர்நாடக மக்களுடைய நலனும் பாதிக்கக்கூடாது என்று இந்த அரசின் சார்பிலே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அணைகள் கட்டுவதைப் பற்றி நமக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் போடும்போது, பழைய ஆயக்கட்டுக்களுக்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படக்கூடாது;

அதற்குப் போதுமான தண்ணீர் வேண்டும். அது போதுமான அளவு இருக்கின்ற வகையில் ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் போடவேண்டுமென்று சொன்னோம். ஹேமாவதி அணையைக் கட்ட அங்கீகாரம் கொடுக்கவில்லை. ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் போட்ட பிறகு, அதனைப் பார்த்தபிறகுதான் அங்கீகாரம் என்று நிபந்தனையின் அடிப்படையிலேதான் கொடுத்திருக்கிறோம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நம்முடைய முதலமைச்சரவர்கள் தன்னுடைய உரையில் நம்மை வாடவைத்து, கர்நாடகாவை வாழ வைக்க மத்திய அரசு மறைமுகமாக உதவி செய்கிறதோ என்று சொன்னார்கள். என்னுடைய கருத்தெல்லாம் நம்மை வாடவைத்து அவர்கள் வாழ முடியாது. அதுபற்றி முதலமைச்சரவர்களிடம் கடிதம்கூடக் கொடுத்திருக்கிறேன். இப்பொழுது இந்த அணைக்கட்டுகள் மூலமாகப் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் அங்கே முழுகிவிடக்கூடிய நிலைமையிருக்கின்றன. அதை எழுதி முதலமைச்சரிடத்திலே கொடுத்திருக்கிறோம். அங்கேயே அணைக்கட்டுகளுக்கு எதிர்ப்பு இருக்கிறது. ஆகவே, நம்மை வாடவைத்து அவர்கள் வாழ முடியாது. அதில் ரொம்பக் கஷ்டம் இருக்கிறது. இந்தக் கருத்துக்களை மத்திய அரசுக்குச் சொல்வதன்மூலமாக நம்முடைய கருத்து வலிவடையும். அதனை மத்திய அரசுக்குச் சொல்லியிருக்கிறார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இந்த கருத்தும் சொல்லப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்லாமல், விஸ்வேஸ்வரய்யா – கெனால் – வாய்க்கால் இருக்கிறது. அந்தக் கால்வாய் மூலமாகப் பயன்படுகிற ஆயக்கட்டுக்காரர்கள் ஹேமாவதி அணையை எதிர்க்கிறார்கள். அந்தக் கருத்தும் சொல்லப் பட்டிருக்கிறது. நான் முதலில் சொன்னதுபோல், கிருஷ்ணா நதி அவார்டிலே அவர்களுக்கு 500 டி.எம்.சி. கிடைக்கும்போது, அதை முதலிலே பயன்படுத்திக்கொள்ளட்டும், அதற்குப் பிறகு இதைப்பற்றி பேசலாம் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

உரை : 10 நாள் : 24.02.1975

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மேலவைத் தலைவரவர்களே, காவிரிப் பிரச்சினை குறித்து காலையிலே பேரவையிலே கூட ஒத்தி வைப்புத்தீர்மானம் கொண்டுவரப்பட்டு அது பற்றிய விளக்கங்களைப் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் நானும் அங்கே கொடுத்திருக்கின்றோம். மேலவையில் நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர்கள் கொண்டு வந்திருக்கின்ற ஒத்திவைப்புத்தீர்மானத்தின் அடிப்படையில் அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள் அனைத்துமே இந்த அரசுக்கு உடன்பாடான கருத்துக்களே அல்லாமல் வேறு அல்ல. இந்தப் பிரச்சினை 1968-ஆம் ஆண்டிலிருந்தே பேசப்பட்டு வருகின்ற பிரச்சினையாகும். அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பொதுப்பணித்துறைப் பொறுப்பினை நான் கொண்டிருந்த காலத்தில், டெல்லியிலே இந்தப் பிரச்சினை குறித்த பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பெற்றன. அதிலிருந்து இதுவரை பல்வேறு கட்டங்களில் இந்தப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று ஒவ்வொரு கட்டத்திலும் இது நல்லமுறையிலே முடிவுறும் என்று எதிர்பார்க்கப்பட்டு ஏதோ ஒரு காரணத்தால் பேச்சுவார்த்தை தோல்வியிலே முடிந்தது என்கிற செய்தியை நாடு பெறவேண்டிய சூழ்நிலைக்கு ஆளாயிற்று. குறிப்பாக இந்தப் பிரச்சினையில் தமிழ்நாடு அரசினுடைய நிலை மிகத்தெளிவானது. பல ஆண்டுக்காலமாக நாம் அனுபவித்து வருகின்ற காவிரித் தண்ணீருடைய பயனை இழந்துவிடுவதா என்பதுதான் மிக மிக முக்கியமான கேள்வியாக இருக்கின்றது. இந்தக்கேள்வி எழுகின்ற அதே சமயத்தில் கர்நாடக மக்கள் காவிரித்தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்ளவே கூடாது என்பது நம்முடைய வாதம் அல்ல. அந்த மாநிலத்து மக்களும் காவிரித்தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் புதிதாக ஆயக்கட்டுக்களை உருவாக்கி அதைப்பயன்படுத்துகிற

முயற்சிகளை மேற்கொள்ளுவதற்கும், ஏற்கெனவே இருக்கின்ற ஆயக்கட்டுகளைப் பாழாக விடுவதற்கும் இடையிலே உள்ள வேறுபாட்டை நாம் உணரவேண்டும். இந்தக் கருத்தை மையமாக வைத்துத்தான் கடந்த 6, 7 ஆண்டுக்காலமாக தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டு மக்களுடைய ஏகோபித்த குரலை மத்திய அரசின் முன் எதிரொலித்து வருகிறது. ஒவ்வொரு முறையும் நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி அவர்களுடைய அரிய ஆலோசனைகளைப் பெற்று அந்த அடிப்படையில்தான் தமிழக அரசு பேச்சு வார்த்தைகளை, காவிரி நீரைப் பொறுத்தவரையிலே நடத்தி வருகின்றது. அந்தப் பேச்சுவார்த்தைக் கட்டங்களில் முக்கியமான கட்டங்கள் இறுதியான இரண்டு கட்டங்கள் ஆகும். இப்போது நடைபெற்ற, டெல்லி பேச்சுவார்த்தைக் கூட்டத்திற்கு முன்பு நடைபெற்ற கூட்டத்தில் கொள்கையளவிலே பல பிரச்சினைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டன. ஆகவே அடுத்த கட்டத்தில் ஒப்பந்தம் நிறைவேறிவிடும் என்று அனைவரும் எதிர்பார்த்தோம். ஆனால் அந்தக் கூட்டத்திற்கும் இப்போது டெல்லியிலே நடைபெற்ற கூட்டத்திற்கும் இடையில் கர்நாடக மாநிலத்திலிருந்து கிளப்பப்பட்ட பிரச்சினைகள், எதிர்ப்புகள் இவைகளெல்லாம் டெல்லியிலே அண்மையிலே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, அனைவரும் சேர்ந்து அடையவிருந்த ஒரு நல்ல ஒப்பந்தத்திற்கு இடையூறாக மாறிவிட்டன. ஆகவே, அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இவ்வளவு முறைகள் நாம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டும்கூட உரிய பயன்கிடைக்காத காரணத்தால் நடுவர் முடிவுக்கு விட வேண்டியிருக்கிறது என்று முடிவு செய்யப்பட்டது. இன்றைக்கு மாறான முடிவு வந்ததும் கர்நாடக அமைச்சர்களிலே சிலபேர் உச்சநீதிமன்றத்திற்கு ஏற்கெனவே போய்விட்டார்கள். அது முடிந்துபோன விஷயம் என்று குறிப்பிட்டதாக திரு. சுவாமிநாதன் குறிப்பிட்டார்கள். உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று நாம் வழக்காடத்தேவையில்லை. பேசியே தீர்த்துக்கொள்ளலாம் என்று நம் மத்திய அரசு உறுதியளித்ததன் காரணமாக நாம் போகவில்லை. ஆனால் நாம் அதை அறவே கைவிட்டுவிடவில்லை. எந்த நேரத்திலும் மீண்டும் நாம் வழக்கை நடத்திக் கொள்ளலாம். அடியோடு விட்டுவிடவில்லை. நாம் அதிலிருந்து பின்வாங்கிவிடவில்லை.

அதற்கிடையிலே மத்திய அரசிடம் நாம் நீதியை எதிர்பார்க்கிறோம். நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்று கட்சி சார்பற்றமுறையில் தமிழக மக்கள் தங்களுடைய குரலை உயர்த்தியிருக்கின்றார்கள். அதற்கு மத்திய அரசு இணங்கி உடனடியாக நடுவர் தீர்ப்புக்கு விடும் என்று எதிர்பார்க்கிறோம். அதற்கிடையிலே பத்திரிகையிலே "பேச்சுவார்த்தைக்கு மீண்டும் இடம் இல்லையா? ஏன் அந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்தக்கூடாது? இதிலேயும் பிடிவாதம் பிடிக்கவேண்டுமா?" என்ற வகையிலே எல்லாம் செய்திகள் வருகின்றன. நாம் பேச்சுவார்த்தையே கூடாது, இனிமேல் பேசவே தயாராக இல்லை என்று சொல்லாவிட்டாலும், பேச்சுவார்த்தைகள் இனிமேல் பயன் அளிக்குமா என்கிற சந்தேகம்தான் நமக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஏனென்றால் 1968-ஆம் ஆண்டு முதல் நாம் கடந்த ஆறு ஆண்டு காலமாகப் பேச்சுவார்த்தை நடத்தி அதிலே வெற்றிபெற முடியவில்லை. அது மாத்திரம் அல்ல. 1924ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு மாறாக கபினித் தண்ணீர் குறைக்கப்பட்டது. தஞ்சை மாவட்டத்திலே பயிர்கள் காய்ந்து கொண்டிருக்கின்றன என்று எடுத்துச் சொல்லியும், மத்திய அரசு நம்முடைய தேவைகளை, குரலை அலட்சியப்படுத்துகின்ற அளவிலேதான் நடந்துகொண்டிருக் கின்றது. இன்றைக்கு விவசாயத்துறைக்குப் பொறுப்பேற்றிருக் கின்ற பெருமதிப்பிற்குரிய திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் தமிழ் நாட்டின்பால் அன்பில்லாதவர் என்று கூறிவிடமுடியாது. ஆனாலும் இன்றைக்கு அவரிடத்திலேதான் போய் நாம் அரிசி வேண்டுமென்று கேட்கிறோம். அதே நேரத்தில் இன்றைக்கு கபினித் தண்ணீர் தஞ்சை மாவட்டத்திற்கு விடப்பட்டு காய்ந்து கொண்டிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான ஏக்கரா நிலங்கள் பயன்பெறுமேயானால், அவரிடத்திலே நாம் கேட்கின்ற அரிசியிலே நாம் ஓரளவு குறைத்துக் கொள்ளவும் முடியும். இவைகளையெல்லாம் அவர்கள் எண்ணிப்பார்க்காமல் இல்லை. இவைகளையெல்லாம் நாம் சிந்திக்கும் பொழுதுதான், நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டதுபோல், தவிர்க்க முடியாத அரசியல் சூழ்நிலைகள் தலைகாட்டி விடுகின்றனவோ, அதற்கான தண்டனையை தமிழ்நாட்டு மக்கள் அனுபவிக்க வேண்டியிருக்கிறதோ என்று நாம் வேதனைப்பட வேண்டி யிருக்கிறது. கபினித் தண்ணீரைத்திறந்து விடுங்கள் என்று ஓர்

ஆணையை கர்நாடக அரசுக்கு மத்திய அரசு பிறப்பித்திருக் கலாம். அது நமக்கு உரிமையுடையது. 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு மாறாக இன்றைக்கு அது தேக்கி வைக்கப்பட்டிருக்கிறது. கபினி அணையோ, ஹேமாவதி அணையோ, வேறு அணைகளோ கட்டக்கூடாது என்பதல்ல நம்முடையவாதம். கர்நாடக மக்களிடத்திலே நாம் மனிதாபிமான முறையிலேதான் நடந்துகொள்கிறோம். அந்த மக்களும் வாழவேண்டும். அந்த மாநிலமும் வளமாக இருக்க வேண்டும் என்பதிலே ஐயமில்லை. தேசிய அளவிலே இப்படிப்பட்ட பிரச்சினையை அணுகவேண்டுமென்று உபதேசம் செய்யப் படுகிறது. ஆனால் கர்நாடகத்தைப் பொறுத்தவரையில், அவர் களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்ற கிருஷ்ணா நதி இருக்கிறது. அதிலேயிருந்து 500 டி.எம்.சி. அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அளவிற்கு, 'அவார்டு' வழங்கப்பட்டிருக்கிறது. அந்த 500 டி.எம்.சி. அவர்களுக்குப் போதாது என்று அவர்கள் வாதாடிக்கொண்டிருக்கிறார்கள். அந்த 500 டி.எம்.சி.யை அவர்கள் எப்போது வகைப்படுத்தி அதைப் பயன்படுத்தப் போகிறார்கள். அதற்கு எத்தனை ஆண்டுக் காலமாகும் என்பதெல்லாம் வேறு பிரச்சினை. நமக்கு இருப்பதோ ஒரே ஒரு காவிரிதான். காவிரியை நாம் ஆண்டாண்டு காலமாகப் பெருமளவுக்குப் பயன்படுத்தி, தமிழகத்தை இன்றைக்கு ஓரளவு வளமுள்ளதாக ஆக்கி வைத்திருக்கிறோம். இந்தச் சூழ்நிலையிலே காவிரியினுடைய பயனை நாம் பெற முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலையை வரவேற்பதற்கில்லை. இப்பொழுதும் மத்திய அரசோடு ஏன் பேசக்கூடாது என்று என்னைக் கேட்பவர்களுக்கு நான் காலையிலேகூட பேரவையிலே பதில் அளிக்கும்போது குறிப்பிட்டேன். 'நாங்கள் தயாராக இருக்கிறோம். எந்த வகையிலே பேசினால் வெற்றி கிடைக்கும், வெற்றி கிடைக்குமா என்ற நம்பிக்கை எங்களுக்கு ஏற்படவேண்டும். அந்த நம்பிக்கை ஏற்படுவதற்கு என்ன வழி? இப்பொழுது கர்நாடக மாநிலம் தேக்கி வைத்திருக்கின்ற கபினித் தண்ணீரை முதலில் திறந்து விடுவதற்கு மத்திய அரசு வழிவகை செய்ய வேண்டும். அப்படி வழிவகை செய்வதன் மூலம்தான் பேச்சுவார்த்தை நடத்தினால் ஏதாவது பலன் கிடைக்குமென்ற நம்பிக்கையை தமிழகம்

பெறமுடியும். இதை நான் நிபந்தனையாக விதிக்கவில்லை. எங்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதற்காகவாவது மத்திய அரசு இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்பதை நான் பேரவையிலேயே குறிப்பிட்டேன், மேலவையிலும் குறிப்பிடுகிறேன். இது மத்திய அரசின் காதுக்கு எட்டும் என்ற வகையிலும் இந்தச் சட்டமன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள், இங்கு மாத்திரமல்லாமல் பேரவையிலும் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் அரசியல் கட்சி சார்பற்ற முறையிலே தமிழ்நாட்டு மக்கள் அத்தனைபேருடைய ஏகோபித்த கருத்துக்களை என்கின்ற அளவில் மத்திய அரசு இதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று எடுத்துக் கூறுவதோடு நடுவர் தீர்ப்புக்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு செல்ல வேண்டுமென்கின்ற அந்த எண்ணத்திலேயிருந்து நான் சிறிதளவும் பின்வாங்கமாட்டேன் என்பதையும் இங்கே எடுத்துக்கூறி, இந்த அளவு பிறகு அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்ற கருத்தை, தலைவர் அவர்களே, தங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

உரை : 11 நாள்: 19.01.1990

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: 1924ஆம் ஆண்டு ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தி, 1974வது ஆண்டு வரை, 50 ஆண்டுக்காலம் அந்த ஒப்பந்தம் நீடிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, இன்றைக்கு ஆண்டு கொண்டிருக்கிற இந்த ஆட்சி, அன்றைய கால கட்டங்களிலே, 200 டி.எம்.சி. தண்ணீர்தான் விடுவேன் என்று கர்நாடக அரசு சொல்லிய நேரத்தில், அப்பொழுது வாதிட வேண்டிய இந்த ஆட்சி தமிழ்நாட்டிலே நெற்களஞ்சியம் என்று சொல்லப்படுகின்ற தஞ்சையிலே விளைநிலங்களில் எல்லாம், நெல் உற்பத்தியாகிய பகுதிகளுக்குத் தண்ணீர் பெறமுடியாமல், 1976-வது ஆண்டு மத்திய அமைச்சராக இருந்த ஜெகஜீவன்ராம் அவர்களுடைய தலைமையிலே, தமிழக முதல் அமைச்சரும், அதே போல் கர்நாடக முதல் அமைச்சரும் பேச்சுவார்த்தை நடத்தி, அந்த பேச்சுவார்த்தையின் அடிப்படையிலே, 400 டி.எம்.சி தண்ணீர் தமிழ்நாட்டுக்கு மேட்டூரிலே - காவிரியிலே விட வேண்டுமென்று ஒப்புதல் கேட்ட நேரத்தில் 100 டி.எம்.சி தான் நாங்கள் குறைக்கிறோம், அதுவும், தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற வாய்க்கால்களை நவீனமயமாக்கி சீரமைக்கிற நேரத்தில், 20 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, ஆண்டுக்கு 5 டி.எம்.சி. குறைத்து, படிப்படியாகக் குறைத்து 20 ஆண்டுகளில் 100டி.எம்.சி தண்ணீரை குறைத்து 300 டி.எம்.சி. தண்ணீர் அளிக்க ஒப்புதல் அளித்த பிறகு, தமிழ்நாட்டிலேயிருந்து அன்றைக்குப் பேச்சுவார்த்தை நடத்தச் சென்று முதல் அமைச்சர் அவர்கள், அன்றைக்கு ஒப்பந்தம் செய்யாத காரணத்தினால் இன்றைக்கு எண்ணிப் பார்க்கிறோம். இன்றைக்கு இங்கிருந்து அமைச்சர் செல்கிறார். கர்நாடக மாநில முதலமைச்சரைச் சந்திக்கச் செல்கிற நேரத்தில், கர்நாடக முதல் அமைச்சர் இருக்கிறாரா இல்லையா என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல். இங்கேயிருந்து கர்நாடக மாநிலத்திற்குச் சென்று

முதல் அமைச்சரும், அங்கே இல்லை, அமைச்சரும் அங்கே இல்லை என்று சொல்லி, அமைச்சர் திரும்பி வருகிற அவல நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். 1973-வது ஆண்டிலே நீங்கள் 100 டி.எம்.சி. யாவது தண்ணீர் பெற்றிருந்தால், இன்றைக்கு நெற்களஞ்சியம் என்று சொல்லப்படுகிற, நெல்லை உற்பத்தி செய்கிற.....

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே!, 300 டி.எம்.சி. தண்ணீர் தருவதாகவும், அதை ஒத்துக்கொள்ள முடியாது என்று ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போடாமல் வந்து விட்டதாகவும், மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார் எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு அப்படிப் பேசுகிறார் என்று எனக்குத் தெரியவில்லை. உண்மைக்குப் புறம்பான செய்தியை அவையிலே கூறி. மக்களைக் குழப்புவது நல்லதல்ல. நான் பலமுறை, எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போது பேசியிருக்கிறேன். காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், கட்சிச் சார்பில்லாமல் நாம் அதை அணுக வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பொழுது பேசியிருக்கிறேன். அப்போழுது அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதல் அமைச்சராக இருந்தபொழுது சொல்லியிருக்கிறேன். தி.மு.க. அரசு காவிரிப் பிரச்சினையில் எந்த நிலையை எடுத்ததோ, அதே நிலையைத்தான் அ.தி.மு.க.வும் எடுத்து இருக்கிறது. எனவே, அதைப் பாராட்டுகிறோம் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். எனவே, தவறான வாதங்களை வைக்கக் கூடாது. 1974-வது ஆண்டு காவிரி ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது என்ற ஒரு தவறான கருத்தை நாமே ஏற்றுக்கொள்ள முடியாது. அது கர்நாடக மாநிலத்தினுடைய வாதம். அதற்கு நாம் துணைபோகக் கூடாது. காலாவதி ஆகவில்லை. சர்ப்ளஸ் வாட்டரை எப்படிப் பகிர்ந்துகொள்வது என்றுதான் 1974-ஆம் ஆண்டு தீர்க்க வேண்டுமென்று 1924-வது ஆண்டு ஒப்பந்தம். அதற்கு மாறான கருத்துக்களைக் கூறுவது தமிழ்நாட்டுக்கு நாமே நம்மை அறியாமல் ஒரு தேவையற்ற ஆபத்தை உருவாக்குவதாக ஆகிவிடும்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர்

அவர்கள் கர்நாடக முதல் அமைச்சர் அங்கே இருக்கிறாரா என்பது கூடத் தெரியாமல் சென்று திரும்பி வந்திருக்கிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். பொதுப்பணித் துறை அமைச்சருக்குக் கிடைத்த தகவல், கர்நாடக முதல் அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றிருக்கிறார். மீண்டும் கர்நாடகத்திற்கு வர இருக்கிறார் என்ற தகவலின் அடிப்படையில்தான் அவர் சென்றார். ஆனால், கர்நாடக முதல் அமைச்சர் அவர்கள் அங்கேயிருந்து அப்படியே டெல்லிக்குச் சென்று விட்டார் என்ற செய்தி கிடைத்தது. அதனால் தான் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. கர்நாடக முதல் அமைச்சர் தான் தன்னுடைய திட்டத்தை மாற்றிக் கொண்டார் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு, எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இருக்கிற இடத்திற்கு எதிரிலே உறுப்பினர் உட்கார்ந்து இருக்கிற காரணத்தினாலே அவர்கள் பொதுப்பணித் துணை அமைச்சராகி விட்டார்களோ என்று தோன்றுகிறது. ஆனால் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சர் அல்ல என்பது எங்களுக்குத் தெரியும். பதில் சொல்ல வேண்டுமென்றால் இங்கே பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கலாம். அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கலாம்.

இங்கே முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் அடுத்த விஷயத்திற்கு போவதற்கு முன்னால் இப்படிப்பட்ட நிலைமையில் ஒரு பிரச்சினையைக் குழப்பி விட்டார்கள். மறுபடியும் இந்த நிலைமையை குழப்பிக்கொண்டு இறுதியாக கர்நாடகத்துக்காரர்களை தவறாக எடுத்துக்கொள்ளாத ஒரு நிலைமையை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில விளக்கங்களை இங்கே தந்தார்கள். 1976-ஆம்

ஆண்டு மத்திய அமைச்சராக இருந்த ஜெகஜீவன்ராம் அவர்கள் தலைமையில் தான் இரண்டு மாநில அரசுகளும் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றன. அப்போது என்ன பேச்சுவார்த்தை நடந்திருக்கிறது என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. நம்மைப் பொறுத்தவரையில் இங்கே இருக்கிற அனைத்துக் கட்சிகளையும் பொறுத்தவரையில் இன்றைக்கு எவ்வளவு தண்ணீரை நீங்கள் பெற்றுத் தருகிறீர்களோ...

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு 'சென்சிட்டிவ்' பிரச்சனை. அதனால்தான் நான் அடிக்கடி தலையிட வேண்டியதாக இருக்கிறது. நான் பதில் சொல்லும்போது நான்கு நாட்கள் கழித்துகூட சொல்லலாம். ஆனால் அதற்கிடையிலே உங்களுடைய பேச்சு பத்திரிகையில் வந்துவிடுமேயானால் அது கர்நாடக மாநிலத்திற்கு சாதகமாக ஆகிவிடும் என்பதால்தான் நான் குறுக்கிட விரும்புகிறேன். நீங்கள் பேசுகின்ற பேச்சு அவர்களுக்கு சாதகமாக ஆகிவிடக்கூடாது: தமிழ் நாட்டிற்குப் பாதகமாக ஆகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் குறுக்கிடுகிறேனே அல்லாமல் வேறு அல்ல. அப்போது ஒரு ஒப்பந்தம் வந்தது. 100 டி.எம்.சி. கிக்கனப்படுத்த-அதைக்கூட குறைத்துக் கொள்வது என்று குறிப்பிடக் கூடாது. 100 டி.ம்.சி தண்ணீரை சிக்கனப்படுத்த 'மார்டனைசேஷன்' மூலமாக தமிழ்நாட்டிலே 100 டி.எம்.சி. தண்ணீரை சிக்கனப்படுத்த ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, அந்த ஒப்பந்த வரைவு வந்தபோது சில 'டெக்கனிக்கல் டெர்ம்ஸ்' நமக்கு சரி வரவில்லை. எந்தஇடத்திலே இருந்து சீர் செய்வது, எங்கே இருந்து தண்ணீரை அளப்பது என்பதிலே அந்த ஒப்பந்தம் நமக்கு சரிவரவில்லை எனவே தான் கையெழுத்துப் போடாமல் வந்தோம். தமிழ்நாட்டின் நன்மைக்காகச் செய்யப்பட்ட காரியம் அது.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையிலே அதை விட்டுவிட்டு வேறு பிரச்சனைகளுக்கு நான் வருகிறேன். காரணம் முதலமைச்சர் அவர்களே சொல்லிவிட்டார்கள். தமிழ்நாட்டிற்குத் தேவையான தண்ணீரை பெற வேண்டியிருக்கிற காரணத்தால் பல்வேறு பிரச்சனைகளை ஆய்ந்து முடிவு

எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நல்ல முடிவுகளை அறிவிப்பதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்புத் தர என்றைக்கும் தயாராக இருக்கின்றன: நாங்கள் தயாராக இருக்கிறோம். இருந்தாலும் கூட இன்றைக்கு ஆளுநர் உரையிலே பல்வேறு பிரச்சனைகளை நாம் பேசிக்கொண்டிருக் கிறோம். அதே நேரத்தில் விவசாயிகளுக்கு ஏதாவது ஒரு திட்டத்தை ஆளுநர் உரையிலே அறிவித்திருக்கிறார்களா என்றால் இல்லை. அதுபற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை.

காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி வெளியே தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் குறித்து:

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்கு மிகவும் அக்கறையுள்ள, ஆனால் சிக்கலான காவிரி நீர்ப்பிரச்சினை சம்பந்தமாக அண்மையில் வெளியாகி இருக்கக்கூடிய இரு தகவல்கள் குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே விளக்கம் பெறுவதற்காக உங்கள் இசைவு பெற்று நான் எழுப்புகிறேன். 1924ஆம் ஆண்டில் ஏற்பட்ட காவிரி நீர் சம்பந்தமான ஒப்பந்தம் அன்றைய சென்னை-மைசூர் மாகாணங்களுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தம். அது 1956 ஆம் ஆண்டில் உருவாகிய கர்நாடக அரசைக் கட்டுப்படுத்தாது, எவ்வாறு கட்டுப்படுத்தும் என்கிற பொருள்பட கர்நாடக மாநில முதலமைச்சர் திரு.வீரேந்திரபட்டீல் பெங்களூரில் சனிக்கிழமையன்று ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். எந்த ஒரு ஒப்பந்தமும் அடுத்து ஒரு ஒப்பந்தமோ அல்லது தீர்ப்போ வராத வரையில் அதனுடைய காலக்கெடு முடிந்தாலும் அமலில் இருப்பதாகத்தான் கருதப்படும் என்ற பொருளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதே அவையில் முன்பு ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதற்கு மறுப்புத் தெரிவிப்பது என்பதுமிக ஆபத்தான, இப்போது நடைமுறையில் காவிரி நீர் கிடைக்கக்கூடியதைக் கூட கிடைக்காமல் செய்யக்கூடிய ஒன்று. அது பற்றிய கருத்தை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகக் கேளுங்கள். உரையாற்ற ஆரம்பிக்காதீர்கள்.

திரு. உ. ரா. வரதராசன் : அதேபோல் காவிரி நீர் சம்பந்தமாக உச்சநீதிமன்றத்திலே தொடரப்பட்ட வழக்கை திராவிட முறைனேற்றக் கழகத்தினுடைய கடந்த கால ஆட்சியில் இன்றைய முதல்வர் அவர்கள் வாபஸ் பெற்றார்கள். பின்னாலே ஹேமாவதி போன்ற அணைக்கட்டுகள் கட்டுகிறபோதும் உச்ச நீதிமன்றத்திலே தடை வாங்கத் தவறி விட்டார்கள் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தினுடைய இணைச் செயலாளர் திரு. எஸ்.டி.எஸ். அவர்கள் (குறுக்கீடு) கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். இதுசம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை நான் எதிர்பார்த்து அமைகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே. இரண்டு பிரச்சினைகளை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். ஒன்று கர்நாடக மாநில முதல்வர் திரு.வீரேந்திரபட்டீல் அவர்கள் அண்மையில் தெரிவித்த கருத்து பற்றியதாகும். இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு.செங்கோட்டையன் அவர்கள் அன்றைய தினம் பேசும்போது சொன்ன சில கருத்துக்களின் அடிப்படையில் நான் எடுத்து வைத்த கருத்தை திரு.வீரேந்திரபட்டீல் அவர்கள் மறுத்து இருக்கிறார்கள். நான் ஒன்றை இங்கே முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசியலுக்கு அப்பாற்பட்டு, கட்சி மாறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு நானும் திரு.வீரேந்திரபட்டீலும் நெருங்கிய நண்பர்கள். அந்த நட்பின் அடிப்படையில் கூட நான் அவரிடத்திலே காவிரிக்குத் தண்ணீர் விட வேண்டும் என்று கேட்டுக்கொண்டதுண்டு. அவரும் அந்த நட்பின் அடிப்படையில் உடனடியாக அதைப்பற்றிக் கவனிக்கிறேன் என்று சொன்னதும் உண்டு. இருந்தாலும் இங்கும் அங்கும் எழுகின்ற அரசியல் பிரச்சினைகள் காரணமாக அது சற்றுத் தடங்கலாக நிற்பதாக நான் உணர்கிறேன்.

அடுத்து இங்கே எடுத்து வைக்கப்பட்ட மிக முக்கியமான பிரச்சினை 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் இப்போது இருக்கிறதா, இல்லையா என்பதுதான். திரு.எஸ்.டி.எஸ். அவர்கள் கூட இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அந்த ஒப்பந்தம் காலாவதி ஆகிவிட்டது என்று அறிக்கை விடுத்திருந்தார்கள். உடனடியாக நானே அவரோடு தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு

இப்படி ஒரு தவறான கருத்தைத் தயவுசெய்து சொல்ல வேண்டாம் என்று சொன்னேன். சில பத்திரிகைகள்கூட அப்படித் தவறாகத் தலையங்கம் எழுதியபோது அந்தப் பத்திரிகையாசிரியரோடு தொடர்பு கொண்டு ஒப்பந்தத்தைப் படித்துக்காட்டி 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் எந்த வகையிலும் காலாவதியாகவில்லை என்பதை அவருக்கு எடுத்துக்கூறி இருக்கிறேன். காலாவதியாகிவிட்டது என்று சொல்வது நமக்கே கூட பாதகமாக முடியக்கூடிய ஒன்று. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் என்ன இருக்கிறது என்றால் 50 ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது 1974ஆம் ஆண்டு "சர்ப்ளஸ் வாட்டர்" என்று சொல்லப்படுகிற காவிரியில் வரக்கூடிய உபரித் தண்ணீரை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பது பற்றிப் பேசி முடித்துக் கொள்ளலாம்; அந்தப் பேச்சுவார்த்தையிலே சுமூகமான ஒரு முடிவு ஏற்படாவிட்டால் பிறகு வேறு வழியே இல்லாத சூழ்நிலையில் "ட்ரிபியூனல்" அதாவது நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்று ஒப்பந்தத்தில் இருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் பேசிப் பேசிப் பார்த்து, முடியாத சூழ்நிலையில் நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று இன்று தமிழக அரசு-தமிழகத்திலே உள்ள எல்லாக் கட்சியினுடைய தலைவர்களும்-கட்சிகள் அனைத்தும் வலியுறுத்திக் கொண்டிருப்பதை நாம் அனைவரும் மிக நன்றாக அறிவோம். 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் காலாவதியாகவில்லை என்பதற்காக நான் சொன்ன காரணங்களை மறுத்து திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் சொல்லியிருக்கிற காரணம் 1924ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஆனபோது இருந்த மாநிலங்கள் வேறு; இன்றைக்கு இருக்கிற மாநிலங்கள் வேறு. அன்றைக்கு தமிழ்நாடு என்று இல்லை. சென்னை இராஜதானி என்று இருந்தது. ஆகவே, அதிலே கர்நாடகத்திலே சில பகுதிகள், கேரளத்திலே சில பகுதிகள் எல்லாம் இருந்தன. எனவே, அந்த ஒப்பந்தம் செல்லாது என்று திரு.வீரேந்திரபட்டீல் அவர்கள் சொல்கின்றார்கள்.

இரண்டு அரசுகளுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் ஏற்படுவது என்பது நிர்வாகத்தினுடைய அடிப்படையிலேயே தவிர நிலப்பரப்பின் அடிப்படையிலே அல்ல. எனவே, நிலப்பரப்பைக் காரணமாக வைத்துக் கொண்டு அப்போது இருந்த நிலம் இப்போது இல்லை. அவைகள் எல்லாம் போய்விட்டன.

அவைகள் எல்லாம் வேறு மாநிலத்திலே சேர்ந்துவிட்டன. ஆகவே, ஒப்பந்தம் செல்லாது என்று குறிப்பிட இயலாது. நிலப்பரப்பு என்று வாதத்திற்காக எடுத்துக்கொண்டாலும் கூட, ஒப்பந்தம் ஆகும்போது இருந்த நிலம் தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு மாவட்டத்தில் சில பகுதிகள் என்கிற காவேரி டெல்ட்டாதான். காவிரி நதி தீரம், காவிரி டெல்ட்டா அப்படியே இருக்கிறது. அது எங்கும் போய்விடவில்லை. நாம் இப்போது அதற்குரிய தண்ணீருக்காகத்தான் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் போடப்பட்டு அதைத்தான் இப்போது வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம். அது நீடிப்பதாக நாம் வாதித்துக் கொண்டிருக்கிறோம். அந்த வாதம் தவறான வாதம் அல்ல. ஏனென்றால் ஒப்பந்தத்திலே உபரித் தண்ணீரை பற்றித்தான் பிரச்சினை என்பதால் வாதாடிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் இப்போதும் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்று சொல்கின்றார்கள்.

நடுவர் தீர்ப்புக்கு நாங்கள் விடுகின்ற காரணத்தினால் இடையிலே பேசவே கூடாது என்று பொருள் அல்ல. நடுவர் தீர்ப்புக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டபோதுகூட நாம் பேசித் தீர்த்துக் கொண்டு, ஒரு சுமூகமாகப் போய், நாமும் அவர்களும் சென்று நடுவர் தீர்ப்புக்கு முன்னால் நின்று நாங்கள் பேசித் தீர்த்துக் கொண்டு விட்டோம். எனவே, நடுவர் தீர்ப்புத் தேவையில்லை என்று சொன்னால், இல்லை, இல்லை, நீங்கள் பேசித் தீர்த்தாலும முடியாது, நான் தீர்ப்பு அளித்துத்தான் தீருவேன் என்று எந்த நடுவரும் சொல்லமாட்டார். எத்தனையோ வழக்குகள் இப்போதுகூட கோர்ட்டுக்குப் போனபிறகு, வழக்கிலே சம்பந்தப் பட்டவர்கள் அவர்களுக்குள்ளே சமரசம் செய்துகொண்டு கோர்ட்டுக்குப் போய் நாங்கள் சமரசமாக ஆகிவிட்டோம் என்று சொல்லி வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொள்வதுண்டு. அதுபோல செய்துகொள்ள வழி இருக்கிறது.

அ. தி. மு. க. இணைப்பொதுச்செயலாளர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் சொன்னதாக திரு.வரதராசன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே ஹேமாவதி போன்ற சில இடங்களிலே அணை கட்டுகின்றபோது, தமிழக அரசு அதற்கு ஸ்டே கேட்டு வாங்கவில்லை என்று சொன்னார்கள் என்றார்கள். அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்ததால், இங்கே அரசின் சார்பிலே செய்யப்பட்டதை, திரு.எஸ்.டி.சோமசுந்தரம்

அவர்கள் மறந்திருக்கலாம். அவருக்குக் கவனத்திற்கு வராமல் இருக்கக்கூடும். ஹேமாவதியில் அணை கட்டுவதைத் தடுக்க ஸ்டே நாம் கேட்டோம். ஹேமாவதியில் அணை கட்டுவதற்கு ஸ்டே கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். ஆனால், சுப்ரீம் கோர்ட்டில் அதற்கு ஸ்டே கொடுக்கவில்லை. அதுதான் உண்மையே தவிர, நாம் ஸ்டே கேட்காமல் இல்லை. நாம் ஸ்டே கேட்டோம். ஆனால், சுப்ரீம் கோர்ட் ஸ்டே கொடுக்கவில்லை. பிறகுதான் வழக்கை வாபஸ் வாங்கினோம். எல்லாக் கட்சிகளுக்கும் அறிவித்துவிட்டுதான் வாபஸ் வாங்கினோம். எஸ்.டி.சோமசுந்தரம் சொல்லியிருப்பது தவறு. அனைத்துக் கட்சிக் கூட்டம் பலமுறைகள் கூட்டப்பட்டு இருக்கின்றது. அதோடு மட்டுமல்ல, டெல்லிக்குச் செல்வதற்கு முன்னாலேகூட எல்லாக் கட்சிகளையும் கலந்துகொண்டுதான் டெல்லிக்குச் சென்றிருக்கிறேன். இந்தப் பிரச்சினை பற்றி பேசிவிட்டு வந்த பிறகு, அங்கே டெல்லியிலே அவர்களிடம் என்ன என்ன பேசப்பட்டது என்பதைப் பற்றி சொல்லியிருக்கிறேன். முன்னாள் முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் திரு.காமராசர் அவர்களிடம் கலந்துகொண்டு பேசியிருக்கிறேன். பின்னர் என்னென்ன நடந்தது, என்னென்ன பேசவேண்டும் என்று கலந்து பேசியிருக்கிறேன். அதேபோல பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்களிடமும் கலந்து கொண்டுதான் போவேன். திரும்பி வந்து அங்கு நடந்தது என்ன என்று சொல்லிடுவேன். இங்கு எல்லோருடைய கருத்தையும் அறிந்த பிறகுதான் செல்வேன். திருமதி இந்திராகாந்தி அவர்கள் பேசும்போது. நீங்கள் வழக்கு போட்டிருக்கின்றீர்களே, அப்படியிருக்கும்போது பேசமுடியாது, அந்த வழக்கை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னார். வாபஸ் வாங்கினோம். அது மட்டுமல்ல அந்த வழக்கை வாபஸ் வாங்கும்போது liberty to file a fresh suit, if necessary on the same cause of action என்ற நிபந்தனையோடுதான் வழக்கை வாபஸ் வாங்கியிருக்கிறோம். கடந்த பத்து ஆண்டுகளாக வழக்குப்போட யாரும் தடுக்கவில்லை. காங்கிரஸ் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, சி. பி. ஐ., முஸ்லீம் லீக் ஆகிய அனைவரையும் இந்தப் பிரச்சினையில் அணுகி ஒன்றாகச் செய்யவேண்டும் என்று மீண்டும் கூறி அமைகிறேன்.

திரு.எஸ்.ஆர்.இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே கட்சிப் பிரச்சினை என்று வர வேண்டாம். இதிலே காவிரிப் பிரச்சினை என்று வருகின்றநேரத்தில் தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் அவர்கள் எப்படி பாதிக்கப்படுகிறாரோ அதே போலத்தான் அந்த மாவட்டத்தி லேயே பிறந்து வளர்ந்த காரணத்தினால் நானும் பாதிக்கப்படு கிறேன். ஒவ்வொரு நிமிடமும் எதிர்பார்க்கிறோம். தண்ணீர் வருவது தாமதப்படுத்தப்படுமேயானால் தஞ்சை மாவட்டம் பாதிக்கப்படும். அதன் மூலமாக தமிழகம் எந்த அளவுக்கு பாதிக்கப்படுகிறது என்பதையும் நாம் நிச்சயமாக உணர வேண்டும். இன்றைக்கும் தண்ணீர் வருமா, வராதா என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நமக்குத் தண்ணீர் வரவேண்டும். தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற பயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற நீர்ப்பாசன வசதிகள் நன்றாக இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

ஆனால் இந்தப் பிரச்சினை வருகிறபோது திடீரென்று இதனை அரசியல் பிரச்சினையாக்கி, எங்களுடைய கட்சியினுடைய இணைப் பொதுச் செயலாளர் திரு.எஸ்.டி.எஸ். சொன்னதை மறுத்துச் சொல்லி அரசியல் பிரச்சினையாக இதனை இந்த மன்றத்திலே ஆக்க வேண்டாமென்று தயவுசெய்து அவர்களுக்கு சொல்கிறேன். நான் இந்த மன்றத்திற்குத் தெரிவிப்பதெல்லாம், திரு. எஸ். டி. எஸ். அவர்களும் தஞ்சை மாவட்டத்துக்காரர்தான். அதுமட்டுமல்ல, இந்தப் பிரச்சினையில் ஆரம்பக்காலத்திலிருந்து, தி.மு.க. ஆட்சிக் காலத்திலிருந்து அவர் எந்த அளவுக்கு உணர்ச்சிப்பூர்வமாக கலந்துகொண்டவர் என்பது என்னைவிட அனுபவம் வாய்ந்த நம்முடைய முதல்வர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அவர்கள் பேசியதை வைத்துக் குழப்பவேண்டாம் அனைத்துக் கட்சிகளையும் கேட்கவில்லை என்ற குற்றச்சாட்டை அன்றில் இருந்தே சொல்லிக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சிகளையும் கேட்டுத்தான் வழக்கு வாபஸ் பெறப்பட்டது, அதுமாத்திரமல்ல, திருமதி. இந்திரா காந்தி அவர்கள் சொன்ன வாசகங்களை கேபினட்டில் வைத்து எல்லோருடைய அனுமதியையும் கேட்ட பிறகுதான் அந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது.

உரை : 12 நாள் : 24.01.1990

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினை குறித்து நம்முடைய திரு.தீட்சிதர் அவர்கள் கூட இன்று காலையில் விளக்கமாகப் பேசினார்கள். அதைப்பற்றி சில ஆதாரபூர்வமான உண்மைகளை இந்த மாமன்றத்திலே வைக்க விரும்புகிறேன். வழக்குகளை, அதாவது காவிரிப் பிரச்சினையிலே தமிழ் நாட்டினுடைய உரிமையை மையப்படுத்தி நாம் தொடர்ந்திருந்த வழக்குகளை எந்தக் கட்சியையும் கேட்டுக்கொள்ளாமல் தமிழ்நாடு முதலமைச்சர் தானாக முன்வந்து அன்றைக்குத் திரும்பப் பெற்றுவிட்டார் என்கின்ற ஒரு குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. இங்கே அவையிலே பேசப்பட்ட, எடுத்து வைக்கப்பட்ட உண்மையான ஆதாரங்களை மறுத்து, ஏதோ வெளியிலே பத்திரிகைகளிலே புழுதி வாரித் தூற்றிவிட்டால்- அதை வெளியிடுவதற்கும் சில பத்திரிகைகள் இருக்கின்ற காரணத்தால், அவர்களே அந்தப் பத்திரிகைக்காரர்களே இதை ஆராயாமல் இது எப்படி உண்மையாக இருக்க முடியும், எது உண்மையான ஆதாரம், எது போலியான ஆதாரம் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் சில பத்திரிகைக்காரர்கள் அதைப் பெரிய அளவிலே வெளியிடுவதற்குத் தயாராக இருக்கிற காரணத்தால் அப்படி வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில் 7-5-1972-லே இந்த வழக்குகளை வாபஸ் பெற்றுவிட்டோம். எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்து ஆலோசிக்காமலே வாபஸ் பெற்று விட்டோம் என்றும் இன்னொரு குற்றச்சாட்டாக ஹேமாவதி, கபினி, ஹாரங்கி நதிகளில் கட்டப்படும் அணைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு முன்பு இருந்த கழக அரசு முன் வரவில்லை என்கின்ற மற்றொரு குற்றச்சாட்டையும் சொல்லி தமிழ்நாட்டில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு திராவிட

முன்னேற்றக் கழக அரசு மீது வெறுப்பு ஏற்படுத்த பெருத்த முயற்சி செய்யப்படுகிறது. அதைத்தான் அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். 20 சதவீத மக்களை, இன்னமும் இவற்றை எல்லாம் நம்பிக்கொண்டு இருக்கிற மக்களைத் திருத்தி அவர்களுடைய விழிகளைத் திறக்க நாம் என்ன செய்யப் போகிறோம் என்று கேட்டார்கள். இந்த அரசு மாத்திரமல்ல அரசுக்கு அரசை நடத்துகின்ற ஆளும் கட்சிக்குத் தோழமை கட்சிகளாக இருக்கிற நாங்களும் உங்களோடு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள். இது போன்ற புனைச் சுருட்டுகளால் உண்மைக்கு மாறான கருத்துக்களால், செய்திகளால் நாட்டு மக்களுடைய எண்ணத்தைத் திசை திருப்புகின்றவர்களை அடையாளம் காட்டுகின்ற முயற்சியிலே நாம் அனைவரும் தொடர்ந்து ஈடுபட்டு ஆகவேண்டும். இல்லாவிட்டால் எவ்வளவு பெரிய உண்மைக்குச் சற்றும் பொருந்தாத ஒரு செய்தி சொல்லப்பட்டு இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துவைக்கின்ற ஆதாரங்கள் மூலமாக நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

21-5-1972 அன்றைய தினம் இந்திராகாந்தி அம்மையார் சென்னை வந்தார்கள். அவர்களிடத்தில் நான் காவிரிப் பிரச்சினை குறித்து விரிவாகப் பேசினேன். அதைப் பற்றி பெங்களூரிலிருந்து வெளியாகின்ற டெக்கான் ஹெரால்டு என்ற பத்திரிகையிலே பின்வருமாறு செய்தி வந்தது. "Prime Minister Indra Gandhi said today that inter-State disputes at river waters should be thrashed out by the Chief Ministers concerned. It is much easier that way. If there is anything I can do, I will certainly help, she told the pressman after Tamil Nadu Chief Minister Karunanidhi had met her. இந்த செய்தி டெக்கான் ஹெரால்டு பத்திரிகையிலே அப்போது வந்து இருக்கிறது.

அப்படிச் சந்தித்துப் பேசியபொழுதுதான் அவர்கள் என்னிடத்திலே சொன்னார்கள். வழக்கு இருக்கும்போது பேசுவது என்பது சற்றுச் சிரமமான காரியம். இருதரப்பிலும் எரிச்சல் ஊட்டக்கூடிய நிலைமையிலே பேச்சுவார்த்தை அமைய வேண்டாம். எனவே அந்த வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொள்கின்ற முயற்சியிலே ஈடுபடுவது நல்லது என்று

என்னிடத்திலே சொன்னார். மீண்டும் முதலமைச்சர்களை அழைத்து வைத்துப் பேச அது வசதியாக இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்டதையொட்டி 29-5-1972-ல் மூன்று மாநில முதல்வர்கள் தமிழகம், கேரளம், கர்நாடகம் ஆகிய 3 மாநில முதலமைச்சர்களுடைய கூட்டத்தை அன்றைக்கு இருந்த மத்திய அமைச்சர், நீர்ப்பாசனத் தறை அமைச்சர் திரு.கே.எல்.ராவ் அவர்கள் கூட்டினார்கள்.

29 ஆம் தேதி டில்லியிலே கூட்டம் என்றதும் 27-5-1972 அன்று சென்னை தலைமைச் செயல்கத்திலே உள்ள கேபினட் அறையில் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டம் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில் யார், யார் கலந்து கொண்டார்கள் என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன். திருவாளர்கள் ஆர்.பொன்னப்ப நாடார், திருப்பூர் மொய்தீன். ஆறுமுகச்சாமி. ஏ.ஆர். மாரிமுத்து, எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சி, ஏ.ஆர்.பெருமாள், ஆர்.சக்திமோகன், கே.டி.கே. தங்கமணி, கே.ராஜாராம், ஏ.ஆர்.தாமோதரன், டாக்டர் ஹெச்.வி.ஹாண்டே, டி.கே.சண்முகம், கெ.எஸ்.அப்துல்வகாப், சிலம்புச் செல்வர் ம.பொ.சி.- இவர்கள் அந்தக் கூட்டத்திலும் கலந்து கொண்டார்கள்; அதற்கு அடுத்து நான் டில்லிக்குச் சென்று திரும்பிய பிறகு 4-6-1972-ல் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் அவர்கள் எல்லாம் கலந்துகொண்டார்கள். அப்போது அந்தக் கூட்டத்தில் பிரதமர் அவர்கள், பேச்சுவார்த்தை மூலமே பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளலாம் என்றும், அதற்கு முன்னர் வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொள்வது நல்லது என்றும் தெரிவித்த கருத்து விளக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதுதான் அந்தக் கூட்டத்தினுடைய 'மினிட்ஸ்'.

அவர்களுடைய கருத்தை ஆராய்ந்த பிறகு 7-7-1972 அன்று ஏற்கனவே உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு எண் 1/71ஐத் திரும்பப் பெற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது, அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்குப் பிறகு, அந்த அடிப்படையிலே 28-8-1982 அன்று உச்ச நீதிமன்றத்திலே மனு விண்ணப்பிக்கப்பட்டு, தமிழக அரசு தொடர்ந்த வழக்கைத் திரும்பப்பெற அனுமதி வழங்கப்பட்டதோடு, தேவைப்பட்டால்

மீண்டும் புது வழக்குத் தொடர உரிமை உண்டு என்ற அடிப்படையில்தான் ஆணை பிறப்பிக்கப்பட்டது. எனவே, 7-5-1972-லே வழக்குகள் வாபஸ் பெற்றதாகவெளியிலே சொல்லப்படுகிற கருத்தும் தவறு. அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசாமல் இந்தக் காரியம் நடைபெற்றது என்று சொல்வதும் தவறு. அதோடு ஸ்டே வாங்கவில்லையென்று சொல்லப்படுகின்ற கருத்தும் மிகமிகத் தவறு.

4-8-1971-ல் காவிரிப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைக்குமாறு மத்திய அரசுக்கு ஆணை பிறப்பிக்க உச்ச நீதி மன்றத்திலே வழக்குத் தொடர்ந்தபொழுது அந்த வழக்கிலே தீர்ப்பளிக்கும் வரையிலும் மேலும் நடுவர் மன்றம் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரையிலும் கர்நாடகத்திலே கட்டப்பட்டு வரும் ஹேமாவதி, கபினி அணை, ஹாரங்கி அணை, ஸ்வர்ணவதி அணை மற்றும் காவிரியில் மற்ற கிளை நதிகளில் கட்டப்பட்டு வருகிற அணைகளின் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு செயல்படுத்தாவண்ணம் தடை செய்யக்கோரி ஆணை பிறப்பிக்குமாறு ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதனை உச்ச நீதிமன்றம் 25-10-1971 அன்று பரிசீலித்து அந்தக் கோரிக்கையை நிராகரித்து விட்டது. எனவே, நாம் ஸ்டே கேட்டதும் உண்மை; அந்த ஸ்டே தர முடியாது என்று உச்ச நீதிமன்றம் மறுத்து விட்டதும் உண்மை. அந்த உச்ச நீதி மன்றத்திலே அன்றைக்கு நீதிபதிகளாக இருந்து அந்த வழக்கை விசாரித்தவர்கள் Justice J.M.Shelat, Justice J.D.Dua, Justice S.C.Roy, Justice H.R.Khanna, Justice G.K.Mitter இவர்கள் தான் அந்த வழக்கை விசாரித்தவர்கள். கடைசியாக, Upon persuing the papers and upon hearing, the court dismissed the Application , என்ற வகையிலே அன்றைக்கு நாம் கேட்ட ஸ்டே நிராகரிக்கப்பட்டுவிட்டது. அவற்றையெல்லாம் மறைத்துவிட்டு ஏதோ 7 ஆண்டுக் காலம் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் காவிரிப் பிரச்சினை பேசப்படவில்லையென்று கூறுகின்றவர்கள் 10 ஆண்டுக்காலமாக என்ன செய்து

கொண்டிருந்தார்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. வழக்கைத் திரும்பப் பெறும்பொழுதே இதே பிரச்சினைக்காக மீண்டும் வழக்கைத் தொடரலாம் என்கிற அந்த நிபந்தனையோடுதான் வழக்குத் திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. ஆனால் 10 ஆண்டுக் காலத்தில் எந்த முயற்சியும் செய்யப்பட வில்லையா அல்லது செய்து கடந்த காலத்திலே நடைபெற்ற அதே பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சிதான் விளைவாக இருந்ததா என்பதை யெல்லாம் நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

நான் இதை ஒரு அரசியல் பிரச்சினையாக்க அன்றும் சரி, இன்றும் சரி, என்றைக்கும் விரும்பவில்லை. ஆனால் இன்றைக்குக் கூட பத்திரிகையிலே பார்த்தேன், கர்நாடக சட்டசபையில் நாம் கேட்ட தண்ணீரை அளிக்க இயலாது என்று திட்டவட்டமாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். 30 டி.எம்.சி. கேட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். 30 டி.எம்.சி. கேட்டு, அவர்கள் தரத் தயங்கிய பிறகு, அந்த 30 டி.எம்.சி. வேண்டுமென்று வலியுறுத்தி முதல் அமைச்சர் திரு.வீரேந்திர பட்டீலோடு இரண்டுமுறை தொலைபேசியிலே தொடர்பு கொண்டு பேசினேன். அவர் தருகிறேன் என்று சொன்னார். பிறகு, பொதுப்பணித்துறை அமைச்சரை அனுப்பி வைத்தேன். பொதுப்பணித்துறை அமைச்சர். அந்த மாநிலத்திலே முதல் அமைச்சர் இருப்பார், அவர் மாலையிலே பெங்களூர் வருவார் என்ற அந்த நம்பிக்கையோடு அங்கே சென்றார். ஆனால் அந்த மாநில முதல் அமைச்சர் பெங்களூருக்குத் திரும்பாமல் டெல்லிக்குப் போய் விட்டார். டெல்லியிலும் விடவில்லை; அங்கே இருக்கிற மத்திய அமைச்சர் திரு.மாறனிடம் சொல்லி, திரு.வீரேந்திர பட்டீலோடு தொடர்பு கொள்ளச் சொன்னேன். அவரும் தொடர்பு கொண்டு பேசினார். அங்கிருந்து திரு.வீரேந்திர பட்டீல் சொன்னார், உங்கள் பொதுப் பணித்துறை அமைச்சரை மீண்டும் பெங்களூருக்கு அனுப்பி வையுங்கள் பேசுகிறேன் என்று. பொதுப்பணித்துறை அமைச்சர் பெங்களூர் சென்று அங்குள்ள நீர்ப்பாசனத்துறை அமைச்சரோடு பேசினார், அதிகாரிகளோடு பேசினார்; அன்று மாலையிலே முதல் அமைச்சர் திரு. வீரேந்திர பட்டீலோடு பேசினார். எங்களால் இயன்றதைச் செய்கிறோம், உங்கள் முதல் அமைச்சரிடம் சொல்லுங்கள், நம்பிக்கையோடு இருக்குமாறு என்று சொல்லி

அனுப்பினார்கள். அதற்குப் பிறகு, இங்குள்ள கஷ்டத்தை அவர்களுக்குப் புரிய வைத்து, 15டி.எம்.சி. யாவது வழங்குங்கள் என்று நாம் கேட்டு கடிதம் எழுதினோம். 15 டி.எம்.சி. வழங்குவதைப் பற்றி யோசிக்கிறோம் என்று அங்கிருந்த பொதுப் பணி அமைச்சர்-கர்நாடகத்துப் பொதுப் பணித்துறை அமைச்சர் பேசியதாகச் செய்தி வந்தது. நேற்றைய தினம் சட்டசபையிலே சொல்லியிருக்கிறார்கள், 30டி.எம்.சி. தர இயலாது என்று. பேசித் தீர்க்கலாம் என்று சொல்கிறார்களே, நாம் இன்றைக்கு வறண்டு போயிருக்கிற அல்லது இன்னும் சில நாளில் வறண்டு விடக்கூடிய அல்லது வாடி உலர்ந்து விடக்கூடிய பயிர்களைக்காட்டி, தஞ்சை, திருச்சி போன்ற காவிரி நதித் தீரத்திலே வாழ்கின்ற தமிழக விவசாயிகளுடைய வயிற்றிலே அடிக்காதீர்கள் என்று இறைஞ்சிக் கேட்கின்ற இந்த நேரத்திலே கூட ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக 10 டி.எம்.சி. யோ, 15டி.எம்.சி. யோ வழங்குவதற்குத் தயாராக இல்லாதவர்களிடத்தில் பேசி என்னபயன் விளையும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

கடந்த காலத்திலே ஜனதா தள ஆட்சியுடைய தலைவர், முதலமைச்சர் திரு.பொம்மை அவர்கள் இங்கே வந்தபோது, ஒரு பொதுக் கூட்டத்திலேதான், இந்த அமைச்சரவைக்கு நடைபெற்ற வாழ்த்துக் கூட்டத்தில், காவேரியிலிருந்து 5டி.எம்.சி. தண்ணீரை அவசரமாகத் தரவேண்டுமென்று கேட்டபோது அவர் அந்தக் கூட்டத்திலேயே அறிவித்தார். அடுத்த ஒன்றிரண்டு வாரங்களில் அந்த 5 டி.எம்.சி. தண்ணீரை ஜனதா தளக் கட்சியினுடைய முதலமைச்சர் நண்பர் திரு.பொம்மை அவர்கள் உடனடியாக தமிழ்நாட்டிற்கு வழங்கினார்கள்.

வேடிக்கை என்னவென்றால். அதற்கு முன்பு கவர்னர் ஆட்சியிலும் 5டி.எம்.சி. தண்ணீர் தரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நண்பர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது அங்கிருந்து தண்ணீர் தரும்போதெல்லாம் அதற்கு மாற்றாக இங்கிருந்து மின்சாரம் தரப்பட்டிருக்கிறது. அப்படித் தரப்பட்ட மின்சாரத்திற்கு பரிமாற்றமாக ஆகிவிடக் கூடாது என்பதற்காக அதற்கு ஓரளவு கட்டணமும் கேட்கப்பட்டிருக்கிறது. இது எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது

நடைபெற்றது. இந்தக் கணக்கை எல்லாம் இப்போது திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் நமக்கு எழுதி, அந்தப் பழைய பாக்கி எல்லாம் இருக்கிறது, அதை எல்லாம் கொடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள்.

அதிலே வேடிக்கை என்னவென்றால், இப்படி ஒரு பரிவர்த்தனை இல்லாமலே திரு.பொம்மை அவர்கள் 5டி.எம்.சி. தண்ணீர் கொடுத்தாரே, அதற்கும், அவர்கள் கேட்காத பரிவர்த் தனையை அதிலே நுழைத்து, அதற்கும் நீங்கள் மின்சாரம் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்த நிபந்தனையைப் போட்டு திரு. பொம்மை அவர்கள் தண்ணீர் தரவில்லை. ஆனாலும் இவர்கள் நிபந்தனையை வலுவிலே புகுத்தி, அதையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். நாம் கேட்ட தண்ணீரைப்பற்றி எந்தவிதமான பதிலும் கிடையாது. திரு.வீரேந்திர பட்டீலைப் பொறுத்தவரை நானும் அவரை மிக நன்றாக உணர்ந்தவன்; அவருக்கும் என்னை மிக நன்றாகத் தெரியும். இருவரும் நெருங்கிய நண்பர்கள். ஆனால் என்ன காரணத்தாலோ, எப்படி தமிழ்நாட்டிற்கு அரிசி வழங்கக்கூடாது என்று மத்திய அரசு அன்றைக்கு முடிவு எடுத்ததோ. அன்றைக்குத் தமிழக மக்களுடைய வயிற்றிலே அடித்ததோ, அதைப்போல தி.மு.க. ஆட்சி இருக்கிற காரணத்தால் தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு மாவட்டங்களிலே இருக்கிற விவசாயிகளுடைய வயிற்றிலும் அடிக்கலாம் என்று அவர்களுக்கு யாராவது அரிசி வழங்காதவர்கள் இப்போது இந்த அறிவுரையை வழங்கி இருப்பார்களோ என்று நான் எண்ணிட வேண்டிய கட்டாயத்திலே இருக்கிறேன்.

ஒரு மனிதாபிமானம் கூட இல்லாமல், மனிதநேய உணர்வு கூட இல்லாமல் தஞ்சையிலே வாடுகின்ற, திருச்சியிலே வாடுகின்ற, தென்னாற்காடு மாவட்டத்திலே வாடுகின்ற விவசாயிகளுக்கு நாம் பலமுறை கேட்டும் கூட-இன்னும் கூடச் சொல்கிறேன். மூன்று நாட்களாக நான் தொலைபேசியிலே அவர்களோடு தொடர்பு கொள்ள முயலுகிறேன். ஆனால் தவிர்த்துக் கொண்டே இருக்கிறார்கள், அவர்களால் பேச முடியவில்லை என்றால் எவ்வளவு பெரிய அரசியல் தாக்கம் இதிலே விளையாடுகிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம்.

சில பேர் கேட்கிறார்கள், முதலமைச்சர் ஏன் அங்கே போகக் கூடாது என்று. அங்கே போனால் சட்டசபையை விட்டு விட்டு எங்கே போனார் என்று கேட்பார்கள். எதையும் பேசக் கூடிய அரசியல்வாதிகள் இதையும் பேசுவார்கள். எனவேதான் நான் இந்த அரசின் சார்பாக, இந்த அவையின் சார்பாக தஞ்சை மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும், தென்னாற்காடு மாவட்டத்திலும் காவேரி தீரத்திலும் வாடிக்கொண்டிருக்கிற காய்ந்து கொண்டிருக்கிற அந்த நிலங்களை, பயிர்களைக் காப்பாற்ற மீண்டும் ஒருமுறை என்னுடைய நெருங்கிய நண்பர், கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் திரு. வீரேந்திரபட்டீல் அவர்களே, உங்களால் இயன்றதைச் செய்யுங்கள்; 10 டி.எம்.சி. யோ, 15 டி.எம்.சி.யோ தண்ணீரை உடனடியாகத் திறந்துவிட ஏற்பாடு செய்யுங்கள் என்று மிகுந்த பணிவன்போடு இந்த அவையின் சார்பாக வீரேந்திரபட்டீல் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

உரை : 13 நாள் : 06.04.1990

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து நேற்றையதினம் மத்திய நீர் வளத்துறை அமைச்சர் மாண்புமிகு மனுபாய் கொட்டாடியா அவர்கள் இப்பிரச்சினையிலே சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டியது பற்றியும், அதிலே நானும் மற்ற மாநில முதலமைச்சர் களும் கலந்துகொண்டது பற்றியும் இந்த அவையின் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றையதினம் காலையில் நான்கு மாநில முதலமைச்சர்கள். பொதுப்பணித்துறை அமைச்சர்கள், அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நான் பேசும்பொழுது 22 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட பிரச்சினை காவிரி நதி நீர்ப் பிரச்சினை என்றும், பிரச்சினை ஆரம்பித்த போது கர்நாடக மாநில முதல்வராக இருந்த வீரேந்திர பாட்டீல் அவர்களும், அப்போது தமிழக பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த நானும்----- மீண்டும் இப்போது இரண்டு மாநில முதல்வர்களாக இருந்து பேச வந்திருப்பதாகவும் ----- ஆனால் 22 ஆண்டுகளாகப் பிரச்சினை தீராமல் இருப்பதாகவும், இதுவரை 24 முறை முதலமைச்சர்கள் மட்டத்திலும், அமைச்சர்கள் மட்டத்திலும் கூட்டம் நடைபெற்றிருப்பதாகவும், இது 25-ஆவது கூட்டம் என்றும் கூறியதோடு 1970 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17ஆம் தேதியிலேயே இப்பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று, தமிழக அரசின் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டி - இப்போது மீண்டும் 1980-ல் இது குறித்து உச்சநீதிமன்றத்திற்குச் சென்று

இருப்பதால் இன்றைய பேச்சு வார்த்தையில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கிடைக்கா விட்டால் நடுவர் தீர்ப்புக்கு இதனை விடுவதை விட தமிழக அரசுக்கு வேறுவழியில்லை என்பதையும் உறுதியாகவும், திட்டவட்டமாகவும் தெரிவித்தேன்,

அடுத்து, கர்நாடக மாநிலத்தின் சார்பாக முதலமைச்சர் மாண்புமிகு திரு, வீரேந்திர பாட்டீல் அவர்கள் பேசும்போது மீண்டும் ஒரு முறை பேச்சுவார்த்தை மூலமே முயற்சி செய்யலாம் என்றும் அதுவும் வெற்றி பெறாவிட்டால் பின்னர் நடுவர் மன்றத்திற்கு செல்லலாம் என்றும் தெரிவித்தார், அடுத்து மத்திய அமைச்சரின் விருப்பத்தின் பேரில் 4 மாநில முதலமைச்சர்களும், அமைச்சர்களும் மட்டும் அமர்ந்து ஒரு சில முக்கிய அதிகாரிகள் துணையோடு பேசினோம். அப்போது கர்நாடகமும் தமிழ்நாடும் இதில் முக்கியப் பங்கு பெற்று இருப்பதால் அவர்களிடையே கருத்து ஒற்றுமை ஏற்படுவது அவசியம் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. காவிரிப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்று தஞ்சை விவசாயிகள் சார்பில் உச்ச நீதி மன்றத்தில் ஒரு வழக்கு இருப்பதும். அந்த வழக்கில் தமிழக அரசு தன்னையும் இணைத்துக்கொண்டு நடுவர் தீர்ப்புக் கோரி வாதாடுவதும் இந்த அவை உறுப்பினர்கள் அறிந்த ஒன்றாகும். இந்தப் பிரச்சினையிலே உச்ச நீதிமன்றம் தனது முடிவினைத் தெரிவிப்பதற்கு ---- ஏப்ரல் மாதம் 24ஆம் தேதிக்குள் மத்திய அரசு, சம்பந்தப்பட்ட அரசுகளோடு கலந்து பேசி உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்று கெடுவிதித்துள்ளது. எனவே, நான் தொடர்ந்து கூறும்போது கர்நாடக அரசு விரும்புவது போல் மீண்டும் ஒரு முறை பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாங்கள் தயார்; ஆனால் அந்தப் பேச்சுவார்த்தை உச்ச நீதிமன்றம் கெடு விதித்துள்ள ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதிக்குள் நடைபெற்று ஒரு முடிவு தெரிந்தாகவேண்டும் என்று கூறினேன்.

என்னுடைய கருத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டதின் அடிப்படையில், வரும் 19 ஆம் தேதி மாலையில் தமிழக அரசின் சார்பில் நானும், கர்நாடக அரசின் சார்பில் வீரேந்திர பாட்டீல்

அவர்களும், சென்னையிலேயே சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவது என்றும், இரு மாநில பேச்சுவார்த்தை வெற்றி பெறுமேயானால், அடுத்த நாளான 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20ஆம் நாளன்று மாலை சென்னையிலே மத்திய அமைச்சர்களும் கலந்துகொண்டு தமிழக. கர்நாடக முதல்வர்களோடு பேசி, இறுதி முடிவு காண்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இதனையொட்டி 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 19 ஆம் தேதி காலை சட்டமன்றத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும். 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20ஆம் தேதி காலை சட்டமன்றத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் கலந்துரையாடி கருத்துக்களைப் பெறவிருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

உரை : 14 **நாள் : 20.04.1990**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் காவிரி நதிநீர்ப் பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை வெற்றிகரமாக அமைய வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் தங்களுடைய இதயம் திறந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து, மிக ஆவலோடு நேற்றையதினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையினுடைய முடிவுகளை எதிர்பார்த்திருக்கின்ற சூழ்நிலையில் இந்த அறிக்கையை முன் வைத்து, இந்த அவையினுடைய ஏகோபித்த ஆதரவைப் பெறுவதற்காக, நான் இந்த அவையின் முன்னால் நிற்கின்றேன்,

காவிரி நதிநீர்ப் பங்கீடு குறித்த பிரச்சினைக்காக, 19-4-1990 அன்று காலை 9 மணி அளவிலே தமிழக முதலைமைச்சர் கூட்டிய தமிழக சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. அதிலே எடுக்கப்பட்ட முடிவுகள் பின்வருமாறு:-

1, 1892, 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தங்களில் தமிழ்நாட்டுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது.

2. 1974-இல் மத்திய உணவு அமைச்சர். தமிழ்நாடு முதலமைச்சர், கர்நாடக முதலமைச்சர் ஆகியோரிடையே நடந்த முத்தரப்புப் பேச்சுவார்த்தைகளில், தமிழ்நாட்டின் சார்பில் ஒப்புக் கொண்டவாறு மேட்டூர் அணைக்கு கர்நாடகத்திலிருந்து வரும் நீரில் சரசரியாக ஆண்டு ஒன்றுக்கு 100 டி.எம்.சி. சிக்கனப்படுத்துவதன் மூலம் குறைத்துக்கொள்ள ஒப்புக் கொள்ளலாம்.

3. இந்த அடிப்படையில் பேச்சுவார்த்தையின் மூலமாக

கர்நாடக முதலமைச்சருடன் சுமூகமாக ஒரு தீர்வு காண முற்படலாம்.

4. இன்று 19-4-1990 நடக்க இருக்கும் பேச்சுவார்த்தைகள் இறுதிக்கட்ட பேச்சுவார்த்தைகளாக இருக்கவேண்டும். இதில் உடன்பாடு ஏற்படாவிட்டால். மத்திய அரசை இனியும் காலதாமதமின்றி காவிரி நதி நீர்ப் பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு அனுப்புமாறு வற்புறுத்த வேண்டும்.

19-4-1990 மாலை 4.00 மணிக்கு தலைமைச் செயலகத்தில் தமிழக முதலமைச்சருக்கும், கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு திரு.வீரேந்திர பட்டீல் அவர்களுக்கும் இடையே சுமார் மூன்று மணி நேரம் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை அமைச்சரும், கர்நாடக அரசின் சட்டத் துறை அமைச்சரும், நீர்ப்பாசனத் துறை அமைச்சரும், இரண்டு மாநில அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மத்திய நீர்க் குழுவிலிருந்த (சி.டபிள்யூ.சி.) பார்வையாளர், (அப்சர்வர்) என்ற முறையில் தலைமைப் பொறியாளர் வந்திருந்தார்.

பேச்சுவார்த்தையின் விவரங்களை முதலமைச்சர் இன்று காலையிலே அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விளக்கினார்.

தமிழ்நாட்டின் தரப்பில் மேட்டூர் அணைக்கு. கர்நாடகத்திலிருந்து வரும் நீரில், கர்நாடகத்தின் தேவைகளைக் கருதி, சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 100 டி.எம்.சி. சிக்கனப்படுத்தி குறைத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்றும், 1934 முதல் 1972 வரை நீண்ட காலப் புள்ளி விவரங்களின் அடிப்படையிலே மேட்டூரில் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 380 டி.எம்.சி கிடைத்துள்ளதால், தமிழ்நாடு 280 டி.எம்.சி. பெற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது என்றும், இந்தச் சேமிப்பு வரும் பதினைந்து ஆண்டுகளில் சிக்கன வழிமுறைகளைப் பின்பற்றுவதின் மூலமாகச் செய்யப்படும் என்றும் சொல்லப்பட்டது.

கர்நாடகத்தின் சார்பில் இது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கர்நாடகத்தின் தேவைகளுக்கு 414 டி எம். சி தேவைப்படுமென்று

கர்நாடகம் கோரியது. தமிழ்நாட்டின் தேவையை 444 டி.எம்.சி. என்று எடுத்துக் கொண்டு - இரு மாநிலங்களுக்கும் மொத்தமாக 858 டி.எம்.சி. தேவை என்று கர்நாடகா சார்பில் மதிப்பிடப்பட்டது. அதற்கு மாறாக காவிரிப் பாசனப் பகுதியிலே 75 சதவிகித நம்பகமான அடிப்படையில் 670 டி.எம்.சி. அளவிற்கு மட்டுமே நீர் ஆதாரங்கள் இருப்பதால், 188 டி.எம்.சி. பற்றாக்குறை ஏற்படும் என்றும், இந்தப் பற்றாக்குறையை இரு மாநிலங்களும் சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்றும் கர்நாடக மாநில சார்பிலே சொல்லப்பட்டது.

இதன்பொருட்டு, மத்திய நீர்க் குழு வல்லுனர்களோ அல்லது இரு மாநிலங்களின் பொறியாளர்களோ ஒரு ஆய்வு செய்ய வெண்டுமென்று கர்நாடகா கூறியது.

தமிழ்நாடு இந்த அணுகுமுறையை ஏற்றுக் கொள்ளவில்லை. 100 டி.எம்.சி. சிக்கனத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்ட பிறகே 444 டி.எம்.சி. தமிழ்நாட்டின் மிகக் குறைந்தபட்சத் தேவையாக மதிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதனை நிகரப் பற்றாக்குறையை சமமாகப் பகிர்ந்து கொள்ளும் வகையில் மேலும் எந்த அளவிற்கும் குறைக்க இயலாதென்றும் தமிழகத்தின் சார்பில் திட்டவட்டமாக விளக்கப்பட்டது.

1934-72 காலக் கட்டத்தில் தமிழ்நாடு சாரசரியாக 566 டி.எம்.சி. உபயோகித்துள்ளது. இதற்கு மாறாக கர்நாடகத்தின் தேவையை 414 டி.எம்.சி அளவிற்கு உயர்த்திவிட்டு. தமிழ்நாட்டின் தேவையை 444 டி.எம்.சி-க்கும் குறைத்த பின்னரும், இதற்கு மேலும் தமிழ்நாடு தனது தேவையைக் குறைக்க வேண்டுமென்று கர்நாடகம் வாதாடுகிறது சரியல்ல என்று எடுத்துச் சொல்லப்பட்டது.

தமிழ்நாட்டின் தேவையை 566 டி.எம்.சி. யிலிருந்து 444 டி.எம்.சி. யாகக் குறைத்துவிட்டு, கர்நாடகம் தனது தேவையை இப்போது 237 டி.எம்.சி. அதிகப்படுத்திக் காட்டி- பற்றாக்குறையை சமமாகப் 'பங்கிடுவது' என்ற பெயரால் மேலும் தமிழ்நாட்டிற்கு தண்ணீரைக் குறைக்க முயற்சிப்பதை ஏற்பதற்கில்லை.

மத்திய நீர்க் குழுவினர் புள்ளி விவரங்கள் தர வேண்டுமென்றும். மீண்டும் ஆய்வுக் குழுக்கள் அமைக்க

வேண்டுமென்றும் கர்நாடக மாநிலம் கூறுவது, பிரச்சினையை காலந்தாழ்த்தி கிடப்பில் போட்டு தமிழகம் மேலும் பாதிக்கப்படுகிற நிலைமையை உருவாக்கும். ஏற்கெனவே, ஆய்வுக் குழு புள்ளி விவரங்களைத் தந்து, அவற்றினை ஏற்று. அந்த அடிப்படையிலேயே பலமுறை பேச்சுவார்த்தைகள் நடை பெற்றுள்ளன.

இந்த விவரங்களின் பின்னணியில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் விவாதங்களுக்குப் பின்னர், பின்வரும் முடிவிற்கு இந்தப் பேரவையும் வருகிறது:-

"1970ஆம் ஆண்டிலேயே தமிழ்நாடு அரசு காவிரி நீர்ப் பிரச்சினை நடுவர் மன்றத்திற்கு அனுப்பப்படவேண்டும் என்று கோரியது. அதன் பின்னால், இந்த இருபதாண்டுக் காலத்தில் 26 முறை முதலமைச்சர்கள், அமைச்சர்கள் அளவிலே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவிட்டன. இறுதியாக 19-4-1990 அன்று நடந்த இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தையிலும் கர்நாடகம் எடுத்துள்ள நிலை, ஓரளவேனும் தமிழ்நாட்டின் குறைந்த அளவு தேவைகளைக் கூட நிறைவு செய்யும் வகையிலே இல்லை.

ஆகவே, பேச்சுவார்த்தை மூலமாக இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண இயலவில்லை என்றும், இனியும் காலதாமதம் ஏற்பட்டால் தமிழ்நாடு மேலும் பாதிக்கப்படும் என்றும் உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு எடுத்துக் கூறவேண்டும். மத்திய அரசும் உடனடியாக இந்தப் பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு இந்தச் சட்டமன்றப் பேரவை மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது" என்ற இந்த அறிவிப்பை இந்த அவையின் ஏகோபித்த முடிவாக அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உரை : 15 **நாள் : 24.04.1990**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக முதலமைச்சர் அவர்கள் முன்கூட்டி ஒரு அறிக்கையை வெளியிட்டுவிட்டார் என்றும், அதனால் முடிவு எடுத்துவிட்டோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். கர்நாடகத்தில் இப்போது சட்டசபைக் கூட்டம் நடக்கவில்லை. எனவே அவர்களால் முன்கூட்டி அறிக்கையை விட முடியும். ஆனால் நான் சட்டசபைக்குக் கட்டுப்பட்டவன். சட்டசபை நடைபெற்றுக்கொண்டிருக்கிற நேரத்தில் 19ந் தேதி நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விபரங்களைப் பத்திரிகைகளில் வெளியிட்டால் மறுநாள் அவையில் உரிமைப் பிரச்சினை வரும். உரிமைப் பிரச்சினை வரும் என்பதற்காக மட்டுமல்ல, இந்த சட்டமன்றத்தை மதிப்பவன் என்ற முறையிலும் இந்த அவைக்கு மரியாதை தரவேண்டுமென்ற முறையிலும் நான் அதை அங்கே வெளியிடவில்லை. நிருபர்கள் என்னை எவ்வளவோ துருவித் துருவிக் கேட்டபோதும் கூட, சட்டமன்றத்தில்தான் அதை அறிவிப்பேன். சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, உங்களிடத்தில் அதை அறிவிக்க இயலாது என்று நான் கூறிவிட்டேன். அதனால் அறிவிக்கவில்லை. அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைக்கவில்லை, சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் மாத்திரம் போதாது என்பதற்காக நான் பதில் அளிக்கவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.

இந்த காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி-கடந்த காலத்திலும் சரி, இப்போதும் சரி-சட்டமன்றத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கலந்துபேசி, முடிவுகளை எடுப்பதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால்

அப்போது முன்னாள் முதலமைச்சராக இருந்த பெரியவர்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்களிடத்திலும், அப்போது முதலமைச்சராக இல்லாமல் ஓய்வு பெற்றிருந்தாலும் கூட, பெரியவர் பக்தவத்சலம் அவர்களிடத்திலும் சென்று ஒவ்வொரு முறையும் கலந்துபேசி அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தையும் கூட்டி அவர்களுடைய கருத்துக்களையும் கேட்டேன். அதைப்போல சி.எஸ். அவர்களிடம் தனிப்பட்ட முறையில் சென்று அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு விவாதித்திருக்கிறேன். டெல்லிக்குச் சென்றபோதெல்லாம் திரு.கே.எல்.ராவ் போன்றவர்களுடன் சந்தித்து, அங்கே என்ன பேசுவது என்று அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் பெரியவர் பக்தவத்சலம், பெருந்தலைவர் காமராஜர், திரு.சி.எஸ். அவர்களிடத்தில் எல்லாம் கலந்துகொண்டு செய்வதும் வழக்கம். அதைப்போல ஆர். வி. அவர்களிடத்திலும் கலந்து கொள்வது வழக்கம். அந்த அளவுக்கு இந்த விஷயத்தில் அதிகத் தொடர்பு கொண்டவர்களிடத்திலேயெல்லாம் எந்த அளவுக்குத் தொடர்பு கொள்ள வேண்டுமோ அந்த அளவுக்குக் கலந்து பேசியிருக்கிறேன். இப்போது எனக்கு ஏற்பட்ட புது அனுபவம், அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு வருகின்ற பிரதிநிதிகள் தங்களுடைய கட்சித் தலைமையோடு தொடர்பு கொண்டிருப்பார்கள் என்று நான் எண்ணினேன். அந்தத்தொடர்பு சில பிரதிநிதிகளுக்கு இல்லை என்கிற உண்மை இப்போது எனக்குப் புரிகிறது. இந்த உண்மையைத்தான் நான் இப்போது தெரிந்து கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக அவசரமாக இந்தத் தீர்மானத்தை முன்மொழிய வேண்டிய அவசியம் வந்ததற்கான காரணத்தை நான் விளக்க வேண்டியவனாக இருக்கிறேன். உச்ச நீதிமன்றத்தில் காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையை உடனடியாக மத்திய அரசு நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டும் என்று தஞ்சை மாவட்ட விவசாயிகள் தொடர்ந்துள்ள வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, இன்றைய தினம் அந்த வழக்கில் பேச்சுவார்த்தையினுடைய முடிவு என்ன என்பதை அறிந்து கொள்ள உச்ச நீதிமன்ற நீதிபதி ஆவலாக இருக்கிறார்.

அந்த முடிவு 24 ஆம் தேதி அன்று நடைபெறுகிற இந்த விசாரணைக்கு முன்பு தெரிய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் சொன்னதன் விளைவாக டெல்லியிலே ஒரு முறை பேச்சுவார்த்தை மத்திய அரசினுடைய அமைச்சர் முன்னிலையில் தமிழகத்தின் சார்பிலும் கர்நாடகத்தின் சார்பிலும், கேரளத்தின் சார்பிலும், புதுவை மாநிலத்தின் சார்பிலும், முதலமைச்சர்களும், தொடர்புடைய அமைச்சர்களும் கலந்து கொண்டு பேச்சுவார்த்தை நடைபெற்று. டெல்லியில் பேச்சுவார்த்தை வெற்றி அடையாமல் முடிவுற்றது.

நமது கர்நாடக முதலமைச்சர் அவர்கள், தமிழக முதலமைச்சரிடத்திலே முதலமைச்சரும் நானும் சென்னையிலே கலந்து பேசி நல்ல முடிவு எடுக்கலாம் என்று சொல்லும்போது நான் கர்நாடகத்தை திட்டவட்டமாகக் கேட்டுக் கொண்டேன். அப்படி நடைபெறுவதாக இருந்தால், 24 ஆம் தேதி சுப்ரீம் கோர்ட் விசாரணை தொடங்குவதற்கு முன்பே, நடைபெற்றாக வேண்டும் என்று கூறி, அதற்காகத் தான் 19 ஆம் தேதி சென்னையில் அந்தப் பேச்சுவார்த்தை ஏற்பாடு செய்யப்பட்டு. நானும் கர்நாடக முதலமைச்சர் திரு, வீரேந்திர பட்டீல் அவர்களும் அந்தப் பேச்சுவார்த்தையை நடத்தினோம். அந்தப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்திருக்கிறது. அதற்குப் பிறகு, 'அவர் விடுத்த அறிக்கைகளில் பேச்சுவார்த்தை தொடரலாம் என்றும், அவரே ஒரு அறிக்கையில் இனிமேல் பேச்சுவார்த்தை இல்லையென்றும் முரண்பட்ட செய்திகளைச் சொல்லியிருக்கிறார். நமக்கு அதில் முரண்பாடான கருத்து இல்லை. முழுமையான கருத்து, பேச்சுவார்த்தை தோல்வி அடைந்து விட்டது என்பதுதான். கடந்த 20 ஆண்டுகளாகப் பேசிப் பேசிப் பார்த்து, எந்த விதமான ஒரு முடிவுக்கும் வர முடியாமல், 26 அல்லது 27 தடவைக்கு மேல் பேசிய பிறகும், இனியும் பேச்சுவார்த்தை தொடரலாம் என்பது காலங் கடத்துகின்ற ஒரு முயற்சியாகும். பேச்சுவார்த்தை என்கிற பெயரிலேயே, கடந்த நான்கைந்து ஆண்டுக் காலத்தில் நமக்கு அளிக்க வேண்டிய தண்ணீரின் அளவு, மிக மிகக் குறைந்து, 140 டி.எம்.சி., 150 டி.எம்.சி., என்கின்ற அளவுக்குக் குறைக்கப்பட்டு விட்டது. அவர்கள் மேலும் பேச்சுவார்த்தை என்று காலம் கடத்தினால், தமிழ்நாடு மிக மிகக் கடுமையாகப் பாதிக்கப்படும்

என்ற காரணத்தினால், இனி பேச்சுவார்த்தைக்கே இடமில்லை பேச்சுவார்த்தை தோல்வி அடைந்து விட்டது என்ற செய்தியை நாம் உச்ச நீதிமன்றத்திற்குச் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். அதைத்தான், நான் இங்கே ஒரு தீர்மானமாக முன் மொழிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பின்வரும் தனித் தீர்மானத்தை மொழிகிறேன்:

''காவிரிப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று, உச்ச நீதிமன்றம், மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டுமென்று, தஞ்சை விவசாயிகள் சார்பில் தொடர்ந்துள்ள வழக்கில், தமிழக அரசு தன்னையும் இணைத்துக் கொண்டிருப்பது (Implead) தெரிந்ததே இன்று, உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கின் மீது, விசாரனை தொடர்ந்து நடக்கிறது. கடந்த 19ஆம் தேதி, தமிழக முதலமைச்சருக்கும், கர்நாடக முதலமைச்சருக்கும் இடையே நடந்த இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்து விட்டது என்றும், இனி பேச்சுவார்த்தைக்கே இடமில்லை என்றும், எனவே, உச்ச நீதிமன்றம், காவிரிப் பிரச்சினையை, உடனடியாக நடுவர் தீர்ப்புக்கு விடுவதற்கு, மத்திய அரசு உத்தரவிட வேண்டு மென்றும், நமது தமிழக அரசின் சார்பில், உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உண்மை நிலையை, மத்திய அரசின் சார்பிலே மறைக்காமல் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்து உரைக்கவேண்டுமென்றும் பேரவையின் சார்பில், தமிழக அரசு, மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது''.

இந்தத் தனித் தீர்மானத்தை அனைவரும் ஆதரித்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக.

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதி நீர்ப் பங்கீடு பிரச்சினையில் மத்திய அரசு உச்ச நீதிமன்றத்திற்கு, இந்தப் பிரச்சினையிலே பேச்சுவார்த்தை முடிந்து தோல்வி அடைந்து விட்டது என்ற தகவலை மறைக்காமல் தர வேண்டுமென்ற

தீர்மானம் நேற்றைய தினம் இந்த மாமன்றத்திலே ஒருமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தீர்மானம் ஒன்று மாமன்றத்திற்கு வந்தால் அது முன்மொழியப்பெற்று அவை உறுப்பினர்களும், பல கட்சிகளுடைய தலைவர்களும் அது குறித்துப் பேசி, பிறகு அந்தத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, நிறைவேற்றுவது இந்த மன்றத்தின் மரபு. நேற்று நேரமில்லாத காரணத்தால், தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு, இன்றைக்கு அந்தத் தீர்மானத்தின் மீது பேசுகிற நிலையில் எல்லாக் கட்சித் தலைவர்களும், முன் வரிசையில் உள்ள தலைவர்கள் அனைவரும் நீண்ட உரை விளக்க உரை ஆற்றியிருக்கிறார்கள். எல்லா உரைகளுடைய தொகுப்பும் என்னவென்றால், காவிரிப் பிரச்சினை இனிமேல் பேச்சுவார்த்தையிலே முடிவடையக் கூடிய ஒன்றல்ல. நடுவர் தீர்ப்பைத் தவிர வேறு பரிகாரம் கிடையாது என்பதுதான் அனைவரும் எடுத்துக் கூறிய கருத்துக்களின் மொத்தத் தொகுப்பு ஆகும்.

எதிர்க்கட்சித் தலைவர் இங்கே பேசும்பொழுது ஊடே ஒரு வாக்கியத்தைச் சொன்னார். கடந்த காலத்திலே வழக்கை திரும்பப் பெற்ற காரணத்தால் ஏற்பட்ட விளைவுகளைத்தான் அனுபவிக்கிறோம் என்று சொன்னார். வழக்கை 1971-72ஆம் ஆண்டிலே திரும்பப் பெற்றதற்கான காரணம் அன்றைக்கு இந்தியப் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி அவர்கள், "வழக்கு இருக்கிற நேரத்திலே நான் தலையிட்டுப் பேசித் தீர்ப்பது என்பது இயலாததாக இருக்கிறது; எனவே வழக்கைத் திரும்பப் பெற்று பேச்சுவார்த்தை நடத்துங்கள்" என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, பேச்சுவார்த்தையிலே முடிவுறும் என்று நம்பி அன்றைக்கு அந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக -முன்னிலை வகித்தவர் பாபு ஜகஜீவன்ராம் என்ற காரணத்தினால்- அவருடைய பேச்சு எடுபடும்; அவருடைய முன்னிலையிலே இந்தப் பேச்சுவார்த்தை வெற்றி பெறும் என்ற நம்பிக்கையோடு தமிழக அரசின் சார்பில் நானும், அதைப் போல கர்நாடகத்தின் முதலமைச்சர் தேவராஜ் அர்ஸ் அவர்களும், கேரளத்தினுடைய முதலமைச்சர் அச்சுதமேனன் அவர்களும், பாண்டிச்சேரி முதலமைச்சரும் பேச்சுவார்த்தையிலே கலந்துகொண்டு கிட்டத்தட்ட பேச்சுவார்த்தை வெற்றி பெறுகின்ற கட்டத்திலே

ஓரிரு நுணுக்கங்களின் காரணமாக அந்தப் பேச்சுவார்த்தை அன்றைக்கு முடிவுறாமல் ஒரு கட்டத் தோல்வியைச் சந்தித்தது.

நாம் வழக்கைத் திரும்பப் பெறுகிற அந்த நேரத்திலே கூட எப்படித் திரும்பப் பெற்று இருக்கிறோம் என்றால் With liberty to file a fresh suit on the same cause of action என்கின்ற அந்த நிலையிலே தான் வழக்கைத் திரும்பப் பெற்று இருக்கிறோமே அல்லாமல், வழக்கே போட மாட்டோம் என்று அல்ல. அதைத் திரும்பப் பெற்ற பிறகு பல ஆண்டுக் காலம் இடையிலே இருந்து இருக்கிறது; கடந்த கால ஆட்சியிலே கூட அந்த வழக்கை திரும்பப் போட்டு இருக்கலாம்; ஆனால் பேச்சுவார்த்தையில் நாம் நம்பிக்கை வைத்து இருந்தோம். ஒரு முறை அல்ல, இரு முறை அல்ல, 26 தடவை பேசி, இறுதியாக ‘‘நானும், தமிழக முதலமைச்சரும், இரண்டு பேரும் பேசினால் இறுதியாக முடிவு காண இயலும்” என்று வீரேந்திர பாட்டீல் அவர்கள் டில்லியிலே அறிவித்ததற்கு இணங்க, அந்த இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தை கடந்த 19 ஆம் தேதி அன்று நடத்திப் பார்த்து, அது தோல்வி அடைந்துவிட்ட காரணத்தால்தான் நாம் உச்ச நீதிமன்றத்துக்கு அங்கே நம்முடைய அரசின் சார்பில் வாதாடுகின்ற வழக்கறிஞர் மூலமாக பேச்சுவார்த்தை தோல்வி அடைந்து விட்டது என்ற குறிப்பை அனுப்பி இருக்கின்றோம். அதுவும் அரசின் சார்பாக மாத்திரம் அல்ல; இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாயிலாகவும் அந்தச் செய்தியை வழக்கறிஞருக்குச் சொல்லி, வழக்கறிஞர் நேற்றைய தினம் உச்ச நீதிமன்றத்திலே இந்தச் செய்தியை எடுத்து உரைத்து இருக்கின்றார்.

இப்போது வீரேந்திர பாட்டீல் அவர்கள், கர்நாடகத்தின் முதலமைச்சர் அவர்கள் திடீரென்று இண்டர்-ஸ்டேட் கவுன்சில் மூலமாகக் கூட இதைத் தீர்த்துக் கொள்ளலாம் என்றெல்லாம் குறிப்பிட்டு இருக்கிறார். இன்னும் இண்டர்-ஸ்டேட் கவுன்சிலுக்கான அடிப்படைகள், அதிலே உள்ள மாறுதல்கள்-இவைகள் எல்லாம் செய்யப்பட்டு அந்த கவுன்சிலே இன்னும் அமையாத சூழ்நிலையிலே, அதிலே தீர்த்துக்கொள்ளலாம் என்பது, மேலும் காலம் கடத்தி-இப்போதே கிட்டத்தட்ட 140 டி.எம்.சி. தான் என்கின்ற அளவுக்குக் கொண்டு

வந்து விட்டார்கள். இடைக் காலத்திலே, கடந்த காலத்திலே, நாங்கள் மின்சாரம் தருகிறோம்; பரிவர்த்தனையாக நீங்கள் தண்ணீர் தாருங்கள் என்று கேட்கின்ற அளவுக்கு நம்முடைய உரிமைகள் கூட விட்டு கொடுக்கப்படுகின்ற சூழ்நிலையில் தண்ணீரைப் பெற வேண்டிய அவதிக்கு இந்த மாநிலம் ஆளாகி இருக்கின்றது. படிப்படியாக நமக்கு வர வேண்டிய தண்ணீர் குறைக்கப்பட்டு, இன்னும் ஒரு ஐந்து, ஆறு ஆண்டுக் காலம் போனால் இதை விடக் குறைவாகத்தான் கர்நாடகம் நமக்குத் தண்ணீர் தரும் என்ற ஒரு கொடுமையான நிலை ஏற்படக் கூடும். இப்போதே கூட அவர்கள் வாதாடுகிற நேரத்திலே பேச்சுவார்த்தையில் 20 ஆண்டுக் கால சராசரி கணக்கை எடுக்காதே; கடந்த 5 ஆண்டுக் காலத்திலே எவ்வளவு தண்ணீர் தந்து இருக்கிறோம்; அந்தக் கணக்கை-சராசரியாக எடு என்று சொன்னார்கள். நான் கூட வேடிக்கையாக சொன்னேன், வேதனையோடு சொன்னேன், "கடந்த 5 ஆண்டு காலக் கணக்கை வைத்து சராசரி எடுக்க வேண்டும் என்றால் நீங்கள் இன்னும் ஒரு ஐந்து ஆண்டுக் காலம் இந்தப் பேச்சுவார்த்தையை நீட்டித்து, அப்போது ஐந்து ஆண்டு காலத்துச் சராசரிக் கணக்கு எடுத்தால், சராசரி பார்க்கத் தண்ணீரே இருக்காது; அந்த அளவுக்கு நீங்கள் கடந்த காலத்திலே தமிழகத்தை ஏமாற்றத்திற்கு ஆளாக்கி இருக்கின்றீர்கள்" என்று நான் குறிப்பிட்டுத்தான், மேலும் ஆய்வுகள் தேவையில்லை ; மேலும் புள்ளி விவரங்கள், சேகரிக்கத் தேவையில்லை; இருக்கின்ற புள்ளி விவரங்கள், ஏற்கெனவே செய்யப்பட்ட ஆய்வு-இந்த அடிப்படையிலே பேசினால் போதும் என்று சொன்ன பிறகு தான், அதை ஏற்றுக்கொண்டு அவர் சென்னைக்கு வந்தார், பேச்சு வார்த்தை நடத்த. பேச்சு வார்த்தை தோல்வி அடைந்து விட்டது என்பதை நாம் தெளிவாக அவருக்கும் தெரிவித்திருக்கிறோம் நாட்டுக்கும் தெரிவித்திருக்கிறோம் மத்திய அரசுக்கும் தெரிவித்திருக்கிறோம் பிரதமருக்கும் உடனடியாக அன்றைக்கே கடிதம் எழுதியிருக்கிறேன். நீர்ப்பாசனத் துறை அமைச்சருக்கும் அன்றைக்கே கடிதம் எழுதியிருக்கிறேன். உச்ச நீதிமன்றத்திற்கும் நம்முடைய வழக்கறிஞர் மூலமாக இந்தச் செய்தி நேற்றைய தினம் தரப்பட்டிருக்கிறது. அந்தச் செய்தியினுடைய பிரதிகள் மத்திய அமைச்சர்களுக்கும், பிரதமருக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

மத்திய அரசு நமக்குச் சாதகமாக நடக்குமா, பாதகமாக நடக்குமா என்றெல்லாம் இங்கே பேசப்பட்டது, நம்முடைய தீட்சிதர் அவர்கள் கூட நமக்குச் சாதகமாக அவர்கள் நடந்து கொள்ள வேண்டும், அதற்கு முயற்சிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதிலே சாதகம், பாதகம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அவர்கள் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும். இதிலே கர்நாடகத்திற்குச் சாதகம், தமிழ்நாட்டிற்குப் பாதகம் அல்லது தமிழகத்திற்குச் சாதகம், கர்நாடகத்திற்குப் பாதகம் என்றெல்லாம் இல்லை.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டுமென்ற அந்த வகையிலே தான் இன்றைக்கு மத்திய அரசு தன்னுடைய நிலையினை எடுத்தாக வேண்டும். நடுநிலையோடு இந்தப் பிரச்சினையை மத்திய அரசு அணுக வேண்டும். Natural corollary என்று குறிப்பிடுவதைப் போல, இயற்கையான விளைவு அது தான். பேசிப் பார்த்தாகி விட்டது. ஒரு முறை அல்ல, இரு முறை அல்ல. 27 தடவை பேசிப் பார்த்தாகி விட்டது. பிரதமர் இந்திரா காந்தி காலத்திலேயிருந்து, இராஜீவ் காந்தி காலம் வரையிலே பேசிப் பார்த்தாகி விட்டது. இப்பொழுது ஒரு புதிய அரசு அங்கே உருவாகி இருக்கிற நேரத்தில் அந்தப்புதிய அரசு உருவாவதற்கு முன்பு இராஜீவ் காந்தி அவர்களாலும் மற்றும் காங்கிரஸ் கட்சியாலும் மற்றக் கட்சிகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்டது, நடுவர் தீர்ப்புக்கு இந்தப் பிரச்சினை விடப்பட வேண்டும் என்பதாகும். அதிலே, இன்றைக்கு இருக்கிற மத்திய அரசுக்கும் மறுப்பு இருக்க இயலாது. நடுவர் தீர்ப்புக்கு விடப்படுகின்ற காரணத்தாலேயே கர்நாடகத்திற்கும். தமிழகத்திற்கும் தகராறு ஏற்பட்டு விட்டதாக யாரும் கருதத் தேவையில்லை.

நடுவர் தீர்ப்பிலே விசாரணை நடைபெற்று இருக்கும்பொழுது கூட நாம் கோருகின்ற தண்ணீரைத் தருவதற்குக் கர்நாடகம் முன்வருமேயானால் நாங்கள் எங்களுக்குள்ளேயே தீர்த்துக் கொண்டோம், இனிமேல் நடுவர் தீர்ப்பு தேவையில்லை என்று கூடச் சொல்லலாம். ஆனால் கர்நாடகத்தினுடைய நிலைமையைப் பார்க்கும்பொழுது அவர்கள் முழுக்க, முழுக்க தமிழகத்தை பட்டினிபோட வறண்ட

பாலைவனமாக ஆக்குவதற்குத்தான் இன்றைக்குத் திட்ட மிட்டிருக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றுகின்ற காரணத்தினாலேதான் மத்தியஅரசு இதிலே யாருக்கும் சாதகமாக இருக்கத் தேவையில்லை; நடுநிலையோடு நடந்து கொண்டால் போதுமானது.

நடுநிலையோடு நடந்து கொள்வது, நடுவர் தீர்ப்புக்கு விடு வதற்கு எது வழியோ, அந்த வழியை மத்திய அரசு அணுக வேண்டியது என்பது தான். இப்பொழுதுள்ள நிலை கூட மத்திய அரசே கூட நடுவர் தீர்ப்புக்குவிட வேண்டுமென்று அல்ல. உச்ச நீதிமன்றத்திற்கு உண்மையைச் சொல்லிவிட்டால் போதுமானது. எனவேதான், நேற்றைய தீர்மானத்திலே கூட உண்மையை மறைக்காமல் மத்திய அரசு, உச்ச நீதிமன்றத்திற்குச் செய்தியைச் சொல்ல வேண்டுமென்று திட்டவட்டமாக, அழுத்தம் திருத்தமாக நாம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம்.

உங்களுக்குத்தெரியும், திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரையில், யார் மத்தியிலே இருந்தாலும் சரி-அவர்கள் வேறு கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, நம்முடைய கட்சியைச் சேர்ந்தவர்களேகூட மத்திய அரசிலே இடம் பெற்றிருந்தாலும் சரி, உறவுக்குக் கை கொடுப்போம்-உரிமைக்குக் குரல் கொடுப்போம்-என்பதிலேயிருந்து எந்த நேரத்திலும் இம்மியளவும் மாறாத அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு இந்த அரசின் சார்பில் டெல்லிக்குச் சென்று பிரதமரைச் சந்தித்துத் திரும்பியிருக்கின்ற நாடாளுமன்றக் குழுவினர் நம்பிக்கையோடு இருக்கின்றார்கள். அதைத்தான் பொதுப்பணித்துறை அமைச்சர் நேற்றையதினம் "நாங்கள் பிரதமரிடத்திலே குழுவின் சார்பாகச் செய்திகளை எடுத்து வைத்திருக்கின்றோம், அனுதாபத்தோடு கவனிப்பதாக அவரும் கூறியிருக்கிறார்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நம்பிக் கையோடு நாளையதினம் மத்திய அரசு எப்படி நடந்து கொள்ள இருக்கிறது என்பதை நாம் கவனித்துக் கொண்டிருக்கின்றோம்; மத்திய அரசுக்குத் தெரிவித்து இருக்கின்றோம்; திட்டவட்டமாகத் தெரிவித்து இருக்கின்றோம்.

எதிர்க்கட்சித் தலைவர் இங்கே குறிப்பிட்டார், அங்கே ஹெக்டே போன்றவர்களெல்லாம் தலையிட்டு, தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்துகிறார்கள் என்று. நாமும் அங்கே இருக்கின்ற நம்முடைய அமைச்சர் மூலமாகச் செல்வாக்கைப் பயன்படுத்தியிருக்க முடியும். அவரைக்கூட அந்தக் குழுவிலே அனுப்பியிருக்க முடியும் அப்படி அனுப்புவது அரசியல் பண்பாடு ஆகாது என்ற காரணத்தினால் அனுப்பவில்லை. ஆனால், ஹெக்டே போன்றவர்கள் - திட்டக் குழுத்தலைவராக இருக்கிறவர்கள் அந்தக் குழுவிலே பங்கேற்றுச் சென்றிருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு மாநிலப் பற்று இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிற அதே நேரத்தில்-செல்வாக்கு அங்கே தவறாகப் பயன்படுத்தப்படுகிறதோ என்கின்ற சந்தேகம் எனக்கும், மற்றவர்களுக்கும் எழுவது நியாயமே ஆகும். அப்படிப்பட்ட சந்தேகங்கள்கூட யாருக்கும் எழாத அளவிற்கு மத்தியிலே பொறுப்பிலே இருப்பவர்கள் நடந்து கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மத்திய அரசு இந்த விஷயத்தில் நடுநிலையோடு செயல்பட வேண்டும் என்பதை மாத்திரம் திட்டவட்டமாக உங்கள் சார்பாகச் சொல்லிக் கொள்ளுகின்றேன். தமிழ்நாட்டில் உள்ள ஐந்து கோடி மக்கள் சார்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாளும், நாளும் விவசாயப் பெருங்குடி மக்கள், தஞ்சை, திருச்சி-முக்கியமாக காவிரி நதிதீரத்தில் வாழ்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் - அவர்களை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழ்நாட்டில் உள்ள ஐந்து கோடிக்கு மேற்பட்ட தமிழ்ப் பெருங்குடி மக்கள், அவர்கள் சார்பாக நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பேச்சுவார்த்தை - இறுதி பேச்சுவார்த்தை 19-ஆம் தேதியோடுமுடிந்து விட்டது. இனி மத்திய அரசு எந்தவகையில் அழைத்தாலும் தமிழ்நாடு அரசு பேச்சுவார்த்தைக்குத் தயாராக இல்லை, இல்லை, இல்லை என்பதைத் கூறி அமர்கிறேன்.

உரை : 16 நாள் : 26.04.1990

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய யூனியன் முஸ்லீம் லீகினுடைய லத்தீப் பிரிவைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் ஒரு மிக முக்கியமான பிரச்சினையை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார். அவையினுடைய கவனத்திற்கு அவர் கொண்டுவந்ததின் மூலம் நாளைய தினம் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டால் அதிலே வாதாடுகின்ற நேரத்திலும் அல்லது நடுவர் மன்றத்திற்கான நிலைகளை எடுத்திட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்திலே வாதிடுகின்ற நேரத்திலும் அதிலே எடுத்து வைக்கின்ற வகையிலும் தமிழ்நாடு தன்னுடைய வாதத்தை அழுத்தம் திருத்தமாக வைக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு அவர் இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பியிருக்கிறார் என்றே நான் கருதுகின்றேன். இன்று காலையிலே பத்திரிகையிலே, அதிலும் குறிப்பாக இந்து பத்திரிகையிலே வந்துள்ள இந்த இரண்டு செய்திகளும் ஓரளவு அதிர்ச்சி அளிக்கத்தக்க செய்திகளே ஆகும். ஏனென்றால் முதலில் சென்ற - தமிழக அரசின் சார்பாக சென்ற - குழுவில் இரண்டு கட்சிகள் கலந்துகொள்ள முடியாத சூழ்நிலைகள் அவர்களுக்கு ஏற்பட்டது. அதுகுறித்து அவர்கள் விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். அதோடு நின்றுவிடாமல் ஏன் கலந்து கொள்ளவில்லை. என்பதற்கான பதிலை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மூத்த துணைப் பொதுச் செயலாளர் வெளியிடும்பொழுது இந்து பத்திரிகையில் வந்துள்ள அதே வாசகத்தைப் படிக்கிறேன். 'Asked why the AIADMK did not join the All party Delegation to meet the Prime Minister, he said that we hold Mr. Karunanidhi and the D.M.K. Government responsible for failure to renew the Cauvery agreement that ended in 1974. So we decided to keep out of the Delegation',

என்று மிகத் தெளிவாக பட்டவர்த்தனமாக பத்திரிகையிலே அவர் இப்படிக் கூறியதாக செய்தி வெளிவந்திருக்கிறது.

அது ஒரு கட்சி மாச்சரியத்தோடு தொடர்ந்து அவர் சொல்லிக்கொண்டே வருகின்ற பதில் என்ற அளவிலே விட்டு விட்டாலும்கூட தூதுக் குழுவாக சென்றவர்கள் தமிழகத்தின் சார்பாக மற்றொரு குழுவாக சென்றவர்கள். காங்கிரஸ் நண்பர் களும், அ. தி. மு. க. நண்பர்களும் அவர்களோடு சென்ற அவர்களுடைய தோழமைக் கட்சி நண்பர்களும் தந்த அந்த முறையீட்டில், மெமோரண்டத்தில் The memorandum noted that the agreement on sharing of waters between Tamil Nadu and Karnataka had ended in 1974 and it has to be renewed after taking into consideration fresh facts without affecting the existing rights of the farmers of Tamil Nadu என்று இந்த வாக்கியம் அதிலே அமைந்து இருப்பதைப் பார்க்கும்போது திரு. வீரேந்திரப் பாட்டீல் அவர்கள் 1968ஆம் ஆண்டு நான் அவரை முதன் முதலாக டெல்லியில் இந்தப் பேச்சுவார்த்தைக்காக தமிழகத்தி னுடைய பொதுப்பணித்துறை அமைச்சர் என்ற முறையிலே அண்ணா அவர்களால் அனுப்பப்பட்டபோது இதே வாசகத்தைத் தான் அவர் சொன்னார். 24ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974ஆம் ஆண்டோடு முடிந்து விடுகிறது என்று 6 ஆண்டுக்கு முன்பே அவர் சொல்லத் தொடங்கிவிட்டார். ஏன் என்று அவர் அதற்குச் சொன்ன காரணம் இது தமிழ்நாட்டிற்கும் கர்நாடகத்திற்கும் உள்ள ஒப்பந்தம் அல்ல, இது ஏற்கெனவே இருந்த மைசூர் அரசினுடைய பூசோனத்திற்கும் ஏற்கெனவே இருந்த சென்னை ராஜதானி, மெட்ராஸ் ஸ்டேட், மெட்ராஸ் ப்ராவின்ஸ் என்று அந்த நிலப்பரப்புக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தமே அல்லாமல் இதை பொது ஒப்பந்தமாக எங்களால் கருதப்படமாட்டாது; நிரந்தர ஒப்பந்தமாக கருதப்படமாட்டாது. ஏன் என்றால் இது மைசூருக்கும், சென்னை ராஜதானிக்கும் நடைபெற்ற ஒப்பந்தம். அது மட்டும் அல்ல. வெள்ளைக்காரன் காலத்திலே போடப்பட்ட ஒப்பந்தம். எனவே, இப்போது சுயராஜ்யம் வந்த பிறகு அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளுவதற்கு இல்லை என்கின்ற இந்த வாதங்களை அவர் அடுக்கிக்கொண்டே போனார். இப்போது அதே நிலையிலே அவருடைய வாதத்தை வலுப்படுத்துகின்ற வகையில் உண்மையிலேயே இந்து பத்திரிகையில் வந்து இருக்கின்ற இந்த இரண்டு வாசகங்கள் அவர்கள் சொன்னதாக இருக்குமானால் அல்லது மெமோரண்டத்திலே குறிப்பிட்டதாக

இருக்குமானால் அது அவர்களை அறியாமலே, தமிழ்நாட்டு மக்களுக்கு, தஞ்சை விவசாயிகளுக்கு, காவிரி நதிதீர விவசாயிகளுக்கு அவர்களை நம்பி இருக்கின்ற தமிழ்நாட்டுப் பெருமக்களுக்கு இழைக்கின்ற ஒரு பெருந்தீங்காக முடிந்துவிடக் கூடும். எனவேதான் அந்த ஒப்பந்தம் என்ன என்பதை நான் இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன். அதில் The Mysore Government and the Madras Government further agree that the limitations and arrangements embodied in Clauses iv - viii supra shall at the expiry of 50 years from the date of the execution of these presents, we open to reconsideration in the light of the experience gained and of an examination of the possibility of the further extension of irrigation within the territories of the respective Government and to such modifications and additions as may be mutually agreed upon as the result of such reconsideration என்று மிகத் தெளிவாக இருக்கிறது. நான்காவதிலிருந்து எட்டாவது வரையில் உள்ள அந்த பிரிவுகள் மட்டும்தான் 'ரீ-கன்சிடரேஷனுக்கு' வரவேண்டுமே அல்லாமல் நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல எந்த இடத்திலும் 'ரெனீவல்' என்கின்ற வார்த்தை இந்த ஒப்பந்தத்திலே கிடையாது. 'எண்டட்' என்ற வார்த்தையும் எழுபத்தி நான்கோடு இது முடிந்து விடுகிறது என்ற வார்த்தையும் இந்த ஒப்பந்தத்திலே எங்கும் கிடையாது. எனவே இது 'பர்மனென்டு' ஒப்பந்தம். ஆனால் எந்த நான்கைப் பற்றி நாம் 'ரீ-கன்சிடர்' பண்ணி ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்றால் :

(1) Return of the areas newly brought under cultivation to be furnished to the other Government. அதாவது ஒவ்வொரு மாநிலத்திலும் புதிதாக பாசனத்திற்கு எடுக்கப்பட்டிருக்கிற பரப்பளவு.

(2) Extension of irrigation in Mysore. மைசூரில் பாசனத்திற்கு விரிவுப்படுத்தப்பட்ட பகுதி.

(3) Details of the reservoir to be furnished by Mysore, புதிதாக மைசூரில் கட்ட இருக்கும் நீர்த்தேக்கத் திட்டங்கள்.

(4) Reserve storage in Krishnaraja Sagar may be utilised for generation of power by Mysore. கே. ஆர். சாகரில், கிருஷ்ணராஜசாகரில் மின் உற்பத்தி செய்வதற்காகப் போடுகின்ற திட்டங்கள் குறித்து, இவைகளை குறித்துதான் 'ரீ-கன்சிடர்' பண்ண வேண்டும் என்று இருக்கிறதே அல்லாமல் நம்முடைய பழைய ஆயக்கட்டுகளுக்கு தரப்படுகின்ற தண்ணீரை 'ரீ-கன்சிடர்' பண்ண வேண்டும். ஒப்பந்தம் எழுபத்தி நான்கோடு முடிவடைகிறது என்று எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை.

அது மாத்திரமல்ல. அந்த ஒப்பந்தத்தினுடைய கடைசிப் பகுதியில் ". . The Madras Government and the Mysore Government hereby agree that, if at any time there should arise any dispute between the Madras Government and the Mysore Government touching the interpretaion or operation or carrying out of this agreement, such dispute shall be referred for settlement to arbitration" என்று மிகத் தெளிவாக அந்த ஒப்பந்தத்தினுடைய கடைசி பகுதியிலே இருக்கிறது. இதை மேலும் வற்புறுத்துகின்ற வகையில் 1956ஆம் ஆண்டு ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. நாடாளுமன்றத்தில் அதுதான் 'Inter-State Water Dispute Act'. அந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில் அதிலே இந்த 'may' 'shall' தகராறு வந்தது. 'may be constituted' என்றுதான் சட்டத்திலும் இருத்தது. ஆனால் அந்தச் சட்டம் நிறைவேறுவதற்கு முன்பு சில திருத்தங்கள் கொடுக்கப்பட்டு 'may' என்ற இடத்தில் எல்லாம் 'Should' என்கின்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டு, கட்டாயமாக 'tribunal' போட்டுத்தான் தீரவேண்டும் என்ற அளவிலே அது திருத்தப்பட்டிருக்கிறது. அது கிளாஸ் 4-ல் "The Committee are of opinion that when a State Government makes a request for the reference of a water dispute to a Tribunal the Central Government should have no discretion in the matter and that a Tribunal should be constituted for the adjudication of the water dispute. At the same time the Committee realise that when a request is received from a State Government in this behalf the

Central Government should be given an opportunity to settle the disputes by negotiations if possible. If however, negotiations fail, the dispute should be referred to Tribunal as a matter of course. . . ." என்று மிகத் தெளிவாக 'may' என்கின்ற சொல்லுக்குப் பதிலாக 'should' என்கின்ற அந்த சொல்லே போடப்பட்டு மிகத் தெளிவாக 'Tribunal-க்கு' விடுவது பற்றியும் அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. 1956-ஆம் ஆண்டு 'Inter-State Water Dispute Act நமக்கு உதவிகரமாக அமைந்திருக்கிறது. இவைகளையெல்லாம்' வைத்துத்தான் இன்றைக்கு நாம் மத்திய அரசோடு வாதாடிக்கொண்டிருக்கிறோம். முதல் அமைச்சரே சென்றிருக்கவேண்டும். முதல் அமைச்சரே சென்றிருக்க வேண்டும் என்று இங்கே சொல்லப்பட்டது. முதல் அமைச்சர் ஏன் செல்லவில்லை என்று வெளியிலே கூட பேசப்படுகிறது. பிரதமரைப் பார்ப்பதற்கே முதல் அமைச்சர் பயப்படுகிறார் என்று எல்லாம் சொல்லப்படுகிறது. ஆம், பிரதமர் என்னைக் கட்டித் தழுவிக் கொள்கிறார், அதனால் ஒருவேளை நான் பயப்படுகிறேனோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. இப்படி எல்லாம் பேசப்படுகிறது. அது எல்லாம் அரசியல். அதற்கெல்லாம் நான் செல்லவேண்டிய அவசியமில்லை. ஆனால் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் திரு. இராதா அவர்களும் நம்முடைய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் இலக்கியச் செல்வர் அவர்களும் இங்கே சொன்னார்கள். நாங்கள் அந்த 'மெமோரண்டத்தை' பார்க்கவில்லையென்று சொன்னார்கள். தமிழ்நாட்டிலே எதிர்க் கட்சியிலே, இரண்டு பிரதான எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் 'மெமோரண்டத்தை' பார்க்காமல் அவர்களுக்குக் காட்டாமல் அவர்கள் கொண்டுபோயிருக்கிறார்கள் என்பது விந்தையிலும் விந்தை. இருந்தாலும் பார்த்த பிறகாவது அவர்கள் அதற்கு தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துவார்கள் என்று நம்பி இந்த அளவிலே அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சொல்லும் போதே, ஆரம்பமே, எடுத்த உடனே அபத்தம் மாதிரிச் சொல்ல வேண்டுமா? முதல் வாக்கியமே, "The period of agreement on sharing of Cauvery waters between Tamil Nadu and Karnataka (State of Mysore) came to an end on 1974", என்று இருக்கிறது.

இதுதான் அந்த மகஜரினுடைய முதல் வாக்கியம். முதல் வாக்கியமே இப்படி இருக்க வேண்டுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. அதுமாத்திரமல்ல, 1986-ல் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பாராளுமன்ற உறுப்பினர்கள் இதுபோல் ஒரு மெமோரண்டம் கொடுத்து இருக்கிறார்கள். அதிலே ரொம்பத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். "Certain clauses of the 1924 Agreement are open to reconsideration at the end of 50 years in the light of the experience gained and on an examination of the possibilities of the further extension of irrigation within the territories of the respective Governments and to make such modification and additions as may be mutually agreed upon as the result of such reconsideration" என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது கொடுத்ததிலே, "reconsideration" என்றுதான் கொடுத்திருக்கிறார்கள். காரணம் அது அரசாங்கச் சார்பிலே கொடுத்த முறையீடு. அரசாங்கம் கொடுத்த மகஜர். அரசாங்கம் தயாரிக்கும்பொழுது என்ஜினியர்களெல்லாம் இருந்து தயாரிக்க முடிகிறது. அதிலே முக்கியமாக இருக்கிற பொறியாளர்கள், வல்லுநர்கள் இவர்களெல்லாம் சேர்ந்து தயாரிக்க முடிகிற ஒரு மகஜராக அது இருக்கிறது. அதனால், எம்.ஜி.ஆர். ஆட்சியிலே கூட, எப்படி தி.மு.க. ஆட்சியிலே முதலிலே கொடுக்கப்பட்டதோ அதேபோன்று ஒரு மகஜர்தான் எம்.ஜி.ஆர். ஆட்சியிலே தயாரிக்கப்பட்டு, அப்பொழுது இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், 1986ஆம் ஆண்டு பிரதமரிடத்திலே மனு கொடுத்திருக்கிறார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இப்பொழுது போய்க் கொடுத்தவர்கள், அவசரக் கோலம், அள்ளித்தெளி என்பதைப்போல் ஒரு ஆபத்தை உருவாக்கி விட்டார்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். நான் விளக்கத்தை மறுக்க வேண்டுமென்று விரும்பவில்லை. ஆனால், அந்த மகஜரை அவர்கள் கொடுத்த நேரத்திலே இருந்த சூழ்நிலைகளில், இப்படிப்பட்ட வார்த்தைகளெல்லாம் ஏன் வந்தன

என்றெல்லாம் நான் அவர்களிடத்திலே விளக்கம் கேட்டிருக் கிறேன். அவரும் சில டிக்ஷனரியினுடைய நகலையெல்லாம் எடுத்து, இந்த நிலையிலே நான் அந்த வார்த்தைகளைப் போட்டேன் என்று அவர் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார். ஆனால், இந்தக் கருத்தை அவர் வலியுறுத்துகிற நேரத்தில் அவருடைய அடிப்படைக் கருத்து என்ற அடிப்படையில். . .

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கர்நாடக மாநிலத்தார் செய்ய வேண்டிய பணிகளை நாம் இந்தச் சட்டமன்றத்தில் தயவு செய்து செய்ய வேண்டாம். அந்த விளக்கங்களையும், அதற்கான Interpretationகளையும் நாமே மீண்டும் மீண்டும் Supply செய்து நம்முடைய Case-ஐ Weak ஆக்க வேண்டாம். நேற்று முதல்வர் கேட்டுக்கொண்டதைப்போல, இந்த விவாதத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து, இந்த விவாதத்தையே அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அவைக்குறிப்பிலே - விவாதத்திலே இருக்கிற சில உள் பிரச்சினைகளைச் சொல்கிறார். அதை நீக்குவதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடிப்படை நோக்கத்திலே மாறவில்லை என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான் எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கருத்தில் இருக்கிறார்கள் என்பதை உங்களுக்குச் சொல்ல வேண்டு மென்பதினாலே சொன்னேன். அதேபோல் இந்த அறிக்கையைத் தயார் செய்து . . . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அங்கு சென்ற காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் நல்லெண்ணத் துடன்தான் சென்றார்கள். அதிலே எந்த மறுப்பும் இல்லை. ஆனால், எழுதிக் கொடுத்தவர்தான் புரியாமல் எழுதிக் கொடுத்து அவர்களைச் சிக்க வைத்துவிட்டார். நான் நல்லெண்ணத்தை இப்பொழுதும் சந்தேகிக்கவே இல்லை. அவர்கள் தவறு

செய்தார்கள் என்று சொல்லவில்லை. எழுதிக் கொடுக்கப்பட்ட வாசகம் அவர்கள் தவறு செய்ததாக ஒரு நிலையை உருவாக்கிவிட்டது. அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் தலைவரவர்களே, அதிலே ஒரே வார்த்தை. முதல் Sentence-ஐப் பார்த்தாலே, யார் எந்தப் பக்கமும் தவறான எண்ணத்தோடு செய்யவில்லை. ஒன்று Typing Mistake ஆக இருக்க வேண்டும். அல்லது (குறுக்கீடு) உண்மையை நான் ஒப்புக்கொள்கிறேன். Let me tell you. அதாவது அல்லது எந்த Ended on 1974 என்று இருக்கிறது. அப்படி ஒரு ஆங்கில வாசகமே வரமுடியாது. Ended on என்று வராது. Ended in என்று வரவேண்டும். Ended on 1974 என்பது It should be a typing mistake, or something else it has been left out.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த மனுவைத் தயாரிக்கும்பொழுது கொஞ்சம் எஸ். ஆர். பி. உதவி செய்து. . .

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இவ்வளவு நேரம் நாங்கள் காவிரிப் பிரச்சினைதான் புரியவில்லை என்று இருந்தோம். ஆனால் இப்பொழுது . . .

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதிலே இருக்கிற வார்த்தை Ended on அல்ல. Photostat-ஐ நான் பார்க்கிற பொழுது end onதான் பார்க்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதிலே இருப்பது "The period of agreement on sharing of Cauvery water between Tamil Nadu and Karnataka பிராக்கெட்டிலே (State of Mysore) என்பது, இதுவே ஆபத்தாகும்" என்று இருக்கிறது. திரு. பாலசுப்பிரமணியம் தலை குனிந்து விட்டார்.



உரை : 17 **நாள் : 24.07.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினையில் இன்று நேற்று அல்ல, நீண்ட நெடுங்காலமாக தமிழக அரசு, அது திராவிட முன்னேற்றக் கழக அரசாக இருந்தாலும், அருமை நண்பர் எம்.ஜி.ஆர். தலைமையில் நடைபெற்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாக இருந்தாலும், ஒரே நிலைதான் எங்கள் இரு கட்சிகளுக்குமிடையே உண்டு என்று நான் அல்ல, எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது இந்த அவையிலேயே அறிவித்திருக்கின்றார். ஏனென்றால், இந்தப் பிரச்சினை 1968 முதல் பேசிப் பேசிப் பார்த்து தீராத பிரச்சினையாக ஆகிவிட்ட ஒன்று. அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், பொதுப்பணித் துறை அமைச்சர் என்ற முறையில் நானும் கர்நாடகத்தினுடைய முதலமைச்சரும் பொதுப் பணித்துறையையும் தன் கையிலே வைத்திருந்த அமைச்சருமான வீரேந்திர பட்டீல் அவர்களும், நீர்ப்பாசனத் துறை அமைச்சராக மத்தியிலே இருந்த கே. எல். ராவ் அவர்கள் முன்னிலையிலே பலமுறை பேச்சுவார்த்தை நடத்தினோம். அதற்குப் பிறகும் தொடர்ந்து 27 தடவை பேச்சுவார்த்தைகள் நடைபெற்று எந்த முடிவும் ஏற்படவில்லை. முடிவை நெருங்கி வந்த நேரத்திலே சில பிரச்சினைகளால் அந்த முடிவைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டது என்பது இந்த அவைக்கும் நாட்டுக்கும் நன்றாகத் தெரியும். ஒவ்வொரு கட்டத்திலும் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கலந்து பேசி அதிலே குறிப்பாக அன்றைக்கு முன்னாள் முதலமைச்சர்களாக இருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களிடத்திலும், பெரியவர் பக்தவத்சலம் அவர்களிடத்திலும், நான் இந்தப் பிரச்சினை களுக்காக மற்ற மாநில முதலமைச்சர்களோடு கலந்து பேசச் செல்கின்றபோதெல்லாம், அவர்களை அவர் களுடைய இல்லத்திற்குச் சென்று சந்தித்து அவர்களுடைய

கருத்துரைகளையும் கேட்டு, ஆலோசனைகளையும் பெற்று பேச்சுவார்த்தை நடைபெற்று முடிந்த பிறகு மீண்டும் அவர்களுடைய இல்லம் சென்று அவர்களிடத்திலே நடை பெற்றவைகளை விளக்கி, அன்றைய சட்டமன்றக் கட்சித் தலைவர்களை எல்லாம் அழைத்துப் பேசித்தான் ஒவ்வொரு முடிவும் எடுக்கப்பட்டது. ஒரு கட்டத்திலே நாம் உச்சநீதி மன்றத்திலே தொடர்ந்திருந்த வழக்கைக்கூட பிரதமர் இந்திரா காந்தி அவர்களுடைய வேண்டுகோளின்படி திரும்பப் பெற்ற போதுகூட, 'subject to the condition' மீண்டும் எப்போது வேண்டுமானாலும் அந்த வழக்கைப் போடலாம் என்ற அளவிலே - அந்த வழக்கைத் திரும்பப் பெற்றபோதுகூட, திரும்பப் பெறலாம் என்ற அந்த முடிவு அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்து வைத்துப் பேசித்தான் எடுக்கப்பட்டது.

இந்த பிரச்சினையில் என்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தவேண்டும் என்று இங்கே நம்முடைய ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சினையிலே தமிழக அரசு தீவிரமாக இருக்கின்றது என்பதை டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் செல்வாக்கைப் பயன்படுத்துவது என்பதல்ல, நிலைமையை கர்நாடக மாநிலம் புரிந்துகொள்ள வேண்டும். நான் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதைப் போல, இது இரு நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சினை அல்ல. ஒரே நாட்டில், இரண்டு மாநிலங்களுக் கிடையிலேயான பிரச்சினை. இந்தப் பிரச்சினையை ஊதிவிட்டு, அதன் காரணமாக, கர்நாடகத்திலிருக்கிற தமிழர்களுக்கு ஒரு அவதியை உருவாக்கக்கூடாது என்று ஆளும் கட்சியிலே இருக்கிற நேரத்திலே மாத்திரமல்ல, நான் எதிர்க் கட்சியிலே இருந்த நேரத்திலேகூட, அப்படி ஒரு நிலை ஏற்படாமல், பாதுகாப்பதிலே மிகுந்த, சர்வ ஜாக்கிரதையா இருந்தேன் என்பதை எல்லோரும் அறிவார்கள். இன்றைக்கு இந்த நிலையை, பெரிய அளவிற்கு பூதாகாரமாக ஆக்க நான் முனையவில்லை. ஆனால், தஞ்சை, திருச்சி, காவிரி வட்டாரத்தில் விவசாயி களுடைய பிரச்சினை பரிதாபத்திற்குரிய பிரச்சினை என்பதை கர்நாடக மாநிலத்திலே உள்ளவர்கள் உணர வேண்டும் என்பதை நான் மீண்டும் இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக்

கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதிலே மத்திய அரசு தலையிடுவது தவறல்ல: தலையிட வேண்டும். பேச்சுவார்த்தை என அதிலே ஈடுபடுவது என்று வருகிறபோது, ஏதோ நாம் எல்லா உரிமைகளையும் விட்டுவிட்டு, அவர்களோடு பேசப் போவதைப் போல சிலபேர் கற்பனை செய்துகொண்டு, இதை ஒரு அரசியலாக்க எண்ணுகின்றனர். அப்படியல்ல. நடுவர் மன்றத்தி னுடைய அந்த வரையறைக்குட்பட்டுத்தான் பேச்சுவார்த்தை என்று திருப்பித் திருப்பிச் சொன்னாலும் கூட, அந்த வாக்கியத்திலே உள்ள 'அந்த நடுவர் மன்றத்தினுடைய வரையறைக்குட்பட்டு' என்ற பகுதியை நீக்கிவிட்டு, 'ஆஹா, பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை' என்று சிலபேர் இன்றைக்கு அரசியலிலே லாபம் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பிரச்சினையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவனாக இருக்கின்ற எனக்கும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருக்கின்ற அன்பிற்குரிய மூப்பனார் அவர்களுக்கும், – 'எல்லோரையும்விட' என்று சொன்னால், சில பேருக்கு கோபம் வரலாம்; இரண்டு பேருமே தஞ்சாவூர்க்காரர்கள் என்ற முறையில் – அதிக அக்கறையுண்டு என்பதை அவையிலே உள்ள உறுப்பினர்களும், நாட்டு மக்களும், தஞ்சைத் தரணியிலும், திருச்சித் தரணியிலும் வாழ்கின்ற காவிரி டெல்டாவினுடைய விவசாயிகளும் மிக நன்றாக அறிவார்கள். இதுபற்றி நாங்கள் இருவரும் பேசியிருக்கிறோம். இருவரும் பேசவேண்டிய இடத்திலே பேசியிருக்கிறோம். பேச வேண்டிய முறைப்படி பேசியிருக்கிறோம். உரிமைகளை விட்டுக்கொடுத்து விட்டு, விவசாயிகளுடைய வாழ்விலே ஒரு பெரிய துயரத்தை உருவாக்கிவிட்டு அதை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க, இந்த அரசு ஒருக்காலும் சம்மதிக்காது என்ற உறுதியை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நடுவர் மன்றத்தை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்ததே திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். தேசீய முன்னணி ஆட்சி பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களுடைய தலைமையிலே நடைபெற்ற போதுதான் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென்று

தஞ்சை விவசாயிகள் சார்பாக ஒரு வழக்கு போடப்பட்டது. அந்த வழக்கில், தமிழக அரசு தன்னையும் இணைத்துக் கொண்டு, அந்த வழக்கை விரைவுபடுத்தியது. அந்த நேரத்திலே கேட்கப்பட்ட கேள்வி, டெல்லியின் முக்கியமான கேள்வி, 'இனி பேச்சு வார்தைக்கு இடம் இல்லையா' என்பதுதான். அப்போது பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் தொலைபேசியிலே என்னைத் தொடர்பு கொண்டு கேட்டார்கள். அன்றைக்கு இம்மன்றம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. 'இனி பேச்சுவார்த்தைக்கு இடம் இல்லையா' என்று கேட்டார்கள். இடம் உண்டு என்று சொன்னால், நடுவர் மன்றம் கிடைக்காது என்று எனக்கு நன்றாகத் தெரியும். எனவே, நான் திரு. வி. பி. சிங் அவர்களிடத்திலே சொன்னேன் 'இடமில்லை' என்று. அப்படிச் சொன்னது மாத்திரமல்ல, உடனடியாக இந்த அவையிலே, ஒரு தீர்மானத்தை, இனி பேச்சுவார்ர்தைக்கு இடமில்லை, நடுவர் மன்றம் ஒன்றுதான் வழி என்ற தீர்மானத்தை, நிறைவேற்றி அதை 'பேக்ஸ்' செய்தி மூலம் அன்றைய பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். அதை அரசாங்க வழக்குரைஞர் நீதிமன்றத்திலே எடுத்துச் சொன்ன பிறகு, நடுவர் மன்றத்திற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. திரு. வி. பி. சிங் அவர்கள் தயக்கமின்றி உடனடியாக நடுவர் மன்றத்தை அமைத்துக்கொடுத்தார்கள். அதற்கு, தேசீய முன்னணி அரசும், இங்கிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசும், இந்த அரசுக்கு உறுதுணையாக இருந்த அனைத்துக் கட்சியினுடைய தலைவர்களும்தான் அன்றைக்குக் காரணம் என்பதை நான் என்றைக்கும் மறக்கமாட்டேன்.

இன்றைக்கு நடுவர் மன்றத்திலே ஒரு தொய்வு ஏற்பட்டிருக்கிறது. அதைத்தான் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். நடுவர் மன்றத்தின் தலைவர் நீதிபதியாக இருந்த சித்தடோஷ் முகர்ஜி அவர்கள் நீண்ட விடுப்பிலே சென்றுவிட்டார். அல்லது பதவி விலகி விட்டார் என்ற செய்தியின் அடிப்படையில் நாம் கோருவது எல்லாம் உடனடியாக அவரையே அந்தப் பொறுப்பில் நீடிக்கச் செய்ய பிரதமர் அல்லது மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்; அல்லது அவருக்குப் பதிலாக வேறு ஒருவரை

நியமிக்கவேண்டும். அப்போதுதான் நடுவர் மன்றம் முழுமை பெற்றதாக ஊனம் இன்றி இருக்கிறது என்று பொருள். அப்போது தான் நடுவர் மன்றத்தை நாம் பயன்படுத்திக்கொள்ளமுடியும் என்ற நிலை. எனவே, உடனடியாக அந்தக் குறையைப் போக்க வேண்டும் என்று மத்திய அரசை, இந்தத் தீர்மானத்தை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு, இந்த அவையின் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன். ஜூலை திங்களுக்குள்ளாக அப்படி அந்த நீதிபதி நியமிக்கப்படாவிட்டால் ஆகஸ்ட் திங்களில் இந்த மாமன்றத்திலே அது குறித்து ஒரு தீர்மானமே நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்பலாம் என்று இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

உரை : 18 நாள் : 31.07.1996

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உச்ச நீதிமன்றத்தில் நம்முடைய அரசின் சார்பாக ஒரு முறையீட்டு வழக்கு தொடரப்பட்டு, காவிரியில் நடுவர் மன்றத்தினுடைய இடைக்காலத் தீர்ப்புக் கேற்ப உரிய தண்ணீரை, இந்தத் திங்களுக்கு எவ்வளவு வழங்க வேண்டுமோ அதனை வழங்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற வகையிலும், பொதுவாக நடுவர் மன்றத்தி னுடைய தீர்ப்பை நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற வகையிலும் அந்த முறையீட்டிலே குறிக்கப் பெற்று, அதனை விசாரித்த உச்ச நீதிமன்றத்தினுடைய மாண்புமிகு நீதிபதிகள் நேற்றையதினம் தீர்ப்பு என்று வழங்குவதற்குப் பதிலாக ஒரு அறிவுரையை வழங்கிய செய்தி இரவு 8 மணிக்கு எனக்குக் கிடைத்தது. அந்தச் செய்தி கிடைத்தவுடன் டெல்லியிலே தங்கி வழக்கை நடத்திக்கொண்டிருக்கின்ற வழக்கறிஞர்களோடும், நம்முடைய அரசின் வழக்கறிஞர்களோடும், அரசு பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகளோடும் கலந்து பேசினேன். இரவு ஒரு மணி வரையில் இத்தகைய பேச்சுவார்த்தைகள் மூலம் நாம் என்ன நிலை எடுக்கலாம் என்பதைப் பற்றிச் சிந்தித்து நாம் எத்தகைய நிலை எடுத்துள்ளோம் என்பதை இந்த அவைக்கு விளக்குகின்ற வகையில் சில கருத்துக்களை இங்கே கூற நான் கடமைப்பட் டிருக்கிறேன். உச்ச நீதிமன்றத்திலே சொல்லப்பட்டிருப்பது, இரண்டு மாநில முதலமைச்சர்களும் கலந்து பேசிப் பேசுவது என்றால் நடுவர் மன்றத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் அல்ல. நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பின்படி, இடைக்காலத் தீர்ப்பின்படி இப்பொழுது பெறவேண்டிய தண்ணீர் குறித்து அந்தப் பேச்சு வார்த்தையை நடத்தலாம். அதற்கு இரண்டு முதலமைச்சர்களும் தயாரா என்பதை இன்று பிற்பகல் ஒரு மணிக்குள்ளாக உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்று ஒரு அவசரமான

செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. பத்திரிகையிலும் அந்தச் செய்தி வந்திருக்கிறது. அதைத்தான் நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதனைத் தொடர்ந்து கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு பட்டேல் அவர்கள் ஒரு ஃபேக்ஸ் கடிதம் நேற்று இரவு எனக்கு அனுப்பி வைத்திருக்கிறார். அந்தக் கடிதத்தை, அதற்கு நான் எழுதிய பதில் கடிதத்தை, இரண்டையும் இந்த அவையில் முன்னால் வைப்பது என்னுடைய பெரும் கடமையாகும்.

"My Dear Karunanidhiji.

We have received a communication from our Supreme Court Advocate Shri. Mohan V. Kattarkee in the context of the Supreme Court hearing which took place today on the Cauvery Water Dispute. It appears that in the course of the proceedings, the Hon'ble Bench advised that the Chief Ministers of Karnataka and Tamil Nadu meet together, as soon as possible, in order to find and amicable solution at the political level to the problem of implementation of the interim order of the Tribunal. We are told that the dates of the proposed meeting between ourselves should be conveyed to the Hon'ble Bench by tomorrow afternoon. I personally welcome this advice of the Supreme Court very warmly and I do hope that you reciprocate my sentiments. While I would like to have this meeting held as soon as possible, you may be aware that our Legislature is now in session which would make it a little difficult for me to meet with you prior to August 14 when the session concludes. I would, therefore, suggest that we decide to meet at any date subsequent to August 15th (Independence day), which is convenient to you. The venue of our meeting may also decided at your convenience. I propose to brief our Supereme Court Advocate accordingly. Awaiting an early reply. With best wishes.

Yours sincerely,
Patel."

இந்தக் கடிதத்திற்குப் பிறகு அவருக்கு நான் இன்று எழுதியுள்ள கடிதத்தில்,

"Dear Thiru Patel,

I acknowledge, with thanks, the receipt of your fax message of yesterday. I am also advised that the Supreme Court Bench, yesterday, during the hearing of the Interlocutory Application of Tamil Nadu seeking a mandatory direction tc Karnataka to implement the interim Award of the Cauvery Water Dispute Tribunal, has decided that the Chief Ministers of Tamil Nadu and Karnataka meet at the earliest and evolve a solution for the release of Cauvery Waters to Tamil Nadu. In deference to the desire of the Court, I am agreeable to meeting so that we can evolve an arrangement for release of water to meet the requirements of the Cauvery Ayacut in Tamil Nadu in terms of interim order of the Tribunal. As you are aware, almost all the farmers in the delta have lost their Kuruvai crop. The storage in the Mettur reservoir is too inadequate. The farmers need to be assured of the certainty of the supplies at least to cultivate the samba crop. In view of the extreme urgency, your suggestion that we meet subsequent to August 15, is far out of this requirement.

I would suggest that, even though our Legislatures are in session, we meet within a week from now, on any day except the 4th Augest, 1996, as I have already a programme in the mofussil on that day. Kindly let me know when we would meet at the earliest. The venue can be Chennai (Madras) and I trust you would find it convenient. I have pleasure to invite you and your team here to be our guests. I am instructing our Counsels to convey to the Chief Justice today the contents of our correspondence.

With kind regards".

என்று இப்படி நான் கடிதம் எழுதியிருக்கிறேன், அவர் 15ஆம் தேதிக்குப் பிறகுதான் சந்திக்க இயலும் என்று சொல்லியிருப்பது மிக மிகக் காலதாமதமான ஒரு செய்தி ஆகும். அதற்குள்ளாக நம்முடைய தேவையை நிறைவு செய்ய வேண்டும் என்பதும் ஏறத்தாழ 42 டி.எம்.சி.-யில் இதுவரையிலே அவர்களாகக் கொடுத்தது 5 டி.எம்.சி., இயற்கையாகத் தந்தது ஒரு 5 டி.எம்.சி., என்ற அளவிலேதான் கிடைத்திருக்கிறது. ஏறத்தாழ 30 அல்லது 31 டி.எம்.சி., தண்ணீர் இந்தத் திங்களில் நமக்குத் தரவேண்டும். அதைப்பற்றித்தான் இப்போது பேச்சு வார்த்தையே தவிர மொத்த, நீண்டகால இந்தக் கோரிக்கையைப் பற்றிய பேச்சுவார்த்தை அல்ல. அப்படி ஒரு பேச்சுவார்த்தை வருமானால், அதை எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசித்தான், அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டுத்தான் அந்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவேன். இப்போது இந்த 30, 31 டி.எம்.சி. தண்ணீரைப் பெறுவதைப் பற்றிய பேச்சுவார்த்தை என்பதால்தான் அவர்கள் எழுதிய கடிதத்திற்கு விரைவிலேயே சந்திக்கவேண்டும் என்றும், சென்னையில் சந்திப்பதற்கு அவர்களை வரவேற்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்றும் ஆகஸ்டு முதல் வாரத்திலேயே சந்திப்பதற்கு ஒரு வசதியான தேதியை மாண்புமிகு திரு. பட்டேல் அவர்களே குறிப்பிடவேண்டும் என்று கேட்டும் எழுதியிருக்கிறேன். இதுதான் இப்போது அவைக்கு நான் தருகின்ற தகவல். இந்தச் செய்தியை சுப்ரீம் கோர்ட்டுக்கும் நாங்கள் சந்திப்பதற்கு தயாராக இருக்கிறோம் என்ற செய்தியை மாண்புமிகு திரு. பட்டேல் அவர்கள் தெரிவித்து இருப்பதைப் போல நாமும் நம்முடைய அரசின் சார்பாக நம்முடைய வழக்கறிஞர்கள் மூலமாக தெரிவிக்க இருக்கிறோம் என்பதையும் அறிவித்து இந்த அளவிலே அமைகிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் ஏற்கனவே ஆணையிட்டு இன்று பிற்பகலுக்குள் தேதி அறிவிக்கப்படவேண்டும் என்ற சூழ்நிலையில் இப்போது கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் பேக்ஸ் மெசேஜ் அனுப்பியிருக்கிறார்கள்,

நம்முடைய முதலமைச்சர் அவர்களும் அதற்கு பதில் அனுப்பியிருக்கிறார்கள். இந்த முக்கியமான பிரச்சினையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி தொலைபேசியில் நேரத்தை, ஒரு நாளை பிக்ஸ் செய்து இன்று மாலைக்குள் அந்தத் தேதியை அறிவிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெலைபேசியில் பேசினால் பிறகு அவரும் மறுக்கலாம், நாமும் மறுக்கலாம், அப்படிப் பேசவில்லை என்று. அதனால்தான் எதுவும் ரெக்கார்டட் ஆக பதிவு ஆக வேண்டும் என்ற முறையிலே அவரும் கடிதம் எழுதியிருக்கிறார், நானும் கடிதம் எழுதியிருக்கிறேன். இப்படி பேக்ஸில் அனுப்பியிருக்கிறோம். ஆதாரபூர்வமாக இது உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்படும். இந்தக் கடிதத்திற்குப் பிறகு அவர் நான் சொல்லியிருக்கிற 4ஆம் தேதியை தவிர ஆகஸ்டு முதல் வாரத்தில் எந்தத் தேதியென்றாலும் அவர் என்னோடு பேசலாம், நானும் அவரோடு பேசுவேன். தொலைபேசியில் பேசுவதற்கு இந்தப் பேக்ஸ் தடங்கலாக இருக்காது. பேசுவோம்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோரு தடவையும் உச்ச நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதலை கர்நாடக அரசு, கர்நாடகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற முதலமைச்சர்கள் மறுத்து வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மறுத்து வந்து கொண்டிருக்கிற காரணத்தால்தான் நாம் மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று இருக்கிறோம். மீண்டும் இதுபோன்று மறுத்து, மறுத்து அவர்கள் மறுப்பு தெரிவித்துக் கொண்டே காலத்தைக் கடத்துவதற்கான அத்தனை நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபடுகிறபோது மீண்டும் நாம் நம்முடைய மத்திய அரசை அணுகி இதுபோன்ற இந்த அரசு இப்படி உச்ச நீதிமன்றத்தை மதிக்காத தன்மையில் இருக்கிறதே. பொதுவாக நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பை மதிக்காத ஒரு தன்மையில் இருக்கிறதே. பாரதப் பிரதமர் அவர்கள் இதில் தலையிட்டு உடனடியாக அதற்கு நடவடிக்கை

எடுக்கவேண்டும் என்ற ஆலோசனையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? ஆக கர்நாடக அரசு தண்ணீர் தரும், இந்த மாதத்திற்குரிய தண்ணீர் தரும் என்று நம்பித்தான் நாம் இந்த தஞ்சை மாவட்டத்திற்கு தண்ணீர் திறந்து விட்டு இருக்கிறோம். பொதுவாக இன்றைக்கு பயிரிடப்பட்டு இருக்கக்கூடிய, ஆழ்குழாய்க் கிணறுகள் மூலமாக விவசாயம் செய்யப்பட்டு இருக்கிற பயிர்கள்கூட கருகிப்போகக்கூடிய ஒரு அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு போவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது காவிரிப் பிரச்சினைக்கு, ஒரு நீண்டகால, முழுமையான தீர்வுக்காக நடைபெறுகின்ற பேச்சு வார்த்தை அல்ல. நான் முதலிலேயே குறிப்பிட்டிருக்கின்றேன். அப்படிப்பட்ட பேச்சுவார்த்தை என்றால், அது நடுவர் மன்றம் என்கின்ற அந்த வட்டத்திற்குள் நடைபெற வேண்டும்; அதைக் கடந்து நடைபெறக்கூடாது என்பதை இன்று, நேற்று அல்ல; நீண்ட காலமாக நான் தெரிவித்து வந்திருக்கிறேன்.

இப்பொழுதுள்ள பிரச்சினை, குறுவை ஏற்கனவே போதுமான அளவிற்குப் பயிரிடப்பட முடியாத சூழ்நிலை. சம்பாவும் பயிரிட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடாமல் இருக்க, இந்தக் காலக்கட்டத்திலே பெறவேண்டிய தண்ணீரை எப்படிப் பெறுவது என்பதைப்பற்றிப் பேசவும் நடுவர் மன்றத்தினுடைய இடைக்கால உத்தரவை அந்த நிவாரண உத்தரவை - எப்படி அமல்படுத்துவது என்பதைப் பற்றிப் பேசவும்தான். அதற்காகத்தான் உச்ச நீதிமன்றம் இரண்டு முதலமைச்சர்களும் பேசத் தயாரா என்பதை இன்று பிற்பகலுக்குள்ளே அறிவிக்கவேண்டுமென்று கேட்டிருக்கின்றது. நாம் உச்ச நீதிமன்றத்தையும் மதித்துப் பேசத் தயாராக இருக்கிறோம் என்று குறிப்பிட்டதற்குக் காரணம், நம்முடைய உரிமைகளை விட்டுக்கொடுத்து என்றைக்கும் நாம் எந்தப் பேச்சுவார்த்தைக்கும் தயாராக இல்லை; அதிலே காம்ப்ரமைஸே கிடையாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். உரிமைகளை விட்டுக்கொடுக்கமாட்டோம்.

அதே நேரத்திலே கர்நாடக மாநிலத்திலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள், தமிழ்நாட்டில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் நலனுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் இரண்டு மாநில அரசுகளும் ஒரு நல்ல முடிவை ஏற்படுத்து வதற்குக் கடந்த 27 அல்லது 28 முறை நடந்த பேச்சுவாத்தையிலே இடமில்லாமல் போய்விட்ட காரணத்தாலும், முடிவு ஏற்படாமல் போய்விட்ட காரணத்தாலும்தான் நடுவர் மன்றத்தினுடைய உதவியை நாம் நாடினோம். நடுவர் மன்றமும் நமக்குக் கிடைத்தது. அதனுடைய தீர்ப்பும் கிடைத்தது; இடைக்கால நிவாரணம் தீர்ப்பும் கிடைத்தது; அதை நிறைவேற்றுவதிலே கர்நாடக மாநிலம் சில நேரங்களில் தடையாக இருந்தது. நிறை வேற்றவில்லை. எனவே, உச்ச நீதிமன்றத்திற்குச் செல்ல நேரிட்டது. இப்பொழுதும் செல்ல நேரிட்டிருக்கிறது. அதிலே உச்ச நீதிமன்றத்தினுடைய இந்த அறிவுரையை இன்றைக்கு ஏற்பதால் எந்தப் பாதகமும் ஏற்பட்டு விடாது. விரைவாக நமக்குக் கிடைக்க வேண்டிய, அவசரத்திற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரைப் பெறுவதற்கும் ஒரு வழி ஏற்படும் என்ற நிலையிலேதான் அவர்களுக்கு நாம் பதில் எழுதியிருக்கின்றோம்.

மத்திய அரசை அணுகக் கூடாதா என்று கேட்டிருக் கின்றார்கள். மத்திய அரசையும் நிச்சயமாக அணுகுவோம்; அணுகிக்கொண்டுதான் இருக்கின்றோம். இருந்தாலும்கூட, சட்ட ரீதியாக நாம் பெற்றுள்ள நடுவர் மன்றத்தினுடைய நிலையை இழந்துவிட்டு, வெறும் பேச்சுவார்த்தையின் மூலமாக மாத்திரம் இதற்கு ஒரு தீர்வு காண்பதாக நாம் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.



உரை : 19 நாள் : 05.08.1996

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தின் விருப்பத்திற்கேற்ப நானும், கர்நாடக முதலமைச்சர் அவர்களும் இன்று காலையில் தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினோம். இந்தப் பேச்சுவார்த்தை பரஸ்பரம் நட்புணர்வோடு நடைபெற்றது. இதன் விளைவாக உடனடி இடைக்கால நிவாரணமாக தமிழகம், கர்நாடகம் ஆகிய இரண்டு மாநில விவசாயிகளுக்கும் பாதகம் ஏற்படாத வகையில் காவிரித் தண்ணீரை இரு மாநிலங்களுக்கும் பயனளிக்கும் வண்ணம் பகிர்ந்து உபயோகித்துக் கொள்வது என்றும், இரு தரப்பினரின் தேவைகளையும் ஈடுசெய்யும் வகையை மனதில் கொள்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கர்நாடக மாநிலத்திற்கு வந்து தொடர்ந்து இதுபற்றிப் பேச கர்நாடக முதலமைச்சர் அவர்கள் எனக்கு அழைப்பு விடுத்திருக் கிறார்கள். அந்தச் செய்தியையும் இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்து, அந்தப் பயணம் ஆகஸ்டு 15-க்குப் பிறகு இருக்கக் கூடும் என்பதையும் அறிவிக்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

உரை : 20 நாள் : 27.08.1996

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவரும், மற்ற உறுப்பினர்களும், இறுதியாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களும் நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பைப் பெறுவதற்கு நடுவர் மன்றத்திலே தலைமை வகிக்கும் நீதிபதி பதவி விலகிவிட்டாரே, அவருக்குப் பதிலாக வேறு ஒருவர் தலைவராக நியமிக்கப்படுவாரா? அதுபற்றி இந்த அவையிலே பேசப்பட்ட பிரச்சினைகளுக்கு முடிவு ஏற்பட்டு விட்டதா என்ற வினாவை எழுப்பியிருக்கிறார்கள். நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பை எதிர்நோக்கித்தான் நடுவர் மன்றமே தேவை என்ற அந்த முடிவை எடுத்து அதை வலியுறுத்தி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயே கடந்த காலத்திலே நடுவர் மன்றம் அன்றிருந்த மத்திய அரசால், திரு. வி. பி. சிங் அவர்களால் அமைக்கப்பட்டது என்பதை யாரும் மறந்து விட முடியாது.

இப்போது நடுவர் மன்றத்தினுடைய தலைவர் பற்றி விலகியதற்குப் பிறகு ஏற்பட்டுள்ள ஒரு சங்கடமான சூழ்நிலை என்ன ஆகுமோ என்ற எதிர்ப்பார்ப்பு, ஆவல் இவைகளுக்கு இடையே இந்த அவையிலேயே இரண்டொருமுறை அதுபற்றி பேசி, இரண்டு கடிதங்களும் தமிழக அரசின் சார்பாக இந்திய பிரதமர் அவர்களுக்கு எழுதப்பட்டிருக்கிறது. நான் சென்ற முறை டெல்லிக்குச் சென்றபோது பிரதமர் அவர்களைச் சந்தித்து அது பற்றி அவர்களிடத்திலே பேசியிருக்கிறேன். அப்போது அவர் சொன்னது, நடுவர் மன்றத் தலைவரை நியமிப்பதிலே எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. அது உச்ச நீதி மன்றம் மூலமாக வரவேண்டிய ஒன்று. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு

தெரிவிப்பதற்கு இப்போது வாய்ப்பு இல்லை; காரணம், அவர் வெளிநாடு சுற்றுப்பயணம் சென்றிருக்கிறார், வந்த பிறகு நிச்சயமாக அவருக்கு எழுதுவோம் என்று குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு தாமதம் ஏற்பட்ட காரணத்தால், இன்றையத்தினம் இந்த அவையில் நான் ஏற்கனவே உறுதியளித்தபடி, நடுவர் மன்றத்தினுடைய தலைவரை நியமிப்பதற்கு மத்திய அரசை வலியுறுத்துகின்ற வகையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் படுவதாக இருந்து, அதற்கான கோப்புகள் எல்லாம் தயாராகி பொதுப்பணித் துறையும், பொதுப்பணித் துறை அமைச்சரும் நானும் கையெழுத்திட்டு அந்தத் தீர்மானம் தயாராகவே இருக்கின்ற சூழ்நிலையில், 24-ந் தேதி அன்று பிரதமர் அவர்கள் சென்னைக்கு ஒரு நிகழ்ச்சிக்கு வந்தபோது அவரோடு பேசுகின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அதிலும் குறிப்பாக, கலைவாணர் அரங்கத்திலிருந்து விமான நிலையம் செல்லுகிற வரையில் ஒரே காரில் இருவரும் பயணம் செய்தபோது அதுபற்றி நான் கேட்டேன். தீர்மானம்கூட தயாராக இருக்கிறது. நாங்கள் சட்ட சபையிலே நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப் பட்டிருக்கிறோம் என்று சொன்னபோது அவர் சொன்னார். உச்ச நீதிமன்றத்திற்கு அதுபற்றி நான் எழுதிவிட்டேன். தலைவரை நியமிக்க வேண்டும் என்று எழுதிவிட்டேன். எனவே தீர்மானம் தேவைப்படாது என்று சொன்னார். இதை நான் அவையிலேயே வெளியிடலாமா என்று சொன்ன பிறகு, வெளியிடலாம், தாராளமாக, என்று சொல்லியிருக்கிறார். எனவே பிரதமர் உச்ச நீதிமன்றத்திற்கு நடுவர் மன்றத்திற்கான தலைவரை நியமிக்க வேண்டும் என்று எழுதியிருப்பதற்கு, இந்த மன்றத்தின் சார்பாக அவருக்கு நன்றி கூறிக்கொண்டு, விரையிலேயே அந்த நடுவர் மன்றத்தினுடைய தலைவர் நியமிக்கப்படுவார் என்பதை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் 15-ஆம் தேதிக்குப் பிறகு சந்திப்பதாக இருந்த நிலையில், ஏன் சந்திக்கவில்லை என்று கேட்டிருக்கிறார். அங்கே சட்டப் பேரவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நம்பிக்கையில்லாத தீர்மானம் அந்த அரசின்

மீது வந்திருக்கின்ற சூழ்நிலையில் அவர்கள் அதிலே பரபரப் பிலேயிருக்கிற இந்தக் காலகட்டத்தில், சந்திப்பை ஒத்திவைத் திருக்கிறோமேயல்லாமல் நிச்சயமாக சந்திப்பு உண்டு. எந்தச் சந்திப்பாக இருந்தாலும், எந்தப் பேச்சுவார்த்தையாக இருந்தாலும் அது நடுவர் மன்றத்தை, அந்தக் கோட்டை தாண்டியதாக இருக்காது என்ற உறுதியை நான் அளிக்கின்றேன். விரைவில் சந்தித்து தொடர்ந்து பேசுவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

உரை : 21 **நாள் : 28.01.1997**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பிரச்சினையில், சில நேரங்களில் எவ்வளவு எச்சரிக்கையோடும், ஜாக்கிரதை யோடும் அணுக வேண்டும் என்பது பொறுப்புள்ள ஒரு அரசின் கடமையாக இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. ஏனோதானோவென்று எந்த முடிவுகளையும் மேற்கொள்ள இயலாது. பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்கிற அளவிற்கு, கடந்த காலத்திலே, 1968-ஆம் ஆண்டு முதல், பேரறிஞர் அண்ணா அவர்கள் இங்கே முதலமைச்சராகப் பொறுப் பேற்றிருந்த காலம் தொட்டு, பேச்சுவார்த்தை, 27 முறை 28 முறை என்று நடத்தப்பட்டு, அங்கேயும் பல முதலமைச்சர்கள் மாறி மாறி வந்து, இங்கேயும் பல முதலமைச்சர்கள் மாறிமாறி வந்து, ஆட்சிகள் மாறிய சூழ்நிலையிலேயும்கூட, அங்கேயும் சரி, இங்கேயும் சரி, ஒரே கோட்டில் நின்று, என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் இதே அவையில் சொன்னதைப் போல, திராவிட முன்னேற்றக் கழக அரசு காவிரி நீர்ப் பிரச்சினையில் எந்த நிலையை எடுத்ததோ, அதே நிலைதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் நிலை என்று கூறியதற்கு ஒப்ப, ஒரே நிலையில், தமிழக அரசின் சார்பாக நாம் பேச்சுவார்த்தை நடத்தி, அது வெற்றி பெறாமல் போன சூழ்நிலையிலேதான், நடுவர் மன்றத்தைத் தவிர வேறு வழியில்லை என்ற தீர்மானத்தை இதே அவையில் நிறைவெற்றி, பிரதமராக இருந்த திரு. வி.பி. சிங் அவர்களுக்கு அனுப்பி வைத்து, அதுவும் 'ஃபேக்ஸ்'-லே அனுப்பி வைத்து, உச்சநீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வழக்கின் அடிப்படையில், நடுவர் மன்றம் அமைக்கலாம் என்று உச்சநீதிமன்றம் ஆணை பிறப்பித்து,

திரு. வி. பி. சிங் அவர்களை நாம் வலியுறுத்தி, அவர்களும் உடனடியாக நடுவர் மன்றத்திற்கான உத்தரவைப் பிறப்பித்து, நீதிபதி நியமிக்கப்பட்டு, நடுவர் மன்றம் நடைபெற்றுக் கொண்டிருந்த சூழ்நிலையில், ஒரு இடைக்காலத் தீர்ப்பு அளிக்கப்படுகின்ற ஒரு காலகட்ட,த்தில், திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு, அந்த இடைக்காலத் தீர்ப்பைக் கர்நாடக அரசு நடைமுறைப்படுத்த முடியாது என்று கூறியது. அதன் காரணமாக, முன்பிருந்த அரசும், இன்றைக்கு இருக்கின்ற இந்த அரசும் சட்டத்தின் உதவியை நாட வேண்டிய நெருக்கடிக்கு ஆளாயின என்பதையும் அவை உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்.

இப்போதுகூட கர்நாடக முதலமைச்சரோடு அமர்ந்து பேச வேண்டும் என்பதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, உச்சநீதிமன்றத்தின் ஒரு யோசனைக்கு ஏற்ப, நம்முடைய சம்பாப் பயிர், குறுவைப்பயிர் ஆகியவற்றிற்குத் தண்ணீர் தேவை என்ற நெருக்கடியின் காரணமாக, உச்சநீதிமன்றத்திற்கு நாம் சென்றபோது, 'நீங்கள் அதைப்பற்றி ஒருமுறை பேசுங்கள்' என்று தமிழக அரசுக்கும், கர்நாடக அரசுக்கும் அவர்கள் தந்த அறிவுரையின் காரணமாக, பேசலாமா, வேண்டாமா என்ற அந்த விவாதத்திற்கு இடம் தராமல், உச்சநீதிமன்றத்தை அவமதித்ததாகும் என்ற காரணத்தால், அந்த அடிப்படையிலே பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டது. பேச்சுவார்த்தை தொடங்கப்பட்ட அந்த நிலையில், அப்பொழுது நமக்குத் தேவைப்பட்ட தண்ணீரை முழு அளவிற்குக் கர்நாடக அரசு தராவிட்டாலும்கூட, ஓரளவு தண்ணீரை அவர்கள் வழங்க முன்வந்தார்கள். அதோடு சேர்ந்து மழையும் வந்துவிட்ட காரணத்தால் அதற்குமேல் அவர்களிடத்திலே தண்ணீர் கேட்க வேண்டிய அவசியமில்லாமல் போயிற்று. அப்போது கர்நாடக மாநில முதல்வர் அவர்கள், நடுவர் மன்றத்திற்கு நாம் ஏன் செல்ல வேண்டும், பேசியே தீர்க்கலாம் என்று சொன்னபோதுகூட, அதற்காக நாம் நடுவர் மன்றத்தை வேண்டாம் என்று எந்தக் காலத்திலேயும் சொல்லவில்லை. நடுவர் மன்றம் இருந்து கொண்டே இருக்கிறது. அதற்கிடையில் நாம் பேசித் தீர்த்தால், நடுவர் மன்றத்திலே சொல்லி, 'நாங்கள் பேசித் தீர்த்து விட்டோம்.

அதையே தீர்ப்பாக அளியுங்கள்' என்று சொல்ல அதிக நேரம் ஆகாது. எனவே, நடுவர் மன்றம் வேண்டாம் என்று சொல்லவில்லை. அதற்கிடையில் நடுவர் மன்றத்தினுடைய தலைவர் பதவி விலகிவிட்டார்.

அப்போதுகூட அந்தக் தலைவருக்கு, பதவி விலகிய தலைவருக்குப் பதிலாக இன்னொருவரை நியமிக்க வேண்டும், அல்லது, அவரையே நியமிக்க வேண்டும் என்றுதான் தமிழக அரசின் சார்பாக, பிரதமருக்குச் சொல்லப்பட்டது. பிரதமரும் ஒருமாத காலம், இரண்டுமாத காலம் தாமத்திற்குப் பிறகு, அவர் உச்சநீதிமன்றத்திற்கு எழுதியும்கூட, உச்சநீதிமன்றத்திலேயிருந்து, அவருக்கு, யாரை நியமித்து இருக்கிறோம் என்ற பதில் வர நேரமாயிற்று; நாள் ஆயிற்று. பிறகு உச்சநீதிமன்றம் ஒருவரை அறிவித்தது. அறிவித்த பிறகு, அரசு அதை ஏற்றுக்கொண்டது. மத்திய அரசு அதை ஏற்றுக் கொண்டு, பேச்சுவார்த்தை, நடுவர் மன்றத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 7-ஆம் தேதி நடுவர்மன்றம் கூடுகிறது என்று சொன்னால், கடைசி பேச்சு வார்த்தை, நமக்கும், கர்நாடகத்திற்கும் 5-ஆம் தேதி இங்கே நடைபெற்றிருக்கிறது. ஏன் 5-ஆம் தேதி நடைபெறுகிறது? பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடியாவிட்டால், 7-ஆம் தேதி நடுவர்மன்றம் இருக்கவே இருக்கிறது என்ற நம்பிக்கையுடன் நடைபெற்றது. ஆகவே, நடுவர்மன்றத்தைத் தூக்கிப் போட்டுவிட்டு, பேச்சுவார்த்தை நடைபெறவில்லை. பேச்சு வார்த்தையில் பலவீனம் ஏற்பட்டால், அதை நடுவர் மன்றத்திற்குச் சொல்லலாம் என்ற அந்த கருத்தோடு அது நடைபெற்றது. அதிலே என்னென்ன பேசினீர்கள் என்பதைப் பலரும் கேட்டார்கள். பேச்சுவார்த்தையின்போது, பேசப்பட்ட விஷயங்களை வெளியிலே சொன்னால் - அது இரகசியமாக பாதுகாக்கப்பட வேண்டும் என்பதல்ல - அதைப்பற்றிய கருத்துக்கள் வெளியே வருமானால் ஏற்படக்கூடிய விளைவுகளை எண்ணிப் பார்க்கவேண்டும். ஏற்கெனவே ஒரு முறை, நடுவர்மன்றத்தினுடைய இடைக்கால ஆணையை நிறைவேற்ற கர்நாடக அரசு தவறியபோது, உணர்ச்சிமயமாக அந்தப் பிரச்சினையை அணுகிய காரணத்தினால், கர்நாடகத்திலே உள்ள தமிழர்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டார்கள்

என்பதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது. நம்முடைய எண்ணமெல்லாம், காவிரிப் பிரச்சினையை வைத்து, கர்நாடகம், தமிழகம் ஆகிய இரண்டு மாநிலங்களுக்கும் இடையே ரகளை, அமளி, இரண்டு மாநில மக்களுக்கிடையே வேற்றுமை என்ற சூழ்நிலை உருவாகக்கூடாது என்பதுதான் நம்முடைய எண்ணம். எனவேதான், அகில இந்திய அளவிலே உள்ள, தமிழ்நாட்டிலேயுள்ள கட்சிகள் எல்லாம்கூட, அது இந்திய கம்யூனிஸ்ட் ஆனாலும், சி. பி. எம். ஆனாலும், வேறு பல கட்சிகள் ஆனாலும் கூட, தொடர்ந்து பேச்சுவார்த்தைதான் வேண்டும் என்பதை எடுத்துக்கூறி வந்திருக்கின்றன. இப்போதும் கூறுகிறார்கள். இருந்தாலும், பேச்சுவார்த்தைகளிலே வெற்றிபெற முடியவில்லை என்பதை நாம் மீண்டும் ஒருமுறை உணர்ந்திருக்கிறோம். அது ஒன்றும் தவறல்ல. 'பேச கூப்பிட்டார்கள், போகவில்லை' என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாகாமல், பேச்சுவார்த்தையிலே கலந்து கொள்வதால் எந்தத் தவறும் இல்லை. இதிலே பிரதமர் தலையிட்டார் என்று நம்முடைய நண்பர் திரு. அழகிரி அவர்கள் கூறுவது, என்னால் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. அவர் இன்னும் தலையிடவில்லை. தலையிட்டிருந்தால், இந்தப் பிரச்சினை அவரால் தீர்த்து வைக்கப்பட்டிருக்க முடியுமா என்பது வேறு விஷயம். அவரே தலையிட்டிருந்தால்கூட, கர்நாடக மாநில மக்கள், அதை எப்படி ஏற்றுக் கொள்வார்கள் என்பதும் எனக்குத் தெரியாது. எனவே, அவருடைய கட்சிக் கூட்டத்திலே பேசவேண்டிய ஒரு விஷயத்தை, எங்களுடைய கட்சிக் கூட்டத்திலே பேசவேண்டிய ஒரு விஷயத்தை, பொதுவாக, அவர் இங்கே, கருணாநிதிக்கும், மூப்பனாருக்கும் சேர்த்துத்தான் பேசுகிறேன் என்று அவர் இங்கே பேசியிருப்பது, என்னைப் பொறுத்தவரையில், தனிப்பட்ட முறையிலே, அவ்வளவு விரும்பத்தக்கதல்ல. இருந்தாலும்கூட நான் அவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்; நாம் நீதியை நம்பியிருக்கிறோம்; நடுவர்மன்றத்தை நம்பியிருக்கிறோம்; நாம் நீதியை நம்பியிருக்கிறோம்; இல்லை என்ற ஒரு நிலைமை ஏற்படுமேயானால், தமிழகத்தை நிச்சயமாக இந்த அரசு காட்டிக்கொடுக்காது என்பதை மாத்திரம் நான் உறுதிபட இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

உரை : 22 நாள் : 12.03.1997

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நதிகளை இணைப்பது என்பது வேறு; தேசிய மயம் ஆக்குவது என்பது வேறு. இணைப்பது என்பது ஏற்கெனவே கங்கையிலிருந்து காவிரி வரையில் இணைப்பது என்ற ஒரு திட்டம் மாண்புமிகு மறைந்த கே. எல். ராவ் அவர்களுடைய முயற்சியால் மேற்கொள்ளப்பட்டது. ஒரு நேரத்திலே நான், திருவாளர்கள் வீரேந்திர பாட்டீல். அச்சுதமேனன் ஆகிய மூன்று முதலமைச்சர்களும் கே. எல். ராவ் அவர்களைச் சந்தித்து இதைப்பற்றிக் கேட்டபோது, அவர் 3 மணி நேரம் எங்களுக்கு விளக்கம் அளித்தார். படம் எல்லாம் போட்டுக்காட்டி அதிகாரிகளை எல்லாம் வரவழைத்து கங்கையையும், காவிரியையும் இணைக்க என்ன செலவு ஆகும். எவ்வளவு மின்சாரம் தேவைப்படும் என்று எல்லாம் கணக்கிட்டு கங்கையிலிருந்து தண்ணீரை எழுப்பி, முதல் நீரேற்றும் இடத்திற்கே இந்தியா முழுமைக்கும் பயன்படுத்தப்படுகின்ற மின்சாரம் அந்த ஒரு இடத்திற்கே தேவைப்படுகிறது என்று கே. எல். ராவ் அவர்கள் குறிப்பிட்டு. எனவே, இது சாத்தியம் இல்லாதத் திட்டம் என்று உணரப்படுகிறது என்று குறிப்பிட்டார். அதற்குப் பிறகுதான், தமிழகத்தின் சார்பில் கருத்துக்களை எடுத்துக் கூறுகிற நேரத்தில் கோதாவரி பகுதியிலிருந்து காவிரியை இணைத்தால் பிறகு முடிந்தால் கங்கையை இணைத்துக்கொள்ளலாம். தெற்குப் பகுதி வட்டாரத்தைப் பொறுத்தவரையில் கோதாவரி, காவிரி இவைகளை எல்லாம் இணைக்கிற முயற்சியில் ஈடுபட்டால் பிறகு கர்நாடக தண்ணீர் கூட நமக்கு வரவேண்டிய அவசியம் இல்லை. அந்த அளவுக்கு தாராளமாக நீர் கிடைக்கும் என்ற திட்டமும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இவைகளெல்லாம் பரிசீலனையில்

இருக்கிறதே தவிர, வேகமாக நிறைவேற்ற வேண்டும் என்கின்ற முனைப்பான எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை. இப்பொழுது தேசியமயம் என்ற வார்த்தையைப் பயன்படுத்த நான் பயப்படுகிறேன். எதற்காக என்றால், காவிரிப் பிரச்சினையில், கர்நாடக அரசு, நடுவர் மன்றத்திற்குகூட இது இருக்கக்கூடாது. அங்கே விசாரிக்கக்கூடாது என்று சொல்லும் பொழுது, அவர்களை எழுப்புகின்ற வாதம் என்னவென்றால், நதிகள் தேசியமயத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகுதான் இதைப்பற்றி யோசிக்க வேண்டும் என்று கர்நாடகம் தண்ணீரைத் தர மறுப்பு தெரிவிக்கும்பொழுது வாதமாக எடுத்து வைக்கிறது. எனவே, தேசியமயம் என்ற வார்த்தையை இந்த நேரத்திலே நான் பயன்படுத்த விரும்பாததற்கு அதுதான் காரணம். நதிகளை இணைப்பது வரவேற்கத்தக்க ஒரு சிலாக்கியமான திட்டம் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.



உரை : 23 நாள் : 28.04.1997

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் நம்முடைய பேராசிரியர் தீரன் அவர்கள் 2, 3 பொதுவான பிரச்சினைகளைப் பற்றிப் பேசினார்கள். பொதுவான பிரச்சினை என்றாலும் தமிழ் நாட்டிற்கு மிக மிகத் தேவையான பிரச்சினைகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். முதலாவதாக, காவிரியைப் பற்றி அவர்கள் பேசும்போது உடனடியாக ஒரு முடிவை தமிழ்நாட்டு விவசாயிகளுடைய நலனைக் காப்பதற்காக நாம் எடுத்தாக வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சினை எத்தனை ஆண்டுக்காலமாக நடைபெற்று வருகின்ற பிரச்சினை என்பதையும் 1968 முதல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலந்தொட்டு இன்று வரையில் 20 அல்லது 25-க்கு மேற்பட்ட தடவை கர்நாடக அரசோடு கலந்து பேசி மத்திய அரசினுடைய நீர்வளத்துறை அமைச்சர்களை முன் வைத்து அவர்கள் முன்னிலையிலே கலந்து பேசி முடிவு காணாத சூழ்நிலையில்தான் கடந்த காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1989-90-ல் இங்கே இருந்தபோது நடுவர் மன்றம் ஒன்றை அமைக்க அன்றிருந்த பிரதமர் வி. பி. சிங் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அவரும் அதற்கு உடன்பட்டு, நம் சார்பாக நாம் எடுத்துச் சொன்ன கருத்தை நீதிமன்றத்திலே எடுத்து வைக்கின்ற பொறுப்பினை உணர்ந்து ஏற்றுக்கொண்டு, அந்த அடிப்படையிலே நடுவர் மன்றம் அமைந்தது என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

அந்த நடுவர் மன்றத்திற்குப் பிறகு இடைக்காலத் தீர்ப்புகளை நிறைவேற்றுவதற்கு கர்நாடக அரசு முன்வராத காரணத்தால் ஏற்பட்ட பிரச்சினைகள், குழப்பங்கள் அனைவரும் அறிந்த ஒன்றுதான். தொடர்ந்து அதைப்பற்றி விளக்கிக்

கொண்டிருக்கத் தேவையில்லை என்றே நான் கருதுகிறேன். கடந்த 5-1-1997 வரையில் உச்சநீதிமன்றத்தினுடைய கருத்திற்கிணங்க நம்முடைய தண்ணீர்த் தேவை குறித்து கர்நாடக அரசுடன் பேசுகிற வாய்ப்பு ஏற்பட்டபோது அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு ஏன் முழுமையாகவே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நாம் முன்வரக்கூடாது என்று கர்நாடக அரசு தெரிவித்த அந்தக் கருத்தை புறந்தள்ளிவிடாமல் நாம் அவர்களோடு 5 முறை பேச்சுவார்த்தை நடத்தினோம். அந்தப் பேச்சுவார்த்தையினால் எந்தப் பலனும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக நாங்கள் இன்னொரு அணை கட்டப்போகிறோம்; அதற்கு ஆதரவு தாருங்கள் என்று கேட்கின்ற அளவுக்கு ஏதோ மேகதாதோ, மேகதூதோ (குறுக்கீடு) மேகதாது என்ற ஒரு அணை கட்டப்போகிறோம், அதற்கும் அனுமதி தாருங்கள் என்கின்ற அளவிற்கு, சம்மதம் தாருங்கள் என்கின்ற அளவிற்கு, அவர்கள் வந்துவிட்ட காரணத்தால் இனிமேல் இவர்களோடு பேசி எதுவும் நடக்காது என்ற அளவில் நாம் தொடர்ந்து கண்டிப்பாகச் சொல்லி வந்திருக்கிறோம். சிலரிடத்திலே பேச்சுவார்த்தை நடத்தினாலும் கூட, நடுவர் மன்றத்தினுடைய வரம்பிற்கு உட்பட்டுத்தான் நடத்துவோம் என்று சொன்னதற்கிணங்க, அந்த வரம்பிற்கு உட்பட்டு அவர்கள் பேசத் தயாராக இல்லாத ஒரு சூழ்நிலையில், மீண்டும் நடுவர் மன்றத்தையே நாம் நாடினோம். நடுவர் மன்றத்தை நாடியது மாத்திரம் அல்ல; உச்சநீதிமன்றத்திலே இன்றைக்கு அந்த வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

உச்சநீதிமன்றம் இந்த வழக்கை, ஐந்து பேர் கொண்ட கான்ஸ்டிடியூஷனல் பெஞ்ச் ஒன்றை அமைத்து, அதற்கு அனுப்பியிருக்கின்றது. கான்ஸ்டிடியூஷனல் பெஞ்ச் இந்த வழக்கை விசாரித்து மைய அரசின் நிலையைக் கேட்டபோது, மைய அரசின் சார்பாக அட்டார்னி ஜெனரல் ஆஃப் இந்தியா எட்டு வார கால அளவிற்குள் நடுவர் நீதிமன்றம் கொடுத்த இடைக்கால ஆணையை நிறைவேற்றுவதற்கான வரைவு திட்டத்தைத் தருவதாக உச்சநீதிமன்றத்திலே இந்த மாதம் 2-வது வாரத்திலே கூறியிருக்கின்றார்கள். எனவே, அதை நாம் உடனடியாக, நம்முடைய தீரன் அவர்கள் கருதுவதைப்போல

தள்ளிவிட முடியாது. அவர்கள் எந்த அளவிற்கு உச்சநீதி மன்றத்திலே தங்களுடைய கருத்தை, அந்த வரைவை எடுத்துச் சொல்ல இருக்கின்றார்கள் என்பதை அறிந்துகொண்ட பிறகுதான் மேல் நடவடிக்கைகளை நாம் எடுக்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தக் காவிரிப் பிரச்சினையில் தற்போதைய நிலையின் சுருக்கத்தை நான் உங்களிடத்திலே எடுத்துக் கூறியிருக்கின்றேன்.

ஆனால், இன்றைக்கு ஏற்கெனவே இந்த நாட்டை ஆண்டவர்கள், கடந்த ஐந்தாண்டுக் காலம் ஆண்டவர்கள், காவிரிப் பிரச்சினைக்குத் துரோகம் செய்து விட்டதே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான்; திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்று இன்றைக்குச் சொல்லி வருவதை நாம் காணுகிறோம். அளிக்கின்ற பேட்டியானாலும், பேசுகின்ற மேடையானாலும், நிருபர்களைச் சந்திக்கின்ற நேரமானாலும் எல்லா நேரத்திலும் ஏதோ காவிரிப் பிரச்சினைக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசு துரோகம் செய்துவிட்டதைப் போலப் பேசி வருகின்றார்கள்.

உங்களுக்கு நான் ஒரு உதாரணத்தை மாத்திரம் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏற்கெனவே ஒரு முறை கோடிட்டுக் காட்டியிருக்கிறேன். இன்றைக்கு விவரமாகவே சொல்ல விரும்புகின்றேன்.

ஜெயலலிதா அவர்கள், முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள், இந்தக் காவிரிப் பிரச்சினையிலே எப்படி நடந்து கொண்டார்கள், எவ்வளவு ஆர்வத்தோடு, எவ்வளவு விரைந்து இந்தக் காவிரிப் பிரச்சினையிலே அக்கறை காட்டினார்கள் என்பதற்கு நான் இங்கே படிக்க இருக்கின்ற இந்த இரண்டு மூன்று கடிதங்களும், குறிப்பிட இருக்கின்ற தேதிகளுமே சான்று பகரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

9th June 1992. 1992 ஜூன் மாதம் 9-ஆம் தேதி முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களுக்கு ஒரு கடிதம் வருகிறது. கடிதத்தை எழுதுபவர் சுக்லா அவர்கள். சுக்லாவை உங்களுக்குத் தெரியும். அவர், இந்த அம்மையார் உண்ணாவிரதம்

இருந்தபொழுதுகூட வந்து சில உறுதிமொழிகளைத் தந்து, அந்த உறுதிமொழிகளின் காரணமாக உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டதே, அந்த சுக்லாதான் இந்த சுக்லா. அவர் 1992-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 9-ஆம் தேதி ஒரு கடிதம் எழுதுகிறார்.

"Dear Jayalalithaji,

Keeping in view the interim order of the Cauvery Water Disputes Tribunal, it is proposed to assign the responsibility of monitoring its implementation to the Central Water Commission in co-operation with the basin States. Shri Vaithialingam, Chief Minister of Pondicherry has generally agreed with this proposal. The Joint Regulation Committee to be headed by the Chief Engineer, CWC, would include representatives of the respective State Governments also. I will be obliged, if you could please communicate your concurrence with such an arrangement".

''உங்களுடைய ஒப்புதலை உடனடியாக அதற்கு அனுப்புவீர்களேயானால் - நான் அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்ற அளவிலே இந்தக் கடிதத்தை வி.சி. சுக்லா அவர்கள் 9-6-1992 - அன்று எழுதுகிறார். 9-ஆம் தேதி எழுதிய அந்தக் கடிதம் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு எப்பொழுது வைக்கப்படுகிறது என்றால், 9/6 இல் எழுதப்பட்ட கடிதம், அவருடைய பார்வைக்கு 18-7-1992 அன்று வைக்கப்படுகிறது. கிட்டத்தட்ட ஒரு மாதம் கழித்து என்று வைத்துக் கொள்ளுங்களேன். 18-7-1992 அன்று அவருடைய பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பார்வைக்கு வைக்கப்பட்டவுடன் அவசரமாக அவர்கள் முடிவு எடுத்தார்களா என்றால் 20-7-1992 அன்று காவிரி டெக்னிக்கல் செல் இருக்கிறதே அந்த டெக்னிக்கல் செல் ஒரு கடிதத்தை எழுதுகிறது யாருக்கு?

The Remarks of the Chairman, Cauvery Technical Cell, Madras on the above subject are as follows:-

"The Government may agree to the proposal of Governemnt of India, as indicated in the letter cited, to assign the responsibility of monitoring the implementation of the interim order of the Cauvery Water Disputes Tribunal to the Central Water Commission" என்று 20-7-1992-ல் காவிரி டெக்னிக்கல் செல், தமிழகத்திலேயுள்ள செல் முதலமைச்சருக்குத் தெரிவிக்கிறது. அல்லது அரசுக்குத் தெரிவிக்கிறது. Chief Secretary-க்கு தெரிவிக்கிறது. இப்படித் தெரிவித்த பிறகு, ஒரு ஓ. சி. காப்பி, உங்களுக்குத் தெரியும், ஓ. சி. என்றால் ஆபீஸ் காப்பி. ஒரு ஆபீஸ் காப்பி எப்படி வருகிறதென்றால், கடிதம் எழுதுவதற்காக, ஒரு ஆபீஸ் காப்பி, முதலிலே ஒரு டிராப்ட் போட்டு வருகிறது. அந்த டிராப்ட் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் அதிலே கையெழுத்து இட்டு 14-12-1992, அன்று ஒப்புதல் தருகிறார். 6-ஆம் மாதம் கடிதம், 7-ஆம் மாதம் நினைவூட்டல், பிறகு 12-ஆம் மாதம், 14-12-1992 அன்று ஓ.சி. தயாராகிறது. 5 மாதம் ஆகிறது அந்த ஓ.சி.க்கே. ஓ.சி. தயாராகிறது. அந்த ஓ.சி. எப்படித் தயாராகிறது தெரியுமா? 21-7-1992-ல் பி.டபிள்யூ.டி செக்ரட்டரி கையெழுத்தைப் போட்ட ஓ.சி., அதே 21-7-1992-லே கையெழுத்துப் போட்ட அன்றைய பொதுப்பணித் துறை அமைச்சர், அவருடைய கையெழுத்துபோட்ட அந்த ஓ.சி. இவைகளை 14-12-1992-லேதான் முதலமைச்சர் அதை அப்ரூவ் பண்ணுகிறார். அந்த லெட்டரை அப்ரூவ் பண்ணுகிறார். அப்ரூவ் பண்ணினபிறகு, அனுப்பப்பட வேண்டிய தட்டச்சு கடிதம் வரவேண்டுமல்லவா, அந்தக் கடிதம் அவருக்கு எப்பொழுது வருகிறதென்றால் 30-3-1993. வேடிக்கை பாருங்கள். ஜூலை மாதம் 9-ஆம் தேதி சுக்லா கடிதம் எழுதுகிறார். அதற்குப் பதில் எழுதத்தக்கூடிய கடிதம், பல கட்டங்களைத் தாண்டித் தாண்டித் தாண்டி, Fair Copy-க்கு 3½ மாதம் தாமதம், ஓ.சி.க்கு 5 மாதம் தாமதம். ஓ.சி. எல்லாம் தாமதமாகத்தான் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). ஓ.சி. இல்லாமல் இருந்தால் அங்கே தாமதத்திற்கே இடம் கிடையாது. ஓ.சி.க்குப் பிறகு 30-03-1993 அடுத்தவருடம் வருகிறது, ஒருவருடம் கழித்து, ஓ,சி க்கு பிறகு Fair Copy செய்ய 3½ மாதம் தாமதம். அதற்குப் பிறகு அம்மையார் 30-3-1993-லே, கையெழுத்து போடுகிறார்கள். அந்த அம்மையார்

கையெழுத்து போடுகிறார்கள் Fair Copy-லே. 30-3-1993-லே கையெழுத்து போட்ட பிறகு, எப்போது கடிதத்தை (despatch) அனுப்புகிறார்கள் தெரியுமா? 14-4-1993-ல் கடிதத்தை அனுப்பியிருக்கிறார்கள். இப்படி காவிரிப் பிரச்சினையில் அக்கறை காட்டிய அம்மையார்தான் என்னைப் பார்த்து துரோகி, துரோகி என்கிறார். யார் யாரோ துரோகி என்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து இவரும் துரோகி என்கிறார் என்று நான் விட்டுவிட்டுப் போகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



உரை : 24 **நாள் : 30.04.1997**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடுங்காலமாக தமிழகத்தினுடைய நீர்வள வாய்ப்புக்கூறு கெடுகின்ற அளவிற்கு கர்நாடக மாநிலத்திலே தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்ற அணைகள் காரணமாக உருவாகியுள்ள பிரச்சினை குறித்து 1968-ஆம் ஆண்டு முதல், அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலந்தொட்டு பேச்சுவார்த்தை பலமுறை, சற்றொப்ப 27 தடவைகளுக்கு மேல் நடைபெற்று அதிலே வெற்றி காணமுடியாத காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, பிரதமராக திரு. வி. பி. சிங் அவர்கள் பொறுப்பேற்றிருந்த காலகட்டத்தில் நடுவர் மன்றம் ஒன்றைத் தவிர, வேறு வழியில்லை என்ற தீர்மானத்தை இந்த அவையிலே நிறைவேற்றி அனுப்பிவைத்ததின் அடிப்படையில் தீர்ப்பும் வழங்கப்பட்டு, அந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து, திரு. வி.பி. சிங் அவர்கள் உடனடியாக நடுவர் மன்றத்தையும் அமைத்து, அந்த மன்றம் வெளியிட்ட இடைக்கால ஆணையை நிறைவேற்ற கர்நாடக மாநில அரசு முன்வராமல், தொடர்ந்து தமிழகம் வலியுறுத்தியதன் காரணமாக மத்திய அரசு அந்த இடைக்காலத் தீர்ப்பை 'கெசட்டில்' வெளியிட வேண்டும் என்று சொல்லி, கெசட்டிலும் வெளியிட்டபிறகும்கூட கர்நாடகத்தினுடைய பிடிவாதம் இன்னும் நீங்கியபாடில்லை.

இந்தக் காலகட்டத்திலேதான் உச்சநீதிமன்றத்தை இந்த அரசு நாடி தன்னுடைய வழக்கை வலியுறுத்தியபோது, உச்ச நீதிமன்றம் ஒரு தாக்கீது தந்தது. அதாவது 'கருத்துத் தாக்கீது'. அந்த அடிப்படையிலே மீண்டும் ஒருமுறை தமிழகத்தினுடைய

உடனடி தண்ணீர்த் தேவை குறித்து தமிழக அரசும், கர்நாடக அரசம் பேசுவது நல்லது, எனவே பேசுங்கள் என்று உச்சநீதி மன்றம் கூறியது அதற்கேற்பத்தான், கர்நாடக மாநில அரசோடு, தமிழக அரசு பேச்சுவார்த்தை நடத்தியது. நான் அன்றைக்கு இந்த அவையிலே குறிப்பிட்டதைப்போல, பேச்சுவார்த்தைக்கு மீண்டும் செல்லலாமா என்று தமிழகத்திலே ஒரு குரல் எழுந்தபோது, நான் அளித்த விளக்கம், 'நடுவர் மன்றத்தினுடைய வரையறைக்கு உட்பட்டுத்தான் பேச்சுவார்த்தை நடைபெறும், அதிலிருந்து இம்மியும் விலகாமல் பேச்சுவார்த்தை நடைபெறும்' என்று நான் சொன்னேன். அந்த வெளிப்படையான அறிவிப்புக்குப் பிறகு தமிழக அரசின் சார்பிலும், கர்நாடக மாநில அரசின் சார்பிலும் ஐந்து முறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. கர்நாடகத்துக்கு நாங்கள் சென்று அங்கே பேச்சுவார்த்தை நடத்தினோம். அவர்களும் தமிழகத்திற்கு வந்து பேச்சுவார்த்தை எல்லாம் நடைபெற்றது. பிறகு டெல்லி மாநகரத்திலே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இப்படி ஐந்து முறை நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் வெற்றி காணவில்லை. அதைக் குறிப்பிட்டு இங்கே இந்த அவையிலே நான் நிதி ஒதுக்கீடு சட்டமுன்வடிவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற அந்த உரையில் சொன்னேன். இறுதியாக அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற மேகதாது அணைக்கட்டுத் திட்டத்தை வலியுறுத்திய காரணத்தால் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடரமுடியவில்லை. அத்துடன் முறிந்துவிட்டது என்று குறிப்பிட்டேன்.

இங்கே நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியதைப்போலவும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போலவும், கர்நாடக முதலமைச்சரைப் பற்றி எந்த ஒரு வார்த்தையும் இங்கே சொல்லவில்லை. அவர் இந்த அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, இந்த காவிரிப் பிரச்சினையிலே தன்னுடைய மாநிலத்திற்காக வாதாடுகிறார் என்ற அந்த உணர்வுக்கு அப்பாற்பட்டு – நானும், கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. பட்டேல் அவர்களும் நெருங்கிய நண்பர்கள் தான். நண்பர்கள் என்பதற்காக அவரும் விட்டுத்தர தயாராக

இல்லை. நானும் தமிழகத்தினுடைய உரிமையை விட்டுத்தரத் தயாராக இல்லை - அந்த அளவிலே ஏற்பட்டுவிட்ட முடிவைத் தான் அன்றைக்கு நான் இங்கே எடுத்துக்காட்டினேனேயல்லாமல், கர்நாடக முதலமைச்சரைப் பற்றி ஒரு வார்த்தைகூட நான் இங்கே பேசவில்லை. ஆனால், எந்த பத்திரிகை அப்படிச் செய்தியை வெளியிட்டது என்று எனக்குத் தெரியாது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஏதாவது ஒரு பத்திரிகை அப்படி ஒரு செய்தியை வெளியிட்டிருக்கலாம் அல்லது வெளியிலேகூட கர்நாடக மாநிலத்தினுடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. நாகேகவுடா அவர்கள், நான் கர்நாடக முதலமைச்சரைத் தாக்கிப் பேசியதாகக் கற்பனை செய்துகொண்டு, அறிக்கை வெளியிட்டிருக்கலாம் அல்லது மறுமொழி கூறியிருக்கலாம். நான் இப்போதும் சொல்லுகிறேன், கர்நாடக முதலமைச்சரைப் பற்றிய பேச்சே அன்றைக்கு வரவில்லை, பேசவும் இல்லை. எழுந்திருக்கிற தாவா, கர்நாடக முதலமைச்சருக்கும், தமிழ் நாட்டினுடைய முதலமைச்சருக்கும் இடையே உள்ள தாவா அல்ல. எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு அவர் பிரதிநிதித்துவமாக வந்து வாதாடுகிறார். தமிழ்நாட்டினுடைய பிரச்சினைகளுக்காக, முதலமைச்சர் என்ற முறையிலே நான் வாதாடுகிறேன். தனிப்பட்ட முறையிலே, இருவருக்கும் எந்த தகராறும் கிடையாது. ஆரம்பத்திலேயிருந்து, என்னுடைய எண்ணமெல்லாம், இந்தப் பிரச்சினையை வைத்து, கர்நாடக மாநிலத்திலே உள்ள தமிழர்களுக்கும், தமிழகத்திலே உள்ள கன்னட மொழி பேசுகின்றவர்களுக்கும் இடையிலே குழப்பங்கள் வந்துவிடக் கூடாது. ஏனென்றால் ஒருமுறை குழப்பம் ஏற்பட்டு, கர்நாடகத்திலே வாழுகின்ற தமிழ்ப்பெருங்குடி மக்கள் பல பேர் பெரும் அவதிக்கு உள்ளானார்கள் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. எனவேதான், இந்தச் சிக்கலைத் தீர்ப்பதிலே நிதானமாக ஒவ்வொரு அடியாக எடுத்து வைக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். அவ்வாறேதான் நடந்து கொண்டேன். இருந்தாலும்கூட அவர்கள் கடைசிப் பேச்சு வார்த்தையின்போது, முத்தாய்ப்பாக மேகதாதுவைப் பற்றிச் பேசினார்கள். அதற்கு முன்பு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரை முருகன்

அவர்கள் அந்த மாநிலத்தினுடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. நாகே கவுடா அவர்களோடும், மற்ற அதிகாரிகளோடும் பேசும்போது, அதைப்பற்றிச் சொன்னார்கள். பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அதை மறுத்து விட்டார்கள். என் முன்னிலையிலேயும் அந்தப் பேச்சு மீண்டும் வந்தபோதும், நானும் மறுத்துவிட்டேன். மறுத்தது மாத்திரம் அல்ல, அன்றைக்குப் பிரதமராக இருந்த திரு. தேவ கவுடா அவர்களுடைய இல்லத்தில் இந்தப் பேச்சுவார்த்தையைப்பற்றி ஒரு விமர்சனம் வந்துபோது நான் அவர்களிடத்திலே விளக்கமாகச் சொன்னேன். அப்போது நம்முடைய அரசின் தலைமைச் செயலாளரும் என்னுடனே இருந்தார். நானும் அவரும் விளக்கங்களைத் தந்தோம். இந்த மேகதாதுத் திட்டம் நிறைவேற்றப்படுமேயானால், இப்போது நடுவர் மன்றம் அளித்திருக்கிறதே 205 டி. எம். சி. தண்ணீர் அதற்குப் பதிலாக 70 டி. எம். சி. தண்ணீர்தான் கிடைக்கும்.

அவர்கள் என்னதான் முயன்றாலும், அதற்குமேல் தண்ணீர் விடமுடியாது. எனவே மேகதாதுத் திட்டம் தீமையானது. மேட்டூருக்கு மேலே அவர்களுடைய பகுதியிலே, கர்நாடகப் பகுதியிலே அமைக்கப்படுகிற திட்டத்தால் எங்களுக்குப் பாதகம் ஏற்படும். ஆகவே ஏற்க முடியாது என்று திட்டவட்டமாகச் சொன்னேன். இப்போது மாத்திரம் அல்ல, நாம் எப்போதுமே எதிர்க்கவில்லை என்று கர்நாடக அமைச்சர் சொல்லியிருக்கிறார். தொடர்ந்து எதிர்த்து வருகிறோம்.

கடந்த காலத்திலே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோதும், மேகதாதுத் திட்டத்தை, தமிழக அரசு எதிர்த்து இருக்கிறது. அதையே பின்பற்றி நானும் அதை எதிர்த்துக் கடிதங்கள் எழுதியிருக்கிறேன். பிரதமர் அவர் களிடத்திலே நேரடியாகவும் எதிர்ப்பைக் காட்டினேன். அப்போது அவர் சொன்னார், மழை பெய்து வெள்ளம் பெருகுகின்ற நேரத்திலே வருகிற தண்ணீரைத் தேக்கி வைத்தால்தானே மறுபடியும் விடமுடியும் என்ற ஒரு அருமையான தத்தது வத்தை அவர் என்னிடத்திலே சொன்னார். நான் சொன்னேன். அப்படி தேக்கி வைக்கலாம். தேக்கி வைக்கின்ற இடத்தை நீங்கள் தேர்ந்தெடுத்து இருக்கிறீர்களே அதுதான் தவறான இடம். எனவே

அதற்கு பதிலாக ஒகேனக்கல் தமிழ்நாட்டுப் பகுதியிலே இருக்கிறது. அங்கே தேக்கி வையுங்கள்; மின்சாரமும் அங்கே உற்பத்தி செய்து கொள்ளலாம். அந்த மின்சாரத்திலே வேண்டுமானால் கர்நாடகத்திற்கு ஓரளவு பங்குகூட தருகிறோம். எனவே, ஒகேனக்கல் திட்டம் அல்லது ராசிமால் திட்டம் - இந்தத் திட்டங்களை நிறைவேற்றுங்கள், நிச்சயமாக மேகதாதுவுக்கு நாங்கள் ஒப்புதல் அளிக்கவே முடியாது என்று கூறிவிட்டேன். அவரும் ஓரளவு ஒகேனக்கல் அல்லது ராசிமால் திட்டத்தைப் பற்றிப் பரிசீலிக்கிற அளவிலேதான் எங்களிடத்தில் அன்றைக்கு ஒப்புக்கொண்டுப் பேசினார். வேடிக்கை என்னவென்றால் அப்படி பிரதமர் சொன்ன மறுநாள் - அதாவது மறுநாள் மீண்டும் கர்நாடக மாநில அரசோடு நாங்கள் பேசும்போது, முதலமைச்சரும் மற்றவர்களும் அதிகாரிகளும் இருந்த அந்த நேரத்தில் நம்முடைய அதிகாரிகளும் நாங்களும் கலந்துகொண்ட நேரத்தில் மீண்டும், மேகதாதுத் திட்டத்தை வற்புறுத்தினார்கள். முடியாது என்று சொல்லிவிட்டோம். எல்லாம் முடிந்தது. ஆனால் கடைசியிலே தமிழ்நாடு அரசுதான் விலகிப் போய்விட்டது என்று சொல்வது சரியல்ல. படிப்படியாக பல பிரச்சினைகள் எங்கே தண்ணீரின் அளவை எடுப்பது, எந்த இடத்திலே அளவு செய்வது, அது மேட்டூரிலா அல்லது இன்னொரு பகுதியிலா, பட்லுகொண்டா என்கிற இடத்திலா அல்லது அதற்குக் கீழே ஒரு வியர் ஏற்படுத்தி அங்கேயா என்ற பிரச்சினைகள் எல்லாம் பேசப்பட்டன. அதிலே ஓரளவுக்கு அவர்களும் நாமும் ஒத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலைகள் எல்லாம் உருவாயிற்று. ஆனால் எத்தனை டி.எம்.சி. தண்ணீர் என்பதுதான் பிரச்சினை. அந்தப் பிரச்சினையிலே மேகதாதுவைக் கட்டிவிட்டால் - இன்றைக்கு வேண்டுமானால், மேகதாதுவைக் கட்டிக்கொண்டிருக்கும்போது 200 டி.எம்.சியோ 210 டி.எம்.சியோ தண்ணீர் கொடுப்பார்கள் - மேகதாதுவைக் கட்டிவிட்டப்பிறகு இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஆள வருகின்றவர்கள் யாரோ நமக்குத் தெரியாது. ஆகவே, தமிழ்நாட்டு மக்களைச் சந்தியிலே விட்டுவிட்டுப்போக நாங்கள் சம்மதிக்க முடியாது என்று நான் அழுத்தந்திருத்தமாக (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களிடத்திலே சொன்னேன். அதற்குப் பிறகுதான் இந்தப்

பேச்சுவார்த்தை பயன்படாது என்று மீண்டும் உச்சநீதி மன்றத்திற்கே நாம் சென்று பேச்சுவார்த்தை பயன் அளிக்கவில்ல, உங்களுடைய தீர்ப்பை வழங்குங்கள் என்று கேட்டு, வாதாடிக் கொண்டிருக்கிறோம். உச்ச நீதிமன்றத்திலே, நடுவர் மன்றம் வேறு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு இடையிலே உச்சநீதிமன்றத்திற்குச் சென்று, உங்களுடைய உத்தரவுப்படி பேச்சுவார்த்தை நடத்தினோம். பயன் இல்லை என்று வழக்கைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறோம்.

உச்சநீதிமன்றத்திலே ஐவர் கொண்ட கான்ஸ்டிடியூஷனல் பெஞ்ச் ஒன்று அமைக்கப்பட்டு, அது இன்றைக்கு விசாரணை நடத்துகிறது. அந்த பெஞ்சில், அன்றைக்கு நான் குறிப்பிட்டதைப் போல. இந்த வழக்கை விசாரித்து மைய அரசு நிலையை கேட்டு அறிந்து மைய அரசின் சார்பாக 'அட்டர்னி ஜெனரல் ஆப் இந்தியா' 8 வார கால அளவிற்குள் நடுவர் நீதிமன்றம் கொடுத்த இடைக்கால ஆணையை நிறைவேற்றுவதற்கு வரைவுத் திட்டம் தருவதாக உச்சநீதிமன்றத்திலே ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். இப்பொழுதே 2 வாரம் ஆகிவிட்டது என்று கருதுகின்றேன்; இன்னும் 5. 6 வாரம்தான் பாக்கி இருக்கிறது. அவர்கள் என்ன வரைவுத் திட்டத்தை கொடுக்கப் போகிறார்கள் என்பதை எல்லாம் பார்த்திருந்து, அதற்குப்பிறகு நமக்கு நீதி கிடைத்தும், அதை நிறைவேற்றுகின்ற நிலை ஏற்படாமல் போகுமேயானால் நாம், பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்ற அந்தப் பழமொழியை ஞாபகத்திலே வைத்துக்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தவிர தமிழக அரசுக்கு வேறு வழி இல்லை; ஆனால் நிச்சயமாக நியாயமான தீர்ப்பு நமக்குச் சாதகமான தீர்ப்பு – அல்லது அவர்களுக்க பாதகமான தீர்ப்பு என்று சொல்லமாட்டேன் – நடுநிலையான தீர்ப்பு கர்நாடக மாநில மக்களுக்கும் பாதகம் இல்லாமல் தமிழ்நாட்டிலே உள்ள மக்களுக்கும் பாதகம் இல்லாமல், அங்குள்ள விவசாயிகளுக்கும் இங்குள்ள விவசாயிகளுக்கும் பாதகம் இல்லாமல் ஒரு நடுநிலையான தீர்ப்பு வழங்கப்படும் என்றே நான் எதிர்பார்க்கின்றேன்.

இதற்கிடையிலே தேவை இல்லாமல், இரண்டு மாநிலங் களுக்கு இடையே சர்ச்சையை உருவாக்குகின்ற வகையில்,

பேசாத விஷயங்களை பேசியதாக கற்பனை செய்துகொண்டு கர்நாடக மாநிலத்தினுடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் பேசி இருப்பது அல்லது அறிக்கை விட்டு இருப்பது வருத்தத்துக்கு உரியது; இங்கே பேசியவர்கள் எல்லாம்கூட கண்டனத்திற்குரியது என்று சொன்னார்கள்; கண்டனத்திற்குரியது என்றுகூட கூறமாட்டேன்; வேதனைக்குரியது, வருத்தத்திற்குரியது. இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால், நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். இங்கே உள்ளவர்கள் எல்லாம் ஒற்றுமையாக இருந்து செயல்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். இதிலே எந்தவிதமான இருவேறு கருத்துக்களுக்கும் இடம் இல்லை. காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே ஏற்கெனவே இதே அவையில் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசு கடந்த காலத்திலே காவிரிப் பிரச்சினையில் என்ன நிலை எடுத்ததோ, அதே நிலைதான் அ.இ.அ.தி.மு.க. அரசின் நிலை என்று அழுத்தந்திருத்தமாக அவர்கள் குறிப்பிட்டு இருக்கின்றார்கள். அதைப்போல, அ.இ.அ.தி.மு.க. அரசு எம்.ஜி.ஆர். காலத்தில் எடுத்த நிலையை திராவிட முன்னேற்றக் கழக அரசு திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்து ஏற்றுக்கொண்டு இருந்தது என்பதையும் நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள். இங்கே இருக்கின்ற பல்வேறு கட்சி சார்புடைய உறுப்பினர்கள் யாருக்கும் இதிலே எந்த கருத்து மாறுபாடும் கிடையாது; நாங்கள் எல்லாம் ஒன்றாகத்தான் இருக்கிறோம். ஆனால், வேண்டுமென்றே, ஏதோ நான் துரோகம் செய்துவிட்டேன், துரோகம் செய்துவிட்டேன் என்கின்ற ஒரு கூற்றை, பொருந்தாக் கூற்றை, பொய்க்கூற்றை வெளியிலே இருக்கின்ற முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் தொடர்ந்து கூறி வருகின்றார்கள். அதற்கான பதில் அளிக்கும்போதுதான் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் அன்றைக்கு வந்தது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

1924-ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது, காவிரிப் பிரச்சினைக்கான ஒப்பந்தம். 1974-ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தத்தை, உபரித் தண்ணீரை எப்படிப் பகிர்ந்துகொள்வது

என்ற அளவிலே இந்த ஒப்பந்தத்தைப் பற்றி நாம் மறுஆய்வு செய்யவேண்டும் என்ற அளவிலேதான், 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் இருக்கிறது. ஆனால், சில பேர், 1974-ஆம் ஆண்டோடு ரத்து ஆகிவிட்டது என்றே கருதியோ அல்லது வேண்டுமென்றோ பிரச்சாரம் செய்தார்கள். இன்னும் வேடிக்கை, நம்முடைய முன்னாள் ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் கூட அவர் எழுதிய அவருடைய வாழ்க்கை வரலாற்றில் 1924ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974-ஆம் ஆண்டோடு காலாவதி ஆகிவிட்டது என்று குறிப்பிட்டு இருந்தார். உடனடியாக தி.மு.க. சார்பில் ஒரு கண்டனக் கூட்டத்தை ஏற்பாடு செய்து, திரு. வெங்கட்ராமன் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கப் பட்டது. அதற்குப் பிறகு அவரே அவர் தவறை உணர்ந்து அந்தப் புத்தகத்திலே உள்ள அந்த வாசகத்தை மாற்றிக்கொள்கிறேன் என்று அறிக்கைவிட்டார் என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். ஆனால், தொடர்ந்து என் மீது குற்றம் சாட்டுவதற்காக, தமிழ்நாட்டு நலனைக் காட்டிக்கொடுக்கின்ற அளவிற்கு சில பேர் ஆகிவிட்டார்கள். 1974-ஆம் ஆண்டோடு காலாவதி ஆகிவிட்டது என்று சொன்னால் - அதுதான் கர்நாடகத்தினுடைய வாதமே; அதை ஒத்துக்கொண்டதாக ஆகிவிடுகிறது; நாம் சொல்வது எல்லாம், 1974-ஆம் ஆண்டோடு அந்த ஒப்பந்தம் காலாவதி ஆகவில்லை, தொடருகிறது; உபரித் தண்ணீரை எப்படிப் பகிர்ந்துகொள்வது; ஏற்கெனவே ஒப்பந்தம் ஏற்படும் போது இருந்த தண்ணீரைவிட உபரியாக வருகின்ற தண்ணீரை எப்படிப் பகிர்ந்துகொள்வது என்பதுதான். 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் என்று குறிப்பிட்டு, 1974-ஆம் ஆண்டு ஒப்பந்தம் முடிவடையவில்லை; காலாவதி ஆகவில்லை என்று சொன்னோம். வேடிக்கை, திரு. வி. பி. சிங் அவர்களிடத்திலே கொண்டுபோய் நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று நாம் முறையீடு கொடுத்தபோதுகூட அ.இ.அ.தி.மு.க. சார்பிலே கொடுக்கப்பட்ட வேறு ஒரு முறையீட்டில் - திரு. வி. பி. சிங்கிடம் கொடுத்த முறையீட்டில் 1974-ஆம் ஆண்டோடு ஒப்பந்தம் காலாவதி ஆகிவிட்டது என்றே குறிப்பிட்டுக் கொடுத்தார்கள். அது எவ்வளவு ஆபத்தான வாசகம் என்பது அன்றைக்கே இந்த அவையிலே சுட்டிக் காட்டப்பட்டு, அன்றைக்கு அவையிலே

இருந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் எல்லாம்கூட பதில் சொல்ல முடியாமல், நாங்கள் சொன்ன விளக்கத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இருந்தது என்பதையும் நாடு மிக நன்றாக அறியும்.

1974-ஆம் ஆண்டோடு ஒப்பந்தம் ஒன்றும் முடிந்து விடவில்லை. முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் காவிரிப் பிரச்சினையில் ரொம்ப அக்கறை உள்ளவர்கள், உண்ணாவிரதம் எல்லாம் இருந்தார்கள். அவர்கள் சொல்லியிருக் கிறார்கள், 80 மணி நேரம் உண்ணாவிரதம் இருந்தேன், என்னைப் பார்த்தா துரோகி என்கிறாய் என்றெல்லாம் கேட்டார்கள். நாங்கள் கூட அப்படி உண்ணாவிரதம் இருக்கமுடியும் - திண்டு, திம்மாசு எல்லாம் போட்டுக்கொண்டு. காந்தியடிகளுடைய உண்ணா விரதத்தைப் பார்த்திருக்கின்றோம். ஒரு கயிற்றுக் கட்டிலில் அவர் படுத்திருப்பார். கடைசியாக எலுமிச்சைச் சாறுகூட தகரக் குவளையில் சாப்பிட்டு. அப்படிப்பட்ட எளிமையான உண்ணா விரதம் இருந்ததைப் பார்த்திருக்கின்றோம். தமிழ்நாடு என்று பெயர் வைக்கவேண்டுமென்பதற்காக, 60 நாட்களுக்கு மேல் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த சங்கரலிங்க நாடாருடைய உண்ணாவிரதத்தையும் நாம் பார்த்திருக்கின்றோம். ஆனால் இந்த உண்ணாவிரதம் எல்லோரும் வழிகாட்டக்கூடிய ஒரு உண்ணா விரதம். அகில உலகத்திலும் உள்ள மக்களுக்கெல்லாம், உண்ணா விரதிகளுக்கெல்லாம் வழிகாட்டக்கூடிய ஒப்பற்ற உண்ணாவிரதம் அந்த உண்ணாவிரதம்.

கட்டில், கட்டில் மீது மெத்தை, மெத்தைக்கு இருபுறமும் தலையணைகள், மேலே ஒரு தலையணை, கீழே ஒரு தலையணை, பாதுகாப்புக்கு ஐயாயிரம் போலீசார், பக்கத்திலே கடற்கரை ஓரத்திலே ஒரு வேன். சிறுநீர் கழிக்கச் செல்வதற்கோ அல்லது சிற்றுண்டி அருந்துவதற்கோ அந்த வேன் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு உண்ணாவிரதத்தை இருந்துவிட்டுத்தான் பெரிய தியாகம் செய்துவிட்டேன் என்றெல்லாம் அந்த அம்மையார் பேசுவது மாத்திரம் அல்ல, ஒரு பெரிய தவறான தகவலை என்மீது அல்லது அரசு மீது பழி சொல்வதற்காக வெளியிட்டிருக்கின்றார்கள். அதைப்

பத்திரிகைகளும் வெளியிட்டிருக்கின்றன. பத்திரிகைகாரர்கள் நம்மைவிட நன்றாகச் சிந்திக்கக்கூடியவர்கள். பல வரலாறுகளைத் தெரிந்தவர்கள் இப்படிப்பட்ட செய்திகள் வரும்போது, அவர்களே இதை ஒப்பிட்டுப் பார்த்து, சரிதானா என பார்த்து போட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அதை விட்டுவிட்டு அவர்களே முதல் பக்கத்தில் அல்லது இரண்டாம் பக்கத்தில் பெரிய பேனராக்கி, செய்திகளை வெளியிடுகிறார்கள். மற்ற செய்திகளை வெளியிடவில்லை என்ற ஆத்திரத்தோடு சொல்லவில்லை. ஆனால் தவறான செய்திகளை வெளியிட்டு, தமிழ்நாட்டை தங்களையறியாமலேயே காட்டிக்கொடுத்துவிடக்கூடாது என்பதற்காகச் சொல்கின்றேன்.

நான் குறிப்பிட்ட குற்றச்சாட்டில், 9-6-1992-ல் மத்திய அமைச்சர் திரு. சுக்லா, காவிரிப் பிரச்சினைக்காக எழுதிய கடிதம், 18-7-1992-ல். அதைப் பார்த்து, 21-7-1992-ல் பதில் தயாரித்து, 14-12-1992-ல் ஒப்புதல் அளித்து, 30-3-1993-ல் ஃபேர் காப்பியில் கையெழுத்துப் போட்டு, 14-4-1993-லே அந்தக் கடிதம் டெஸ்பாட்ச் செய்யப்பட்டிருக்கிறதே, இது நியாயமா என்றுதான் கேட்டிருந்தேன். அதற்குப் பதிலளித்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் சொல்கிறார்கள், என்னுடைய காலத்திலே - கழக ஆட்சிக் காலத்திலே, கடந்த காலத்தில்தான் எல்லா அணைகளும் கர்நாடகத்திலே, காவிரியில் கட்டப்பட்டன என்று ஒரு உண்மைக்கு முற்றிலும் மாறான தகவலை அவர்கள் குறிப்பட்டிருக்கின்றார்கள். ஆண்டுக் கணக்கையெல்லாம் வெளியிட்டு குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆண்டுக் கணக்கை எல்லாம் போட்டவுடன் அது உண்மையாக இருக்கும் என்று நம்பி, பத்திரிகைகளும் வெளியிட்டுவிட்டனபோலும் என்று நான் கருதுகிறேன்.

அவருடைய அறிக்கையிலே சொல்கின்றார். சொர்ணாவதி அணை 1973-ல் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்கிறார். அதாவது கழக ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்டது என்று சொல்கிறார். உண்மை என்னவென்றால், சொர்ணாவதி அணை ஆரம்பிக்கப் பட்டது 1965-ஆம் ஆண்டு. முடிக்கப்பட்டது 1984-ஆம் ஆண்டு.

அப்போது இருந்த காங்கிரஸ் அரசு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும்கூட, அத்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல், ஆரம்பிக்கப்பட்டது 1965ஆம் ஆண்டு. முடிக்கப்பட்டது 1984-ஆம் ஆண்டு. கபினி அணை கட்டும் பணி 1975-ல் நிறைவேற்றப்பட்டது என்று ஜெயலலிதா கூறியிருக்கிறார். ஆனால் அந்த அணை கட்ட ஆரம்பிக்கப்பட்டது 1959-ல், 1978-79-ல் அந்த அணை கட்டி முடிக்கப்பட்டது. ஹேமாவதி அணை 1976-ல் நிறைவேற்றப்பட்டது என்று ஜெயலலிதா கூறுகிறார். அது ஆரம்பிக்கப்பட்டது 1968-ஆம் ஆண்டு. கட்டி முடிக்கப்பட்டது 1979-80-ல். 1976-ல் முடிந்ததாக ஜெயலலிதா அறிக்கையில் சொல்லியிருக்கிறார். இல்லை. ஹாரங்கி அணை கட்ட ஆரம்பிக்கப்பட்டது 1964-ஆம் ஆண்டு முடித்தது 1979-80-ம் ஆண்டில்.

இப்படி கழக அரசு தமிழகத்திலே ஏற்படுவதற்கு முன்பே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேகூட இந்த அணைகள் எல்லாம் தொடங்கப்பட்டுவிட்டன. அப்போது எதிர்த்தும்கூட 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி அன்றைக்கிருந்த அரசு தங்களுடைய எதிர்ப்பை காட்டியும்கூட கர்நாடக அரசு அதை மீறி அந்தக் காலத்திலிருந்தே செயல்பட்டிருக்கின்றது. மத்திய திட்டக்குழு, கர்நாடகத்தின் திட்டங்களுக்கெல்லாம் அனுமதி கொடுக்க வில்லை என்பது இங்கே முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. காநாடகத்தின் எந்தவொரு அணைக்கும் மத்திய திட்டக் குழு அனுமதி கொடுக்கவேயில்லை. மத்திய திட்டக் குழுவின் ஒப்புதல் பெறாமல் கர்நாடக அரசு இந்த அணைக்கட்டுத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றியிருப்பது, ஐந்தாண்டுகள் இங்கே முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவுக்குத் தெரியாமல் போவது ஆச்சரியம்தான். தெரியாமல் போகவில்லை. தெரிந்த உண்மைகளுக்கு மாறான விஷயங்களைச் சொல்லலாம் என்று முடிவு எடுத்துக் கொண்டவர்களைப் பற்றி நான் என்ன சொல்ல முடியும்? அதைத்தான் அவர்கள் இன்றைக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்ற எந்த நிதியும் தரவில்லை. ஒரு பெரிய அணைக்கட்டு என்றால் மத்திய அரச நிதி தரும். அந்த நிதியும் கூட அவர்கள் தரவில்லை. ஏனென்றால், தமிழ்நாடு அரசு,

காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலே இருந்து பெருத்தலைவர் காமராஜர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தியே இருந்து இந்த அணைகளையெல்லாம் கட்டக்கூடாதென்று தடுத்து வருகின்ற காரணத்தால், எதிர்த்து வருகின்ற காரணத்தால், இதுவரையிலும் மத்திய அரசு இந்த அணைகளைக் கட்டுவதற்கு எந்த நிதியுதவியும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இப்போதுதான், மேகதாது அணைக்கட்டுத் திட்டத்திற்குத்தான் ஏதோ மத்திய அரசு நிதியுதவி கொடுப்பதாக இருந்தது. ஆனால், நல்ல வேளை. . . அவ்வளவுதான் நான் சொல்ல முடியும். (மேசையைத் தட்டும் ஒலி).

எப்போழுதும், காவிரி நதித் தண்ணீரால் பயனடையக் கூடிய மாநிலங்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகுதான் ஒரு மாநில அரசு இதுபோன்ற அணைக்கட்டுக்களைக் கட்டவேண்டுமென்று ஒரு ஒப்பந்தம் இருக்கிறது. அதையும் மீறித்தான் கர்நாடக அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, யாருடைய ஒப்புதலும் இல்லாமலேயே முறைப்படி பெறவேண்டிய ஒப்புதலைப் பெறாமலேயே கர்நாடக அரசு அணைகளைக் கட்டி வருதன் காரணமாக தமிழகம் தவிப்புக்கு ஆளாகி இருக்கின்றது. அந்தத் தவிப்பை எடுத்துச் சொல்லக்கூட நமக்கு உரிமையில்லை யென்று அதை திசை திருப்பி, கர்நாடக முதலமைச்சரைத் தாக்கிப் பேசியதாக அறிக்கை விடுவது. நாகரீகமான செயல் அல்ல என்பதைத்தான் இப்போது நான் பயன்படுத்துகின்ற கடுமையான சொல்லாகக் கருதி அந்தச் சொல்லைப் பயன்படுத்தி, இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).



உரை : 25 **நாள் : 21.03.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினை பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிற காரணத்தாலும், உறுப்பினர்கள் சிலர் அதைப் பற்றிப் பேசியிருக்கிற நிலையிலும், இன்னும் பல கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் பேச இருக்கின்ற காரணத்தாலும், என்னுடைய பதிலுரையிலே அதைப்பற்றி விளக்கமாகப் பேசலாம் என்று இருந்தேன். ஆனால் நாளைய தினம் பத்திரிகையில் தவறான செய்திகள் வந்துவிடக்கூடாது என்பதற்காக இந்தக் குறுக்கீடுகளுக்கு நான் இப்போதே பதில் சொல்ல வேண்டியவனாக இருக்கின்றேன். விளக்கமாக அல்ல. குறிப்பாக நான் சொல்ல விரும்புகின்றேன்.

இந்த 1½ ஆண்டுகாலத்திலே என்ன செய்தார்கள் என்று கேட்டிருக்கின்றார்கள். இங்கே மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப்போல உச்ச நீதிமன்றத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த வழக்கில் உச்சநீதிமன்றம் தான் தமிழக அரசையும் கர்நாடக அரசையும் கேட்டுக்கொண்டது; மீண்டும் ஒருமுறை பேசுங்கள். பேச்சுவார்த்தையிலே சுமூக சூழ்நிலை ஏற்படாவிட்டால் பிறகு உச்ச நீதிமன்றத்திற்கு வாருங்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றிக்கூட ஆலோசித்தோம். உச்ச நீதிமன்றம் ஒரு தாக்கீதைத் தந்து அந்தக் கருத்தை நாங்கள் ஏற்காவிட்டால் உச்சநீதிமன்றம், அரசு தன்னை மதிக்காமல் தன்னுடைய பேச்சைக் கேட்கவில்லை என்கின்ற ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும். அது நமக்கு நல்லதல்ல. அரசுக்கு நல்லதல்ல. தமிழகத்திற்கு நல்லதல்ல. என்பதற்காகத்தான் உச்சநீதிமன்றத்தினுடைய சொற்படி பேசுவதற்கு நாம் தயாராக இருந்தோம். 2, 3 முறை மீண்டும் கர்நாடக அரசோடு

பேசினோம். அந்தப் பேச்சிலே பயன் ஏற்படவில்லை. அதை உச்ச நீதிமன்றத்திற்கு நாம் தெரிவித்தோம். அப்படித் தெரிவித்த காரணத்தால் நம் பக்கத்திலே நியாயம் இருப்பதை நாம் எடுத்துக்காட்டுகின்ற நிலை நமக்கு இருந்தது. பிறகு உச்ச நிதிமன்றத்திலே நாம் வாதாடியது. இதிலே மத்திய அரசு தலையிட்டு தன்னுடைய கருத்தைச் சொல்லவேண்டும் என்பதாகும். ஆனால் ஐக்கிய முன்னணி அரசு என்ன செய்தது என்று இங்கே பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் கேட்டார். நான் அவருக்கு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஐக்கிய முன்னணி அரசுதான் உச்சநீதிமன்றத்திற்கு ஒரு Scheme - ஒரு திட்டத்தைக் கொடுத்திருக்கிறது. அந்தத் திட்டம் உச்சநீதி மன்றத்திற்கு அளிக்கப்பட்டவுடன் அந்தத் திட்டத்தைப் பற்றிய கருத்தை மாநில அரசுகள் தரவேண்டும் என்று - தமிழகத்திற்கு, கர்நாடகத்திற்கு, பாண்டிச்சேரிக்கு, கேரளத்திற்குச் சொல்லப்பட்டது. தமிழக அரசின் சார்பாக நம்முடைய கருத்தை வெளியிட்டிருக்கின்றோம். தந்திருக்கின்றோம். ஏறத்தாழ பெரும்பகுதி மத்திய அரசு தந்துள்ள இந்தக் கருத்து நமக்கு ஏற்புடையது என்ற அளவிலே தந்திருக்கின்றோம்.

அதாவது ஒரு 'அத்தாரிட்டி' 'Authority' Cauvery Valley Authority என்ற அமைப்பை ஏற்படுத்தி நடுவர் மன்றத் தீர்ப்பை எப்படி அமல்படுத்த வேண்டும் என்பதை அந்த Authorityதான். அந்த ஆணையம்தான் தீர்மானிக்கும் என்ற திட்டமானது அந்தத் திட்டம். அது நமக்கு எவ்வளவு ஏற்புடைய திட்டம் என்பதை யோசித்துப் பார்த்தால் புரிந்துகொள்ளலாம். மத்திய அரசு அப்படி ஒரு திட்டத்தைக் கொடுத்ததுகூட கர்நாடக அரசுக்கு மத்திய அரசும் மீதும், ஐக்கிய முன்னணி அரசின் மீதும் சற்று கோபத்தை உண்டாக்கியது என்பது எல்லோருக்கும் தெரியும். கேரள அரசும் நம்மைப் போலவே இந்தத் திட்டத்தை ஆதரித்தது. பாண்டிச்சேரி அரசும் நம்மைப் போலவே இந்தத் திட்டத்தை ஆதரித்தது. கர்நாடக அரசு இதை ஆதரிக்காமல் Authority என்ற ஒன்று இருக்கக்கூடாது. Committee என்றுதான் இருக்கவேண்டும் என்று சொன்னது. அதை நாம் யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. மத்திய

அரசும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. Authority என்றால், அதற்குள்ள வலிமைக்கும் Committee என்றால் அதற்குள்ள வலிமைக்கும் உள்ள வேறுபாடு, முரண்பாடு தெரிந்த காரணத்தால்தான் Authority என்றுதான் இருக்கவேண்டும். என்று நாம் வலியுறுத்தினோம். இப்போதும் வலியுறுத்திக் கொண்டிருக் கிறோம். மத்திய அரசும். ஐக்கிய முன்னணி அரசும் நம்முடைய கருத்துக்குத்தான் செவி சாய்த்தது. அந்தக் கருத்துதான் இன்றைக்கு உச்சநீதிமன்றத்திலே இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் இந்த வழக்கும் நடைபெற்றுக் கெண்டிருக்கிறது. எனவே இந்த அரசு என்ன செய்தது, தமிழக அரசு என்ன செய்தது, ஐக்கிய முன்னணி அரசு என்ன செய்தது என்று எழுப்பிய இந்த வினாவிற்கு இந்த விளக்கத்தை மாத்திரம் நான் தருகின்றேன்.

ஆக, ஒன்றை நம்முடைய பரிதி இளம்வழுதி அவர் களுடைய பேச்சின் மூலமாகத் தங்களுக்கு வேண்டுகோளாக விடுக்கின்றேன். ** என்று சொன்னாரே, அந்தச் சொற்றொடர் இடம் பெறாமல் இருப்பது நல்லது. ஏனென்றால், உள்ளபடியே யாராவது ** செய்தாலும்கூட ** என்று குறிப்பிடுவது நல்லதல்ல. ஆனால், அவர் குறிப்பிட்டதைப்போல இன்னும் அவர்கள் யாரும் முழுமையாகப் பொறுப்பு ஏற்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் நம்முடைய முன்னாள் முதலமைச்சர் காவிரிப் பிரச்சினையிலே ஒரு தீர்வு காணவேண்டும் என்று வைத்த நிபந்தனை வெளியிடப்பட்டுள்ள அந்தத் தேசிய திட்டத்திலே இடம் பெற்றிருக்கிறதா என்றால் இடம் பெறவில்லை. என்ன இடம் பெற்றிருக்கிறது? கர்நாடக முதலமைச்சர் படேல் எதை வலியுறுத்தியிருக்கிறாரோ அதுதான் இடம் பெற்றிருக்கிறது. படேல் எதை வலியுறுத்தி வருகிறார்? அவர் வலியுறுத்தி வருவது தேசிய நீர்க்கொள்கை வகுக்கப்பட்ட பிறகு இதைப்பற்றிப் பேசலாம் என்கிறார். இப்போது நம்மிடத்தில் கொடுக்கப்பட் டிருக்கின்ற அந்தத் தேசிய திட்டத்தில் என்ன இடம் பெற்றிருக்கிறது என்றால், தேசிய நீர்க்கொள்கை ஒன்று வகுக்கப்படும். அதற்குப் பிறகு அவை நடைமுறைப்படுத்தப் படும் என்று இருக்கிறது. நான் அதிகமாக இந்தப் பிரச்சினையிலே

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உணர்ச்சியைத் தூண்டும் முறையிலே என்றைக்கும் பேசுகின்றவன் அல்ல.

நேற்றைக்குக்கூட நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் கேரள மாநிலத்தைப் பற்றிப் பேசும்போது கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுப்பேசினார். இது இரண்டு அரசுகளுக்குள்ளே உள்ள பிரச்சினை அல்ல. இரண்டு மாநிலங்களுக்கிடையே உள்ள மக்களுடைய பிரச்சினை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. உணர்ச்சி வசப்பட்டு நாம் பேசுகிற நேரத்தில், தமிழ்நாட்டு மக்களையும் உணர்ச்சிக்கு ஆளாக்கி, கேரளாவிலோ அல்லது கர்நாடகத்திலோ உள்ள மக்களும் உணர்ச்சிக்கு ஆளானால், பாதிக்கப்படுகின்றவர்கள் பெரும்பாலும் நம்மைப் பொறுத்த வரையில் தமிழர்கள்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஏனென்றால், இங்கு இருக்கின்ற கேரளத்தைச் சார்ந்தவர்கள் குறைவு. அதேபோல, கர்நாடகத்தைச் சார்ந்தவர்கள் குறைவு. ஆனால் கர்நாடக மாநிலத்திலோ, கேரள மாநிலத்திலோ தமிழர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட உணர்ச்சி வசப்பட்ட பேச்சுக்களினால் விளைவுகள் விபரீதமாகின்ற நேரத்தில் பெரும்பகுதி பாதிக்கப்படுவது தமிழர்களாகத்தான் இருப்போம். யாருக்கு அதிக பாதிப்பு என்பதற்காக அல்ல. இரு மாநில மக்களுக்கிடையே இருக்கிற சுமுகமான சூழ்நிலை இதுபோன்ற பிரச்சினைகளிலே பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து, பெரும்பாலும் தமிழகத்திலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளுடைய கருத்தும் அந்தக் கருத்துதான். அந்தக் கருத்தோடுதான் நானும் ஒத்துப் போகின்றேன். எனவே அந்த நேரத்து ஆதாயங்களுக்காக, தேர்தல் நேரத்து லாபங்களுக்காக, இதுபோன்ற உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, அதனுடைய விளைவுகள் விபரீதமாகின்ற நேரத்தில் நாம் கவலைப்பட்டுக்கொண்டு இருக்கமுடியாது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, இப்போது வெளியிடப்பட்டிருக்கின்ற பாரதீய ஜனதா கட்சியினுடைய அல்லது அந்தக் கூட்டணியினுடைய தேசியத் திட்டம். அதிலே இடம் பெற்றிருக்கின்ற நதி நீர்ப் பிரச்சினை காவிரிப் பிரச்சினைக்கு உதவக்கூடியதல்ல. காவிரிப் பிரச்சினைக்கு

உதவக்கூடியது இன்றைக்கு உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பு. அதை நடைமுறைப்படுத்துவதுதான். அதற்கான உறுதிப்பாடு அதிலே காட்டப்படவில்லை. படேலுடைய குரல்தான் அங்கே ஒலிக்கிறது. கருணாநிதியினுடைய குரல் அதிலே ஒலிக்கவில்லை. அதாவது தமிழகத்தினுடைய குரல் அதிலே ஒலிக்கப்படவில்லை என்பதை நான் மீண்டும் மீண்டும் எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த அவையில் National Agenda பற்றி விவாதிக்கப்பட் டிருக்கிறது. இதுபற்றி நேற்றைக்கு முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் சில விளக்கங்களை நான் தந்திருக்கிறேன். இந்த National Agenda, 17 கட்சினுடைய தலைவர்கள் கையெழுத்திட்டு, வெளியிட்டுள்ள ஒன்றாகும். வாஜ்பாய் அவர்கள், அத்வானி அவர்கள், செல்வி ஜெயலலிதா அவர்கள், வாழப்பாடி ராமமூர்த்தி அவர்கள், வைகோ அவர்கள், டாக்டர் ராமதாஸ் அவர்கள், இத்தனை பேரும் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள, 17 பேர் கையெழுத்திட்டுள்ள அறிக்கை ஆகும். இந்த National Agenda-வில் இன்னின்ன திட்டங்களைச் சேர்க்கவேண்டும் என்ற நிபந்தனை விதித்தும், அது சேர்க்கப்படாத சூழ்நிலையைப் பார்க்கும்போது, சேர்க்கப்பட்டதும் தமிழக நலன்களுக்கு, சமுதாய நலன்களுக்கு, விவசாய நலன்களுக்கு விரோதமாக ஆக்கப்பட் டிருப்பதைக் காணும்போது, இந்தக் கோரிக்கைகளை வைக்காமலேயே இருந்திருக்கலாமே என்று எண்ணத் தோன்றுகிறது. ஏதோ முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் சொன்னார்கள் என்பதற்காக நான் போட்டி போட்டுக்கொண்டு அதை எதிர்க்க வேண்டுமென்று கருதுகின்றவன் அல்ல. உங்களுக்கு நன்றாகத் தெரியும் என்னைப்பற்றி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மாற்றம் ஏற்பட்டு, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது. காவிரிப் பிரச்சனையிலே அவருக்குக் கை கொடுக்கின்ற வகையிலே நடந்துகொண்டது தான் திராவிட முன்னேற்றக் கழகம். அதுபோல அவரும், இதே அவையில், இதே இடத்தில் நின்று கொண்டு பேசிய பேச்சு காவிரிப் பிரச்சினையானாலும், வேறு சில பொதுப் பிரச்சினை களானாலும், அ.தி.மு.க.வும் திராவிட முன்னேற்றக் கழகமும்

இரட்டைக்குழல் துப்பாக்கியாக இருக்கும் என்று சொன்ன சொல் இன்னமும் என்னுடைய செவிகளில் ரீங்காரம் செய்துகொண்டு தான் இருக்கிறது.

அந்த அளவிற்கு காவிரிப் பிரச்சினையிலே ஒருமித்த கருத்து இருந்தது. எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்து, அதைப்பற்றிப் பேசுவதற்கு அழைத்தபோதெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பிரதிநிதிகள் சென்றிருக் கிறார்கள், பேசியிருக்கிறார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சர்வ கட்சிக் கூட்டங்களுக்கு அழைப்பு அனுப்பியபோதெல்லாம் 'நீ காவிரிப் பிரச்சினைக்கு துரோகம் செய்து விட்டவன்; ஆகவே அந்த சர்வ கட்சிக் கூட்டத்திலே கலந்துகொள்ள முடியாது' என்று அறிவித்து, அப்படி எழுதப்பட்ட கடிதங்களை வெளிப்படையாகவே பத்திரிகைகளுக்குத் தந்து, அந்தக் கூட்டங்களிலே கலந்துகொள்ள மறுத்தவர் செல்வி ஜெயலலிதா அவர்கள்.

இங்கேகூட, ஒருமுறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1989-90-ல் திரு. வி. பி. சிங் அவர்கள் அங்கே பிரதமராக இருந்தபோது, நடுவர் மன்றம் அமைக்கப்பட வேண்டுமென்பதற்காக, பொதுப்பணித் துறை அமைச்சர் தலைமையில் ஒரு குழு நம்முடைய தீர்மானத்தை நிறைவேற்றி எடுத்துக்கொண்டு டெல்லிக்குச் சென்ற நேரத்தில், வருவதாக ஒப்புதல் அளித்த திரு. எஸ்.ஆர்.இராதா - அப்போது அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். முதலில் கொஞ்சநாள் தம்பி திருநாவுக்கரசு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். அதற்குப் பிறகு எஸ்.ஆர்.இராதா அவர்கள் என்று நினைவு - அவரும் வருவதாகச் சொல்லி, எல்லோருக்கும் சேர்த்து டெல்லிக்குச் செல்ல விமானத்திற்கான பயணச் சீட்டு பெறப்பட்டு, கடைசி நேரத்திலே நாங்கள் வர இயலாது என்று கூறியது மாத்திரம் அல்ல; அவர்கள் வராதது மாத்திரமல்ல; எங்களோடு வர இருந்த காங்கிரஸ் நண்பர்களையும் வரவிடாமல் அன்றைக்குத் தடுத்து விட்டார்கள். அன்றைக்கு ஒரே ஒரு காங்கிரஸ் எம்.பி. வைஜயந்தி மாலா, அவர்கள்தான் துரைமுருகனுடைய தலைமையில் சென்ற அந்தத் தூதுக் குழுவினுடைய சந்திப்பிற்கு வி. பி. சிங் அவர்களுடைய அலுவலகத்திற்கு வந்தார்கள். மற்றவர்கள்

யாரும் அன்றைக்கு வரவில்லை. அப்படிப் புறக்கணிக்கப்பட்டது. ஒரு பெரிய பிரச்சினை. பொதுவான பிரச்சினை; அரசியல் கண்ணோட்டத்தோடு அன்றைக்கு அணுகப்பட்ட காரணத்தால் புறக்கணிக்கப்பட்டது. ஆனால் என்றைக்கும் நாங்கள் அப்படிப் புறக்கணித்தது இல்லை. இந்தப் பொதுவான பிரச்சினைகளில் எங்களுடைய கருத்துக்களை எடுத்துக்கூற அரசோடு ஒத்துழைக்காமல், எதிர்க்கட்சியாக இருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் புறக்கணித்தும் இல்லை; ஒதுங்கியிருந்ததும் இல்லை. எங்களுடைய கருத்துக்களை வேகமாக எடுத்துக் கூறியிருக்கலாம். ஆனால் ஒன்றாகச் சேர்ந்து செய்ய வேண்டிய முயற்சிகளில் நாங்கள் என்றைக்கும் விட்டுக் கொடுத்தது இல்லை. அந்த வகையிலே இன்றைக்கு இந்தக் காவிரிப் பிரச்சினையில் அதிகம் பேச நான் விரும்பவில்லை. நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையிலே இது குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதையொட்டி நேற்றைக்கு முன்தினம் எழுந்த சர்ச்சையிலும் நீண்ட விளக்கத்தை நான் வழங்கியிருக்கிறேன். ஆனால் கேட்டது என்ன; கிடைத்தது என்ன என்பதைத்தான் எண்ணிப்பார்க்க வேண்டும்.

காவிரிப் பிரச்சினை நீதி வழங்கப்பட வேண்டும். அது இந்த Agenda-விலே வர வேண்டும்; இந்த National - திட்டத்திலே - தேசிய திட்டத்திலே வரவேண்டும் என்று செல்வி ஜெயலலிதா அவர்கள் வாதாடினார்கள்; போராடினார்கள்; பத்திரிகையிலே செய்தி வந்தது. தனிப்பட்ட சிலபேருடைய மந்திரி பதவிகளுக்காக அல்ல; தமிழ்நாட்டினுடைய பொதுப் பிரச்சினைக்காக வாதாடுகிறேன் என்று சொன்னபோது அதைக் கேட்க இனிப்பாக இருந்தது. ஆனால் நடைபெற்றிருப்பது என்னவென்றால் காவிரி என்ற சொல்லையே தேசிய திட்டத்திலே காணவில்லை குடகிலேயிருந்து பூம்புகார் வரையிலே நீண்டு பரந்து வந்துகொண்டிருக்கின்ற அந்தக் காவிரி, இந்தச் சிறிய ஏட்டில் ஒரு இடத்திலேகூட காவிரி என்கின்ற 3 எழுத்து தமிழையோ அல்லது ஆங்கிலத்திலே CAUVERY என்ற சொல்லையோ இதிலே காணமுடியவில்லை. இரண்டு நாளைக்கு முன்பு தினமணி பத்திரிகையிலே ஒரு தலையங்கம் பார்த்தேன். அதிலேகூட கர்நாடக முதலமைச்சர் என்ன சொல்கிறாரோ

அதைத்தான் இந்த தேசிய திட்டத்திலே அவர்கள் ஏற்றியிருக்கிறார்கள் என்று தினமணிகூடத் தலையங்கம் தீட்டியிருக்கிறது; படித்துப் பார்த்தேன்.

அதுமாத்திரம் அல்ல. கர்நாடகத்தினுடைய குரல் இன்றைக்கு ஹெக்டே மூலமாக அங்கே ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்த ஹெக்டேயினுடைய குரல்தான் இந்தத் திட்டத்திலே இருப்பதாக என்னால் உணர முடிகிறது; உணர முடிகிறது என்ன. உண்மையும் அதுதான். என்ன இருக்கிறது? "We will adopt a National Water Policy which provides for effective and prompt settlement of disputes and time-bound implementation". என்றுதான் இருக்கிறது. அந்த தேசிய நதிநீர்க் கொள்கை என்பது National Water Policy என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றுதான். அதை யாரும் மறுக்கவில்லை; தேசிய நதிநீர்க் கொள்கையை யாரும் மறுக்கவில்லை; வெறுக்கவில்லை; அதை, ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். ஆனால் அதை வைத்து, அந்தத் தீபத்தை வைத்து, இந்த வீட்டைக் கொளுத்தி விடக்கூடாது. பார்ப்பதற்குத் தீபம்தான். ஆனால் தீபம் என்னுடைய வீட்டைக் கொளுத்தப் பயன்பட்டால் தடுத்தேதான் தீருவேன் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்பட்டாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி). தீபம் என்பதற்காக வீட்டைக் கொளுத்தமுடியுமா? 'திரு. பட்டேல் என்ன சொல்கிறார்; கர்நாடகத்தின் முதலமைச்சர் என்ன சொல்கிறார்; கர்நாடக மாநில அரசு என்ன சொல்கிறது? இப்போது ஒன்றும் இந்தப் பிரச்சினையை எடுக்கவேண்டாம்; பேச்சு வார்த்தைக்கு வா, நான் சொல்வதைக் கேள், ஏற்றுக்கொள்' என்றது. பேச்சுவார்த்தைக்கு நாம் மறுத்தபோதுகூட உச்சநீதி மன்றம்தான் தாக்கீது தந்தது, பேசுங்கள் என்று, பேசாவிட்டால் உச்சநீதிமன்றம் தவறாகக் கருதிக்கொள்ளும் என்று, பேசிப் பார்த்தோம். ஆனால் அந்தப் பேச்சுவார்த்தை வெற்றிப் பெறவில்லை. உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று சொன்னோம். பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை; உங்கள் தீர்ப்பை வழங்குங்கள் என்று சொன்னோம் உச்சநீதிமன்றம் மத்திய சர்க்காரைப்பார்த்துக் கேட்டது. ஐக்கிய முன்னணி அரசைப் பார்த்துக் கேட்டது.

ஐக்கிய முன்னணி அரசில் கர்நாடகத்தைச் சேர்ந்த ஜனதா தளத்தலைவர்கள் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் தேவ கவுடா, ஐக்கிய முன்னணி கட்சியினுடைய தலைவர் அவர்தான். அவர் பிரதமர் பதவியிலிருந்து விலக்கப்பட்டபோது நானும், திரு. மூப்பனார் அவர்களும்தான் அவரை முன் மொழிந்து, வழிமொழிந்து ஐக்கிய முன்னணியினுடைய Chairman ஆக அந்தக் குழுவினுடைய தலைவராக அவர் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அவர் இருக்கிறார். அவர் இருந்தபோதுகூட மத்திய அரசு அவருக்காக வளைந்து கொடுக்காமல் - தேவ கவுடாவுக்காக வளைந்து கொடுக்காமல் ஐக்கிய முன்னணி அரசு ஒரு திட்டத்தைத் தயாரித்து உச்ச நீதிமன்றத்தில் கொடுத்திருக்கிறது.

என்ன திட்டம்? ஒரு Authority, Cauvery Valley Authority, அது என்ன சொல்கிறது? Authority யினுடைய வேலை என்ன? நடுவர் மன்றம் கொடுத்திருக்கின்ற இடைக்கால Award இருக்கிறதே; அந்தக் தீர்ப்பு இருக்கிறதே; அதை எப்படி நிறைவேற்றுவது? - நிறைவேற்றுவதா இல்லையா என்பதல்ல - எப்படி நிறைவேற்றுவது என்பதற்காகத்தான் அந்தத் திட்டத்தை மத்திய அரசு கொடுத்தது. இதைப் பற்றி உங்களுடைய கருத்து என்ன என்று உச்ச நீதிமன்றம் நம்முடைய மாநிலத்தைக் கேட்டது. நாம் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தாக இருந்ததால் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதைப் போலவே புதுவை மாநிலம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. கேளர மாநிலம் ஏற்றுக்கொண் டிருக்கிறது. கர்நாடக மாநிலம் ஏற்றுக்கொள்ளாமல் இழுத்தடித்தது. இழுத்தடிக்கும்போது அது சொன்னது எல்லாம் "Authority வேண்டாம்; Committee போதும்" என்பதுதான். அதுமாத்திரம் அல்ல, "இந்தப் பிரச்சினையைத் தேசிய நதிநீர்க் கொள்கை வகுக்கப்பட்ட பிறகு பேசிக்கொள்ளலாம்" என்றார்கள். இது இப்போது திரு. ஹெக்டே வாயிலாக இந்த National Agenda-வில் ஏற்றப்பட்டிருக்கிறது. நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அன்றைக்கு முழங்கிய அந்த முழக்கம் இதில் இடம்பெறவில்லை என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து இந்தப் பிரச்சினைக்கு அவர் பாடுபடவேண்டும்;

போராட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேனே தவிர, அவரை இழித்தும், பழித்தும் பேசுவதற்காகச் சொல்லவில்லை. ஏன் என்றால் தமிழ்நட்டு மக்களுக்கு அவர்கள் அக்கறையோடு செய்ய வேண்டும். எனக்குள்ள சந்தேகம் எல்லாம் நடுவர்மன்றம் நான் கேட்டபோது அம்மையார் ஒருமுறை சொன்னார்கள்; அப்படியே நடுவர்மன்றம் கொடுத்தாலும்கூட அதற்குக் கட்டுப்படவேண்டும் என்று கர்நாடக அரசுக்கு ஒன்றும் விதியில்லை என்று ஒருமுறை அம்மையார் சொன்னார்கள். அதையெல்லாம் நினைத்தால் பயமாக இருக்கிறது. இப்படிப்பட்ட உணர்வோடு இதை அணுகினால் நம்முடைய பிரச்சினை நல்லமுறையில் தீருமா என்ற அச்சம் ஏற்படுகிறதே தவிர வேறு அல்ல.



உரை : 26 நாள் : 15.04.1998

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திரு. பழனிசாமி அவர்கள் நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவந்துள்ள இந்தப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. ஆனால், இதுபற்றி இந்த மன்றத்தில் பலமுறை விவாதிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நிதிநிலை அறிக்கை தொடர்பாகப் பொது விவாதம் நடைபெற்று, அப்போது நான் உரை நிகழ்த்தியபோதும், ஆளுநர் உரை தொடர்பாக நான் உரை நிகழ்த்தியபோதும், இந்தப் பிரச்சினை பற்றி விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கின்றேன்.

இந்தத் தேசிய நதிநீர்க் கொள்கை என்பது புறக்கணிக்கப் படக்கூடிய ஒன்று அல்ல. ஆனால் அந்தக் கொள்கையையும், காவிரிப் பிரச்சினையையும் இப்போது முடிச்சுப்போட்டு, அந்தக் கொள்கையை வலியுறுத்துகின்ற காரணத்தால், காவிரிப் பிரச்சினையைத் தள்ளிப்போடுவோம் என்ற கருத்தை நாம் ஏற்பதற்கில்லை; இதை மிகத் தெளிவாகப் பலமுறை, நாம் விளக்கியிருக்கின்றோம். உச்சநீதிமன்றம் இதுபற்றி விசாரணை நடத்திக்கொண்டு இருக்கிறது. இடையிலே உச்சநீதிமன்றம் தந்த ஒரு கருத்தின் அடிப்படையிலேதான் மீண்டும் ஒருமுறை கர்நாடக முதலமைச்சரோடு நான் பேசுவதற்கு ஒத்துக்கொண்டு 4. 5 தடவை பேசிப் பார்த்து, அதிலே ஒரு முடிவு கிடைக்காத காரணத்தினால், அதைப் பற்றி உச்சநீதிமன்றத்திற்கு எடுத்துச் சொல்லி, பிரச்சினையை நீதிமன்றத்திற்கே விட்டுவிட்டோம். பிறகு உச்சநீதிமன்றம் மத்திய அரசிலேயிருந்து ஒரு கருத்தைப் பெற்றது. மத்திய அரசு வகுத்துக் கொடுத்த அந்த கருத்து மாநில அரசுகளுடைய கருத்துக்கு உடன்பட்டதா அல்லவா என்பதை

உடனடியாக தெரிவிக்க வேண்டுமென்று எல்லா மாநிலங்களையும், குறிப்பாக, தமிழகம், கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களுக்கு விடுக்கப்பட்ட அந்த அறிவிப்பின்மீது தமிழ்நாடு தன்னுடைய கருத்தை அனுப்பி இருக்கிறது. அதைப் போலவே கேரளம் தன்னுடைய கருத்தை அனுப்பியுள்ளது. பாண்டிச்சேரி தன்னுடைய கருத்தை அனுப்பி வைத்து இருக்கின்றது. கர்நாடகம் மாத்திரம், மத்திய அரசு - ஏற்கெனவே ஐக்கிய முன்னணி யினுடைய மத்திய அரசு - எடுத்த நிலைக்கு மாறாக வேறொரு நிலையை எடுத்திருக்கிறது Authority என்ற ஒன்றை அமைக்க வேண்டும் என்பது மத்திய அரசினுடைய திட்டத்திலே ஒரு பெரும் கூறாகும். அந்த Authorityயினுடைய பணி என்னவென்றால் நடுவர் மன்றத் தீர்பபை, இடைக்காலத்திற்கு, தமிழகத்திற்கு தரப்படவேண்டிய அளவு தண்ணீர் எவ்வளவு என்பதை அறிந்து, அந்தத் தண்ணீரைத் தமிழகத்திற்குத் தருவதைச் செயல்படுத்தவேண்டும் என்பதுதான் அந்த Authority யினுடைய பணியாக இருக்கவேண்டும் என்பது மத்திய அரசு தந்துள்ள திட்டமாகும். அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளாத கர்நாடக அரசு Authority என்று இருக்கக்கூடாது, Committee என்று இருந்தால் போதுமானது என்று கூறுகிறது. அதிலே நமக்கும் அவர்களுக்கும் ஒத்துவராத கருத்துக்கள் இருக்கின்றன. இதைத்தான் வலியுறுத்திக் கொண்டே இருக்கின்றோம்.

இப்போது நான் பிரதமரை டெல்லியிலே சந்தித்தபோது கூட அவரிடத்திலே கொடுக்கப்பட்ட, தமிழகத்தினுடைய நலனுக்காகக் கொடுக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளிலே முக்கிய கோரிக்கையாகக் காவிரிப் பங்கீடு பற்றிய கோரிக்கை யையும் தந்து, அவரிடத்திலே விவாதித்து இருக்கின்றேன். இதிலே ஐக்கிய முன்னணி அரசு - மத்திய அரசு - எடுத்த அதே நிலையைத்தான் நீங்களும் தொடர்ந்து பின்பற்றவேண்டும். இல்லாவிட்டால், அது தமிழகத்திற்கு, தமிழக விவசாயிகளுக்குப் பேராபத்தாக முடியும் என்பதை அவரிடத்திலே வலியுறுத்தி எழுதியும் கொடுத்திருக்கிறேன்; நேரிலும் அவரிடத்திலே பேசிவிட்டு வந்திருக்கின்றேன்.

C000866

அடுத்து, கர்நாடக முதல்வர் தந்துள்ள அறிக்கையைப் பற்றி எல்லாம் இப்போது நான் விமர்சிக்க விரும்பவில்லை. ஏன் என்றால் அந்தக் கருத்தை நாம் ஏற்றுக்கொள்வதாக இல்லை. இனியும் பேச்சுவார்த்தை என்பதற்கு இடம் இல்லை. ஆனால், இன்றைய பிரதமர் அவர்கள், மீண்டும் பேச்சுவார்த்தை என்று வலியுறுத்துவார்களேயானால் அவரிடத்திலே, எத்தனை முறை பேச்சுவார்த்தை நடைபெற்று இருக்கிறது, எவ்வளவு தோல்விகள் அதிலே ஏற்பட்டிருக்கின்றன என்பதையும், உச்ச நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு சென்றபிறகு உச்சநீதிமன்றத்தினுடைய முடிவைத் தான், ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதைத்தான், தமிழக அரசின், சார்பாக, தமிழ் மக்களின் சார்பாக, எல்லாக் கட்சிகளின் சார்பாக நான் எடுத்துவைக்க இருக்கின்றேன் என்பதை எடுத்துக்கூறி, இதற்கு இடையிலே நாம் இதுபோன்ற விவாதங்களை அடிக்கடி இங்கே எடுத்துக் காட்டியிருப்பதைப்போல, சூடானதாக, உணர்ச்சிவயப்பட்டதாக ஆக்குவதன் மூலம், இரு மாநில மக்களிடையே வேறுபாடான கருத்துக்களையோ இரு மாநில மக்களுடையே நல்லெண்ணங்களுக்கு ஊறுதேடுகிற நிலைகளையோ உருவாக்கக்கூடாது என்பதற்காகத்தான், சட்டப்படி காரியங்கள் நடைபெறவேண்டும் என்ற அந்த நோக்கத்திலே இந்த அரசு ஈடுபட்டு வருகின்றது. அதிலே இம்மியும் பிறழாமல் இந்த அரசு நடைபோடும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, காவிரிப் பிரச்சினைக்கு நல்ல முடிவைக் காண்பதற்கு இன்றுள்ள மத்திய அரசு முன்வரவேண்டும் என்ற கோரிக்கையை இங்கே எழுப்பப்பட்ட இந்தப் பிரச்சினையின் அடிப்படையிலே நான் மத்திய அரசுக்கு வைத்து, இந்த அளவில் அமைகின்றேன்.

894.8115
TAN

குறிப்புகள்

குறிப்புகள்

